# நான்காம் பருவம்
## பகுதி – I
## நாள்-1

**அகில வாசகம்**

தர்மத்தை வளர்த்திருநீ தன்னாலே அதுவளரும்
தருமமதாய்த் தாரணியில் தன்னந்தன் னால்வாழ்ந்து
பொறுமைப் பெரியோராய்ப் பூதலமெல் லாம்வாழ்வார்
எப்போதும்போல என்னை நினைத்தே இருநீ
அப்போது நீயரசு ஆளுவாய் யென்மகனே
வாரிமூன்று கோதி வளைந்திருக்கு மோர்தீவை
சாதியொரு நிரப்பாய்த் தானாள்வா யென்மகனே
கோடுபல வாதும் கோள்நீசப் பாவிகளும்
கேடு வருங்காலம் கிருஷ்ணா வுன்நற்காலம்
வானமது வெள்ளி மாறிவெறும் வானமதாய்
மேன் முகிலற்று வெறுவான மாய்த்தோன்றும்
நல்ல மகனே உனக்குவரும் நற்காலம்
சொல்லத் தொலையாது சூல்மகனே என்கணக்கு
ஒக்க அடக்கி உரைத்திருக்கு வுன்னிடத்தில்
நிற்க நிலைக்க நினைத்ததெல்லா மங்காகும்
பொறுமை பெரிது பெரிய திருமகனே
தருமம் பெரிது தாங்கியிரு என்மகனே
எல்லா முனது இச்சையது போல்நடக்கும்
நல்லார்க்கு மோர்நினைவே நலமாகு மென்றுசொல்லி
எல்லார்க்கும் விளம்பி இருநீ யிருமகனே
பொல்லாதா ரோடும் பொறுமை யுரைமகனே
தன்னாலே யாகுமட்டும் சாற்றியிரு என்மகனே
வந்தா ரறிவார் வராதார் நீறாவார்
இன்ன முன்காலம் இயம்புவேன் கேள்மகனே
தன்னந் தன்னாலே சாதிக்குச் சாதிமாளும்
நல்ல நினைவோர்க்கு நாளெத்தனை யானாலும்
பொல்லாது வாராமல் புவிமீதில் வாழ்ந்திருப்பார்
நாட்டி லொருஅனுமன் நல்லவனை நானயச்சு
கோட்டிசெய் யென்றுரைப்பேன் கோமகனே வுன்காலம்
முறைதப்பி யாண்ட முகடன் வெறும்நீசன்
குறைநோவு கொண்டு கூடிழப்பா னுன்காலம்
அதிலே சிலபேர் அரசுனக் கெனக்கெனவே

விதியை யறியாமல் வெட்டிக்கொண் டேமாள்வார்
அத்தருண முன்காலம் அதிகமக னேகேளு
இத்தருண மல்லால் இன்ன மெடுத்துரைப்பேன்
எல்லோருங் கைவிட்டு இருப்பாருனைத் தேடாமல்
நல்லோர் மனதில் நாரணா என்றுரைப்பார்
கோல விளையாட்டுக் கொஞ்ச மெடுப்பேனான்
தூல மறியாமல் தொல்புவியெல் லாமயங்கும்
அன்போர்க ளெல்லாம் ஆவியே தான்மறுகி
இன்ப முடனே ஏங்கியேங்கி யழுவார்
இத்தனை நாளும் இவரைநம்பி நாமிருந்து
புத்தியது கெட்டோம் என்றுமிகப் பேதலிப்பார்
அப்போது ஆகா அன்னீத மாபாவி
இப்போது கண்டுதென்பார் ஏலமே சொன்னதெல்லாம்
எய்த்தானென்பா னன்போரை இடுக்கஞ்செய் தேயடிப்பான்
சூட்ச முடனே சொரூபமொன்று நானெடுப்பேன்
அச்சூட்சம் என்மக்கள் அன்று அறிந்திடுவார்
அதுதா னொருகாலம் அதிகமக னேகேளு
இதுபெரிய சூட்சம் என்மகனே கேட்டிடுநீ
அதின்மேலே அன்போர் அதிகப் பெரியோராய்
இதின்மேலே தாண்டும் எல்லோரும் வல்லோரே
பின்னுமொரு சூட்சம் பிரமாண மாயெடுப்பேன்
பன்னு மணியே பராபரமே கேட்டிடுநீ
குளத்தைத் தடதடெனக் கொந்துகொந் தாயுடைத்து
சுழற்றக்கன லக்கினியும் துர்க்கைமா துர்க்கையையும்
விட்டயச்சு மாநிலத்தில் விளையாடி யேதிரியும்
கட்டணங்க ளாக கனமாய்க் குழுகுழென
ஓடுவார் பதறி விழுவா ரறமெலிந்து
நாடும் பெரியோர் நலமாக வாழ்ந்திருப்பார்
என்மகனே வுன்காலம் இன்னும் வகுப்பேன்கேள்
பொன்மகனே பூமியிலே பின்னுமொரு காரணங்கேள்
கெட்ட நசுறாணி கெம்பிக் கடைக்காலம்
மொட்டைத்தலை யன்வருவான் முளையனவ னோடிடுவான்
ஆடிக் கொண்டாடி அங்குமிங்குந் தானலைந்து
ஓடிக் கொண்டோடி ஒன்றுபோ லேமாள்வான்
மகனே யுன்காலம் மகிழ்ந்திரு என்மகனே
உவமையொன்று சொல்லுகிறேன் உற்பனமாய்க் கேள்மகனே
புத்திரனுக் கேகுருவும் புகன்றதெல்லாம் புகன்றாலும்

சுற்றுமொரு சூட்சத் தொழிலுண்டு மாயானுள்
அத்தனையு மென்னுள் அடக்கமில்லை யென்மகனே
முத்தியெனை யீன்றோர் முதனாளோர் விஞ்சைவைத்தார்
அவ்விஞ்சை மாத்திரமே யானுனக் கீயவில்லை
இவ்விஞ்சை யீவதுதான் எப்போதெனக் கேளு
சீமை யரசு செலுத்தவரும் நாளையிலே
மேன்மை முடிதரிக்கும் வேளையி லென்மகனே
சொல்லுகிற விஞ்சை சுத்தமனே கேட்டிடுநீ
பல்லுயிர் களுக்கும் படியளக்கும் விஞ்சையது
எல்லா முனக்களித்தேன் என்னுடைய நாரணனே
அல்லாமல் நானுனக்கு அருளுகிற விஞ்சையைக்கேள்
பெரியோர்க்கு வாழ்வு பெருகிச் சிறந்தாலும்
மரியாதை யேயிருக்கும் மகனேநீ கேட்டிடுநீ
சற்றோலே வாழ்வு சகடருக் கேவருகில்
கற்றோரே யாகிடினும் கண்டறிவேன் போநீயென்பான்
முள்முருக்கம் பூவு மினுக்குமூன் றுநாளை
கள்ளருக்கு வாழ்வு காணுமது போல்மினுக்கு
நல்லோர்க்கு வாழ்வு நாளுங் குறையாமல்
வல்லோர்க்கும் நல்லோராய் வாழ்ந்திருப்பார் கண்டிருப்பாய்
விள்ளாத ஞாயம் மேல்ஞாய மென்மகனே
துள்ளாத யானை துடியானை யென்மகனே
அடக்கம் பெரிது அறிவுள்ள என்மகனே
கடக்கக் கருதாதே கற்றோரைக் கைவிடாதே
நன்றி மறவாதே நான்பெரிதென் றெண்ணாதே
அண்டின பேரை அகற்ற நினையாதே
ஆபத்தைக் காத்து அகலநீ தள்ளாதே
சாபத்தைக் கூறாதே தன்னளவு வந்தாலும்
கோபத்தைக் காட்டாதே கோளோ டிணங்காதே
பாவத்தைக் காணாதே பகட்டுமொழி பேசாதே
பசுவை யடைத்துப் பட்டினிகள் போடாதே
விசுவா சமதிலே விரோதம் நினையாதே
எளியோரைக் கண்டு ஈந்து இரங்கிடுநீ
அழிவென்ற பேச்சு அனுப்போல் நினையாதே
தொட்டுப் பிடியாதே தோர்வைவைத்துக் காணாதே
கட்டுப் பிடியாதே வெட்கமதைக் காணாதே
வரம்பு தப்பாதே வழிதவறி நில்லாதே
பரம்பூமி கண்டு பாவித் திருமகனே

இத்தனை புத்தி எடுத்துரைத்தே னென்மகனே
புத்தி விபரீதமாய்ப் பின்னுமா ராயாதே
சட்ட மறவாதே தன்னளவு வந்தாலும்
நட்டங் காணாதே நாடாள்வா யென்மகனே
என்மகனே நானுனக்கு இன்னமொரு விஞ்சைசொல்வேன்
பொன்மகனே யுன்னுடைய புத்தியிலே வைத்திருநீ
இச்சட்டந் தன்னில் எள்ளளவு தப்பினதால்
தீச்சட்டம் காய்க்கத் தேதிவரு மென்மகனே
அனுப்போல் மறவாதே யான்வைத்த சட்டமதில்
மனுப்போ லென்றிராதே மனதெண்ண மாயிருநீ
பஞ்சமிர்தே யென்னுடைய பாதைதப்பி நீநடந்தால்
கொஞ்சுங் கிளியே கொன்னெழுப்பு வேனுனையும்
பதறியிரு என்மகனே பம்மியிரு கண்மணியே
இடறுநினையாமல் எண்ணியிரு என்மகனே
பொறுதி மகனே பெரியோரா யாகுவது
உறுதி மகனே உலகமதை யாளுவது
மகனேநா னெத்தனையோ மகாபெலங்கள் கற்றவன்காண்
உகமீதே சொல்லித் தொலையுமோ வுத்தமனே
எவ்வுகங் களுக்கும் இப்படியே தர்மமில்லை
செவ்வுமகா விஷ்ணுதான் என்றுசொல்லார் தேசமதில்
இப்போது என்மகனே இக்கலியன் மாய்மாலம்
செப்ப எளிதல்லவே செயிக்க ஏலாதாராலும்
இப்போதுன்னோ டுரைத்த இயல்விஞ்சைக் ககப்படுங்காண்
அப்பனே பம்மலிலே அகப்படுங்கா ணிக்கலியும்
கலியென்றால் எலியல்லவே கணையாளி வேண்டாமே
வலிமாய நினைவு மாய்மால மென்மகனே
ஆனதா லாயுதங்கள் அம்புதடி வேண்டாமே
மானமாக இருந்தால் மாளுங்கலி தன்னாலே
இன்னமொரு விஞ்சை இயம்புவேன் கேள்மகனே
முன்னம்வகைக் காரனொடு மோதிப் பகையாதே
பகைத்தா லிருக்க வொட்டான்கா ணவ்விடத்தில்
உகத்தடக்கு முன்னே ஒருவரையுஞ் சீறரிது
தாழ்ந்திருக்க வென்றால் சர்வதுக்குந் தாழணுமே
ஓர்ந்திருக்க வென்றால் ஒருவர்பகை யாகாதே
ஆனதால் நீயும் அவனைப் பகையாதே
நானவனைக் கேட்பேன் ஞாயக்கே டாகிடினும்
வலியோர்க் கொருவழக்கு வைத்துநீ பேசாதே

மெலியோர்க் கொருவழக்கு வீணாய்ப் பறையாதே
சொத்தாஸ்தி வஸ்து சுகமென்று எண்ணாதே
வத்தாஸ்தி பெண்ணு வகையென்று எண்ணாதே
நீயெண்ணா தேயிருந்தால் நீணிலங்க ளுமயங்கும்
தானிதின்மே லெண்ணம் தங்குதங் காதேயிரு
சத்துரு வோடும் சாந்தமுட னேயிருநீ
புத்திர ரோடும் பேசியிரு என்மகனே
அன்போர்க்கு மீந்திருநீ ஆகாப்பேர்க்கு மீந்திருநீ
வன்போர்க்கு மீந்திருநீ வழிபோவார்க்கு மீந்திருநீ
சகலோர்க்கு மீந்து தானிருநீ யென்மகனே
வலியோர்க்கு மீயு வழிபோவார்க்கு மீயு
மெலியோர்க்கு மீயு மேன்மையா யென்மகனே
ஆர்க்கு மிகவீந்தால் அந்தத்தர்ம மேகொதிக்கும்
போர்க்கு நினைத்தாரைப் பெலிகொடுக்குந் தர்மமது
தன்மந்தான் வாளு சக்கரங்க ளல்லாது
தின்மையது கேடு செப்பக்கே ளென்மகனே
சாதி பதினெட்டும் தன்னாற்கே டாகுமட்டும்
நீதி யழியாதே நீசாபங் கூறாதே.

## அகில வாசக விளக்கம்:

• தர்மமதாய் தாரணியில் தன்னந்தன்னால் வாழ்ந்து பொறுமை பெரியோராய் பூதலமெல்லாம் வாழ்வார் அப்போது நீ யரசு ஆளுவாய் என் மகனே”

• தர்மம் என்றால் நேர்மையான வாழ்க்கை முறை.
• அனைவரிடமும் அன்புகாட்டுதல்
• ஈகையை கடைப்பிடித்தல்.
• வாய்மையை கடைப்பிடித்தல்.
• விருந்தோம்பல்
• கீழ்தரமான உணர்வுகளை அடக்குதல்.
• பிறர்க்குத் துன்பத்தை தரவல்ல உண்மையத் தவிர்த்தல்.

மனிதர்களைப் பொறுத்தவரை தருமம் என்றால் சரியான செயல்களைச் செய்வது, சரியான பாதையில் நடப்பது ஆகும். உலகத்திலுள்ள மனிதர்கள் இவ்வாறு நீதி நெறியில் வாழ்வது மட்டுமல்லாமல், வான் வெளியில் உலகம் உழல்வதும், அண்ட சராசரங்கள் ஓர் ஒழுங்கில் இயங்குவதும் தருமம் எனப்படும்.

இவ்வுலகில் பிறப்பெடுத்திருக்கின்ற ஒவ்வொரு உயிரினத்திற்கும் தத்தம் ஒவ்வொரு கடமை இருக்கின்றது. அந்த கடமை நிலையில் இருந்து தவறாது அவரவர் செய்ய வேண்டிய கடமைகளை செய்து வருவதே உண்மையான தர்மம் ஆகும். அவ்வாறே இல்லறத்தான் இல்லற தருமத்தை கடைபிடித்து ஒழுக வேண்டும். துறவு நெறியில் வாழ்பவர்கள் துறவு நிலையில் வாழக்கூடிய தர்மத்தை கடைபிடித்து வாழ வேண்டும்.

அறம் பொருள் இன்பம் என்ற மூன்றிலும் தர்மம் தவறாமல் வாழ்பவர்களே பேறு பெற்றவர்கள். தன்னை அறிந்து கொண்டு தான் யார் என்பதை உணர்ந்து தனக்குத் தேவையானது எது என்பதை அறிந்து தன்னால் இயன்ற தர்மத்தை யார் கடைபிடித்து வருகின்றார்களோ அவர்கள் இறைவனை அறிந்து கொள்வார்கள். அவரவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை உணர்ந்து செய்ய வேண்டும் அவ்வாறு தத்தம் கடமைகளை உணர்ந்தவர்களிடம் பொறுமை அதிகமாக இருக்கும்.

**“பொறுமை பெரிது பெரிய திருமகனே”** வேதனையிலும் சோதனைகளும் வெற்றிகளும் தோல்வியிலும் நிதானத்துடன் நடந்து கொள்ளும் பண்பே பொறுமையாகும். பொறுமை ஒருவனை பெரியோனாக உயர்த்துகிறது. மனதை பக்குவப்படுத்தி உயர்ந்தவன் ஆக்குகிறது. துன்பம் நேரிடும் காலத்தில் பொறுமையை கடைப்பிடித்தால் அதுவே நமக்கு இன்பத்தை தருகிறது. நிதானத்தை இழப்பவன் தன்னை இழந்து விடுகிறான்.

ஆகவே நிதானம் இழக்காமல் பொறுமையோடு இருக்க வேண்டும். எந்த ஒரு சூழ்நிலையிலும் பொறுமையை நாம் கடைபிடித்து வந்தோமேயானால் அந்த பொறுமையை நமக்கு உயர்வுக்கு வழிகாட்டும் என்பதை அய்யா கூறியிருக்கின்றார். ஆகவே பொறுமையை கடைப்பிடித்தவர்கள் சிறப்போடு வாழ்வார்கள் என்பதை இங்கே நமக்கு எடுத்துக் கூறுகின்றார்.ஆகவே பொறுமை யோடு கடமைகளைச் செய்கின்ற போது பெரியோனாக இந்த உலகம் எல்லாம் போற்றுகின்ற வகையிலே மக்கள் வாழ்வார்கள். அப்படி வாழ்கின்ற போது ஒரு குடைக்குள் நீ இந்த உலகை ஆட்சி செய்யக்கூடிய ஒரு சூழல் உருவாகும் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.

**“வாரி மூன்றும் கோதி வளைந்திருக்கும் ஓர் தீவை**
**சாதி ஒரு நிரப்பாய் தானா ள்வாய் என் மகனே”**

இந்து மகா சமுத்திரம் அரபிக்கடல் வங்காள விரிகுடா என்று மூன்று கடல்களால் சூழப்பட்டு இருக்கின்றது. தெட்சணா மூலையாகிய தென் மாவட்டமாகும். இங்கு அய்யா வைகுண்டர் தன்னுடைய அவதாரத்தை நிகழ்த்தி மக்களுக்கு நல்லறிவை போதிக்கின்ற விதமாக மணவைப் பதியில் வந்திருந்து ஆறு ஆண்டுகள் தவம் இருந்து மக்கள் எல்லோரையும் ஒரு தலத்தில் வருத்தி அவர்களுடைய சஞ்சல நொம்பலங்களை தண்ணீர் மண்ணாலும் தர்மத்தாலும் தீர்த்து அவர்களுக்கு நல்லருள் பாலித்து சிறப்பாக வாழ்வதற்காக சாதி வேற்றுமைகளை எல்லாம் வேரறுத்து ஒன்றே குலம், பரம்பொருளாகிய தெய்வம் ஒன்றே என்ற உயர்ந்த உன்னத கோட்பாட்டை மக்களுக்கு ஞான உபதேசமாக அளித்தார்.

அய்யாவினுடைய ஞானத்தை பெற்ற மக்கள் சாதி வேற்றுமைகளை கருவறுத்து எல்லோரும் ஒன்றே என்ற ஒரு நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு ஜாதி சமய வேற்றுமைகளை கடந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நிலை தர்ம யுகம் தோன்றுவதற்குரிய அடையாளமாக அய்யா இங்கே எடுத்துரைத்திருக்கின்றார்.

**“கோடு பல வாதும் கோள் நீசப் பாவிகளும்**
**கேடு வரும் காலம் கிருஷ்ணாவுன் நற்காலம்**
**வானமது வெள்ளி மாறி வெறும் வானமதாய்**
**மேன் முகிலத்து வெறுவானமாய் தோன்றும்**
**நல்ல மகனே உனக்கு வரும் நற்காலம்**
**சொல்லத் தொலையாது குலமகனே என் கணக்கு**
**ஒக்க அடைக்கி உரைத்திற்க்கு உன்னிடத்தில்**
**நிக்க நிலைக்க நினைத்ததெல்லாம் அங்காகும்”**

எங்கு மக்கள் ஒற்றுமையோடு வாழ்கின்றார்களோ அங்கு கோள் மூட்டி சண்டையை உருவாக்கி பிரிவினை உருவாக்க வேண்டும் என்று எண்ணுகின்ற கோள்நீச பாவிகளால் வெற்றி கொள்ள முடியாது. வாது ,சூது, வஞ்சகம், கோள், குண்டனி போன்ற தீய குணங்களை உடையவர்களே இந்த கோள் நீசப்பாவிகள். இத்தகையவர்களை கண்ணால் காண்பது கூட பாவம்.

அவர்களோடு மிகவும் இணைந்து இருப்பது மிகவும் ஆபத்தில் கொண்டு சேர்க்கும். அவர்கள் வரம்பு மீறியக் காமமும் வஞ்சகம் உடையவர்கள். பிறப்பொருளை அபகரிப்பவர்கள். வெட்கம் கெட்டவர்கள். கொடியவர்கள். எனவே அவர்களை இனம் கண்டு ஒதுக்கி விட வேண்டும். இவ்வாறு தீயக்குணம் கொண்டவர்களை யார் இனம் கண்டு ஒதுக்கி வருகிறார்களோ அப்போதே அவர்களுக்கு நற்காலம் துவங்கி விடும் என்பதை இங்கே எடுத்துக் கூறுகின்றார்.

.அதுபோல சாதி ஒரு நிரப்பாக எந்தவித வேற்றுமையும் இல்லாமல் மக்கள் ஒற்றுமையாய் வாழ்கின்ற போது தேசத்திலே கோள் நீசப்பாவிகளால் வெற்றி கொள்ள முடியாது . அவர்கள் உருவாக்க நினைக்கும் சண்டைகளால் அவர்கள் எந்தவித சாதனைகளையும் புரிய முடியாது என்பதை இங்கே எடுத்துரைக்கிறார். அப்படி இருக்கின்ற அந்த நேரத்திலே அவர்களுக்கு தானாகவே அழிவு வந்துவிடும் என்பதையும், அந்த நேரம் நன்மையே கடைப்பிடித்து இருக்கின்ற மக்கள் சிறப்பாக வாழ்வார்கள் என்றும் அய்யா எடுத்துரைக்கிறார்.

வானத்தில் இருக்கின்ற முகில் என்றுச் சொல்லக் கூடிய மேகமானது அங்குமிங்குமாக மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது. அதுபோல மக்களின் மனதில் கலி எண்ணங்கள் அலைப்பாய்ந்துக் கொண்டிருக்கும். ஆனால் கலி தன்மை மக்களிடம் இருந்து மறைகின்றப்போது எப்படி முகிலானது அத்து அதாவது வானத்தில் மேக ஒட்டம் இல்லாமல் வெறும் வானமாக தோன்றுகிறதோ அவ்வாறே கலி எண்ணங்கள் அகன்ற மனமும் தெள்ள தெளிவாக எண்ணம் என்ற வினை நீங்கி இருக்கும். அப்போது நினைத்தது எல்லாம் கைக்கூடும். பேரானந்த நிலையை உணரமுடியும். மேலும் வானத்தில் இருக்கின்ற நட்சத்திரங்கள் எல்லாம் மறைந்து விடும் என்பதை இங்கே எடுத்துரைக்கிறார்.

அவ்வாறு இயற்கை நிலை மாற்றம் ஏற்பட்டு இருக்கின்ற அந்த தருணம் உனக்கு ஏற்ற காலமாக இருக்கும். அப்போது நீ என்ன என்ன நினைக்கின்றாயோ அவையெல்லாம் உன்னுடைய நினைவுக்கு ஏற்றவாறு அவ்வாறு அமைந்துவிடும். அதன் பிறகு நீ நினைத்ததெல்லாம் நடத்திக் கொள்ள முடியும் என்று சொல்லுகின்றார். மேலும் நான் நிச்சயத்து நடத்துகின்ற செயல்பாடுகள் இவைதான் என்று யாராலும் எடுத்துக் கொள்ள

முடியாது. என்னுடைய கணக்கு என்ன என்பதை யாரும் உணர்ந்து கொள்ள முடியாது. ஆனால் எல்லாவற்றையும் ஒக்க அடக்கி உன்னிடத்தில் நான் உரைத்திருக்கிறேன். ஆகவே நீ என்னவெல்லாம் நினைக்கின்றாயோ அவையெல்லாம் அங்கே உனக்கு வசமாகும் என்பதை எடுத்து உரைக்கின்றார்.

## விஞ்சை பகுதி-1

**“பொறுமை பெரிது பெரிய திருமகனே**
**தர்மம் பெரிது தாங்கியிரு என்மகனே”**

பொறுமை ஆன்மிக குணங்களில் மிகச்சிறந்தது. உன்னால் பொறுமையாக இருக்க முடிந்தால், வேறு எதுவும் தேவையில்லை. பொறுமை மட்டுமே போதும், அது மட்டுமே போதும். பொறுமை என்றால் இணைப்புணர்வு, எந்த வித அவசரமும் இல்லாமல் செய்யப்படுவது. பொறுமையான மனிதன் தியானிப்பவனாக மாறுவான், ஏனெனில் அவன் உள்வாங்குபவனாக மாறுகிறான். இந்தக் கலிவுலகில் அனைத்து செயல்பாடுகளும் பொறுமையை சோதிக்கும் விதத்திலே அமைந்திருக்கின்றது. ஆனால் நாம் நிதானத்தோடு பொறுமையை கடைப்பிடித்தோமேயானால் நாம் எல்லாவற்றிலும் வெற்றிக் கொள்ள முடியும்.

மேலும் கலிகாலத்தில் நாம் செய்கின்ற அனைத்து நல்ல செயல்களும் தர்ம செயல்களே. ஆகவே நல்ல செயல்களைக் கடைபிடித்து வாழ வேண்டும். அய்யா கலியுகத்தில் நமக்கு மிகச்சிறந்த தர்மமாகக் கூறியிருப்பது, வைகுண்ட அவதாரத்தின் உடைய நோக்கத்தை எடுத்து சொல்வது ஆகும். இதையே அய்யா வைந்தரின் உவமை சொல்ல யுகதர்மம் ஆகுமே என்றுக் கூறியிருக்கின்றார். அய்யாவினுடைய அவதார நிகழ்வுகளை எடுத்துச் சொல்வதும் அதர்மம் தலைதூக்குகின்ற போது தர்மத்தை நிலை நாட்டுவதற்காக இறைவன் அவதரிப்பார் என்ற உண்மை உணர்வை மக்களுக்கு புகட்டுவதற்காகவும், அய்யா கூறிய அறநெறிக் கருத்துக்களின் படி வாழ்வதற்குரிய வழிகளை பிறர் அறியும் படியாக செய்வதற்கு யார் யார் முயற்சி செய்கின்றார்களோ அதுவே கலியுகத்தில் உயர்ந்த தர்மமாகக் கூறப்படுகின்றது.

இந்த தர்மத்தைக் கடைபிடிப்பதற்கு காசு பொருள் இருந்தால் தான் செய்ய முடியும் என்பது இல்லை. தூய்மையான மனம் இருந்தால் போதும். ஆகவே அய்யா வைகுண்டர் வகுத்த வழியில் வாழ்ந்து எப்போதும் அவரை உள்ளத்தில் தியானித்து வருவோமேயானால் அதைவிட சிறந்த தர்மம் எதுவும் இல்லை. ஆகவே யுக தர்மத்தை பெரிது என்று கடைபிடித்து வாழ வேண்டும் அப்போது எல்லாம் நீ நினைத்ததுப் போல் நடக்கும் என்பதை இங்கே நமக்கு எடுத்துக் கூறுகின்றார்.

## விஞ்சை பகுதி-2

**“நல்லோருக்கும் ஓர் நினைவு நலமாகும் என்று சொல்லி
எல்லோருக்கும் விளம்பி இரு நீ என் மகனே”**

மனதை கட்டுப்படுத்தி மனதிலிருந்து கலிமாயை எண்ணங்களை அகற்றி ஒரே நினைவோடு ஒரே புத்தியோடு இருந்து ஆன்ம ஞானத்தைப் பெறக்கூடியவர்கள் எல்லாவித சிறப்புகளையும் பெறுவார்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற தெளிந்த அறிவு அறிவோடு இறைவனை காண வேண்டும். ஞானம் பயில்வதற்கு சுத்தமான ஒரு நிலை உடைய எண்ணம் இருந்தால் போதும்.எண்ணம் போல் வாழ்வு. நாம் நல்ல எண்ணங்களை விதைத்தால் நல்ல பலனை பெற முடியும். தீயவற்றை விதைத்தால் தீய விளைவுகளை அனுபவிக்க வேண்டி வரும். ஆகவே ஒரு நினைவோடு இருந்தாலே இறைவனை கண்டு கொள்ள முடியும். மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம் என்று கூறுவார்கள். நமது எண்ண ஓட்டங்கள் தூய்மையானதாக இருந்தால் இறைவன் நமக்கு எல்லா சிறப்புகளையும் தருவார் என்பதை நாமும் உணர்ந்து பிறருக்கும் எடுத்து சொல்ல வேண்டும்.

## விஞ்சை பகுதி-3

**“பொல்லாதாரோடும் பொறுமை உரை என் மகனே
தன்னாலே ஆக மட்டும் சாத்திரு என் மகனே”**

பிறருக்கு தீங்கு செய்த பிறரை வாழ விடாமல் அவர்களுக்கு பல விதங்களில் துன்பங்களைக் கொடுக்கின்ற சுயநலவாதிகள் அதிகமாக இருப்பார்கள். இதுவே கலியுகத்தின் நிலை. ஆனால்

அப்படிப்பட்ட பொல்லாத குணம் உடையவர்களோடும் பொறுமையை கடைபிடிக்க வேண்டும். தன்னாலே ஆகுகின்ற வகையில் புத்தி உரைத்து அவர்களை நல்வழிப்படுத்துவதற்கு வழி கூற வேண்டும். இறைவனும் பல அவதாரங்கள் எடுத்து அசுரர்களுக்கு பலவாறு புத்தி சொல்லி திருத்துவதற்கு முயல்கிறார். அவ்வாறு திருந்தாத பட்சத்தில் அசுரர்களை அழிக்கின்றார்.

அறியாமையில் மூழ்கி மாயகையில் கட்டுண்டு கிடக்கும் ஜீவராசிகளை உயிர்ப்பிப்பதற்காகவும் நல்வழிப்படுத்துவதற்காகவும் எத்தனையோ முறை இறைவன் தன்னுடைய அவதாரத்தை நிகழ்த்தி இருக்கின்றார். வைகுண்ட அவதாரமும் மாய்கையில் இருந்து மக்களை விடுவிப்பதற்காகவே ஆகும். அய்யா கலி நீச எண்ணம் கொண்டவர்களை திருத்துவதற்கு எத்தனையோ வாய்ப்பு களை கொடுக்கின்றார். ஆனால் கேளாத பட்சத்தில் அழிக்கவும் செய்கிறார். இதையே அய்யா, '**கோத்திரத்தில் உள்ளவர்களுக்கு கூடுமட்டும் புத்திச் சொன்னேன்**. **கேளாத பேர்களுக்கு நான் என்ன செய்வேன் அப்பா**' என்றுக் கூறுகின்றார். நம்மால் முடிந்த அளவு தீய எண்ணம் கொண்டவர்களுக்கு புத்தி உரைக்க வேண்டும் என்பதையே தன்னாலே ஆகுமட்டும் சாற்றி இரு என் மகனே என்றுக் கூறுகின்றார்.

வந்தால் அறிவார் வராதார் நீறாவார் என்று அய்யா கூறியிருப்பது , அய்யா சொன்ன நெறிப்படி இந்த கலிவுலகில் வாழ்ந்து இறைவனை அடைய வேண்டும் என்று யார் யார் எல்லாம் நினைக்கிறார்களோ அவர்கள் இறைவனுடைய பாதாரமாகிய தர்ம யுக வாழ்வை பெறுவார்கள். ஆனால் வைகுண்ட அவதாரத்தின் மகிமையை அறியாது ஏளனம் செய்தவர்கள் , வைகுண்டர் காட்டிய வழியில் வந்தும் தன்னுடைய வாழ்வில் அய்யா சொன்ன நெறிகளைப் பின்பற்றாதவர்கள் எல்லாம் அழிந்து போவார்கள் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.

## விஞ்சை பகுதி-4

### "தன்னந்தன்னாலே சாதிக்கு சாதி மாளும்"

ஆதியில் சாதிப்பிரிவினை என்பது இல்லை. மக்கள் அவரவர் செய்கின்ற தொழிலில் அடிப்படையில் கலியநீசர்களால் உருவாக்கப்பட்டதுதான் சாதி . நாகரீகம் வளர வளர ஏற்றத்தாழ்வுகளும் வளர்ந்தன. ஏற்றம் பெற்ற சுயநலமிகள் சாதி பிரிவினையை ஏற்படுத்தினர் இது அறியாமையின் விளைவால் இங்கே நடைபெறுகின்றது. எப்போது இறையருள் பெற்று மனிதர்கள் தன்னை ஆன்மா என்று உணருகின்றார்களோ அல்லது எல்லோருள்ளிலும் இறைவன் ஆன்மாவாக இருக்கிறார் என்ற ஆன்ம நேயம் வளர்கிறதோ அப்போது மனிதரிடம் இருக்கின்ற சாதி வெறியானது தன்னந்தன்னாலே அழிந்துவிடும்.

இந்த அறிவு கைவரப் பெற்றவர்கள் தன்னை அறிந்து தலைவனை அறிகின்ற பேரருளைப் பெறுவார்கள். இது கை கூடாதவர்கள் பிறவி பிணையிலிருந்து விடுபடுவது இல்லை. மீண்டும் மீண்டும் பிறந்து ஆன்ம விடுதலை பெற முடியாமல் அல்லல் படுவார்கள். இதனையே அய்யா வந்தால் அறிவார் வராதார் நீறாவார் என்று குறிப்பிடுகிறார். மேலும் நல்லோர்கள் ஒருபோதும் தாழ்வடைவது இல்லை. இதையே அய்யா நல்லோர்க்கு வாழ்வு நலமாகும் என்று கூறியிருக்கின்றார் இவ்வாறு உண்மை நிலையை அறிந்தவர்கள் அதிகரிக்கும் போது அந்த சாதி பிரிவினையால் உருவாகும் ஏற்றத்தாழ்வுகளானது தன்னந்தன்னாலே அழிந்து போகும் என்பதை இங்கே எடுத்துரைத்திருக்கிறார்.

## விஞ்சை பகுதி-5

“**நல்ல நினைவோர்க்கு நாள் எத்தனை யானாலும்**
**பொல்லாங்கு வராது புவி மீதில் வாழ்ந்திருப்பார்**.”

நம்முடைய எண்ணமே நம்முடைய வாழ்க்கையை தீர்மானிக்கிறது. நல்லதே நினைத்தால் நம்முடைய வாழ்வு நலமாகும். இதையே அய்யா இங்கே எடுத்துரைக்கின்றார். நம்முடைய எண்ணம் ஆனது நல்ல சிந்தனையாக இருக்கின்ற போது அதுவே சிறப்பான செயலை வடிவமைக்குகின்றது. எண்ணமும் செயலும் நன்மையாக இருக்கின்ற போது நம்முடைய வாழ்வில் எந்த வித குறையும் இல்லாமல் சிறப்பான ஒரு வாழ்வை பெற முடியும். ஆகவே நல்லோர்க்கு வாழ்வோ நலமாகும் என்று சொல்லி எந்த வித தீங்கும்

இல்லாமல் என்றைக்கும் வாழ்ந்திருப்பார்கள் என்பதை அய்யா இங்கே எடுத்துரைக்கின்றார்.

## விஞ்சை பகுதி-6

**“நாட்டில் ஒருவனுமன் நல்லவனை நானயச்சி**
**கோட்டிச் செய் என்றுரைப்பேன் கோமகனே உன் காலம்”**

அய்யா வைகுண்டரின் அவதார காலத்தில் இந்த நாடு மட்டுமல்ல உலகின் பெரும்பான்மையான நாடுகள் அடிமைப்பட்டு தான் கிடந்தன. ஆங்கிலேயர்கள் இங்கு பல நாடுகளை தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார்கள். எங்கு பார்த்தாலும் அடிமை என்ற நிலையும் சாதி வெறியும் தீண்டாமையும் தாண்டவம் ஆடின. இந்த நிலையில் பல மகான்கள் தோன்றி இந்த மண்ணுலகத்திற்கு வந்து அனுமன் போன்று ஆன்ம பலம் பெற்றவர்களாக தொண்டு செய்யும் தூய உள்ளம் உடையவர்களாக, இறைவனுடைய திருவடி பேறுப் பெற்றவர்களாக, தியாகிகளாக இருந்து தங்கள் இன்னுயிர் ஈந்து நாட்டை அடிமை தழையிலிருந்து மீட்டு மக்களை விடுதலை செய்வதற்காக போராடி வெற்றி கண்டார்கள். இறையருளால் அவர்கள் பெற்ற ஆன்ம பலத்தாலும் சாஸ்திர வேத நடைமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள். நீசர்களுக்கு எதிராக செயல் பட்டு அவர்களிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றி மக்களாட்சி மலரச் செய்தார்கள். மேலும் முறை தப்பி ஆண்ட கொடுங்கோல் மன்னர்களான முகடர்கள் வலுவிழப்பார்கள் என்றும் மண்ணெல்லாம் மக்களாட்சி மலரும் என்றும் குறிப்பிடுகிறார்.

## விஞ்சை பகுதி-7

**“முறை தப்பி ஆண்ட முகடன் வெறும் நீசன்**
**குறைநோவு கண்டு கூடிழப்பான் உன் காலம்**
**அதிலே சில பேர் அரசுனக்கெனக்கெனவே**
**விதியை அறியாமல் வெட்டிக்கொண்டே மாழ்வார்**
**அத்தருணம் உன் காலம் அதிக மகனேகேளு**
**இத்தருணம் அல்லாமல் இன்னு மெடுத்துரைப்பேன்”**

அணு அளவு கூட இறைஞானமும் ஆன்ம நேயமும் இல்லாத சுயநலவாதிகள் ஆட்சியை பிடிப்பதற்காக போட்டி

போட்டுக்கொண்டு ஒருவரை ஒருவர் சண்டை போட்டு வெட்டிக் கொண்டே மாழ்வார்கள் என்று கூறுகின்றார். இப்போதைய ஆட்சியாளர்களின் நிலை அவ்வாறே இருக்கிறது. தன்னுடைய பதவிக்காக எல்லோரையும் துன்பப்படுத்துகின்ற ஒரு நிலையை இருக்கின்றது. ஒருவருடைய காலை ஒருவர் பற்றி கொண்டு கீழே தள்ளிவிட்டு தான் மட்டும் நாற்காலியில் இடம் பிடிக்க வேண்டும் என்று துடிக்கின்றார்கள். இதற்காக பல பாதக செயல்களை செய்கின்றார்கள். இதனால் தானும் கெட்டு பிறரையும் பிறரையும் துன்புறுத்துகிறார்கள். ஆனால் இறைஞானம் பெற்ற மக்கள் எந்த ஒரு செயல் செய்தாலும், எந்த பதவி வந்தாலும் அது இறைவனால் அருளப்பட்டது என்று பற்றற்ற பரம ஞானிகளாக இருப்பார்கள்.

## விஞ்சை பகுதி-8

**“இத்தருணமல்லால் இன்னும் எடுத்துரைப்பேன்**
**எல்லோரும் கைவிட்டு இருப்பார் உன்னை தேடாமல்**
**நல்லோர் மனதில் நாரணா என்றுரைப்பார்”**

இறை சிந்தனை என்பது இப்போது மக்களிடம் அணு அளவு கூட இல்லை. பணத்திற்கும், பதவிக்கும், பகட்டிற்கும் அடிமையாக இருக்கின்றார்கள். இறைஞானம் பெற வேண்டும் இறையருளை பெற வேண்டும் என்கின்ற எண்ணம் இல்லாமல் மக்கள் பணத்திற்காகவும் பதவிக்காகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதையே அய்யா எல்லோரும் உன்னை கைவிட்டு இருப்பார் உன்னை தேடாமல் என்று கூறுகின்றார். மேலும் யார் இறைவனை தேடி இறை அருளை பெற வேண்டும் என்று இறைவன் கூறிய நெறிமுறையில் நடக்கின்றார்களோ அவர்களுடைய வாழ்வில் எல்லா சிறப்புகளையும் பெறுவார்கள். அவர்களிடம் நான் இருந்து அவர்களை நல்வழிப்படுத்துவேன் என்று கூறுகின்றார். இதையே நல்லோர் மனதில் நாரணா என்றுரைப்பார் என்றுக் கூறுகின்றார். மேலும் கோல விளையாட்டு கொஞ்சம் எடுப்பேன் என்று கூறுகின்றார்.

கோல விளையாட்டு கொஞ்சம் எடுப்பேன் என்று அய்யா கூறியிருக்கின்றார். எப்படி என்றால் எல்லோரையும் நல்லவராக மாற்ற வேண்டும் என்பதற்காக பல விதமான சூட்சமங்களை கையாண்டு தீயவர்களை திருத்துகின்ற விதமாக பல சூட்ச

அவதாரத்தின் மூலம் தீயவர்களுக்கு திருந்தி வாழ பல வாய்ப்புகளை கொடுக்கின்றார். யுகா யுகங்கள் தோறும் எப்படி அசுரர்களை அழிப்பதற்காக இறைவனுடைய அவதாரம் நிகழ்ந்ததோ அதுபோல இந்த கலியுகத்திலும் மக்கள் மனதில் இருக்கின்ற மாய அழுக்குகளை மாற்றுவதற்காக பல பேர்களின் மூலமாக பல புத்திமதிகளை சொல்லி பல சூட்சமங்களை கையாண்டு இறைவனே நேரில் வந்து பல உபதேசங்களை கூறுகின்றார். ஆனால் அதிலும் கேளாத பேர்கள் அழிவை சந்திப்பார்கள் என்று கூறுகின்றார்.

மேலும் இறைவனுடைய தூலம்[சூட்சமம்] அறியாமல் தொல்புவி எல்லாம் மயங்கும் என்று அய்யா தன்னுடைய சூட்சமத்தை உணராமல் உலகமே அடுத்து என்ன நடக்கும் என்பதை உணர்ந்து கொள்ள முடியாது தவித்துக் கொண்டு இருக்கும். ஆனால் அன்போர்கள் எல்லாம் இறைசூட்சமத்தை உணர்ந்து அழிவிற்கான உண்மையானக் காரணத்தை அறிந்து கொள்வார்கள். இறைவனை கண்டு கொண்ட மக்கள் இறைவனுடைய நெறியில் வாழ்ந்து பரபிரம்மத்தை உணர்ந்து கொண்ட மக்கள் இந்த சூட்சமத் விளையாட்டுகளை எல்லாம் கண்டு பதறிப் பயந்து பணிந்து வாழ்வார்கள் என்பதை இங்கே கூறுகின்றார்.

மேலும் நீச குலங்கள் எல்லாம் புத்தி கெட்டோம் என்று பேதலித்து அழிவைச் சந்திப்பார்கள். இவ்வாறு அழிவை சந்திக்கும் நீசகுலங்கள் தங்களுடைய அழிவிற்கு தாங்களே காரணம் என்பதை உணராமலும் , இறைவனுடைய அவதார சூட்சமங்களை எல்லாம் கண்டுகொள்ளாமலும் அன்பான சான்றோர் குல மக்கள் தான் தங்கள் துன்பங்களுக்கு காரணம் என்று எண்ணி அய்யா கூறிய நெறிகளை பின்பற்றி வாழும் சான்றோர் மக்களை ஏளனமாக பேசியும், அவர்களுக்கு பலவிதத்துன்பங்களை செய்து துன்புறுத்துவார்கள்.

இவ்வாறு பிறருக்கு துன்பம் செய்து கொண்டிருக்கின்ற இந்த நீசர்களை அழிப்பதற்காக மேலும் ஒரு பெரிய சூட்சம சொரூபம் ஒன்றை நான் எடுப்பேன். அந்த சூட்சமம் எடுக்கின்ற அந்த நேரம் உனக்கு ஏற்ற காலமாக இருக்கும் அதிகமகனே கேட்டிரு நீ என்று கூறுகின்றார். அவ்வாறு நான் எடுக்கின்ற அந்த சூட்சமமானது சான்றோர்கள் எல்லோரும் அதிகப் பெரியோராய் வாழ்வதற்குரிய வழிகாட்டுவதாக இருக்கும். நீசர்களுக்கு அழிவைக் கொடுக்கின்ற

விதத்தில் அமையும். அவ்வாறு நான் எடுக்கின்ற சூட்சும திருவிளையாடல் களைத் தாண்டுகின்ற பிற்பாடு அன்பான மக்கள் ஒவ்வொருவரும் வல்லவராகவும் பெரியோராகவும் வாழ்வார்கள்.

## விஞ்சை பகுதி-9

**“ஒரு சூட்சுமம் பிரமாணமாயெ டுப்பேன்**
**பன்னுமணியே பராபரமே கேட்டிரு நீ**
**குளத்தை தடதட என கொந்து கொந்தாய் உடைத்து**
**சுழற்ற கன லக்கினியும் துர்க்கமகா துர்க்கையையும்**
**விட்டயச்சு மாநிலத்தில் விளையாடியே திரியும்**
**கட்டணங்களாக கனமாய் குழுகுழென**
**ஓடுவார் பதறி விழுவார் அறமெலிந்து**
**நாடும் பெரியோர் நலமாக வாழ்ந்திருப்பார்**
**என் மகனே உன் காலம் இன்னும் வகுப்பேன் கேள்**
**பொன் மகனே பூமியிலே பின்னுமொரு காரணங்கேள்”**

மேலும் தன்னுடைய சூட்சம விளையாட்டுகள் பலவற்றை அய்யா கூறி வருகின்றார். எப்படி என்றால், இயற்கை பேரழிவுகள் உருவாகும் என்பதை இங்கே எடுத்துரைக்கின்றார். நீரினாலும் அதாவது மழையின் காரணமாக பல இழப்புகள் வரும் என்பதையும், அக்கினியால் அநேக தீமைகள் உருவாகி நாடுகள் அழியும் என்பதையும், காற்றாலும் கடலாலும் பல இடங்கள் அழிவுக்கு உண்டாகும் என்பதை எடுத்துக் கூறுகின்றார். மேலும் துர்க்கை மகா துர்க்கையை விட்டாச்சு மாநிலத்தில் விளையாடி திரிவேன் என்று கூறுவதன் மூலம் பல விதமான தீமைகளாலும் போர் முறைகளாலும் சண்டைகளாலும் மக்கள் பல துன்பங்களை சந்திப்பார்கள்.

தீவினைகள் பல உருவாகும் இதனால் பல இறந்து மடிவார்கள் என்றும் அவ்வாறு அழிவுகள் நேரிடுகின்ற போது மக்கள் தங்கள் இருக்கின்ற இடங்களை விட்டு விட்டு ஆங்காங்கே ஓடி பதறி அலைவார்கள் என்றும், இன்றைய சூழ்நிலையில் பல நாடுகளில் போர் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் மக்கள் அங்கு வாழ முடியாமல் அகதிகளாக வேறு நாடுகளுக்கு சென்று க் கொண்டு இருக்கும் நிலையை எடுத்துக் கூறுகின்றார். ஆனால் இறை நம்பிக்கையோடு இறைவனை பற்றி பிடித்து வாழுகின்ற மக்கள்

என்றும் நலமாக வாழ்வார்கள் என்றும் ,அப்படி வாழுகின்ற காலம் உனக்கு ஏற்ற காலம் மகனே என்று அய்யா கூறுகின்றார்.

மகனே நீ இந்த பூவுலகில் சென்று அருளாட்சி செய்யக்கூடிய காலம் இந்த காலமாகும். அவ்வாறு நீ அருளாட்சிச் செய்கின்ற அந்த தருணம் கெட்ட நசுராணி ஒருவன் கெம்பிக் கடைக்காலம் மொட்டை தலை வருவான் முழையனவனோ டிடுவான். ஆடி கொண்டாடி அங்குமிங்கும் தானடைந்து ஓடிக்கொண்டாடி ஒன்று போலே மாழ்வான் மகனே உன் காலம் மகிழ்ந்திரு மகிழ்ந்து இரு என் மகனே என்று கூறுகின்றார் . நீ போய் இந்த உலகில் அருளாட்சி செய்கின்ற அந்த நேரத்திலே தீய எண்ணம் உடைய பேத புத்தி உடைய சாதி வெறி கொண்ட கெட்ட நசுராணி என்ற வெள்ளையனுடைய ஆட்சியினுடைய கடைக்காலமாகும் அதாவது அவனுடைய ஆட்சி முடிவு பெறுகின்ற நேரமாகும். மொட்டை தலையன் எனப்படுகின்றவன் ஆட்சியை பற்றிக்கொண்டு ஒருவர் மீது ஒருவர் பகை கொண்டு மாறி மாறி சண்டை போட்டுக்கொண்டு தானே மடிந்து விடுவார்கள்.

அதன் பிறகு நாட்டைக் கைப்பற்றி தன்னுடைய அதிகாரத்திற்குள் கொண்டு வர வேண்டும் என்று வந்த நசுராணியானவன் அங்கும் இங்கும் அலைந்து எல்லோரையும் அடிமைப்படுத்த வேண்டும் என்ற அவனுடைய ஆட்சியானது இங்கு செல்லுபடியாகாமல் ஓடிக்கொண்டே திரிந்து அலைந்து வெற்றி கொள்ள முடியாது தவித்துக் கொண்டு ஒன்று போல மாழ்வான். அதாவது தீய நோக்கோடு நாட்டை அபகரிக்க வந்தவர்கள் எல்லாம் அழிந்து போவார்கள். அந்த நேரம் உனக்கு உகந்த காலம் என்று கூறுகின்றார் .மேலும் ஒரு உவமை சொல்லுகின்றேன் உற்பனமாய்க் கேள் மகனே என்று எம்பெருமான் அடுத்ததாக எடுத்துச் சொல்லுகின்றார்.

## விஞ்சை பகுதி-10

**"புத்திரனுக்கு குருவும் புகன்றதெல்லாம் புகன்றாலும்**
**மற்றுமொரு சூட்சத் தொழிலுண்டு மாயானனுள்**
**அத்தனையும் என்னுள் அடக்கம் இல்லை என் மகனே**
**முக்தி எனை ஈன்ற முதல் நாள் ஓர் விஞ்சை வைத்தார்**
**அவ்விஞ்சை மாத்திரமே யான் உனக்கு ஈயவில்லை**
**இவ்விஞ்சை ஈவதுதான் எப்போ என கேளு**

**சீமை அரசு செலுத்த வரும் நாளையிலே**
**மேல்முடி தரிக்கும் வேளையிலே என் மகனே**
**சொல்லுகிற விஞ்சை சுத்தமனே கேட்டிரு நீ**
**பல்லுயிர்களுக்கும் படியளக்கும் விஞ்சையது**
**எல்லாம் உனக்கு அளித்தேன் என்னுடைய நாரணரே**
**அல்லாமல் நானுனக்கு அருளுகிற விஞ்சையைக் கேள்"**

அதாவது ஒரு குருவானவர் தம் மாணாக்கருக்கு வித்தைகளை கற்றுக் கொடுக்கும் போது தம்முடைய தற்காப்புக்காக ஒரு சில ரகசியங்களை அடவுகளை வைத்திருப்பார். அப்படி கூட நான் எதையும் என்னுள்ளே மறைத்து வைக்கவில்லை. என்னிடம் எந்த ரகசியமும் இல்லை. எல்லாம் உனக்கு நான் தந்துவிட்டேன் என்று கூறுகின்றார். மேலும் முக்தி அருளும் மேல் நிலையான பரம நிலையில் இருந்து நான் வெளிப்பட்ட பொழுது எனக்கு பல் உயிர்களுக்கும் படி அளக்குகின்ற விஞ்சை வழங்கப்பட்டது. அது மட்டும் இப்போது நான் உனக்கு ஈயவில்லை.

ஏனென்றால் பூமியிலே சென்று மனு நிறம் காட்டி அவதார இகனைகளை நடத்த உள்ளாய். அந்த அவதாரங்களை நிறைவு செய்து மேல் நிலையான பர நிலையை அடைந்ததும் அந்த விஞ்சை உனக்கு அருளப்படும். ஆக எல்லா விஞ்சைகளும் உனக்கு நான் தந்துவிட்டேன் என்று கூறுகின்றார். இங்கு படி அளக்கும் விஞ்சை என்பது பரிபூரண பேரானந்த நிலை அருளும் வல்லமையை கூறுகின்றார். ஜீவாத்மாக்கள் உலகினில் பந்தங்களில் இருந்து விடுபட்டு பரமாத்மாவோடு ஐக்கியமாகுகின்றபோது தான் அந்த பேரானந்த நிலையை அடையும். எனவே சீமை அரசு செலுத்த வரும் நாளையிலே மேன்முடி தரிக்கும் வேளையிலே அருளப்படும் என்று கூறுகின்றார். இதிலிருந்து தர்மயுக வாழ்வை பெறுகின்ற போது அந்த சிறப்பை நாம் உணர்ந்து கொள்ள முடியும் என்பதை எம்பெருமான் நமக்கு இங்கே எடுத்துக்காட்டுகின்றார்.

## விஞ்சை பகுதி-11

"**பெரியோர்க்கு வாழ்வு பெருகிச் சிறந்தாலும்**
**மரியாதை யேயிருக்கும் மகனேநீ கேட்டிடுநீ**
**சற்றோலே வாழ்வு சகடருக் கேவருகில்**

**கற்றோரே யாகிடினும் கண்டறிவேன் போநீயென்பான்"**

உண்மையில் யார் உயர்ந்தவர் என கேட்டால் யாருடைய எண்ணம் உயர்ந்ததாக இருக்கின்றதோ, யாருடைய பண்பு உயர்வானதாக இருக்கிறதோ, யார் பிறருக்காகவே வாழ்ந்துக் கொண்டு இருக்கின்றார்களோ அவர்கள் தான் உண்மையில் உயர்ந்தவர்கள். அப்படி வாழ்கின்றவர்கள் எப்போதும் நல்ல சிந்தனை உடையவர்களாக இருப்பார்கள். யார் ஒருவர் யான் என்னும் அகப் பற்றுகளை விட்டவர்களாக பேத புத்தி இல்லாதவர்களாக எப்போதும் சமநிலை காப்பவர்களாக இன்பத்திலும் துன்பத்திலும் பெருமையிலும் சிறுமையிலும் நிலை தடுமாறாதவர்களாக வாழுகின்றவர்கள் சிறப்புறுவார்கள். அப்படிப் பட்ட நல்லவர்களின் கூட்டுறவு நன்னெறிகளை காட்டுவதோடு பேரின்பத்தையும் நல்கும். ஆகவே பணிவோடு வாழுகின்ற அவர்களே பெரியவர்களாக கருதப்படுகின்றார்கள்.

மேலும் இறை சிந்தனை உடையவர்களாக எப்போதும் இறைவனை மறவாது, எல்லோரையும் இறைவனாக பாவிக்கக்கூடிய எண்ணமுடையவர்கள் இருப்பார்கள். அப்படி இருப்பவர்கள் யாரோ அவர்களே உயர்ந்தவர்கள். அவர்கள் தங்களுடைய நிலை எவ்வளவு உயர்ந்தாலும் அதை கண்டு எள்ளளவும் பெருமிதம் கொள்ள மாட்டார்கள்.

இந்த உலக வாழ்க்கை நிலையற்றது . இந்த நிலையை நினைத்து சந்தோஷப்படுவது என்பது தேவையில்லாதது ஆனால் நமக்கு எப்போது நிரந்தரமான அந்த இறைவனுடைய சிந்தனை எப்போதும் மனதில் இருக்க வேண்டும் இதுதான் நிலையானது. மேலும் அப்படி இருப்பவர்கள் தன்னுடைய எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் தன்னை வெளிப்படுத்தாமல் இறைசிந்தனையோடு வாழ்பவர் எவரோ அவரே உயர்ந்தவர்கள். அப்படி வாழ்வில் உயிர்ந்தவர்களாக இருப்பவர்களுக்கு தானாகவே மதிப்பும்

மரியாதையும் பிறரால் அளிக்கப்படும் என்பதைக் கூறியிருக்கிறார்.

ஆனால் நம் வாழ்வின் உயர்ந்தவர் என்றால் எப்படி நினைக்கிறோம் என்றால் பணத்தாலும் பதவியாலும் பட்டதாலும் உயர்ந்த இருப்பவர்களை அவர்களிடம் இருக்கும் பொருளின் மதிப்பை வைத்து அவர்கள் உயர்ந்தவர்கள் பெரியவர்கள் என்று நான் எண்ணிக் கொண்டிருக்கின்றோம்.

ஆகையால் தான் பணத்துக்கும் பதவிக்கும் பகட்டும் ஆசைப்பட்டு அதன் பின்னால் மக்கள் ஓடிக்கொண்டே தம்முடைய வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல பிறரிடம் தன்னுடைய வாழ்க்கையை பெரிதாக சித்திகரித்து காட்ட வேண்டும் என்றும்,

பிறர் நம்மை மதிக்க வேண்டும் என்று எண்ணுவதும் இந்த பகட்டு வாழ்க்கைக்கு அடிமையான காரணத்தினால்தான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இப்படி இருக்கின்ற காரணத்தினால் தான் நல்லோர்கள் கூறுகின்ற நல்லுரைகளாக இருக்கட்டும், பெரியவர்களுடைய ஆலோசனையாக இருக்கட்டும், தனக்கு நன்மை பயக்கும் விதத்தில் செய்யும் வேறு எந்த விஷயங்களை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. எல்லாம் எனக்குத் தெரியும் என்ற ஆணவத்தோடு தான் சொல்வதை எல்லோரும் கேட்க வேண்டும் என்ற ஒரு ஆணவப்போக்கு ஓடும் சுய நலத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எல்லாம் தன்னால் முடியும் என்ற ஆணவப்போக்கு. இதையே அய்யா ,

“**சற்றோலே வாழ்வு சகடருக் கேவருகில்**
**கற்றோரே யாகிடினும் கண்டறிவேன் போநீயென்பான்**”
இங்கே கூறியிருக்கிறார்.

## விஞ்சை பகுதி-12

**"முள்முருக்கம் பூவு மினுக்குமூன் றுநாளை
கள்ளருக்கு வாழ்வு காணுமது போல்மினுக்கு"**

நாம் எந்த சூழ்நிலையிலும் பகட்டான பழக்கத்திற்கு அடிமையாகி விடக்கூடாது. பகட்டான வாழ்வை சிறிது காலத்தில் அழிந்து போய்விடும். பகட்டு என்பது பிறரை கவர்ந்து இழுக்கக்கூடிய வண்ணம் இருக்கலாம் .ஆனால் அந்த கவர்ச்சியானது நிரந்தரமல்ல விரைவிலேயே அழியக்கூடிய வாழ்க்கையை தந்துவிடும். இதையே அய்யா உதாரணமாக முள்முருக்கம் பூவோடு ஒப்பிட்டு கூறியிருக்கிறார். முள்முருக்கம் பூவானது மூன்று நாள் மிகுந்த பளபளப்போடு இருக்கும். ஆனால் அந்த பூவின் கவர்ச்சியினால் எந்த பலனும் இல்லை. அது போலவே கள்ளருக்கு வாழ்வு இருக்கும் என்கிறார் அய்யா.

பொய்யான பகட்டான வாழ்க்கை வாழ்கின்றவர்கள் பொய் கூறி பிறரை ஏமாற்றி தன் வசப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறவர்கள் தன்னுடைய செயலாலும், பொய்யான வார்த்தை ஜாலங்களாலும் தனக்கு சாதகமாக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்ற தீய எண்ணம் உடையவர்கள் வாழ்க்கையானது நீண்ட நாள் தராது. காரணம் அவர்களின் பொய்யான, பகட்டான வாழ்வை சிறிது காலத்திலே எல்லோரும் உணர்ந்து அவர்களிடமிருந்து ஒதுங்கி விடுவார்கள்.

தீய எண்ணம் உடையவர்களால் நீண்ட காலம் தன்னுடையப் பொய்யால் பிறரை வசப்படுத்த முடியாது. அவர்கள் சில காலத்திலேயே அழிவை சந்தித்து விடுவார்கள் என்கிறார் அய்யா. மேலும் எதற்கெடுத்தாலும் பணிவு என்பது சிறிதுமின்றி நம்மை காட்டிக் கொண்டு கற்றோரை மதிக்காது நாம் தன்னை பெரியவர்கள் என்று நினைக்கும் இவர்கள் ஜாதி மத பேதங்களை உருவாக்கி மக்களை திசை திருப்பும் தான் சுகவாழ்வு வாழ முயல்பவர்கள். இவ்வித வாழ்வு நிலையற்றது. இதை சிந்திக்காத நிலையிலே இவர்கள் சுயநலம் பெருத்தவர்களாக இருப்பார்கள்.

இப்படிப்பட்ட சுயநலவாதிகள் தான் அனுபவிக்க கூடாத பிறருடைய பொருட்களை தமக்குரியதாக எண்ணி அனுபவிக்கும் இவர்களை திருடர்கள் என்கிறது சாஸ்திரம். அறியாமையாலும் கூட ஒழுக்கங்களாலும் தலையாய நீதி வழக்கமாக கருதப்படும் திருட்டை கூட சிறுகக் கூச்சமின்றி செய்யக்கூடியவர்கள், தன்னைத்தானே புகழ்ந்து கொண்டு திரியும் இழிகுணம் படைத்தவர்கள், பிறருடைய பொருளை சமயம் பார்த்து வஞ்சித் அபகரிக்கும் இவர்கள் தம் செயலாலே தன்னை அழித்துக் கொள்கின்றார்கள்.

ஆகவே பகட்டு ஆடம்பரம், பொய்யான வார்த்தை நடிப்பும், வாழ்க்கை வேடங்களுக்கும் மற்றவர் அறியச் செய்யப்படும் ஆடம்பரங்களான மாயத்தோற்றத்திலிருந்து விடுபட்டு உண்மையான என்றும் நிலைத்து இருக்கும் நிஜவாழ்வைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதை நமக்கு உணர்த்தியிருக்கிறார்.

## விஞ்சை பகுதி-13

**"நல்லோர்க்கு வாழ்வு நாளுங் குறையாமல்**
**வல்லோர்க்கும் நல்லோராய் வாழ்ந்திருப்பார் கண்டிருப்பாய்"**

நல்லோருடைய வாழ்வு என்பது எந்தவிதமானப் பொய்யும் பகட்டும் இல்லாமல் மனத்தூய்மையுடன் நல்லநெறியில் வாழ்ந்து, நமக்கு உதவும் அறம் எது என ஆய்ந்து, இறையருளைப் பெற்று வாழும் போது அந்த அறநெறியே எல்லா சிறப்பையும் அளிக்கும்: செல்வத்தையும் அளிக்கும்: நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் நல்ல சிந்தனையோடு நன்னெறியைப் பின்பற்றி வாழும் போது எல்லா நன்மையும் மேன்மையும், நல்ல செல்வத்தையும் பெற்று சிறப்புடன் உயர்வு பொருந்திய வாழ்கையை வாழ்வார்கள் என்பதை அய்யா நமக்கு உணர்த்தி இருக்கிறார்.

ஒருவன் தன்மனதில் குற்றம் இல்லாதவானாக இருக்க வேண்டும். கலியுகத்தின் மிக உயர்ந்த அறம் எது எனக் கேட்டால் அது மாய்கைக்கு கட்டுபடாத மனத்தூய்மை. அந்த மனத்தூய்மையைப் பெற்றவர்களுடைய வாழ்வானது எல்லா சிறப்புகளையும் பெற்றும் இந்த உலகமே வல்லவர்கள் என்றுச் சொல்லக்கூடியவர்களை விடவும், மேன்மையுடையவர்களாக சிறப்புப் பெற்று வாழ்வார்கள். அவர்கள் வாழ்வில் எந்த குறையும் இல்லாமல் எல்லாச் சிறப்புகளுடன் இன்புற்று வாழ்வார்கள் என்பதாகும்.

## விஞ்சை பகுதி-14

"**விள்ளாத ஞாயம் மேல்ஞாய மென்மகனே**
**துள்ளாத யானை துடியானை யென்மகனே**"

மனித வாழ்க்கைக்குச் சிறப்பு அடக்கம் என்ற பண்பு ஆகும். அறிய வேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடங்கி ஒழுகப்பெற்றால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும். பொதுவாக மற்றவர்களிடம் அகந்தையின்றி அடக்கமுடையவராக நடந்து கொள்ளும் பண்பே மேன்மை பயக்கும். மனிதன் அடைந்து ஒழுக வேண்டிய நற்பண்புகள் பலப்பல. அவற்றுள் தலையாயது தன்னடக்கம். தன்னடக்கம் என்ற சிறந்த பண்பினைப் பெற வேண்டுமாயின் மற்றவர்களிடம் குறை காணும் தீமை அறவே கூடாது. ஒருவரிடம் குறை கண்டாலும் அதை இரகசியமாகக் கொண்டு பிறரிடம் கூறக்கூடாது.

வீணான விவாதங்கள் அறவே கூடாது. தன்னைப் பற்றிய உயர்வு நினைவுகளை விட்டொழித்து விட்டால் அடக்க ம் என்ற உயர்ந்த பண்பு வந்து விடும்.உயர்ந்த ஞானம் பெற்றவர்கள் எப்போதும் எல்லாம் தெரியும் என்று ஒருபோதும் வெளிபடுத்த மாட்டார்கள். அவர்களுடைய கருத்து உயர்ந்ததாகக் கருதப்படும். அவர்களுடைய சொல்லுக்கு வலிமை அதிகம் இருக்கும். இதையே அய்யா, "**விள்ளாத ஞாயம் மேல்ஞாய மென்மகனே**

**துள்ளாத யானை துடியானை யென்மகனே** “சொல்லாமலே சொல்லும் மௌன மார்க்கம் மிகவும் உயர்ந்த மார்க்கம் ஆகும். துள்ளாத யானை மிகுந்த துடிப்புள்ள யானையாக இருக்கும். யானை தன்னிடம் அளப்பரிய சக்தி இருந்தும் வெளி காட்டாது அமைதி காப்பதே போன்று மனிதன் மன அடக்கம் நாவடக்கம் உடையவனாக இருத்தல் வேண்டும் என்பதை இங்கே கூறப்படுகின்றது. அடக்கம் மிகவும் பெரியது ஆகும். உலக நியாயத்தைப் புறக்கணித்துக் கடந்து செல்ல நினையாதே. கற்றவர்களைப் புறக்கணிக்காதே.

இங்கு அய்யா தெய்வீகமானவர்கள் காக்க வேண்டியப் பண்பாக எடுத்துக் கூறுகிறார். ஆமை, தனக்கு நலம் பயக்காத சூழல்களில் தனது உறுப்புகளை உள்ளே இழுத்து ஒடுக்கிக் கொள்ளும். தனது நலனுக்கே ஏற்ற சூழ்நிலையில் தனது உறுப்புக்களை வெளியே நீட்டி அனுபவிக்கும். இதுபோல ஞானம் பெற்றவர்கள் நலம் பயக்கக்கூடிய காட்சிகளைக் கண்டு அனுபவிபார்கள். கேள்விகளை கேட்டு அனுபவிப்பார்கள், சுவையானவைகளை உண்டு அனுபவிபார்கள். தம்முடைய ஆன்ம நலனுக்குப் பயன் தராத செய்திகளில் தம்முடைய பொறிகளை ஈடுபட அனுமதிக்காமல் இழுத்து அப்புறப்படுத்தி விடுவார்கள் என்பதை எடுத்து கூறியிருக்கிறார்.

## விஞ்சை பகுதி-15

“**அடக்கம் பெரிது அறிவுள்ள என்மகனே**
**கடக்கக் கருதாதே கற்றோரைக் கைவிடாதே**”

அடக்கம் என்னும் உயரிய குணம் ஒருவருக்கு சுவர்க்கத்தை அளிக்கும், அடக்கம் என்னும் உயரிய குணம் மன மொழி மெய்களால் அடங்கி வாழ்வதைச் சொல்வது. இப்பண்பு ஐம்புலனடக்கம், நாவடக்கம். சினம் காத்தல் என்ற தன்மைகளை உள்ளடக்கியது ஆகும்.. அடக்கம் என்பது ஒன்றும் செய்யாமல் இருப்பது என்று எண்ணி விடக்கூடாது. பார்போற்றும் நல்ல பல

செயல்களைச் செய்து புகழின் உச்சியில் இருந்தாலும் தன்னடக்கத்தோடு வாழ வேண்டும் என்பதாகும்..

நல்லன தீயன எது என்று ஆராய்ந்து புலன்களை இயக்கும் உணர்வகளைத் தீயனவற்றின் நீக்கி, நல்லனவற்றில் செல்லுமாறு அடக்கியாள்வதாகும் . அடக்கமான வாழ்வு என்பது ஆரவாரமற்ற, செருக்கில்லாத, வரம்புக்குட்பட்ட ஒழுக்கத்தைக் குறிக்கும். அடக்கத்தோடு வாழும் வாழ்க்கையே சிறந்த அறிவு என்பதை உணர வேண்டும். மனம், வாக்கு, சித்தமாகிய மூன்றையும் அடக்கி ஆள்பவரே அறிவுடையோர். புலன்களை அடக்கி ஆள்வதே பெரிய சாதனை .இதனால் வீரம் தோன்றும். விவேகம் பிறக்கும். வேதனைகள் மாறும் சாதனைகள் பெருகும்.

எண்ணத்தாலும் பேச்சாலும் செயலாலும் அறத்தைப் போற்றி வாழ வேண்டுமானால், மனம், மொழி, மெய் என்பவற்றைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருக்கும் ஆற்றல் வேண்டும். அவ்வாறு மனம் முதலியவை அடங்கி ஒத்துழைக்கும் வாழ்வே சிறந்த வாழ்வு. ஒருவர் அறிவாற்றலுடன் அடக்கமுடனும் நடந்துகொள்வானாயின் அதுவே அவனுக்குப் பெருமையளிக்கும். எவ்வளவு நாம் கற்று ஞானம் பெற்று வாழ்வில் உயர்ந்த நிலையை அடைந்தாலும் நம்முடைய வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் காரணமானவர்களை மறந்து விடக்கூடாது.

மேலும் நாம் நமக்கு அறிவு ஞானம் தந்தவர்களை மறந்து விடக்கூடாது. அவர்களை விட நாம் உயர்ந்தவர்கள் என்று எந்த ஒரு நிலையிலும் நாம் நம்மை உயர்த்தி பேசக்கூடாது. இதுவே நமக்கு மிகச் சிறந்த பண்பும் ஒழுக்கம் நெறி ஆகும். அறிவு ஞானம் பெற்ற உடன் நம் வளர்ச்சிக்கு காரணமானவர்களை ஒருபோதும் கைவிட்டு விடக் கூடாது என்பதாகும். மேலும் அறிவுடைய பெரியோரை அடுத்து வாழ்வது சிறப்பை தரும். "பெரியாரைத் துணைக்கோள்" , "மேன்மக்கள் சொல் கேள்" என்பது ஆன்றோர் வாக்கு. கற்றவர்களின் சேர்க்கை மற்றவர்களின் நோயை தீர்க்கும்.

கற்றவர்களின் தொடர்பு கடவுளிடத்தில் அன்பை உருவாக்க வழிவகுக்கும்.

கற்றோர்களிடம் தொடர்பு இல்லாத வாழ்க்கை விலங்கினுடைய வாழ்க்கையாக இருக்கும். ஞானம் பெற்ற சாதுக்கள் பிறர் நலம் நாடி வாழ்வார்கள். அவர்கள் பிறருக்காக கருணை மழை பொழிவது போல நாமும் பிறருக்காக வாழ்ந்து பிற நலனை பேண வேண்டும். உலக பற்றை விட்டு ஜீவமுக்திகாக பகவானை எப்போதும் நெஞ்சில் வைத்து பிறநலனுக்காக உழைப்பவர்கள். இப்படிப்பட்ட கற்றோரின் தொடர்புடைய சத்சங்கங்கள் நம்மை பிறவிப் பிணியிலிருந்து விடுபடச் செய்யும். எனவே அய்யா கடக்க கருதாதே கற்றோரை கைவிடாதே என்று நமக்கு இங்கே உணர்த்தி இருக்கின்றார் இதையே அய்யா,“ **அடக்கம் பெரிது அறிவுள்ள என்மகனே கடக்கக் கருதாதே கற்றோரைக் கைவிடாதே**” என்றுக் கூறியிருக்கிறார்.

## விஞ்சை பகுதி-16

### “**நன்றி மறவாதே நான்பெரிதென் றெண்ணாதே**”

ஒருவருக்கு ஒருவர் உதவிச் செய்து வாழ்வதுதான் வாழ்க்கை. ஒருவர் செய்த உதவினால் நாம் உயர்ந்த நிலையை அடைந்திருப்போம். ஆனால் உயர்ந்த நிலையை அடைந்தவுடன் நான் தான் இதற்கு காரணம் என்றோ நான் வளர்ந்து விட்டேன் என்றோ தற்பெருமைப் பேசி வளர்ச்சிக்கு காரணமானவர்களை மறந்து விடக் கூடாது. ஒருவர் செய்த உதவியைப் பெற்றுக்கொண்ட நாம், அதை நம் வாழ்நாளில் ஒருபோதும் மறவாதிருக்க வேண்டும்.

இறைவன் இரண்டு இடங்களில் வசிக்கிறான். ஒன்று சொர்க்கத்தில். இன்னொன்று நன்றியுள்ள மனிதன் இதயத்தில். ஒருவர் நம்முடைய துன்பத்தை உணர்ந்து தாமாகவே முன்வந்து நமக்கு ஓர் உதவி செய்வார் என்றால், அவருக்கு இந்த நிலவுலகத்தையும்

வானகத்தையும் கைம்மாறாக வழங்கினாலும் அது ஈடுசெய்ய இயலாதது.

தூய உள்ளம் கொண்டவரின் **நன்றியை** மறவாதிருக்க வேண்டும். அதுபோலவே துன்பத்தில் துணையாக இருந்தவரின் **நன்றி** **யையும்** ஒருபோதும் நாம் கைவிட்டுவிடக் கூடாது. துன்பத்தில் இருந்து மீண்டவுடன் நான் பெரியவன் என்ற அகம்பாவம் வந்து விடக்கூடாது.

புண்ணியங்கள் அனைத்திற்கும் தலையாயது நன்றி பாராட்டுவது. பாவங்கள் அனைத்திற்கும் தலையாயது நன்றி மறப்பதாகும். நல்லவரை கொன்றவனுக்கும், கள்ளை குடித்து திரிந்தவனுக்கும், திருடி பொருள் சேர்த்தவனுக்கும், பிராயசித்தம் உண்டு. ஆனால் செய்த நன்றியை மறந்தவனுக்கு ஒரு பிராயசித்தமும் இல்லை என்கிறது சாஸ்திரம். மேலும் குடியிருந்த கோவிலான தாய் தந்தையர் செய்த நன்றியை மறந்து விடுவது என்பது தீர்க்க முடியாத பாவமாகும். நூறு வருடங்கள் ஒருவன் பெற்றோருக்கு பணிவிடை செய்தாலும் பெற்ற கடனை தீர்க்க முடியாது என்பது ஆன்றோர் வாக்கு. ஏனெனில் இதை செய்தால் என்ன நன்மை உண்டாகும் என்று எந்த எதிர்பார்ப்பின்றி இரக்கம் ஒன்றே காரணமாக கொண்டு பிள்ளையின் நலன் கருதி பிள்ளைகளுக்காக தன்னை தன்னுடைய வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள் பெற்றோர்கள்.

ஆதலால் அவர்கள் செய்த நன்மை கடலினும் பெரிதாக கூறப்படுகிறது. உன் தாய் தந்தையர்களின் தள்ளாத காலத்தில் இவர்களோடு மனம் மகிழும் படி நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் கவலை இல்லாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டியது பிள்ளைகளின் கடமையாகும். நீ எப்படி உன் தாய் தந்தையர்களிடம் நடந்து கொள்கிறாயோ அப்படித்தான் உன்னுடைய மக்களும் உன்னிடம் நடந்து கொள்வார்கள். இதை

உணர்ந்து கொள்ள வேண்டும் .பெற்றோரை பேணி பாதுகாப்பது ஐம்பெரும் வேள்விகளில் ஒன்றாகும்.

நாம் எந்த ஒரு செயல் செய்து உயர்ந்த நிலை அடைந்தாலும் அதற்கு இறைவனுடைய கருணையே காரணம். ஆகவே நான் பெரிது என்று எண்ணாமல் இறைவனு அருட்பெரும் கருணையை நினைத்து நினைத்து பக்தி செய்து வான் பெரிது என்று வாழ வேண்டும். இறைவனே எல்லாவற்றுக்கும் உயர்ந்தவர் என்று எண்ணி வாழ வேண்டும். அது அல்லாமல் நான் பெரியது என்று எண்ணுபவர்கள் சிற்றறிவுடையவர்களே! இவர்கள் பிறப்பு இறப்பு என்னும் துன்பத்தை சுமப்பவர்கள். ஆகவே நான் பெரிது என்ற ஆங்கார எண்ணத்தை விட்டு விட வேண்டும் .இதையே அய்யா, நன்றி மறவாதே நான்பெரிதென் றெண்ணாதே என்றுக் கூறியிருக்கிறார்.

## விஞ்சை பகுதி-17

"**அண்டின பேரை அகற்ற நினையாதே**
**ஆபத்தைக் காத்து அகலநீ தள்ளாதே**"

மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரை சார்ந்து வாழ வேண்டிய ஒரு சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இது இயற்கையின் படைப்பு அப்படியே அமைந்திருக்கின்றது. அது மட்டுமல்ல இது இயற்கையின் நியதி கூட. அப்படி இருக்கின்ற சூழ்நிலையில் நாம் மட்டும் வாழ வேண்டும் என்ற ஒரு எண்ணம் நம்மிடம் வரக் கூடாது.

எந்த சூழ்நிலையிலும் நம்மை அண்டி நம்மிடம் உதவிப் பெற்று வாழவேண்டும் என்று நினைப்பவர்களை அகற்றிவிட வேண்டும் என்று எண்ணக்கூடாது. நம்மால் இயன்ற உதவியை செய்து வாழ வேண்டும். ஏனென்றால் நாம் வாழ்த்துக் கொண்டிருக்கும் கலியுகத்தில் பணம், பதவி, புகழ் வந்த உடனே மக்கள் முன்பிருந்த

நிலையையும் இந்த நிலைக்கு வருவதற்கு காரணமானவர்களையும் மறந்து விடுகின்றார்கள்.

இதை அய்யாவின் பிள்ளகள் ஒரு போதும் செய்யக்கூடாது. நம்மைச் சார்ந்து வாழுகின்றப் பேருக்கு நம்மால் இயன்ற உதவியை செய்து வாழ வேண்டும் என்பதை அய்யா, **அண்டின பேரை அகற்ற நினையாதே**" என்றுக் கூறியிருக்கிறார்.

ஆபத்து வரும் வேளையில் உன்னை மட்டும் காத்துக் கொண்டு, அதனை அடுத்தவர் மேல் தள்ளிவிடுதல் கூடாது. ஆபத்து நேரத்தில் உதவுவது என்பது மிக உயர்ந்த அறநெறி ஆகும். அதுவே உயர்ந்த தர்மமமும் கூட. ஆபத்து நேரத்தில் செய்யக்கூடிய சிறு உதவிக் கூட பலன் பெறுபவர்களுக்கு பெரிதாக தெரியும். ஆகவே நாம் செய்யும் உதவி அணு அளவோ, இல்லை மலையளவோ நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும்.

ஆபத்தில் நேரத்தில் நம்மிடம் ஒருவர் உதவி கேட்கிறார் என்றால் அவருக்கு வேண்டிய உதவியை நாம் செய்ய வேண்டும் முடியாது என்று மறுத்து வைக்கக்கூடாது. நம்மால் செய்ய முடியாமல் இருந்தாலும் அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுவதற்கு வேறு யாரிடமாவது உதவிப் பெற்றாவது நாம் செயல்படுத்த வேண்டும். என்னால் முடியாது என்று மறுத்துரைக்கக் கூடாது. ஆண்டி வருபவர்கள் யாராக இருந்தாலும் ஜாதி மத இன பேதங்களுக்கு அப்பாற்பட்ட ஆன்மநேய உணர்வுடன் பாதுகாப்பதே சிறந்த அறம் ஆகும். அவர்களை கைவிடுதல் பாவச் செயலாகும். ஆகவே அத்தகைய செயல்களை நம் ஒருபோதும் செய்யக்கூடாது. அண்டி வருகின்றவர்களுக்கு உதவிச் செய்ய வேண்டும். இதையே அய்யா ஆபத்தைக் காத்து அகலநீ தள்ளாதே" என்றுக் கூறியிருக்கிறார்.

## விஞ்சை பகுதி-18

"**சாபத்தைக் கூறாதே தன்னளவு வந்தாலும்**"

இன்றைய காலகட்டத்தில் **சாப**த்தை கூறுவது என்பது சகஜமாக மாறிவிட்டது. காரணம் ஒரு செயல் செய்து நிறைவேற்ற முடியவில்லை அதற்கு ஒருவர் தடையாக இருக்கிறார் என்று எண்ணி ஒருவர் மீது வெறுப்போடு கூறப்படும் வார்த்தை தான் சாபம். இந்த கலியுகத்தில் அது அதிகமாக இருக்கின்றது. இந்த சாபத்தினால் பெரும் விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கின்றது. காரணம் மனசு நொந்து சொல்லும் சொல் சாபமாக மாறும் .பெற்றோர்களோ, சகோதரிகளோ, வீட்டின் மூத்தவர்களோ மனது நொந்து சாபம் விட்டால் அவை ஜென்ம ஜென்மத்திற்கும் தொடர்ந்து வரும்.

நம்முடைய சனாதன தர்மம் எதற்கு வழிகாட்டுகிறது என்றால் எல்லோரும் நலமாக வாழ வேண்டும் என்பதற்காக தான். அப்படியிருக்க பிறருடைய அழிவிற்காக நாம் கொடுக்கும் சாபம் நமக்கே அழிவிற்கு வழிவகுத்து விடும். நமக்கு துன்பம் தருகின்ற வகையில் பல இடையூறுகள் நமக்கு தந்தாலும் நாம் சாபம் கூறக்கூடாது. அன்றையக் காலத்தில் பல ஞானிகளும் முனிவர்களும் தனக்கு இடையூறுச் செய்த அசுரர்களுக்குச் சாபம் கொடுத்தார்கள். அங்கு தீமை அழிக்கப்பட்டது.

ஆனால் இன்றைய காலத்தில் எல்லோருடைய மனதிலும் கலிமாசு சூழ்ந்துள்ளது. மனதில் கலிமாயத் தீய எண்ணம் கொண்டவர்கள் பிறருக்கு சாபம் கொடுத்தால் அந்த சாபம் பிறருக்கு துன்பம் கொடுக்காது. பிறரை அழிக்க வேண்டும் என்று எண்ணியவர்க்கே அழிவைத் தேடித் தரும். ஆகவே உயிர் போகக்கூடிய நிலை வந்தாலும் பிறருக்கு சாபம் கொடுக்க கூடாது என்று நமக்கு உபதேசம் அருளியுள்ளார்.

காரணம் சபிக்கப்படுபவர்களை விட சபிப்பவர்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதே உண்மை. இச்செயல் அவர்களின் சந்ததிகளை தொற்றிக்கொள்ளுகின்றது. கோபத்தினால்

உணர்ச்சிவசப்பட்டு விசுவாமித்திரர், துர்வாசர் போன்ற முனிவர்கள் சாபங்களை கூறி அதனால் தங்கள் தவ வலிமை இழந்ததோடு அவமானத்திற்கு ஆளான நிகழ்வுகள் பலவற்றை நாம் புராணங்கள் நமக்கு காட்டுகின்றன. ஆகவே உயிர் போகின்ற நிலை வந்தால் கூட சாபத்தை கூறக்கூடாது என்று நமக்கு அய்யா கூறியிருக்கின்றார்.

## விஞ்சை பகுதி-19

### கோபத்தைக் காட்டாதே கோளோ டிணங்காதே

பிறவிகளில் உயர்ந்த பிறவி மனிதப் பிறவியாகும். புல்லாகிப் பூடாகி புழுவாகி, மரமாகி பல்மிருகமாகி, பேயாகி, கணங்களாகி மனிதராகப் பிறந்திருக்கும் பிறப்பே உயர்வானது. இம்மனிதப் பிறவியில் செய்யும் செயல்களைப் பொறுத்தே அடுத்த பிறவி என்பது அமைகிறது. நல்லது செய்கின்றபோது பிறவி முடிந்து இறைவனோடு மனிதன் இணைந்து விடுகின்றான். தீயது செய்கின்றபோது அவனது பிறவிப்பிணி முடியாது மீளவும் தொடர்கிறது.

பிறவிப்பிணி தொடர்வதற்கு ஒரு வகையில் கோபமும் கோளும் காரணம் ஆகிறது கோபத்திற்கும் கோள் பேச்சிற்கும் பலவகையில் தொடர்பு இருக்கிறது. ஒருவரை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவே கோபமாகவும் கோள் பேச்சாகவும் வெளிப்படுகிறது. மேலும் கோபம் எப்போது வருகிறது? நினைத்தது நடக்கவில்லை என்றால், அல்லது மற்றவர்கள் நினைத்தது போல் நடக்கவில்லை என்றால் தான் கோபம் வருகிறது.

அந்த கோபத்தின் வெளிப்பாடே பழி வாங்கும் பேசும் எண்ணத்தோடு பேசும் **புறங்கூறுதல் என்கின்ற கோள் பேச்சு** ஆகும். ஒருவர் இல்லாதபோது அவரைப் பற்றி இகழ்ந்து பேசுவது **புறங்கூறுதல்** ஆகும். தம் கண்முன்னே நேர்மையான

உணர்வோடு உண்மையைப் பேசுவது போன்று சொல்லி பின்னால் இழித்துப் பேசுவதும் கோபத்தின் வெளிப்பாடே ஆகும்.

தன்னலம், கோழைத்தனம், நடிப்பு, ஏமாற்று, வஞ்சகம் போன்றவை கோபத்திற்கும் கோள்பேச்சிற்கும் முக்கிய கூறுகளாக இருக்கின்றன. இறைவனது புகழையோ, மனிதர்களுக்குரிய நல்லனவற்றையோ குறித்துப் பேசாது பிறரைப் பற்றி அவதூறு கூறுவதயே செய்து வருகின்றனர். இப்படிப் பட்ட வஞ்சக எண்ணம் உடையவர்களின் கோபமும் கோள் பேச்சும் அறிவு செல்வம் உள்ளிட்ட அனைத்தையும் அழித்துவிடும்.

ஒருவரைப் பற்றிய குறைகளையோ நிறைகளையோ பேசவேண்டுமெனில் நேருக்கு நேராக அவர்முன் சென்று அவரைப் பார்த்துக் கூற வேண்டும். மாறாக ஒருவரின் முன்பு நல்லவனாக இருந்து விட்டு அவரது முதுகுக்குப் பின் எதனையும் கூறுவது கூடாது. கோபத்தோடு எழுந்தவன் வீழ்ச்சியைச் சந்தித்து வீழ்கிறான். கோபமும், பழிவாங்க வேண்டும் என்ற உணர்வும் எப்படிப் பட்ட வல்லவனையும் அழித்து விடும். கோபமும் கோள் பேச்சும் தன்னைச் சார்ந்தவரையே அழித்து விடும்.

கோள் போச்சு பேசுபவரோடு உறவு கொண்டால் அது நம்முடைய வாழ்விற்கு அழிவைத் தேடித்தந்து விடும். ஆகையால் தான் அய்யா கோபத்தை காட்டாதே கோளோடு இணங்காதே அவர்களோடு உறவு கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார். உன் கோபத்தை யாரிடமும் காட்டாதே. பிறருடைய கோள் வார்த்தையால் தவறு செய்துவிடாதே. பாவச் செயல்களையும் பாவிகளையும் பார்க்காதே. வெளி வேசமான மொழிகளைப் பேசாதே. பசுவை அடைத்து வைத்துப் பட்டினி போடாதே. உன்னையே நம்பி உன்னிடத்தில் விசுவாசமாக இருப்பவரிடம் எந்தவித விரோத மனப்பான்மையையும் காட்டாதே என்று சொல்லியிருக்கிறார்.

## விஞ்சை பகுதி-20
### "பாவத்தைக் காணாதே பகட்டுமொழி பேசாதே"

பாவம் என்பது ஒழுக்ககேடானதும், பிறருக்கு துன்பம் விளைவிப்பதும், நல்ல வாழ்வியலைப் பின்பற்றாததும் ஆகும். ஒரு பாவம் செய்வதற்கு பலகாரணங்கள் இருக்கின்றன. ஆனால் அதில் முதன்மையானது எதுவென்றால்,

1. அகங்காரமுள்ள கண்கள்
2. பொய்யுரைக்கும் நாக்கு
3. அப்பாவிகளின் இரத்தத்தை சிந்தவைக்கும் கைகள்
4. தீய காரியங்களைத் திட்டமிடும் மனம்
5. தீய நடத்தைக்கு விரையும் கால்
6. ஏமாற்றும் விதமாக முற்றிலும் பொய்யுரைப்பது
7. ஒரு செயலைச் செய்வதற்கு எல்லாவித தகுதியும் இருந்தும் அதனைச் செய்யாமல் சோம்பியிருப்பது
8. நல்லவர் மனத்தை நடுங்க வைப்பது.
9. வலிய வழக்கிட்டு மானம் கெடுப்பது.
10. தானம் கொடுப்போரைத் தடுத்து நிற்பது.
11. கலந்த சிநேகிதருள் கலகம் உண்டாக்குவது.
12. மனமொத்த நட்புக்கு வஞ்சகம் செய்வது
13. குடிமக்களிடம் வரி உயர்த்திக் கொள்ளையடிப்பது.
14. ஏழைகள் வயிறு எரியச்செய்வது.
15. தருமம் பாராது தண்டிப்பது.
16. ஒரு தலைச் சார்பாக வழக்குரைப்பது.
17. உயிர்க் கொலை செய்பவர்க்கு உபகாரம் செய்வது.
18. களவு செய்பவர்க்கு உளவுகள் சொல்வது.
19. பொருளை இச்சித்துப் பொய் சொல்வது.
20. ஆசை காட்டி மோசம் செய்வது.
21. போக்குவரவு கூடிய வழியை அடைப்பது
22. வேலை வாங்கிக்கொண்டு கூலியைக் குறைப்பது.
23. பசித்தோர் முகத்தைப் பாராமல் இருப்பது.

24. இரப்பவர்க்குப் பிச்சை இல்லை என்பது.
25. கோள் சொல்லிக் குடும்பத்தைக் குலைப்பது.
26. நட்டாற்றில் கை நழுவுவது.
27. கலங்கி ஒளிந்தவரைக் காட்டிக் கொடுப்பது
28. கற்பிழந்தவளோடு கலந்துறைவது.
29. காவல் கொண்ட கன்னியை கற்பழிப்பது.
30. கணவன் வழி நிற்பவளைக் கற்பழிப்பது.
31. கருவைக் கலைப்பது.
32. குருவை வணங்கக் கூசி நிற்பது
33. குருவின் காணிக்கை கொடுக்க மறுப்பது.
34. கற்றவர் தம்மிடம் கடுகடுப்போடு நடப்பது.
35. பட்சியைக் கூண்டில் பதைக்க அடைப்பது.
36. கன்றுக்குப் பாலூட்டாமல் கட்டி அடைப்பது.
37. ஊன் சுவை (மாமிசம்) உண்டு உடல் வளர்ப்பது.
38. கல்லும் நெல்லும் கலந்து விற்பது.
39. அன்புடையவர்க்குத் துன்பம் செய்வது.
40. குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்ப்பது.
41. வெயிலுக்கு ஒதுங்கும் விருட்சத்தை அழிப்பது.
42. பகை கொண்டு அயலவர் பயிர் அழிப்பது.
43. பொது மண்டபத்தைப் போய் இடிப்பது
44. ஆலயக் கதவை அடைத்து வைப்பது.
45. சிவனடியாரைச் சீறி வைவது.
46. தவம் செய்வோரைத் தாழ்வு சொல்வது
47. சுத்த ஞானிகளைத் தூஷணம் செய்வது.
48. தந்தை தாய் மொழியைக் (அறிவுரைகளை) தள்ளி நடப்பது.
49. தெய்வத்தை இகழ்ந்து செருக்கு அடைவது.

பாவத்தைக் காணாதே பகட்டு மொழி பேசாதே என்று சொல்லி யிருக்கின்றார். ஏனென்றால் மேற்கூறிய பாவங்களை நாம் செய்யவும் கூடாது. செய்பவர்களோடு இணைந்து இருக்கவும் கூடாது. அவர்களுக்குத் துணைபோகவும் கூடாது என்பதை நமக்கு அய்யா எடுத்துரைக்கின்றார் அதுமட்டுமல்ல தன்னை எல்லோரும்

பார்க்க வேண்டும் என்று பகட்டு மொழி பேசுவதும், பிறரை கவர வேண்டும் என்ற நோக்கோடு செய்யப்படுகின்ற செயல்களை ஒருபோதும் செய்யக் கூடாது. எந்த நிலையிலும் பிறருக்கு துன்பம் கொடுக்காத செயல்களை செய்து அமைதியோடும் இறை நம்பிக்கையோடும் வாழ வேண்டும் என்று அய்யா நமக்கு உணர்த்தியிருகின்றார்.

## விஞ்சை பகுதி-21
### "பசுவை யடைத்துப் பட்டினிகள் போடாதே"

உயிரினங்களில் பசு மட்டுமே தனக்கென வாழாத, மிக உயர்ந்த பிறவியாகும். இது மனிதர்களுக்குப் பால் என்னும் சிறந்த சத்துப் பொருளை தருகிறது. குணத்திலும் இதனைப் போன்ற சாந்த குணம் கொண்ட உயிரினங்கள் வேறு எதுவும் கிடையாது. இதன் சீரிய பண்பினை உணர்ந்தே நம் முன்னோர் தனக்கென வாழாது பிறருக்கென்ன வாழும் தியாகப் பண்புடைய பசுவை வணங்கி, அப்பண்புகள் நமக்கு வரவேண்டும் என்று அதனை வணங்கி, அத்தகு தியாகப் பண்பைப் பெற்றனர்.

கோதானத்தைவிடச் சிறந்த தானம் எதுவும் கிடையாது. எனவேதான் திருமணம் போன்ற நல்ல காரியங்களில் கோதானம் செய்வதை நம் சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன. காலையில் எழுந்ததும் மங்கள ரூபியான பசுவைத் தினமும் தரிசிப்பவன் துன்பங்கள் நீங்கி சுபத்தைப் பெறுகிறான். தினமும் கோபூஜை செய்பவன் மகா விஷ்ணுவின் மகத்தான திருவருளைப் பெற்று மகிழ்ச்சியை அடைவான். பசுக்களுக்குத் தினமும் உணவு தருபவனுக்கு இறைவன் அவன் விரும்பிய வரங்களை அளிப்பான். பசு என்பதன் உண்மையான பொருள் தர்மத்திற்குக்கட்டுப்பட்டது என்பதாகும்.

பசுக்கள் இருக்கும் இடம் அருள் சூழும் இடம் என்பதாகும். பசுக்கள் இருக்கும் இடம் ஆரோக்கியத்திற்கு வழிவகுக் கும் இடம்

என்பதால்தான். பசு உடலின் பல்வேறு பாகங்களில் பல்வேறு தேவர்கள் வாசம் செய்வதாகப் புராணங்கள் கூறுகின்றன.

பசுவை வணங்கினால் பெரும் புண்ணியம் வந்து சேரும் என்று முன்னோர்கள் கூறியிள்ளனர். இன்றும் பல கிராமங்களில் பசுவுக்கு உணவு அளிப்பது, பழங்கள் கொடுப்பது, கோமாதா பூஜை செய்வது என்று பசுவை தெய்வமாக கருதி வணங்கி வருகின்றனர். இத்தனை சிறப்பு பொருந்திய பசுவை ஒரு சாதாரண விலங்கு என்று நினைத்து பசுக்களைத் துன்பப்படுத்தக் கூடாது. அது மட்டுமல்ல மனிதன் தன்னுடைய உடம்பை வளர்பதற்காக பசுவை கொல்லுவதும், உணவுக் கொடுக்காமல் துன்பப்படுத்துவதும் மிகப்பெரிய பாவச் செயலாகும். பசுக்களை தெய்வமாக வணங்க வேண்டுமே தவிர துன்பப்படுத்த கூடாது என்பதை அய்யா நமக்கு உணர்த்தியுள்ளார்.

## விஞ்சை பகுதி-22

### "**விசுவா சமதிலே விரோதம் நினையாதே**"

ஒருவர் பிறர் மீது கொண்டுள்ள நம்பிக்கையையே நாம் விசுவாசம் என்கிறோம். இன்றைய கலி காலத்தில் நொடிக்கு நொடி மாறிக் கொண்டிருப்பது நேரமும் காலமும் மட்டுமல்ல சில மனிதர்களின் மனமும் தான். மனித மனங்களில் ஏற்படும் நம்பிக்கைகள் பலவாறாக இருக்கின்றன. அவை அவரவர் பிறக்கும், வளரும், வாழும், சூழல் மற்றும் சமூக சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து அமைகின்றன. ஒரு மனிதனிடம் இருக்கும்  நம்பிக்கை இதன் வலிமையை, வர்ணிக்க முடியாது.

அதேசமயம், நம்பக் கூடாதவர்களை நம்புவதும், நம்ப வேண்டியவர்களை நம்பாமல் இருப்பதும், தீராத துன்பகளை தரும். பெற்றோர் பிள்ளைகள் மீது வைக்கும் நம்பிக்கை, ஆசிரியர் மாணவர்களிடம் வைக்கும் நம்பிக்கை, முதலாளி தொழிலாளியிடம் வைக்கும் நம்பிக்கை, உறவினர்கள், நண்பர்கள் என விசுவாசம்

கொண்டு வாழ்வதுதான் வாழ்க்கை. ஒருவர் பிறர்மீது கொண்டுள்ள நம்பிக்கை உண்மையானதானகவும் பகைமை உணர்வு இல்லாமலும் இருக்க வேண்டும் . அப்போது தான் மனித மனங்கள் உந்தப்பட்டு உயர்ந்த நிலையை அடைய முடியும்.

மனித வாழ்வின் உன்னத வளர்ச்சியை எட்டிப் பிடிக்க முடியும். ஆனால் எப்போது இந்த நம்பிக்கைக்கு துரோகம் நினைக்கப்படுகிறதோ எல்லாமே அழிவுப்பாதையை நோக்கி சென்று விடுகிறது.. இன்றைய உலகில், ஏறக்குறைய எல்லோருமே ஏதோவொரு கட்டத்தில் நம்பிக்கை துரோகத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். "எங்கு பார்த்தாலும் நம்பிக்கை துரோகம்" என்ற நிலை உள்ளது. இதன் விளைவு எங்குப் பார்த்தாலும் அழிவுகளும், துன்பங்களும், துயரங்களும் மேலோங்குகிறது.

இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றால் ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்யக்கூடாது. ஒருவர் பிறர் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு எந்த விதத்திலும் இடையூறு இல்லாமல் வாழவேண்டும். கலியுகத்தில் நடக்கின்ற பாவச் செயல்களை கண்ணால் பார்க்காதே ஆசை வார்த்தைகளை எக்காரணம் கொண்டும் பேசக் கூடாது.

உன்மேல் நம்பிக்கைக் கொண்டு உன்னிடம் பற்றுதலாக இருப்பவர்களிடம் விரோத மனப்பான்மையோடு பார்க்கக் கூடாது. ஒருவர் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு ஒரு போதும் நாம் துன்பம் வரும் படி செயல்படக்கூடாது என்பதாகும்.இதையே அய்யா விசுவாசம் அதிலே விரோதம் நினையாதே என்றுச் சொல்லியிருக்கிறார்.

## விஞ்சை பகுதி-23

**"எளியோரைக் கண்டு ஈந்து இரங்கிடு நீ"**

பசியால் வாடுகின்ற ஏழை எளியவர்களின் துயர தீர்ப்பதே தலைசிறந்த தர்மம் ஆகும் . செல்வத்தின் பயனே ஈதல் என்பதாகும். கொடுப்பதற்காக இறைவன் நமக்கு செல்வத்தை கொடுத்திருக்கிறான் என்பதை அறிந்து நாம் பிறருக்கு உதவி செய்ய வேண்டும். யார் ஒருவர் பசி துன்பத்தால் வாடிக் கொண்டிருக்கின்றார்களோ அவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளை நாம் செய்ய வேண்டும். ஒருவர் இரக்கம் குணம் உடையவன் என்பதனை அவர் பிறருக்கு கொடுக்கும் கொடையை வைத்தே அறிய முடியும். ஆகவே பிறர் எந்த ஒரு சூழ்நிலையில் துன்பப்படுகின்றார்களோ அப்போது அதற்கு நாம் உதவி செய்வதற்கு முன்வந்து மனம் உவந்துசெய்ய வேண்டும் .

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் என்பதைப் போல யார் துன்பத்தோடு இருக்கின்றார்கள் அந்த நேரத்தில் மனம் இரங்கி அவர்களுக்கு உதவி செய்வதே மிக சிறந்த தர்மம் ஆகும். இதை அய்யா தாழக்கிடப்பாரை தற்காப்பதே தர்மம் என்றுக் கூறினார். ஆகவே நம்மை விட தாழ்ந்த நிலையில் ஏழ்மை நிலையில் இருப்பவர்களை உதவி செய்து வருவதே மிக உயர்ந்த தர்மம் ஆகும்.

## விஞ்சை பகுதி-24

### “அழிவென்ற பேச்சு அனுப்போல் நினையாதே”

வாழ்க்கை, பார்வைக்கு எளிதாகக் காட்சியளிக்கிறது. அப்படித்தான் பலர் கருதி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையான வாழ்க்கை அருமையானது. ஆனாலும் எளிமையானது. சிக்கல்கள் நிறைந்தது. ஆனாலும் தீர்வு காணவல்லது. எத்தனை நாள் வாழ்ந்தோம் என்பது கேள்வியல்ல. எப்படி வாழ்ந்தோம் என்பதே கேள்வி. வாழ்வில் நாம் கடைபிடிக்க வேண்டியதில் மிக முக்கியமானதாகவும், உயர்ந்ததாகவும், சொல்லப்படுவது " அன்பு" ...ஒன்றே! அன்பு ஒன்றே அனைத்து உயிர்களிடத்தும் உயிராக நிறைந்திருக்கிறது. அனைத்து உயிர்களிடத்தும் நாம் "அன்பு" செலுத்துதல் வேண்டும். இதனால் தான் "அன்பே கடவுள்" ",அன்பே சிவம்"... என்கிறோம்.

ஒருவரது வாழ்வில் பல கஷ்டங்கள் அதாவது நோய்நொடி, நொம்பலங்கள் வந்தாலும் அவன் அன்புநெறி தவறாமல் அய்யாவை நினைத்து வாழ்ந்து வந்தால் அவனை சில காலம் அலைகழித்தாலும் கூட அவனின் அன்பால் அய்யா தன்னுடன் இனணத்துக் கொள்வார். இதற்குமாறாக ஒருவன் அன்பில்லாமல் ,இறைவனை மனதில் கொஞ்சம் கூட நினைக்காமல் வம்பு,வசைகளை செய்து கொண்டு அரக்கர்களைபோல் மற்றவர்களை துன்புறுத்தி கொண்டு வாழ்வில் உயர்நிலையில் இருந்து ஆட்சி புரிந்தாலும், துன்பமில்லாமல் வாழ்ந்தாலும் அவனது இறுதி காலத்தில் அவனை நரக குழியில் தள்ளி விடுவார்.

உள்ளத்தை ஒரு பொழுதும் ஒயவிடக் கூடாது. உள்ளத்திற்கு நல்ல சிந்தனைகளையும், கருத்துக்களையும் உணவாகத் தர வேண்டும். அன்பினை நீராக வார்க்க வேண்டும். இனிய செயலினை, அதன் மூச்சாக ஆக்கவேண்டும். உயர்ந்த பக்தியினை, அதன் உயிர்த் துடிப்பாக ஆக்கவேண்டும். அப்பொழுது உள்ளம் செழித்து வளரும்; வாழ்க்கையும் பூத்துக் குலுங்கும்.

மனித சமுதாயம் அனைத்தும், உறவு கலந்து, உண்டு களித்து வாழும். எங்கும் இன்ப அன்பு மலர்ந்து மணம் பரப்பும். அணு அளவு கூட நம்முடைய எண்ணத்தால் பிறருக்கு துன்பம் இழைக்க கூடாது. நாம் எப்போதும் நம் மனதைத் தூய்மையாக வைத்திருந்தால் செயல்பாடுகளும் தூய்மையானதாக இருக்கும். ஆகவே நம்முடைய வாழ்வில் அன்பை தவிர்த்து தீய அழிவுத் தரக்கூடிய எண்ணத்தை எண்ணக்கூடாது.

இவ்வுலகில் உள்ள எதையும் ஆக்கவோ அழிக்கவோ முடியாது. ஒன்றை மற்றொன்றாக மாற்றலாமே ஒழிய அழிக்க முடியாது. அப்படி இருக்க ஒன்றை அழிக்க நினைப்பது பயனற்றது. ஆனால் அழிக்க நினைப்பதால் மனிதன் பாவம் செய்தவனாகிறான். அந்த பாவத்தின் பயனை அனுபவிக்க மீண்டும் மீண்டும் பிறவி எடுக்க

வேண்டியதாய் இருக்கிறது. ஆகையால் தான் அழிவென்றப் பேச்சு அனுப் போல் நினையாதே என்கிறார்.

மேலும் எண்ணத்தின் வாயிலாக வரும் எந்த பேச்சையும் பேசக் கூடாது. கோபம் கொண்டு அழிவு ஏற்படுத்தி விடாதபடி மனதைக் கட்டுப்படுத்தி பொறுமையோடு தற்காத்துக் கொள் மகனே இதையே அய்யா வைகுண்டர் "**அழிவென்ற பேச்சு அனுப்போல் நினையாதே**" என்று அருளியுள்ளார்.

## விஞ்சை பகுதி-25

**"தொட்டுப் பிடியாதே தோர்வைவைத்துக் காணாதே**
**விட்டுப் பிடியாதே வெட்கமதைக் காணாதே"**

நம்மில் பலரும் கடவுளிடம், தனக்கு அது வேண்டும்; இது வேண்டும் என்று பேரம் பேசுகிறார்கள். 'நீ என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றினால் நான் உனக்கு இதைக் காணிக்கையாகத் தருகின்றேன்' என்பதுபோல் பேரம் பேசுகிறார்கள். இப்படி பேரம் பேசுவதற்குப் பெயர் பக்தி அல்ல வியாபாரம். இறைவனிடம் எதையும் எதிர்பார்க்காமல் இருப்பதுதான் உண்மையான பக்தி.

ஒன்றை எதிர்பார்த்து இறைவனை வேண்டும்போது மனதில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுவிடுகிறது. வேண்டுவதை இறைவன் அருள்புரியவில்லை என்றால், இறைவன் நம்மை ஏமாற்றிவிட்டதாகவும், நம்முடைய பக்தியை இறைவன் பொருட்படுத்தவில்லை என்றும் நினைக்கத் தோன்றும்.

ஆனால், உண்மை அதுவல்ல. இறைவன் நமக்கு எது நன்மை தருமோ அதை நமக்கு அருள்புரிய சித்தமாகவே இருப்பார். நாம் உளப்பூர்வமான அன்பும் பக்தியும் கொண்டு இறைவனை பிரார்த்திப்பது மட்டும்தான் உண்மையான பக்தி. எனவே நாம் இறைவனிடம் எதையும் எதிர்பார்க்காமல், மனத்தூய்மையுடன்

பக்தி செலுத்தப் பழகிக் கொள்வோம். நமக்கு என்ன தேவையோ, நமக்கு எது நன்மை செய்யுமோ அதை இறைவன் நமக்கு அருள்புரியவே செய்வான். நம்மிடம் உள்ள அனைத்தையும் இறைவனுக்கு அர்ப்பணிக்கும் அளவுக்கு நம்முடைய பக்தி இருக்கவேண்டுமே தவிர, இறைவனிடம் இருந்து எதுவும் எதிர்பார்ப்பதாக நம்முடைய பக்தி இருக்கக்கூடாது.

இறைவனிடம் வேண்டுதல் வைப்பதும் நிறைவேறவில்லை என்றால் உடனே அந்த இறைபக்தியில் இருந்து விடுபடுவதும், வேறொரு இறை சக்தியை நாடிச் செல்வதும் மீண்டும் அங்கே சென்று எதுவும் நடக்கவில்லை என்றுத் தோல்வி அடைந்தவுடன் நாம் மீண்டும் இறைவனிடம் செல்வோம் என்று உணர்வதும் ( வேறு மதத்தை நாடி செல்வதுவும்) மக்களிடம் ஒரு சாதாரண இயல்பாகி விட்டது. ஆனால் அப்படி இங்கும் அங்குமாக ஓடிக்கொண்டு இருப்பது உண்மையான பக்தி அல்ல.

உண்மையான பக்தி இல்லாத இடத்தில் இறைவன் அருள் பாலிப்பது கிடையாது. ஆகவே நாம் தோல்வி அடைந்துவிட்டோம் என்று சொல்வதில் அர்த்தமில்லை. இது இறைவனிடம் உண்மையான பற்று இல்லை என்பதைக் காட்டுகின்றது. இப்படிப்பட்டப் பக்தியினால் எந்த பயனும் இல்லை இதையே அய்யா, "*தொட்டு பிடியாதே தோர்வை வைத்து காணாதே*" என்றுச் சொல்லியிருகின்றார். முழுமையாக இறைவனிடம் நம்மை அர்பணித்து இன்பத்திலும் துன்பத்திலும் நீயே கதி என்றுச் சரணாகதி அடைய வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் இறைவனுடைய நாமத்தை சொல்வதோ, இறைவன் நமக்கு அருளியிருகின்ற முத்திரி என்ற அடையாளங்களைத் தரிப்பதுவும் கவுரவ குறைச்சலாக எண்ணுகின்ற நிலை இருக்கின்றது. ஆனால் நாம் இறைவனுடைய பிள்ளைகளாக இருக்க வேண்டும் என்றால் இறைவன் நமக்கு அருளியிருக்கின்ற முக்கிய அடையாளங்களை அறிந்து

கொள்ளவேண்டும். அதனுடைய பெருமையை உணர்ந்து அந்த அடையாளங்கள் நமக்கு உணர்த்துகின்ற வாழ்வியலைத் தவறாதுக் கடைப்பிடிக்க வேண்டும். உதாரணமாக நெற்றியில் நாமம் விடுவது. தலைப்பாகை கட்டுவது இவையெல்லாம் நாம் கண்டிப்பாக செய்ய வேண்டும்.

இவை எல்லாம் இறைவன் நமக்கு அருளியுள்ள கம்பீரச் சின்னங்கள். இவற்றில் நாம் வெட்கத்தை பார்ப்பதோ நாகரீகம் கருதி அதை அணியாமல் இருப்பதும் பிறர் என்ன நினைப்பார்களோ என்று இறை அடையாளங்களாகிய முத்திரையை அணியாமல் இருப்பது தவறாகும். இறைவன் அருளியுள்ள . அடையாளங்கள் ஒவ்வொன்றும் நமக்கு பல வாழ்வியல் நெறிகளான ஒழுங்கத்தைப் போதிக்கிறது. அந்த ஒழுக்கநெறியிலிருந்து நாம் தவறக்கூடாது.

சிலர் கோயிலுக்கு செல்லும் போது இறைவன் நமக்கு அருளியுள்ள அடையாளங்களை அணிவார்கள். ஆனால் அதன் பிற்பாடு அதை மாற்றி விடுவார்கள். காரணம் நண்பர்களோ, பிறரோ இதை கவுரவக் குறச்சலாக எண்ணி கேலிப் பேசுவார்கள் என்பதால் ஆகும்.

இந்நிலை மாற்றப்பட வேண்டும். இதையே அய்யா "**விட்டு பிடியாதே வெட்கமதை பாராதே**" என்றுச் அருளி இருக்கின்றார். பிறரைப் பார்த்து நம்முடைய வாழ்க்கையை நிர்ணயிக்க கூடாது. நாம் பிறவி பிணியிலிருந்து விடுபட வேண்டும் என்ற உணர்வு இருந்தாலே வெட்கம் என்ற ஒன்று வராது. நாம் இறைவனுக்கு உகந்தப் பிள்ளைகளாக வாழ வேண்டும். அதுவே நமக்கு எல்லா சிறப்புகளையும் கிடைக்க வழி வகுக்கும். நாம் சூழ்நிலைக்கு தகுந்தவாறு நம்முடைய மனதை மாற்றிக்கொண்டு இருக்காமல் இறைவனிடம் பரிபூரண சரணாகதி அடைவதே மிக சிறந்த வழியாகும். ஆகவே அதை நாம் தவறாக கடைபிடிக்க வேண்டும்.

## விஞ்சை பகுதி-26

**"வரம்பு தப்பாதே வழிதவறி நில்லாதே
பரம்பூமி கண்டு பாவித் திருமகனே"**

ஒரு மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நெறிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலையிலிருந்து நாம் தவறவிடக்கூடாது. மனிதப்பிறவியினுடைய நோக்கம் இறைவனை அடைவதே ஆகும். இறைவனை அடைவதற்கு மனிதன் எப்படி வாழ வேண்டும் எவ்வாறு அறத்தை பின்பற்ற வேண்டும் என்று இறைவனால் வகுக்கப்பட்டிருக்கிற நெறிமுறையிலிருந்து தவறி நாம் வாழக் கூடாது. இந்த கலியுக வாழ்வு என்பது ஒரு மாய்கை. இந்த மாய்கைக்குள் அகப்படாமல் வாழ்வதற்காகத் தரப்பட்டுள்ள நெறிமுறையிலிருந்து தவறி நாம் வாழக் கூடாது.

. இந்த கலியுகத்தில் நெறியான வாழ்க்கையை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்ற வழிமுறையை ஞான உபதேசமாக நமக்கு தந்திருக்கிறார். ஒருபோதும் நாம் வழிதவறி வாழக்கூடாது. ஒவ்வொரு மனிதனுடைய எண்ணம், சொல், செயல் எல்லாம் எப்போதும் இறைவனை அடைய வேண்டும் ஞான உபதேசத் நிலையில் இருந்து வழி தவறி விடக்கூடாது.

மேலும் இறைவன் யார்? நாம் எப்படி இறைவனைக் கண்டுக் கொள்ள முடியும் என்ற உண்மை நிலையை உணர்ந்து , எப்போதும் நம்முடைய எண்ணத்தை தூய்மையானதாகவும், நேர்மையானதாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். நல்வழியில் வாழ்ந்து , பிறருக்கு வழிகாட்டியாக வாழ வேண்டும்.

இறைவன் நமக்குள் இருக்கிறார் என்பதை உணர்ந்து நமக்குள் இருக்கும் இறைவனை எப்போதும் கண்டுக் கொண்டு வாழ வேண்டும். இறைவனை நமக்குள்ளே கண்டு அந்த பேரானந்த நிலையை உணர்ந்து நமக்கென்று அய்யா வைகுண்டர்வகுத்துத்

தந்திருக்கின்ற ஞான வழியிலே வாழ வேண்டும் என்பதை அய்யா வைகுண்டர் ,

"**வரம்பு தப்பாதே வழிதவறி நில்லாதே**
**பரம்பூமி கண்டு பாவித் திருமகனே**"

என்று அருளி இருக்கின்றார்.

## விஞ்சை பகுதி-27

"**இத்தனை புத்தி எடுத்துரைத்தேன் என் மகனே**
**புத்தி விபரீதமாய் பின்னும் ஆராயாதே**"

குருவை முழுமையாக நம்புகிறவன் சாதனை படைப்பான். குருவே நம்பாதவன் குரு நிந்தனை செய்யும் பாவத்திற்கு ஆளாகுகின்றான். அய்யா வைகுண்டர் நாம் எப்படி வாழ வேண்டும், இந்த கலியை வெல்வதற்குரிய வழிவகைகள் என்ன என்ன என்பதை நமக்கு தெள்ளத் தெளிவாக எளிய வழிமுறைகளில் நாம் புரிந்து கொள்ளுகின்ற விதமாக தந்திருக்கிறார். அதை நாம் நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் ஏன் நாம் இதை கடைபிடிக்க வேண்டும் இவை கடைபிடிக்காவிட்டால் என்ன ஆகிவிடும் என்ற ஒரு ஆணவப் போக்கோடு செயல்படுவோமே ஆனால் நம்முடைய வாழ்வில் அழிவை சந்திக்க கூடும்.

இன்றைய கலி வாழ்வில் பல ஆசார முறைகள் அய்யா கூறிய வாழ்வியலுக்கு புறம்பாக செயல்படுத்தப்படுகிறது. தாங்கள் மெத்தப் படித்து உணர்ந்தவர்கள் இவற்றை செய்யாவிட்டால் எல்லாம் அழிந்து போகும். குலம் நாசமாகி விடும் என்று அய்யா காட்டிய நெறியை மறந்து புத்தி விபரீதமாய் ஆராய்ந்து அழிவுப் பாதையை நோக்கிச் செல்லுகின்றார்கள். இதையே அய்யா புத்தி விபரீதமாய் பின்னும் ஆராயாதே என்கிறார்.

## விஞ்சை பகுதி-28

"**சட்டம் மறவாதே தன்னளவு வந்தாலும்**
**நட்டம் காணாதே நாடாள்வாய் என் மகனே**
**என் மகனே நான் உனக்கு இன்னும் ஒரு விஞ்சை சொல்வேன்**

**பொன்மகனே உன்னுடைய புத்தியிலே வைத்திரு நீ**
**இச்சட்டம் தன்னில் எள்ளளவு தப்பினதால்**
**தீச்சட்டம் காய்க்க தேதி வரும் என்மகனே**
**அனுபோல் மறவாதே யான் வைத்தச் சட்டமதில்**
**மனபோல் என்றிராதே மனதென்னமாயிரு நீ"**

ஒரு மனிதன் எப்படி நெறியுடன் வாழ வேண்டும் என்பதற்காக வகுக்கப்பட்டது தான் சட்டத் திட்டங்கள். அது போல கலிவாழ்வில் நாம் எப்படி வாழ வேண்டும் ஒரு மனிதன் கலியை வெல்வதற்குரிய வழி வகைகள் என்ன இப்படி இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நெறிமுறைகளை வகுத்து இறைவன் நமக்கு விஞ்சை என்ற ஞான உபதேசத்தின் மூலம் தந்திருக்கின்றார். அந்த நெறிமுறைகளின் படி வாழ்க்கை ஒழுக்கங்களை நாம் கடைபிடிக்க வேண்டும். நாம் அந்த வாழ்க்கை ஒழுக்க நெறையிலிருந்து தவறி நடப்போமே யானால் தண்டனைக்கு உள்ளாக வேண்டி வரும். இதையே அய்யா கூறுகின்றார் சட்டம் மறவாதே தன்னளவு வந்தாலும் என்று, அதாவது உயிர் போக்குகின்ற நிலை வந்தால் கூட அய்யா கூறிய சட்ட திட்டங்களிலிருந்து நாம் விலகி நடக்கக்கூடாது.

அவ்வாறு நடக்காமல் இருந்தால் எந்த விதமான துன்பங்களையும் துயரங்களையும் நாம் அனுபவிக்க வேண்டி வராது. ஆகவே நான் உங்களுக்கு சொல்லிய விஞ்சை படி நீங்கள் வாழ்ந்து வாருங்கள் என்று கூறுகின்றார். மேலும் பொன்மகனே உன்னுடைய புத்தியிலே வைத்திரு நீ என்று கூறியிருப்பதன் மூலம் அய்யா சொல்லுகின்ற ஒவ்வொரு உபதேசங்களையும் நம்முடைய மனதிலே ஏற்று அதன்படி வாழ்ந்து நாம் கலியை வென்று தர்மயுக வாழ்வை பெற வேண்டும். அது அல்லாமல் அய்யா சொல்லிய சட்ட திட்டத்தை விட்டு வழி தவறி நடப்போமேயானால் தண்டனைக்கு உள்ளாக வேண்டி வரும். இதையே தீச்சட்டம் காய்க்க தேதி வரும் என் மகனே என்றுக் கூறுகிறார்.

அய்யா நமக்கு தந்திருக்கின்ற சட்ட திட்டங்கள் என்பது நாம் இந்த பிறவி பிணியில் இருந்து விடுபட்டு தர்மக வாழ்வாகிய பேரின்பத்தில் திழைக்கக்கூடிய அந்த நிலையான வாழ்க்கை பெறக்கூடியதாகும். ஆனால் நாம் அதை மீறுகின்ற போது தீச்சட்டம் என்று சொல்லுகின்ற மேலும் மேலும் இறந்து இறந்து பிறந்து இங்கே

பிறவிப் பிணியில் இருந்து விடுபடாமல் இருக்கக்கூடிய ஒரு நிலைக்கு ஆளாக வேண்டி வரும்.

ஆகவே அணுபோல் மறவாதே நான் வைத்த சட்டமதில் என்றுக் கூறுகிறார். எப்போதும் உன்னுடைய மனம், சொல், செயல் எல்லாம் நான் கூறிய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு வாழ்க்கை அமைப்பதாக இருக்கட்டும். உன்னுடைய எண்ணம் செயல் எல்லாம் அந்த வகையிலே அமைய வேண்டுமே தவிர மீறி நடக்கக் கூடாது என்றும், இது ஏதோ ஒரு மனிதன் கூறியச் சொல் என்று எண்ணி விடாதே , நான் தந்திருக்கின்ற உபதேசங்களை மனதில் வைத்து வாழ்வை நடத் துஎன்று இங்கே நமக்கு எடுத்துக் கூறுகின்றார்.

## விஞ்சை பகுதி-29

**"பஞ்சமிர்தே என்னுடைய பாதை தப்பி நீ நடந்தால்**
**கொஞ்சும் கிளியே கொன்னெழுப்புவே னுனையும்**
**பதறியிரு என் மகனே பம்மியிரு கண்மணியே"**

அதர்மம் தலைத்தூக்குகின்ற போது அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக இறைவனுடைய அவதாரம் நிகழ்கிறது. இவ்வாறு இறைவன் தன்னை அவதரிக்க செய்து அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுகின்றார். அதன்படி இந்த கலியுகத்திலும் அய்யா வைகுண்டர் மக்களிடம் இருக்கும் மாய்கையாகிய கலி எண்ணங்களை அகற்றுவதற்கு மக்கள் எப்படி வாழ வேண்டும் என்ற நெறிகளை போதித்து அதன்படி வாழ்ந்து வர வேண்டும் என்ற ஞான உபதேசங்களைக் கூறியிருக்கிறார்.

அய்யா கூறி இருக்கின்ற உபதேசங்களைப் பின்பற்றி நம்முடைய வாழ்க்கையை நாம் நடத்தாமல் இருந்தோ யானால் அதற்கான தண்டனை அனுபவிக்க வேண்டிவரும். இறைவன் யாரையும் தண்டிக்க வேண்டும் என்று நினைப்பதில்லை. இறைவன் தன்னுடைய பிள்ளைகள் நன்றாக இருக்க வேண்டும் சிறப்பான வாழ்வைப் பெற வேண்டும் என்றே விரும்புகிறார். ஆனால் தவறுச் செய்யும் போது அந்த தவறை மேலும் செய்யாமல் இருப்பதற்கு ஒரு ஆசிரியர் மாணவனை நல்வழி படுத்த எடுக்கும் முயற்சியை போல் தான் இறைவனும் தண்டனை அளிக்கிறார். இந்த

தண்டனையானது அவரவர் செய்யும் குற்றங்களைப் பொறுத்து அமைகிறது.

இதைத்தான் அய்யா கூறுகின்றார் பஞ்சமிர்தே என்னுடைய பாதைத் தப்பி நீ நடந்தால் கொஞ்சும் கிளியே கொன்று எழுப்புவேன் உன்னையும் என்கிறார். அதாவது மீண்டும் மீண்டும் செத்து செத்து பிறவி எடுக்கின்ற நிலை உருவாகும். இறைவன் வகுத்தப் பாதைத் தவறுகின்ற போது பிறவி பினையிலிருந்து விடுபட முடியாமல் இப்பிறவி எடுக்க வேண்டிய நிலை வரும். ஆகவே பதறி இரு என் மகனே பம்மியிரு கண்மணியே என்று சொல்லி இருக்கின்றார். இறை பயத்தோடு வாழவேண்டும்.

நம்முடைய எண்ணம் நாம் செய்யும் செயல் எல்லாவற்றையும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதை உணர்ந்து தூய எண்ணத்தோடும் அணு அளவு கூட பிறருக்கு துன்பம் கொடுக்காமலும் வாழ வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு தவறு இறைவன் கண்டு கொண்டிருக்கின்றார் என்ற ஒரு பயம் நம்மிடம் இருக்க வேண்டும். நம்மிடம் எவ்வளவு பெரிய சொத்து சுகம் இருந்தாலும் இறைவன் அருளியதே எப்போது வேண்டுமானாலும் அவர் எடுத்துக் கொள்ளக் கூடும் என்று எண்ணி இறைவனுக்கு அஞ்சி அடங்கி அமைதியாக வாழ வேண்டும் என்பதை இங்கே நமக்கு எடுத்துக் கூறுகின்றார்.

## விஞ்சை பகுதி-30

### "**பொறுதி மகனே பெரியோரா யாகுவது**"

. பொறுமை என்பது நமக்குத் துன்பம் ஏற்படும்போது உணர்ச்சி வசப்படாமலும், கோபம் கொள்ளாமல் இருக்கும் நிலையாகும். மற்றவர்கள் நம்மை இகழும் போதும், நீண்ட தாமதங்கள் ஏற்படும் போதும், பிரச்சினைகள் ஏற்படும்போதும், தொடர் துன்பங்கள்

வரும்போதும், சில அசாதாரண சூழ்நிலைகளில் அமைதியாக இருக்கும் குணமாகும். நம்முடைய வாழ்வில் பல சாதனைகள் நிகழ்த்துவதற்கு பொறுமை அவசியம் ஆகிறது. நாம் பொறுமை என்பது சோம்பேறி தனம் என்று நினைத்துவிடக்கூடாது. பொறுமைதான் ஒரு மனிதனின் மன உறுதியையும் துணிவையும் தரும்.

எப்படி என்றால் நாம் பொறுமையோடு பல விஷயங்களை ஆராய்ந்த போது அது நமக்கு பல வெற்றிச் சாதனைகளைத் தருகிறது .நாம் பொறுமையுடன் நன்கு ஆராய்ந்து நன்மை தீமைகளை பற்றி அலசி ஆராய்ந்து செயல்படுத்துகின்ற எந்த செயல் நமக்கு வெற்றியைத்தான் தரும் .ஒரு சிற்பி அழகான சிலையை வடிக்க அல்லது செதுக்க வேண்டும் என்றால் அவரிடம் பொறுமை அவசியம் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த சிற்பியால் ஒரு சிலையை அழகாக செதுக்க முடியும். நம்முடைய சிந்தனையும் சிறப்பானதாக அமைய பொறுமை அவசியம்.

பொறுமை கடலினும் பெரிது என்பார்கள். வற்றாத கடலைவிட பொறுமை பெரியது என்றால் பொறுமையின் சிறப்பு எத்தகையது என்பதை நாம் உணரவேண்டும். நாம் சாதிப்பதற்கு அறிவுடன் பொறுமை இருக்க வேண்டும். அறிவு என்பது நன்மை தீமைகளைப் பிரித்துப் பார்ப்பதுப் பார்ப்பதற்கு திறக்கின்ற ஒரு உணர்வின் திறவுகோல். ஆனால் பொறுமை என்பது அந்த உணர்வின் திறவுகோலாக விளங்குகிறது. ஒருவரிடம் ஆணவம் என்ற காற்று வீசினால் கோபம் என்ற சுனாமி சுழன்றடிக்கும். அப்போது அழிவு கோபபடுபவனுக்கு மட்டுமல்ல. கோபப்படுகிறவனைச் சார்ந்த சமுதாயத்திற்கும் ஆகும்.

சிந்திக்கத் தெரிந்தவர்கள் தான் சாதனைச் சிகரத்தை எட்ட தெரிந்தவன். ஒவ்வொருவருக்குள்ளும் அகப்பகையாகிய காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம்,மோகம் என்ற அகப்பகையும் இருக்கிறது. அன்பு, இரக்கம், கருணை, தர்ம சிந்தனை , என்ற நல்ல குணங்களும் இருக்கிறது. ஆனால் நல்ல

சிந்தனை மேலோங்கி தீயவை அழிக்கப்பட வேண்டும் என்றால் அதற்கு பொறுமை அவசியம்.

நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல் பொறுமைக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று சிந்திப்பது மற்றொன்று சாதிப்பது . ஆகவே நாம் வாழ்க்கையில் சாதிப்பதற்கு பொறுமை மிக மிக அவசியமாகும். நமது வாழ்க்கையில் நமக்கு பெருமையை தேடித் தருவது பொறுமையாகும். இதுதான் அய்யா பொறுதிதான் என் மகனே பெரியோராகுவது என்கின்றார்.

இன்றைய காலச் சூழலில் பொறுமையை சோதிக்கும் விதமாக தான் மாய்கையாகிய கலியின் தாக்கம் இருக்கிறது. கலியின் தாக்கத்தால் மக்கள் ஆத்மஞானம் பெற முடியாமல் துன்புறுகிறார்கள். ஆன்ம ஞானம் பெற வேண்டும் என்று நாம் எண்ணினால் நாம் அந்த நிலையை அடைவதற்கு பொறுமை அவசியம். ஒவ்வொரு மனிதனுக்கு இந்நிலை மாறுபடும். சிலர் சிறு வயதிலே ஆன்ம ஞானம் பெற்று விடுவார்கள். சிலர் பல சோதனைகளைத் தாண்டிப் பெறுவார்கள். இதற்கு பொறுமை அவசியம்.

இவ்வாறு ஆன்ம ஞானம் விழிப்பு பெற்று இறைவனை நம்முள் உணர்வதற்கு பல தடைகள் இந்த கலி வாழ்வில் வந்துக் கொண்டு தான் இருக்கும். அப்படிப்பட்டச் சூழலில் நாம் அதற்கு காரணமானவர்களோடு மோதிப் பகைத்துக் கொள்ளக் கூடாது. போற்றுவதும், தூற்றுவதும் கவித்தன்மை என்பதை உணர்ந்து பொறுமையைக் கடைப்பிடித்து இறையருளைப் பெறுவதற்கு நாம் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். எப்படிப்பட்ட தீய எண்ணம் கொண்டவர்கள் எதிர்த்தாலும் நாம் பகை கொள்ளாமல் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## விஞ்சை பகுதி-31

**“உறுதிதான் என் மகனே உலகமதை ஆளுவது”**

மன உறுதி என்ற பண்பு எதையும் சாதிக்கும் தன்மையுடையது. மன உறுதியுடன் வாழ்வில் வெற்றி பெற முயற்சி செய்ய வேண்டும். முயற்சியும் அதற்கு தேவையான இடைவிடா பயிற்சியுமே வெற்றி பயணத்திற்கு படிக்கட்டாகும். அப்படிக்கட்டில் பயணிக்க வேகமும், விவேகமும் தேவை. விவேகமாய் சிந்தித்து மனஉறுதியுடன் வேகமாக செயலாற்றினால் வெற்றிக்கனியை எளிதில் பெறலாம். உறுதியான வேர்களை உடைய மரங்கள் பொதுவாக எந்த புயலுக்கும் சாய்ந்து விடுவதில்லை.அதைப்போல் உறுதியான மன மிருக்கும் மனிதர்கள் சோதனையை கண்டு அஞ்சாது சாதனை படைப்பர்.

மனிதர்கள் அனைவருமே ஏதாவது ஒரு காலகட்டத்தில் வாழ்வில் சோதனைக்கு ஆட்படுவார்கள். அந்த நேரத்தில் மன ஆற்றலும், மனித ஆற்றலும், உறுதியுடன் இணைந்துப் பொறுமையோடுச் செயல்பட்டால் எதையும் சாதிக்கலாம். தடைகள் வரும் போது பொறுமையுடன் முயற்சியுடன் மாற்றுவழியை தேடினால் அந்த வழியே அவர்களை மற்றொரு துறையில் சிறந்தவர்களாக மாற்றலாம். இடர்ப்பாடு வந்தாலும் இடைவிடா முயற்சியால் எந்த நிலையிலும் முன்னேற முடியும்.

இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி, பயம், கவலை, விருப்பு, வெறுப்பு, ஆசை அனைத்தையும் மனிதன் மனதின் மூலமாகவே அனுபவிக்கிறான். மனதைப் பொருத்தே மனிதனுக்கு உயர்வும் தாழ்வும் உண்டாகிறது. இதைத் தான் 'மனம் போல் வாழ்வு' என்கின்றனர். இதையே அய்யா அவரவர் நினைப்புக்குத்தக்கதாக விளையாடுகிறேன் சிவனே அய்யா என்றுக் கூறுகிறார்.

மனதில் ஊக்கம் உள்ள அளவுக்கு அவனுடைய உயர்வு இருக்கும்.மனம் உடலை ஆள்கிறது. மனவலிமை இல்லாதவனால் எதையும் சாதிக்க முடியாது. எந்த சுகத்தையும் அனுபவிக்க முடியாது. எல்லாம் இருந்தும் இல்லாதவன் ஆவான். வலிமையற்ற மனம் உடையவனால் எதையும் செயலுக்குக் கொண்டுவர முடியாது. ஏக்கமும், கவலையும், எதிர்பார்ப்பும், எதிர்காலத்தின்

மீது பயமும் உள்ளவனாக வாழ்வின் இறுதி வரை ஒன்றையும் சாதிக்க இயலாதவனாகக் காலம் கழிப்பான்.

மனித வாழ்க்கையில் உயர்வை அடைய பல வகையில் மன வலிமை இன்றியமையாதது. வறுமையை விரட்டி வாழ்க்கையில் முன்னேற, திறமைகள் பெற, திறமைக்குத் தகுந்த வாய்ப்புகள் பெற, போட்டிகளில் வென்று புகழ்பெற, பகையை வெற்றிகொள்ள, நோயை விரட்ட, சோம்பலைத் துரத்த மனிதனுக்கு மன உறுதியும், மனவலிமையும் தேவை..

மன வலிமை உள்ளவன் வாழ்க்கையில் வரும் துன்பங்கள், சோதனைகள், இழப்புகள், ஏமாற்றங்கள் போட்டிகள், பொறாமைகள், கொடுமைகள் அனைத்தையும் எளிதில் சந்தித்துச் சமாளிப்பான். ஒரு மனிதன் வெற்றியாளனாகவும், இன்னொருவன் தோல்வியாளனாகவும், ஒருவன் மகிழ்ச்சி உள்ளவனாகவும், இன்னொருவன் துன்பப்படுபவனாகவும், ஒருவன் செல்வந்தனாகவும், இன்னொருவன் வறுமையில் வாடுபவனாகவும், ஒருவன் சாதனைகள் புரிபவனாகவும் இன்னொருவன் சாதரணனாகவும் இருப்பது அவர்கள் அவர்களுடைய மனதைப் பயன்படுத்தும் முறையில் தான் இருக்கிறது.

புராண இதிகாசங்களில் மன உறுதியால் சாதனைப் புரிந்தவர்கள் பலர். இதில் சாவித்திரியினுடைய மன உறுதிமிக சிறப்பு வாய்ந்ததாக கூறலாம். எதிரில் நிற்பவன் காலனே ஆனாலும், கலங்காமல் துணிந்து பேசி காரியத்தை சாதித்துக்கொண்டாள். இதுதான் சாவித்திரியின் மன உறுதி. பொறுமையும், மனஉறுதியும் ஒரு மனிதனை உயர்வாக்கும் என்பதை மனதில் கொண்டுச் செயல்பட வேண்டும் என்பதை நமக்கு எடுத்துரைக்கிறார்.

## விஞ்சை பகுதி-32

**"மகனேநா னெத்தனையோ மகாபெலங்கள் கற்றவன்காண்**
**உகமீதே சொல்லித் தொலையுமோ வுத்தமனே**
**எவ்வுகங் களுக்கும் இப்படியே தர்மமில்லை**
**செவ்வுமகா விஷ்ணுதான் என்றுசொல்லார் தேசமதில்**
**இப்போது என்மகனே இக்கலியன் மாய்மாலம்**
**செப்ப எளிதல்லவே செயிக்க ஏலாதாராலும்**
**இப்போதுன்னோ டுரைத்த இயல்விஞ்சைக் ககப்படுங்காண்**
**அப்பனே பம்மலிலே அகப்படுங்கா ணிக்கலியும்"**

யுகா யுகங்கள் தோறும் தர்மத்தை நிலை நாட்டுவதற்காக இறைவன் எடுத்த சூட்சம அவதாரங்கள் பல. இறைவனை மிஞ்சிய மகாபார சக்தியானது இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை. அசுரர்கள் எவ்வளவு வல்லமை உடைய சக்திகளை பெற்றிருந்தாலும் அவர்களை வெல்வதற்குரிய மகாபலன்களை பெற்றவராக பரமாத்மா இருக்கின்றார். பரமாத்மாவாகிய இறைவனே எல்லா ஜீவாத்மாக்களுகும் தலைவன். எல்லாவற்றையும் ஆள்பவர் அவரே. உலகில் தர்மத்தை நிலைநாட்டு பவனும் அவனே! எல்லையற்ற ஆற்றல் உடையவரும் அவரே. அவரால் ஆகாதது ஒன்றும் இல்லை. அப்படி இருக்கின்ற போது அவரை வெல்ல யாரால் முடியும். ஆகையால் தான் யுகா யுகங்கள் தோறும் அசுரர்கள் அழிக்கப்படுகின்றார்கள்.

இதே போல உயர்ந்த தர்மத்தை கடைபிடிப்பது வேறு யாரும் கிடையாது. இந்த உலகத்தில் யாரும் இல்லை என்றே சொல்லலாம். இந்த உலகில் எந்தவித சக்தியும் இல்லை. இந்த கலியுகத்தில் அய்யா கூறியிருப்பதைப் போன்று எவ்வுகங்களுக்கும் இப்படியே தர்மம் இல்லை என்றே கூறுகின்றார். மேலும் இந்த உலகில் எது நடந்தாலும் அது இறைவனால் நடத்தப்பட்டதே ஆகும். அய்யா சொல்லுவார் எவர் எவர் இருந்து மணியம் பண்ண வேண்டுமானாலும் என் முக்கால் அடிக்குள் தானே சிவனே என்றுக் கூறியிருக்கிறார். அவனின்றி ஒரு அணுவும் அசையாது. உலகில் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக

நாராயணரே இங்கே ஒவ்வொரு அவதாரங்களாக வந்துள்ளார் என்பதை இந்த உலகம் அறிந்த உண்மை.

இப்போது அய்யா வைகுண்டராக பண்டாரக் கோலம் எடுத்திருப்பதும் விஷ்ணுவாகிய நாராயணரே. இந்த பண்டார கோலத்தை ஜெயிப்பது என்பது யாராலும் முடியாது. இப்போது அந்த கலியை அழிக்க வேண்டும் என்றால் உன்னோடு உரைத்த இந்த இயல் விஞ்சைக்குள் இந்த கலியானது அகப்படும் என்றுச் சொல்லுகின்றார். அதாவது இந்த கலியானது எவ்வளவு வல்லமை படைத்தவர்களாலும் வெல்ல முடியாது.

காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம், மோகம் என்று சொல்லக்கூடிய அகப்பகைகளின் மொத்த உருவமாக மக்களுடைய மனதிலே கோபமாகவும் காம இச்சையாகவும், தீய எண்ணமாகவும் பொறாமையாகவும், ஆணவத்தோடும், பிறருடைய பொருளை அபகரிக்கின்ற ஒரு நோக்கோடும், மக்களுடைய மனதில் கலியானது இருந்து கொண்டிருக்கின்றது. புண்ணியம் என்பதை கனவிலும் எண்ணாது. பிறருக்கு கேடு விளைவிப்பதிலே கருத்தாக இருக்கின்றது பஞ்ச மகா பாதங்களைத் துணிந்து செய்யக்கூடிய தன்மை இந்த கலியினுடைய தன்மையாகும்.

ஆகவே இந்த கலியமே அழிக்க வேண்டும் என்றால் நேரடியாக எதிர்த்து கலிநீசர்களின் முன்புநின்று அவர்களின் வல்லமையினாலோ கோபத்தினாலோ கலியை வெல்ல முடியாது. ஆனால் நான் இப்போது உனக்கு அருளியுள்ள ஞானமாகிய இந்த விஞ்சைக்குள் அகப்படும். பொறுமையாக உறுதியோடு அன்பை கடைப்பிடித்து அடக்கத்தோடு நாம் வாழ்கின்ற போது இந்த கலியை வெல்ல முடியும். இதை அய்யா அற்புதமும் காட்டேன் கலிநீசன் கண்முன்னே என்று கூறியிருக்கின்றார். எந்த விதமான அற்புதங்களைச் செய்யாமலும் , எதிர் செயல் வினை புரியாமலும் இருக்கின்ற போது இந்த கலியை வென்றுவிடலாம் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.

## விஞ்சை பகுதி-33
### "அப்பனே பம்மலிலே அகப்படுங்கா ணிக்கலியும்"

கலியன் வரம் பெற்று வருகின்றபோது நாராயணமூர்த்தி பண்டாரமாக கோலம் கொண்டு கலியன் முன்பு சென்று நீ பெற்று வருகின்ற வரத்தில் எனக்குச் சிறிது தா என்றுக் கேட்க அவன் மறுத்து விட்டு முடியாது என்று கூறுகிறான். அப்போது நாராயணமூர்த்தி கலியனிடமிருந்து ஒரு சத்தியத்தை பெறுகின்றார்.

எப்படி என்றால் பண்டாரம் பரதேசிகள் எந்த உதவியும் இல்லாமல் இருப்பவர்கள் கையில் ஆயுதம் இல்லாமல் இருப்பவர்கள், யாரும் உதவி செய்யாமல் திக்கற்ற நிலையில் இருக்கக் கூடியவர்கள் இவர்களை துன்பப் படுத்தினால் (அட்டி செய்தால்) நீ தோற்று, நீ பெற்ற வரம் தோற்று வன் நரகில் போவாய் என்று சத்தியம் பெற்றிருந்தார்.

அதன்படி நாம் நம்முடைய வாழ்க்கையில் எளிமையான வாழ்க்கை முறையை நாம் பின்பற்றவேண்டும். ஆடம்பரம் பகட்டு பணம் பதவி எதற்கும் முன்னுரிமை கொடுக்காமல் பணிவோடு வாழும் போது அந்த பணிவிற்குள்ளே கலியை அழிக்கும் சக்தி கிடைத்து விடும். ஆடம்பர மோகம் கொண்டு வாழக்கூடாது.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை மேற்கொள்வதும், இயற்கையான உணவு முறைகளை பின்பற்றி வாழ்வதும் போன்ற எளிய முறைகளைப் பின் பற்றி வாழ்ந்தாலே கலி எண்ணமாகிய தீயச்சிந்தனை உடையவர்கள் விலகி விடுவார்கள். கலித்தன்மையும் நம்மை அண்டாது. நம்மிடம் எவ்வளவு வல்லமை இருந்தாலும் வெளிக்காட்டாமல் இருக்கும் போது தீமை நம்மை அண்டாது என்பதை அய்யா வைகுண்டர் "**அப்பனே பம்மலிலே அகப்படுங்கா ணிக்கலியும்**" குறிப்பிட்டிருக்கின்றார்.

## விஞ்சை பகுதி-34

**"கலியென்றால் எலியல்லவே கணையாளி வேண்டாமே**
**வலிமாய நினைவு மாய்மால மென்மகனே**
**ஆனதா லாயுதங்கள் அம்புதடி வேண்டாமே**
**மானமாக இருந்தால் மாளுங்கலி தன்னாலே"**

கலி என்பது மக்களின் மனதில் எழுகின்ற ஒரு மாயத்தோற்றம். அதாவது ஆறு அகப்பகையின் (காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம், மோகம்) விளைவாக தோன்றும் தீமையே கலி ஆகும். இந்த கலி எண்ணமானது, "கொடுமை, பொறாமை, பொய், மோசடி மற்றும் வஞ்சகம், மத மற்றும் தார்மீக அடித்தளங்களின் சரிவு, கொடிய நோய்கள், பசி மற்றும் பயம்" ஒழுக்கமற்றவர்களாக இருப்பது, இறைச்சிந்தனையில் ஆர்வம் காட்டாமல் இருப்பது , மது மற்றும் இறைச்சியை விரும்புவது.

அதிக முயற்சியின்றி உயிர்வாழ்வது,எளிதில் கோபத்தில் விழுவது, கொடூரமான செயல்களைச் செய்வது, மக்களைக் காப்பாற்ற வேண்டிய ஆட்சியாளர்கள் கீழ்த்தரமானவர்களாகவும் வஞ்சகர்களாகவும் மாறுவது. தயக்கமின்றி, கருவில் இருக்கும் குழந்தைகளை மக்கள் கொல்வது, உண்மையான அன்பு இல்லாமல் மேலோட்டமான ஈர்ப்பினால் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது, மக்கள் குறுகிய பார்வையுடையவர்களாகவும், பேராசை கொண்டவர்களாகவும், ஏழைகளாகவும் மாறுவது, பொருளுக்காக மனிதன் இன்னொரு மனிதனிடம் வெறுப்பு, பொறாமை போன்ற உணர்ச்சிகளை வளர்த்துக் கொள்வது .நட்பு என்ற உயரிய பண்பை போற்றாமல், தன் சுற்றத்தாரையும் உறவினரையும் கூட கொல்லத் துணிவது .வெறும் பகட்டுக்காகவும் புகழுக்காகவும் மட்டுமே தானம் அளிப்பது ,தற்பெருமைக்காக மட்டுமே நோன்பு இருப்பது, . தர்மத்தைப் பற்றிய அறிவாற்றல் இல்லாதவர்கள் மதங்களை

உருவாக்கி மக்களைக் கவர்ந்து தவறான அதர்ம பாதைக்கு இழுத்துச் செல்வது,

பெண்களின் தூய்மையை, நாகரிகம் என்னும் மாயவசத்தால் அழிந்து போகச் செய்வது,பொருளாசை மக்களை மிருகமாக்கி கொலை வெறியைத் தூண்டிவிடுவது, தெய்வ நம்பிக்கையை தளர்வடைய செய்வது, தெய்வ வழிபாடு செய்வோருக்கு தரித்திரம் மிகுதியாக்குவது, எங்கும்,எதிலும் பொறாமையும், பெருகி ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டு தாழ்வடைவது. போதைப் பொருள்கள் பெருகி, மக்கள் போதைக்கு அடிமையாகி பெருவாரியாக அழிந்து போவது, உணவுப்பொருள்களின் தரம் குறைந்து அற்ப லாபம் கருதி கலப்படம் செய்து விற்பனை செய்வது, அதனால் புதிய புதிய நோய்கள் பரவ வழி வகுப்பது.

இயந்திரங்கள் நன்மைக்காக அறிவின் பலத்தால் பெருகிடினும், மனிதன் மனிதனாக இல்லாது இயந்திரமாக மாறி நல்லுணர்வுகளை இழப்பது . இவ்வுலகில் நியாங்கள் செயலற்று அநியாயங்களே தலையோங்கி நிற்பது, நல்லவைகளுக்குப் பெருமை அற்றுப் போவது; இவ்வுலகின் கண்கள் தீமைகளுக்கே முதலிடம் அளிக்கப்படுவது . இவை எல்லாம் கலியின் ஆதிக்கத்தால் நிகழ்வன. இந்த மாய நினைவுகளை மக்களுடைய மனதில் இருந்து நீக்குவதற்கு அம்பு கணைகளோ ஆயுதங்களோ தேவை இல்லை. “**மானமாக வாழ்ந்தாலே மாழும் கலி** “என்றுக் கூறுகிறார் அய்யா வைகுண்டர்.

மானம் என்பது அன்பு, பொறுமை, தர்மம், நீதி, நியாயம், பணிவு ,அறநெறி, உண்மை, தூய்மை, கருணை, சகிப்புத்தன்மை,செல்வம் நிறைந்த காலத்தில் பிறரிடம் பணிவுடனும், வறுமை வந்த காலத்தில் தாழ்ந்து விட்டுக் கொடுக்காமலும் நடந்து கொள்வது, உயர்குடியில் பிறந்தவர் தாழ்ச்சி வரும்படியான செயல்களைச் செய்யாமல் இருப்பது.

தன்னை இகழ்பவர்களின் முன்பாக மானமிழந்து நிற்காது வாழ்வது, உயிர் வாழும் பொருட்டு மானத்தை விட்டுவிட்டுத் தம்மை இகழ்பவர் பின்னே செல்லாது வாழ்வது, இவ்வுலகில் இருக்கும் மாயவலையாகிய மோகத்திற்குள் சிக்காமல் இருப்பது, நான் எனது, என்ற சுயநலப்போக்கை விடுவித்து, பொது நல எண்ணத்தோடு வாழ்வது, இவ்வுலகில் பொய்யாக இருக்கும் மாய எண்ணத்தை மாற்றி, தூய மனத்தோடு , பகட்டு, ஆடம்பரம், ஆகியவற்றிற்குள் கட்டுப்படாமல், எளிமையாக வாழும் வாழ்கையை மேற்கொள்வது, ஒழுக்கநெறியோடு வாழ்ந்தாலே கலி தன்னம் தன்னால் அழிந்து விடும்.இதற்கு அம்பு கணைகள், ஆயுதங்கள் எதுவுமே தேவையில்லை. நம் மனதில் எழுகின்ற மாய்கையை அழிக்க மனதில், பணிவும், உறுதியும், தூய்மையும் இருந்தால் போதும் என்கிறார் அய்யா வைகுண்டர்.

இறைவனை அடையவிடாமல் நம்மை கெட்டியாக பிடித்திருக்கும் ஆசைகளில் முக்கியமானது பெண்ணாசையும் பொருளாசையும் ஆகும். அவற்றை அழித்து விடுதல் தான் ஈஸ்வரனே அடைய தகுதி பெறும் சரியான இயற்கை முறையாகும். இறையருள் பெற்றவன் தான் அவ்விதம் செய்வான். மற்றவர்கள் பாவத்தைப் பெருக்கிக் கொண்டு திரிவர். மேலும் கலியிருள் கொண்ட மனிதன் வீட்டில் பூச்சி வெளிச்சத்திற்கு மயங்கி அதிலே விழுந்து இறப்பதைப் போன்று அழிந்து விடுவர்.

ஏதோ ஒருவர் இறைவன் தந்த ஞானத்தின் துணைகொண்டு கரையேறுகின்றார்கள். நம்மை இரச்சிக்க வந்த பகவான் ஒரு சாதாரண மனிதனாக மிக மிக எளிய திருக்கோலத்தில் உருகாட்டிக் கொண்டார். வைகுண்ட அவதாரம் ஒரு மாய அவதாரம். அசுர சக்திகளில் மொத்த உருவமாகவே மறைந்து நின்று கலி அழிப்பதே இந்த அவதாரத்தினுடைய நோக்கம். கலிமாயைக்குள் மூழ்கி கிடைப்பவர்களால் அவரை அறிந்து கொள்ள முடியாது. மனித பிறவியின் உண்மையான நோக்கம்

இறைவனை அடைவதே. இறைவனுடைய பாதாரத்தைப் பெற மானத்தோடு வாழ வேண்டும்.

மானம் கெட்ட மனிதன் இறைவனை அடையும் வழியை இழந்தவன் ஆகிறான். மானம் இழந்தவனுக்கு இழப்பதற்கு வேறு ஒன்றும் இல்லை. எனவே தான் மானம் இழந்தபின் வாழாமல் உயிர் விடுதல் நன்று என்பது ஆன்றோர் வாக்கு. அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்பது ஔவையின் வாக்கு. இந்த அரிய உயர் பிறவியான மனித பிறவியில் மானம் என்பது உயர்வு பொருந்தியதாக இருக்கிறது. எந்த காலத்திலும் தன் நிலை மாறாமல் வாழ்வதும் பிறருக்கு அணு அளவுக்கூட துன்பம் கொடுக்காமல் வாழ்வதும் மானமுள்ளவரின் தன்மையாகும். மனிதன் தன்மான உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். தன்னிலை தவறினால் இறைவன் நம்மை தண்டிப்பார் என்று அச்ச உணர்வு உடையவனாக வாழ்வதுதான் மானமுடைய ஒரு மனிதனுடைய செயலாக இருக்க முடியும். இந்த மான உணர்வை வளர்த்துக் கொண்டாலே கலியை அழித்து விடலாம் என்று அய்யா கூறியிருக்கிறார்.

ஆகவே அய்யா கூறிய விஞ்சையை நாம் கடைபிடித்து வருவோமேயானால் இந்த கலிதை வெல்வது எளிது என்பதை இங்கே எடுத்துரைக்கின்றார். ஏனென்றால் இந்த கலியை அழிப்பதற்கு ஆயுதங்களை எதுவும் தேவையில்லை. பண்டாரமாக இருக்கின்ற பற்றற்ற நிலையில் மானமாக இருந்தாலே போதும் இந்த கலியை எளிதில் வென்றுவிடலாம் என்று இங்கு நமக்கு எடுத்துரைக்கிறார்.

## விஞ்சை பகுதி-35

**"இன்னமொரு விஞ்சை இயம்புவேன் கேள்மகனே**
**முன்னம்வகைக் காரனொடு மோதிப் பகையாதே**
**பகைத்தா லிருக்க வொட்டான்கா ணவ்விடத்தில்**
**உகத்தடக்கு முன்னே ஒருவரையுஞ் சீறரிது**
**தாழ்ந்திருக்க வென்றால் சர்வதுக்குந் தாழணுமே**
**ஓர்ந்திருக்க வென்றால் ஒருவர்பகை யாகாதே**
**ஆனதால் நீயும் அவனைப் பகையாதே**
**நானவனைக் கேட்பேன் ஞாயக்கே டாகிடினும்"**

யுகா யுகங்கள் தோறும் இறைவன் நடத்திய அவதாரங்கள் பல. ஒவ்வொரு அவதாரங்களிலும் இறைவனை மக்கள் பல வகைகளில் வழிபட்டார்கள். அந்த வழிபாட்டு முறையானது இன்றளவும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. தெய்வவழிபாட்டு முறையானது பல வகைகள் இருக்கின்றது. அந்த வழிபாட்டு முறைகள் இந்த கலியுகத்திற்கு ஏற்புடையதாக அமையாது. ஆனால் அது தவறு எந்த நாம் அதை சுட்டிக் காட்டுகின்ற போது அதை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகையினால் யாரிடமும் சண்டை போட வேண்டாம்.

அப்படி பகை கொண்டால் அந்த இடத்தில் அவர்கள் அமைதியை கடைபிடித்து வாழ விடமாட்டார்கள். இந்த கலியுகத்தில் புற வழிபாட்டு முறைகள் தேவையில்லை என்பதை சொல்லி அதன்படி நாம் வாழ்ந்து காட்ட வேண்டும். அது மட்டும் அல்லாமலும் காம குரோத, லோப, மதம் மாச்சரியம் என்று சொல்லக்கூடிய அகப் பகைகள் கொண்டவர்களோடு மோதி பகைத்து அவர்களோடு பகையை பெருக்கிக் கொள்ளக் கூடாது என்றும் கலியுகம் அழியும் முன்பாக யாரிடமும் சண்டை போட்டு பகையுணர்வு கொள்ளக் கூடாது என்பதாகும்.

ஒவ்வொரு மனிதனுடைய நோக்கமும் இறைவனே அடைவதாக இருக்க வேண்டும் அவ்வாறு நாம் செல்லுகின்ற அந்த வழியிலே எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அதை நாம் ஏற்றுக் கொள்ள

வேண்டும். அறிவிழந்து தீமை செய்துவிடக்கூடாது. பெரியவர்கள் சிறியவர்கள் தரும் தொல்லையை பொறுத்துக் கொள்வது போல நாம் நீச குலங்கள் நமக்கு தருகின்ற துன்பங்களை பொறுத்துக் கொள்ள வேண்டும். தாழ்மையுடனே நாம் நன்மையை கடைப்பிடித்து வாழ வேண்டும். நீசர்கள் தருகின்ற தீமைகள் எல்லாவற்றிற்கும் பொறுமையே கடைபிடித்து செல்ல வேண்டும்.

ஒரு மனிதனுடைய நிறைவான குணம் என்பது பிறர் செய்கின்ற தீமையை பொறுத்துக் கொள்வது ஆகும். எங்கு இரக்கம் இருக்கின்றதோ அங்கு அறம் இருக்கும். எங்கு பேராசை இருக்கின்றதோ அங்கே பாவம் இருக்கும். பொறுமை இருக்கின்ற இடத்தில் ஈஸ்வரன் ஆகிய இறைவன் இருப்பார். ஆகவே இறைவனை அடைய வேண்டும் என்று எண்ணி வாழுகின்ற மக்கள் எத்தகைய தீய செயல்களையும் பொறுத்துதான் ஆக வேண்டும். எப்போதும் சமநிலை உடையவனாக வேற்றுமையில் ஒற்றுமை காண்பவனாக இருத்தல் அவசியமாகும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற மெய்ய உணர்வு பெற்றுக்கொண்டால் போது யாருக்கும் பகையில்லாமல் இருக்க முடியும்.

ஆகவே நாம் இறைவனிடம் சரணாகதி அடையக்கூடிய நிலையில் இருக்க வேண்டும். அப்போது அதனால் யாருக்கும் பயமும் இல்லை நமக்கு பாதகமும் இல்லை. ஆகவே இந்த நிலையில் நீ இருக்க வேண்டும். அதையும் மீறி நமக்கு ஏதாவது ஞயக்கேடாக தவறுகள் செய்கின்றவர்களை நமக்கு துன்பம் கொடுக்கின்ற பேர்களை இறைவனாகிய பரமாத்மா பார்த்துக் கொள்வேன் என்கின்றார். நீ யாரையும் பகைக்க கூடாது. ஆனால் நான் அவனை கேட்டு அவன் செய்கின்ற நியாயம் கேட்டிற்கான தண்டனையை அழிப்பேன். ஆகவே அதுவரையிலும் அமைதியாக இறைவனை அடைகின்ற அந்த நோக்கோடு வாழ வேண்டும் என்று எடுத்துக் கூறுகின்றார்.

மனித வாழ்க்கை என்பது நிலையில்லாதது, அது ஒரு நீர்க்குமிழி போன்றது. அதற்குள் போராட்டங்களும், வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் கொண்டு மனிதன் உலகில் வாழுகின்றான்.

எனவே வாழ்வின் நிலைத்த தன்மைக்கு அடிப்படைக் காரணமாக அமைவது பிறருக்கு நாம் நன்மை செய்வது ஒன்றே ஆகும். இதில் நீதி கூறும் பொழுது துலாக்கோல் போல சிறந்து சமமாக இருத்தல் வேண்டும். விருப்பு வெறுப்பு எதுவுமின்றி நீதியின் முன் அனைவரும் சமம் என்ற நிலை வேண்டும்.எனவே எந்த சூழலிலும் நடுநிலை தவறி விடக்கூடாது. இதையே அய்யா,

## விஞ்சை பகுதி-36

**"வலியோர்க் கொருவழக்கு வைத்துநீ பேசாதே**
**மெலியோர்க் கொருவழக்கு வீணாய்ப் பறையாதே"**

குற்றம் இன்னதென்று ஆராய்ந்து எந்தப் பக்கமும் சாயாமல் நடுவுநிலைமை தவறாமல் வழங்கப்படுவதே நீதியாகும். மக்கள் செய்யும் குற்றத்தை ஆய்ந்து எவரிடத்தும் விருப்பு, வெறுப்பு இல்லாமல், நடுநிலையோடு நூல்வழி ஆராய்ந்து, குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை வழங்குவதே நேர்மையான நீதியுரைப்பவருக்கு அழகாகும்.

ஆனால் இன்று கலி என்ற மாய்கைக்குள் சிக்கி உலக மக்கள் அனைவரும் பொருளைத் தேடி அதனை அடைவதற்காக முயன்று கொண்டிருக்கிறார்கள். பொருளுக்காக உறவுகளையும் இழக்கின்றார்கள். வெறுத்து ஒதுக்கவும் செய்கின்றார்கள். இதனால் மனிதர்கள் மனிதநேயம் அற்றவர்களாக மாறி வருகின்றனர். இன்று நமக்கு சொந்தமானது நாளை மற்றொருவருக்கு சொந்தமானதாக மாறும். செல்வம் என்பது நிலையில்லாதது என்பதை உணர வேண்டும். ஆகவே ஏற்றத்தாழ்வு பார்ப்பது கூடாது. இன்றைய கலிக்காலத்தில் நீதிக் கூறும் இடத்திலும் இந்த ஏற்றத்தாழ்வுப் பார்க்கப்படுகிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

தாழ்வும் உயர்வும் நேர்மைக் குணத்தை அசைத்துப் பார்க்கவிடலாகாது. எந்தச் சூழ்நிலையிலும் நேர்மை தவறாமல் வாழவேண்டும். எல்லோரும் நேர்மைக் குணம் கொண்டு ஒழுக வேண்டும். சான்றோர் எனப்படுபவர் ஒன்றைச் சீர்தூக்கிப் பார்த்துச்

செயல்பட வேண்டும். மனத்தளவிலும் எப்பக்கமும் வளையாதிருக்க வேண்டும். .

நடுநிலை தவறி இதைச் செய்தால் வாழ்வில் உயர்வு பெறலாம் என்று ஆசையுற்று, அதைச் செய்தால் தாழ்வு நேரும் என்று அச்சமுற்றும் சான்றோர்கள் தம் கடமைகளைச் செய்யக் கூடாது . ஒருவர் வாழ்வில் வளர்ச்சியும், வீழ்ச்சியும் இயல்பானவை; எது வரினும் நேர்மை தவறமாட்டேன்' என்ற உறுதியுடன் நடுநிலையில் நின்று செயலாற்ற வேண்டும் .பொருள் காரணமாக நீதி நிலை தவறக் கூடாது.

ஆனால் கலியுலகில் பணத்திற்கும், பகட்டிற்கும் தான் மரியாதை அதிகமாக இருக்கிறது. நீதிக்கூட பணத்தின் பக்கம் தான் பேசப்படுகின்றது. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.
சான்றோர் கூறும் நீதியானது தராசு முள்ளைப் போன்று நடுநிலை வகுக்க வேண்டும். அய்யா திராசு நிறையிலும் துல்லியமாய் செங்கோல் செலுத்த வந்தவர். அய்யாவின் பிள்ளைகளாகிய நாமும் நடுநிலை தவறக்கூடாது.

வாழ்க்கை வாழ்ந்த பின்பும், மனிதன் பேசப்பட வேண்டும். எனவே நீதி வழுவாமல் வாழ்வோமேயானால் உறுதியாக வாழ்வு சிறப்படையும், சீர்பெறும். அத்தகைய வாழ்வியல் நெறி நின்று வாழ்வோம். உயர்ந்த நீதியை வாழ்வியலில் பின்பற்றி நீதி வழுவாமல் வாழ்ந்து, நீதி உடையவர்களாக இவ்வுலகை ஆள்வோம்!

## விஞ்சை பகுதி-37

**"சொத்தாஸ்தி வஸ்து சுகமென்று எண்ணாதே**
**வத்தாஸ்தி பெண்ணு வகையென்று எண்ணாதே**
**நீயெண்ணா தேயிருந்தால் நீணிலங்க ளுமயங்கும்**
**தானிதின்மே லெண்ணம் தங்குதங் காதேயிரு"**

மனிதர்களின் பல்வேறு தீமைகளுக்கு காரணமாக திகழ்வது உலக ஆசையே! உலக இன்பங்களின் மீதுள்ள அளவற்ற மோகமும் அதீத பற்றும் தான் மனிதனைத் தீமைகள் செய்யத் தூண்டுகிறது. பணம், பொருள், பதவி, அந்தஸ்து என இவற்றில் ஒன்றின் மீது கொண்டுள்ள மோகம் மனிதனை எந்த நிலைக்கும் கொண்டு சென்று விடுகிறது.

ஒரு கட்டத்தில் இவையே வாழ்க்கை, குறிக்கோள், இலட்சியம். இவை இல்லையேல் வாழ்க்கையே இல்லை என்ற நிலைக்குச் சிலர் சென்று விடுகிறார்கள். தாங்கள் அடைய விரும்பிய பணம், பொருள், பதவி, அந்தஸ்து இவற்றில் ஒன்றை அடையாத போது வாழ்க்கையே வீணாகி விட்டது எனக் கருதுகின்றனர்.

ஆனால் சான்றோர்களுக்கு அழகு இவ்வுலக இன்பத்தில் எதுவொன்றை இழந்தாலும் அது அவனைப் பாதிக்காது இருப்பது ஆகும்.. பற்றற்ற தன்மை என்றால் எதற்கும் ஆசைப்படக் கூடாது என்பதல்ல. மாறாக எந்த ஒன்று கிடைக்காமல் போனாலும் அதற்காக அலட்டிக் கொள்ளாமல் இருப்பதாகும்.

**எ**ந்தப் பொருள் மீது மனிதனுக்கு அளவற்ற ஆர்வம் ஏற்படுகிறதோ, அந்தப் பொருளால் அடையக் கூடிய துன்பங்களை, முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பொருளின் மேல் ஏற்படும் பற்றின் வலிமை குறையும் கடலில் மிதக்கும் இரண்டு கட்டைகள் ஒரு கணத்தில் ஒன்று சேரும்; மறுகணமே ஒன்றையன்று விட்டு விலகும். சேரும் உறவுகள் ஒரு நாள் பிரியும். இல்லாதிருந்து, ஒரு நாள் உறவாய் மலர்ந்து, மீண்டும் இல்லாமல் போவதுதான் வாழ்க்கை.

இந்த வாழ்க்கையில் அளவுக்கு மீறிய பற்றை வளர்த்துக் கொள்ளலாகாது. குவிந்த செல்வம் குறைந்து போகும். உயர்ந்த வாழ்வு தாழ்ந்து போகும். சேர்ந்த சுற்றம் பிரிந்து போகும். பற்றுகளில் இருந்து விடுபட மனிதன் மனதை பக்குவப்படுத்த வேண்டும். பொருட்களின் மீதான பற்றை விடுங்கள். செல்வமோ,

அதிகாரமோ மனிதனை அடிமைப்படுத்தி விடாது. அவற்றின் மீதிருக்கும் நீங்காத ஒட்டுதல் தான் ஒருவனை நிரந்தர அடிமையாக்கி விடுகிறது.

பற்றற்று இருத்தல், பயமற்று இருத்தல், சினமற்று இருத்தல் ஆகிய மூன்று பண்பு நலன்கள்தான் உன்னத வாழ்விற்கு அடித்தளம். அச்சம், சினம் ஆகிய இரண்டுக்கும் அடித்தளமே பற்று என்ற உண்மையை நாம் உணர வேண்டும். ஒரு பொருளின் மீது முதலில் பார்வை பதிந்ததும் மனதில் ஆசை அலையடிக்கும். ஆசையின் வேகம் பெருகி, பற்றாய்ப் பரிணமிக்கும். அதன்பின் அந்தப் பொருளை தன்னுரிமையாக்கத் துடிக்கும் வேட்கை அதிகரிக்கும். அது தனக்கு கிடைத்தே ஆக வேண்டும் என்ற தவிப்பில் மனம் உறக்கமின்றிப் பதை பதைக்கும்.

ஒரு வேளை விரும்பிய பொருள் கிட்டாது போய்விடுமோ என்ற ஏக்கம் உயிரை வாட்டும். கிடைத்தாலும் கூட என்றேனும் அது கை நழுவி விடுமோ என்ற ஓயாத அச்சத்தில் மனம் கவலை கொள்ளும். இந்தக் கவலையே கோபமாக உருமாறும். கோபம் பகையை உருவாக்கும். முடிவில் மனம் நிம்மதியை இழக்கும். பற்றற்றவருக்குப் பயமில்லை. பயமற்றவர்க்குச் சினமில்லை. அதனால் தான் அய்யா பற்றற்ற வாழ்வில் உலகப் பொருட்களின் சுகம் பெரிது என்று எண்ணக் கூடாது என்கிறார்.

நீர்முழுவதும் வற்றிய ஏரியில் எந்த பிம்பமும் தெரியாமல் போகிறது. செல்வம் அனைத்தையும் இழந்தவனது வீட்டை சுற்றம், முற்றும் மறந்து விடுகிறது. பற்றற்ற வாழ்வை மேற்கொள்ளும் போது தான் துயரங்களில் இருந்து விடுதலை கிடைக்கிறது .

.

விரும்பாதது வந்தாலும் துன்பம்; விரும்பியது விலகினாலும் துன்பம்; விரும்பியதை அடைந்து அதை இழந்தாலும் துன்பம். ஒவ்வொன்றாக மறைந்து போகும் உலக வாழ்வில் ஒரு பொருளின் இருப்பில் கிடைக்கும் இன்பத்தை விட, அதை இழந்துவிடுவோமோ என்ற நினைப்பில் எழும் அச்சமும் துன்பமுமே அதிகம் எனும்

அறிவுக் கண் விழிக்கும் வரை மனிதனுக்குப் பற்றிலிருந்து விடுதலை கிடையாது.

இல்லறத்தில் இருந்தாலும் பொருட்பற்றில் இருந்து விடுபட்டவர்க்கு துயரம் இல்லை. அனைத்தும் ஆண்டவனுடையது என்று எண்ணி வாழ்பவர்க்கே ஆனந்தமும் அமைதியும் வந்து சேரும். துன்பம் தரும் உலகப் பற்றுகளில் இருந்து விடுபட, இதயத்தில் இறைவனைப் பற்றி நிற்பதே ஒரே வழி. வாழ்க்கை பயணத்தில் வருவது அனைத்தும் நில்லாது ஒருநாள் நீர்க்குமிழாய் மறைந்துவிடும் என்ற ஞானம் கனிந்தவனுக்கு, எதன் மீதும் ஆசை எழாது. துன்பம் இல்லாத வாழ்வை விரும்பினால், ஆசைகளை எல்லாம் விட்டுவிட வேண்டும்.

அப்படி விட்டுவிட்ட பின் இவ்வுலகில் அடையக்கூடிய இன்பம் பலவாகும்.பொருள்கள் மீதுள்ள பற்றுகளையே இறுகப் பற்றிக் கொண்டு ஆசையை விடாதவர்களுக்குத் துன்பங்களும் பற்றிக் கொண்டு விடாமல் இருக்கும். பற்றுகள் அறுந்துபோன அப்பொழுதே பிறப்பாகிய பந்தமும் அறுந்துபோகும் :மேலும், உலக நிலையாமையும் அப்போது காணப்படும். இவ்வாறு நீ எண்ணாது இருந்தால் உனக்கு இந்த உலகமே பணிந்து நிற்கும். எனவே, இப்படிப்பட்ட எண்ணத்தையுடைய இவ்வுலகத்தில் வாழ்ந்து வந்தாலும் தாமரை இலைத் தண்ணீர் போல் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்வாயாக..ஆகவே தான் அய்யா உலக சுகங்கள் பெரிது என்று எண்ணி விடாதே என்றும், அப்படி எண்ணாமல் இருந்தால் உலகமே உனக்குள் வசப்படும் என்பதை, "**சொத்தாஸ்தி வஸ்து சுகமென்று எண்ணாதே வத்தாஸ்தி பெண்ணு வகையென்று எண்ணாதே நீயெண்ணா தேயிருந்தால் நீணிலங்களு மயங்கும் தானிதின்மே லெண்ணம் தங்குதங் காதே யிரு**" என்று அருளியுள்ளார்.

## விஞ்சை பகுதி-38

"**சத்துரு வோடும் சாந்தமுட னேயிருநீ**"

ஒருவன் நன்மை செய்ய விளைகின்றான் எனின் அவனுக்கு எதிராக செயற்படுபவனே பகைவன் ஆவான். ஒரு பகைவனை வெல்வதைக்காட்டிலும் அவனைத் அமைதியாக இருந்து வசப்படுத்துவது வெற்றியை விட சிறப்பு தரும். வெற்றி அவனுடைய எண்ணத்தைப் போக்கலாம். ஆனால் அவனைத் திருத்தி வசப்படுத்திக் கொள்வதில், அவனுடைய உள்ள உறுதியே போய்விடும். ஆகவே சத்துருவாகிய எதிரியை சாந்த குணத்தால் வசப்படுத்த வேண்டும்.

சாந்தம் என்பது, மற்றவர்களுடைய குறைகளையும் பலவீனங்களையும் மிகைப்படுத்தாமல் ஏற்றுக் கொள்வதே -யாகும். பிறர் செய்கின்ற துன்பத்திற்கு எதிர்வினை ஆற்றாமல் இருந்தால் கோழைகள் என்பது அர்த்தமல்ல. அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதாகும்.

பிறர் எரிச்சலுட்டும் பொழுதும், அன்பற்ற வார்த்தைகளால் நம்மை நிந்திக்கும்பொழுது, கோபப்படாமல் அமைதியாய் இருப்பதே வல்லமையான குணமாகும் .சாந்தகுணத்தோடு பேசாமலும் அமைதியாகவும் இருக்க பழகி கொண்டோமே -யானால் நம்முடைய நண்பர்களாக ஆக வேண்டுமென்ற ஆசை மற்றவர்களுக்கு வரும். ஆகவே எதிரிகளும் நண்பர்களாக மாறுவார்கள் எனவேதான் அய்யா சாந்தகுணமாகிய பொறுமை வேண்டும் என்பதை "**சத்துரு வோடும் சாந்தமுட னேயிருநீ**" என்று நமக்கு அருளியுள்ளார்.

## விஞ்சை பகுதி-39

### "**புத்திர ரோடும் பேசியிரு என்மகனே**"

பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையிலான உறவு சந்தேகத்திற்கு இடமின்றி அற்புதமானது மற்றும் தூய்மையானது. சண்டைகள் மற்றும் மோதல்களின் போதும் கூட, இருவருக்கும் இடையிலான பிணைப்பை ஒருபோதும் உடைக்கவோ சமரசம்

செய்யவோ முடியாது.சமூகத்தின் அடிப்படை அலகு குடும்பம் . குடும்ப வாழ்வில் பலவிதமான சிக்கல்கள் நேர்கின்றன .அவற்றுள் உறவுச் சிக்கல்களும் உண்டு .குறிப்பாக, கணவன் -மனைவி உறவுக்கு அடுத்து சிக்கல்கள் நேரிடும் உறவு பெற்றோர் - பிள்ளைகளுடையது .பிள்ளைகள் வளர, வளர உறவின் பரிமாணங்கள் சிக்கல் அடைந்துகொண்டே போகும் .

சிக்கல்கள் நீங்கி, நல்லுறவு மலர, பெற்றோர்கள் பிள்ளைகளிடமும், பிள்ளைகள் பெற்றோரிடமும் மனம் திறந்து பேச வேண்டும். பரபரப்பான இந்தக் காலகட்டத்தில், பெற்றோரும் பிள்ளைகளும் இணைந்து நேரம் செலவழிப்பது அரிதாகி வருகிறது . சில வீடுகளில் வேலை முடிந்து தந்தை வீடு திரும்பும்போது, பிள்ளைகள் உறங்கியிருப்பர் .இரவு உணவுக்குத்தான் இனி அவர்கள் திரும்பி வருவார்கள்.எனவே, பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் மனம் விட்டுப் பேசுவதற்கும், உறவை வளர்ப்பதற்கும் நேரமில்லாமல் போகிறது. நாள் முழுவதும் பெற்றோரும், பிள்ளைகளும் ஒரே வீட்டில் இருந்தாலும்கூட, அவர்கள் உள்ளப்பூர்வமாக சேர்ந்திருக்கிறார்களா என்பது சந்தேகமே.

பெற்றோர் தம் பிள்ளைகளுடன் தினமும் பத்து நிமிடங்களாவது எந்த இடையூறுமில்லாமல், உறவாடலுக்குச் செலவிட வேண்டும் பிள்ளைகளோடு பேசி ஒருவருக் கொருவர் அன்பையும் அனுபவத்தையும் பகருகின்றபோது பிள்ளைகளின் நல்வாழ்விற்கு வழிவகுப்பதோடு மட்டுமல்லாமல் பெற்றோர் பிள்ளைகளிடையே உறவு பலப்படுவதற்கும், பிள்ளைகள் தவறான செயல்களில் ஈடுபடாமல் இருப்பதற்கு வழிவகுக்கிறது .இந்த கலிகாலத்தில் பிள்ளைகள் வாழ்க்கையில் வழிதவறி சென்று விடாமலும் , எந்த ஒரு சவாலான குடும்ப சூழலிலும் குடும்ப உறவுகள் பிளவுபடாமலும் இருப்பதற்கு பெற்றோர்கள் பிள்ளைகளுடன் பேசிக் கொண்டு இருக்க வேண்டும். இதையே அய்யா "**புத்திர ரோடும் பேசியிரு என்மகனே**" என்று அருளியுள்ளார்.

## விஞ்சை பகுதி-40

**"அன்போர்க்கு மீந்திருநீ ஆகாப்பேர்க்கு மீந்திருநீ
வன்போர்க்கு மீந்திருநீ வழிபோவார்க்கு மீந்திருநீ
சகலோர்க்கு மீந்து தானிருநீ யென்மகனே
வலியோர்க்கு மீயு வழிபோவார்க்கு மீயு
மெலியோர்க்கு மீயு மேன்மையா யென்மகனே
ஆர்க்கு மிகவீந்தால் அந்தத்தர்ம மேகொதிக்கும்
போர்க்கு நினைத்தாரைப் பெலிகொடுக்குந் தர்மமது
தர்மந்தான் வாளும் சக்கரங்க எல்லாது
தின்மையது கேடு செப்பக்கே ளென்மகனே"**

**தருமம்** அல்லது **அறம்** என்பது வாழ்க்கைக்கான சரியான வழிமுறையாகச் சொல்லப்பட்டிருக்கும் நீதி நெறி அல்லது போதனைகள் ஆகும். இது கொடை, கருணை, தயை போன்ற பல்வேறு பொருள் தரும் சொல்லாகவும் உள்ளது..

தர்மம் என்பது பணம் மற்றும் காசுகளை தானம் கொடுப்பது மட்டும் தர்மம் அல்ல. இதையும் கடந்து சின்னச்சின்ன நற்கருமங்களும் தர்மங்களே. வசதி படைத்தவர் தங்களிடம் உள்ள செல்வங்களை தர்மம் செய்கிறார்கள். வசதியற்றவர்கள், தாங்கள் செய்யும் நற்கருமங்களின் வழியே தர்மம் செய்கிறார்கள். வழி தவறியவருக்கு வழிகாட்டுவதும் தர்மம். பார்வையற்றோருக்கு வழிகாட்டுவதும் தர்மம். கல், முள், எலும்பு போன்றவற்றை நடைபாதையிலிருந்து அகற்றுவதும் தர்மம்.

பசித்தவனுக்கு உணவு, தாகித்தவனுக்கு தண்ணீர், உடுக்கை இழந்தவனுக்கு உடை, வருமானம் இல்லாதவனுக்கு பணம், உதவி தேவைப்படுவோருக்கு உதவி என்று பிறரின் தேவைகளுக்கு ஏற்பத் தேவைப்படும் பொருட்களை வழங்குவதே தர்மம் ஆகும். இத்தகைய விசாலமான தர்மசிந்தனைகளை வாழ்வில் கடைப்பிடித்து தர்மசீலர்களாக வாழ வேண்டும்.

இப்படி நாம் செய்யுகின்ற தர்மம் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்றப் பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் சென்றுச் சேர வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுபவர்கள், ஆகாத்த பேர்கள் என்றுச் சொல்லக் கூடிய வம்பு செய்வோர்கள், கொடிய தீங்கினை விளைவிப்பவர்கள், வழியில் வருபவர்கள், மற்றும் செல்பவர்கள், வலிமை உடையவன் பொறுமையாய் இருப்பவன், கால்நடையாகப் பயணம் செய்யும் வழி போபவர் , மெலியோர் என்று பாரபட்சம் பார்க்காமல் எல்லோருக்கும் நாம் தர்மம்செய்ய வேண்டும். அப்படி செய்யும் போது நாம் மேன்மையோடு செய்ய வேண்டும்.

நாம் தர்மம் செய்யும் போது மனதைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். கடந்தகால கசப்பான விடயங்கள், கோபம், வெறுப்பு, பொறாமை, வஞ்சம் போன்ற தீயவைகளையும் எதிர்காலத்தைப் பற்றிய கவலையையும் விட்டுவிடுதல் வேண்டும். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் நல்ல விளைவுகளை நமக்கும் மற்றவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கோடு தருமம் செய்ய வேண்டும்

இவ்வாறாக வாழ்வில் எல்லா நிலைகளிலும் சிறப்புப் பெற்று வாழ, வாழ்வு மேன்மையுடையதாக அமைய நாம் செய்யும் தர்மம் துணைப்புரிகிறது. இவ்வாறு எந்த பாகுபாடும் இல்லாமல் நாம் செய்யும் தர்மம் நாளுக்கு நாள் வளர்ந்து நம்முடைய வாழ்வை மேன்மையாக மாற்றும். ஆகவே நாம் அனைவரும் அதை சிறப்பாக செய்ய வேண்டும். அப்படி நாம் நம் வாழ்வில் உயர்வு அடைகின்றப் போது நம்மை அழிக்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்களை நாம் செய்த தர்மமே அழித்துவிடும். இதையே அய்யாவைகுண்டர், “**போர்க்கு நினைத்தாரைப் பெலிகொடுக்குந் தர்மமது**” என்கின்றார். ஆகவே தர்ம சிந்தனையோடு வாழ்ந்து தர்மத்தை நிலைநாட்டி வாழ்வில் வெற்றி பெற்று நன்மைகளைப் பெறுவோம்.

எவர்க்கும் அதிகமாகக் கொடுத்தால் அவ்வாறு கொடுத்தவனின் தருமசெயல் மேலும் மேலும் பொங்கி எழும்பிக் கொண்டே இருக்கும். போர் செய்து உன்னை அழிக்க நினைத்தவரை அத்தருமம் பலி கொடுத்து விடும். ஆகவே, தருமந்தான் வாளும் சக்கரமும் ஆகமேயல்லாது வேறு ஒன்றுமில்லை. நீ தீமை செய்தால் அத்தீமை உனக்கே கேடாக வந்து அமையும். உன்னிடம் அன்புள்ளோருக்கும் உனக்கு ஆகாத பேர்களுக்கும், வன்மைக்குணம் உள்ளோர்க்கும், வழிப்போக்கர்களுக்கும், வலிமை இல்லாதவருக்கும் இப்படியாகச் சகல மக்களுக்கும் உன்னால் கொடுக்க முடிந்ததைக் கொடுத்து உதவுங்கள் என்பதை அய்யா வைகுண்டர் அருளியுள்ளார்.

## விஞ்சை பகுதி-41

**"சாதி பதினெட்டும் தன்னாற்கே டாகுமட்டும்**
**நீதி யழியாதே நீசாபங் கூறாதே".**

ஜாதி பேதங்கள் ஏற்றத்தாழ்வுகள் குலம் கோத்திரம் முதலியவை இந்த உடம்புக்கு தானேயன்றி ஆன்மாவுக்கு அல்ல. யார் ஒருவரிடம் நான் என்ற இருக்கிறதோ அவர் இந்த உலகில் பிறந்து பிறந்து இறந்து கொண்டே இருப்பார். சகல எண்ணங்களையும் விட்டு விடுவதை சன்னியாசமாகும். இந்த நிலை உயர்வடைவது தவத்தின் நோக்கமாகும். ஆன்மாவிற்கு எந்தவிதமான ஜாதி தோஷமும் கிடையாது. பரபிரம்மமே தான் என்று நினைக்கின்றவர்கள் ஜாதியை ஜாதி பேதத்தை அழித்து விடுகின்றார்கள். அவ்வாறு ஜாதி பேதம் கடந்து இருக்கின்றவர்களின் ஆன்மா எண்ணம் ஏதும் இல்லாமல் இருப்பதால் ஜீவன் முக்தியை அடைகின்றது.

ஆகவே நான் என்ற அகந்தை அழிந்து, நான் தானாகவே கெட்டு, மனம் பரபிரம்மமே எல்லாம் என்ற நிலையை அடைகின்ற போது ஜீவன் முக்தி அடைகின்றது. அவனுக்கு பிறப்பும் இறப்பும் இல்லை. எண்ணமே தொன்றும் இல்லை எளிமையும் இல்லை கண்டீர்கள்

என்ற அகில வாசகம் இதை விளக்குகிறது. நற்கதி அடைய வேண்டும் என்று எண்ணுகின்றவர்களிடம் இந்த ஜாதி பேதம் இருக்கப் போவதில்லை. ஆனால் ஞானம் கைவராத நிலையில் உள்ளவர்கள் தான் இந்த ஜாதி பேதம் பற்றி பேசிக்கொண்டே இருக்கின்றார்கள். ஆகவே ஞானம் கைவரப் பெறதாவர்கள் தன்னாலே உணராத வரையில் நீதி அழியாதே நீ சாபம் கூறாதே என்று கூறுகின்றார்.

**வினா விடை**:

1. நாரியர்கள் என்பவர் யார் ?
   பெண்கள்

2. ஒரு குடைக்குள் ஆட்சி செய்வதற்கு வந்தவர் யார் ?
   அய்யா வைகுண்டர்

3. ஆணும் பெண்ணும் கூடி ஒற்றுமையாக வாழும் போது நிகழ்வது என்ன?
   கலி தன்னம் தன்னால் அழிந்து விடும்.

4. பொறுமை பெரியோராய் வாழ்பவர்கள் யார்?
   சான்றோர் மக்கள்

5. வாரிமூன்று கோதி வளர்ந்திருக்கும் ஒரு தீவை இதில் கூறப்பட்டுள்ள தீவு என்பது எதை குறிப்பிடப்படுகிறது ?
   பாரதத்தை

6. கோள் நீசப் பாவிகளுக்கு அழிவு வருகின்ற காலம் எது?
   சாதி ஒற்றுமையாக வாழுகின்ற தருணம்.

7. வானமது வெள்ளிமாறி வெறும் வருமானமாக தோன்றுகின்ற தருணம் எது? கலி எண்ணங்கள் மனதை விட்டு மறையும் தருணம்

8. வானமது வெள்ளி மாறி வெறும் வனமாய் மேன் முகிலற்று வெறுவானமாய் தோன்றும் என்று கூறப்பட்டுள்ள வரிகளின் மூலம் நமக்கு கூறப்பட்ட உவமை யாது?

கலி எண்ணம் மறைகின்ற போது மனமானது எந்த விதமான சஞ்சலமும் இன்றி தெளிவாக காணப்படும் என்பது ஆகும்.

9. நினைத்ததெல்லாம் நடக்கும் என்று அய்யா யாரிடம் கூறுகின்றார்?
சான்றோர் மக்களிடம் எப்போது நினைத்ததெல்லாம் நடக்கும். நம்முடைய மனதில் கலிமாய எண்ணங்கள் அகன்ற நேரத்தில் நினைத்ததெல்லாம் நடக்கும்.

10. கலியுகத்தில் நாம் கடைபிடிக்க வேண்டிய பெரிய தர்மம் எது?
அன்பு பொறுமை தர்மம் ஆகும்.

11. கலியுகத்தில் நம்முடைய இச்சை போல் நடத்துவதற்கு உகந்தது எது?
நல்ல நினைவு ஆகும்.

12. பொல்லாதவராகிய தீய எண்ணம் கொண்டவர்களோடு எப்படி வாழ வேண்டும்?
பொறுமையோடு வாழ வேண்டும்.

13. யார் யார் அய்யாவிடம் செல்வதற்கு தகுதி உடையவர்கள்?
அய்யா சொல்லிய கருத்துக்களை அறிந்து அதன்படி நடப்பவர்கள்.

14. அய்யாவுக்கு உகந்தவர்கள் யார்?
கலி எண்ணம் இல்லாத சான்றோர் மக்கள்.

15. அய்யாக்கூறிய கருத்துக்களை நாம் மட்டும் தெரிந்திருந்தால் போதுமா? இல்லை. எல்லோருக்கும் தெரியும் படியாக செய்ய வேண்டும்.

16. சாதி வேறுபாடுகள் எவ்வாறு அழியும்?
தன்னந்தன்னாலே சாதியானது மாறும்.

17. எந்தவித தீமையும் வராமல் வாழ்பவர்கள் யார்?
நல்ல நினைவுடன் வாழுபவர்கள்.

18. நாட்டில் தீமைகள் வருவதற்கு காரணம் என்ன?

மனதில் தூய எண்ணங்கள்  இல்லாமல் இருக்கின்ற காரணம் ஆகும்.

19. புவியில் எந்தவித பொல்லாங்கும் வராமல் வாழ்பவர்கள் யார்?
நல்ல எண்ணம் உடையவர்கள்.

20. நாம் இந்த உலகில் துன்பம் இல்லாமல் வாழ என்ன செய்ய வேண்டும்?
நல்ல நினைவுடன் கர்ம வினைகள் அண்டாதப்படி வாழ வேண்டும்.

21. குறை நோவு கொண்டு கூடு இழப்பவர்கள் யார்?
முறை தப்பி ஆண்ட முகடர்கள்.

22. யார் யார் அரச பதவிக்கு சண்டை பிடிப்பார்கள்?
கலி நீசர்கள்

23. விதியை அறியாமல் வெட்டிக்கொண்டு மாள்பவர்கள் யார்?
பணம் பதவிக்காக போட்டியிடுபவர்கள்.

24. எல்லாரும் கைவிட்டு இருப்பார் உன்னை தேடாமல் இதில் கூறப்பட்டுள்ள உள் கருத்து என்ன?
இறை சிந்தனை இல்லாமல் மக்கள் வாழ்வார்கள் என்பது ஆகும்.

25. நல்லோர் மனதில் நாரணா என்றுரைப்பார் இதில் கூறப்பட்டுள்ள செய்தி யாது?.
நல்ல சிந்தனை உடைய மக்கள் இறைவனை எப்போதும் மனதில் நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்பது ஆகும்.

26. அய்யா கோல விளையாட்டு கொஞ்சம் எடுப்பேன் என்று எதற்காக கூறினார்? இந்த உலகை ஒரு குடைக்குள் ஆள்வதற்கு நல்லவர்களை தெரிந்தெடுப்பதற்காகவும் ஆகும்.

27. அய்யா அன்பர்கள் எல்லாம் ஆவி தான் மறுகி இன்பமுடனே ஏங்கி அழுவார்கள் என்று கூறி இருப்பதின் காரணம் என்ன?
நல்ல நினைவுடன் வாழும் மக்களுக்கு தீயவர்களால் பல துன்பங்கள் வருகின்ற போது எப்படி இந்த உலகில் நாம் வாழ்வது என்று அவர்கள் துன்பப்படுவார்கள் என்று கூறினார்.

28. அன்போடும் அடக்கத்துடன் வாழ்பவர்களை துன்பம் செய்து அடிப்பவர் யார்?
கலி நீசர்கள்

29. அய்யாவை நம்பி புத்தியது கெட்டு விட்டோம் என்று பேதலித்து கூறியவர்கள் யார்?
கலி நீசர்கள்

30. கலி நீசர்கள் துன்பம் செய்யும் போது நாம் என்ன செய்ய வேண்டும்?
நாம் பொறுமையை கடைபிடித்து வாழ வேண்டும் .

31. அய்யா யார் யாரை தனக்கு உகந்தவர்களாக தேர்ந்தெடுப்பேன் என்றுக் கூறுகின்றார்?
கலி நீசர்கள் செய்கின்ற துன்பத்தை எல்லாம் பொறுத்துக் கொண்டு இருப்பவர்களை ஆகும்.

32. அய்யா யார் யாரை சிறந்தவர்கள் என்றும் வல்லுனர்கள் என்றும் கூறுகின்றார்?
கலி நீசர்கள் செய்கின்றக் கொடுமைகளைத் தாங்கிக் கொள்பவர்கள்.

33. கலி நீசர்கள் துன்பப்படுத்துகின்ற போது அவர்களுக்கு எதிராக செயல்படுவது சரியான முறையா?
இல்லை. நாம் அமைதியோடு பொறுமை காக்க வேண்டும். அவர்கள் செய்யும் குற்றத்தை இறைவன் பார்த்துக் கொள்வார் என்று விட்டு விட வேண்டும். நாம் எதிர்த்து செய்வதால் இறைவனுடைய உதவி நமக்கு கிடையாது.

34. கலி நீசர்களின் கொடுமை அதிகரிக்கின்ற போது நாட்டில் நிகழ்வது என்ன? இயற்கை அதனுடைய நிலையிலிருந்து நிலை தடுமாறும். இதனால் இயற்கை சீற்றம் அதிகமாக இருக்கும்.

35. “குளத்தை தடதடென கொந்து கொந்தாய் உடைத்து” இதில் கூறப்பட்டிருக்கின்ற செய்தி என்ன?
இயற்கை சீற்றங்கள் அதிகமாக இருக்கும் தண்ணீரால் அழிவுகள் அதிகமாக இருக்கும் என்பதாகும்.

36. "சுழற்றக் கனலக்கினியும் துர்க்கை மகா துர்க்கையையும்" இதில் கூறப்பட்டுள்ள செய்தி என்ன?
அக்கினியால் இந்த உலகில் பல அழிவுகள் வரும் என்பது ஆகும்.

37. இயற்கை சீற்றங்கள் அதிகமாக வருகின்ற போது அழிபவர்கள் யார் என்று கூறுகின்றார்?.
அறச்செயல்களைச் செய்யாத தீய எண்ணம் உடைய கலி நீசம் கொண்டவர்கள் அளிக்கப்படுவார்கள் என்று கூறுகின்றார்.

38. இயற்கை சீற்றங்களின் போது யார் நலமாக வாழ்வார்கள் என்று அய்யா கூறுகின்றார்?
இறை சிந்தனையோடு வாழும் நல்ல எண்ணம் உடையவர்கள் நலமாக வாழ்வார்கள் என்று கூறுகின்றார்.

39. அய்யா கெட்ட நசுராணிக்கு எப்போது அழிவு காலம் வருவான் என்றுக் கூறுகின்றார்?
மொட்டை நசுராணி அங்கும் எங்கும் ஒடி அலைந்து அவன் நினைத்தது எதையும் அவனால் செய்ய முடியாமல் அழிந்து போவான் என்றுக் கூறுகின்றார்.

40. எல்லோரையும் ஒன்று போல் மரியாதையாக நடத்தும் எண்ணம் உடையவர்கள் யார்?
உயர்ந்த எண்ணம் உடையவர்கள்

41. பெரியோர்கள் என்று அய்யா யாரை குறிப்பிடுகின்றார்?
அய்யா சொன்ன நெறியோடு வாழுகின்றவர்கள்.

42. பெரியோரை மதிக்காமல் இருப்பவர்கள் என்று அய்யா யாரை குறிப்பிடுகின்றார்?
அய்யா சொன்ன நெறிகளைப் பின்பற்றாத மூடர்கள்.

43. அய்யா முள்முருக்கம் பூவுக்கு உவமையாக யாரைக் கூறிப்பிடுகிறார்? கள்ளர்கள் அதாவது உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசும் மூடர்களைக் குறிப்பிடுகிறார்.

44. அய்யா என்றும் நலமாக வாழ்பவர்கள் என்று யாரை குறிப்பிடுகின்றார்? அய்யா சொன்ன நெறியைப் பின்பற்றி

வாழக்கூடிய நல்லோர்க்கு வாழ்வு என்றும் குறையாது என்றார்.

45. விள்ளாத நியாயம் என்பது என்ன?
வெளியில் கூறப்படாமல் மனதில் உண்மையை கடைபிடித்து வாழ்வது ஆகும்.

46. துள்ளாத யானை என்பது எதற்கு உவமையாக கூறப்படுகிறது?
தனக்குள் எவ்வளவு பெரிய அளப்பரிய சக்தி இருந்தாலும் அதை வெளிக் காட்டாமல் இருப்பவர்கள் ஆகும்.

47. வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய மிக உயர்ந்த குணம் என்ன?
அடக்கம்

48. அடக்கத்துடன் வாழ வேண்டும் என்பது யாரிடம் இருக்கும் நல்ல குணம் ஆகும்?
அறிவு உள்ளவர்களிடம் இருக்கும் குணம் ஆகும்.

49. அய்யா கெட்டவர்களிடம் இருக்கும் குணமாக அய்யா கூறுவது என்ன? அரைகுறை அறிவை பெற்று நான் தான் உயர்ந்தவன் என்று எண்ணுபவர்கள்.

50. அய்யா யாரை கைவிடக்கூடாது என்று கூறுகின்றார்?
அறிவில் சிறந்து விளங்கும் கற்றோரை

51. அய்யா யாரை கடந்து செல்லக்கூடாது என்றுக் கூறுகின்றார்?
அறிவில் சிறந்த பெரியோரின் உபதேசத்தைக் கடந்து செல்ல கூடாது என்று கூறினார்.

52. அய்யா எதை மறக்கக்கூடாது என்று கூறுகின்றார்?
நன்றியை

53. அய்யா யாரை அகற்றி விடக்கூடாது என்றுக் கூறுகின்றார்?
தன்னை நாடி வருகின்றவர்களை

54. அண்டின பேர்களை அய்யா யாரை அகலப் போ என்றுத் தள்ளக் கூடாது என்று கூறுகின்றார்?

ஆபத்து நேரத்தில் உதவி வேண்டி வருகின்றவர்களை

55. அய்யா உயிர் போனாலும் எதை செய்யக்கூடாது என்றுக் கூறுகின்றார்? சாபத்தை கூறக்கூடாது என்றுக் கூறுகின்றார்.

56. அய்யா பிறரிடம் எதைக் காட்டக் கூடாது என்று கூறுகின்றார்? கோபத்தை காட்டக்கூடாது என்று கூறுகின்றார்.

57. அய்யா எதனோடு இணங்கி உறவு பாராட்டிக் கொள்ளக்கூடாது என்றுச் சொல்லுகின்றார்?
கோள் பேச்சு பேசுபவர்களிடம் உறவு கொள்ளக்கூடாது என்பதை கூறுகின்றார்

58. அய்யா எதனை காணக்கூடாது என்று கூறுகின்றார்? பாவத்தைக் காணக் கூடாது என்றுக் கூறுகின்றார் .

59. அய்யா எதனைப் பேசக்கூடாது என்று கூறுகின்றார்? பகட்டுமொழியை பேசக்கூடாது என்றுக் கூறுகின்றார்.

60. அய்யா பட்டினி போடக்கூடாது என்று எதைக் கூறினார்? பசுவை அடைத்து பட்டினி போடக்கூடாது என்றுக் கூறினார்.

61. அய்யா யாரிடமாவது விரோதம் கொள்ளக் கூடாது என்றுக் கூறினார்?
விசுவாசம் அதாவது நம்பிக்கை வைத்து இருப்பவர்களிடம் விரோதம் கொள்ளக் கூடாது என்றுக் கூறினார்.

62. அய்யா யாரிடம் இரக்கம் காட்ட கூறினார்?
எளியவர்களிடம்

63. அய்யா அணு அளவு கூட நாம் எண்ணக் கூடாது என்று எதைக் கூறினார்?
அழிவென்றப் பேச்சு

64. அய்யா தொட்டு பிடியாதே என்று எதைக் கூறினார்?
இறைப்பற்றினை. இறைவன் மீது நம்பிக்கை வைத்து உறுதியோடுப் பற்றி பிடிக்க வேண்டும்.

65. “தொட்டு பிடியாதே தோர்வை வைத்து காணாதே விட்டு பிடியாதே வெட்கத்தை காணாதே” என்று எதற்காக கூறினார்?
இறைவன் மீது நம்பிக்கை வைத்து உறுதியோடுப் பற்றி பிடிக்க வேண்டும். வேண்டுதல் நிறைவேற வில்லை என்றால் உடனே இறைவன் மீது கொண்ட பற்றை விட்டு விட்டு வேறு மார்க்கம் தேடி செல்லுவது முறையல்ல என்பதாகும்.

66. அய்யா நம் வாழ்வில் தப்பி நடக்க கூடாது என்று எதைக் கூறினார்?
வரம்பு தப்பி நடக்க கூடாது என்றுக் கூறினார்.

67. அய்யா நம் வாழ்வில் வழிதவறி நடக்க கூடாது என்று எதைக் கூறினார்?
அய்யா வகுத்து தந்த நெறிகளை தவறி நடக்க கூடாது என்றுக் கூறினார்.

68. நாம் வாழ்வில் எதைப் பாவித்து இருக்க வேண்டும் என்றுக் கூறினார்?
பரம் பூமியாகிய தர்மயுக வாழ்வை பெற்று வாழ வேண்டும் என்ற நெறியை பின்பற்றி வாழ வேண்டும் என்றுக் கூறினார்.

69. அய்யா நாம் ஆராய கூடாத செயலாக கூறியது யாது?
அய்யா சொன்ன நெறிகளை புத்தி விபரீதமாக ஆராயத் கூடாது என்றுக் கூறுகின்றார்.

70. அய்யா நாம் வாழ்வில் எந்தவிதமான நஷ்டம் ஏற்படாமல் இருக்க கூறிய வழிமுறைகள் என்ன?
அய்யா நாம் கலியுகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதை பற்றி வகுத்து தந்த நெறிகளையும் சட்ட திட்டங்களையும் மறக்காமல் இருக்க வேண்டும் என்று கூறினார்.

71. அய்யா தீச்சட்டம் காய்க்க தேதி வரும் என்று எதற்கு கூறினார்?
அய்யா சொன்ன நெறிகளைப் பின்பற்றி நாம் வாழவில்லை என்றால் தீச்சட்டம் காய்க்க தேதி வரும் என்றுக் கூறினார்.

72. அய்யா எப்போதும் மனதில் மறவாமல் நினைத்து வாழவேண்டிய செய்தியாக கூறியது யாது?
அய்யா வகுத்து தந்த நெறிகளை மறவாமல் எப்போதும் மனதில் ஏற்று வாழ்ந்து. வரக் கூறினார்.

73. அய்யா வைகுண்டர் கொஞ்சும் கிளியே கொன்று எழுப்புவேன் என்று ஏன் கூறினார்?
அய்யா வகுத்து தந்த நெறிகளை பின்பற்றி வாழாமல் பாதை மாறி சென்றால் கொன்று எழுப்புவேன் என்றார்.

74. “மனுப்போல் என்றிராதே மனதெண்ணமாய் இரு நீ” இதில் மனுப்போல் என்றிராதே என்று அய்யா எதைக் கூறினார்?
வைகுண்டர் எங்கும் நிறைந்து ஏகமயமாய் இருக்கும் பரப்பிரம்மம். இப்போது கலியுகத்தில் மக்களை கலி மாயை யிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று எண்ணி தானே மனுச் சொரூபம் எடுத்து வாழ்ந்து காட்டினார். இதை வைத்து அவர் ஒரு சாதாரண மனிதர் என்று எண்ணி விடாதே என்றுக் கூறினார்.

75. நாம் வாழ்வில் பெரியோராக ஆக்குவதற்கு அய்யா கூறிய வழி யாது?
பொறுமையை கடைப் பிடித்து வாழ்வது ஆகும்.

76. அய்யா நாம் இந்த உலகை ஆளும் தகுதி யாக கூறியது என்ன?
உறுதியோடு வாழ வேண்டும் என்பது ஆகும்.

77. கலியை வெல்வது என்பது யாராலும் இயலாத காரியம் ஆனால் அந்தக் கலியை அழிக்க முடியும் என்கின்றார் அய்யா எப்படி?
அய்யா கூறிய ஞான உபதேசத்தை வாழ்க்கையில் பின்பற்றி வாழ்பவர்களால் கலி அழிக்க முடியும்.

78. கலி என்பது என்ன?
கலி என்பது மனதில் எழும் மாய நினைவு.

79. கலியை அழிக்க அம்புகணை ஆயுதங்கள் தேவையா?
இல்லை.

80. கலியழிக்க தேவையானது எது?
மானமாக வாழுகின்ற வாழ்க்கை ஆகும்.

81. மானமாக வாழ்வது என்பது என்ன?
பொய் புரட்டு வஞ்சனை சூது,வாது இல்லாத நேர்மையாக வாழுகின்ற வாழ்க்கையாகும்.

82. கல்வியை அழிப்பதற்காக நாம் மேற்கொள்ள வேண்டிய வாழ்க்கை முறை என்ன?
எளிய வாழ்க்கை முறை ஆகும். அய்யா மகனே பம்மலிலே அகப்படுங்காண் இக்கலியும் என்று கூறி இருப்பதின் மூலம் பொறுமையோடு எளிய வாழ்க்கை முறையை பின்பற்ற வேண்டும் என்று அய்யா கூறுகின்றார்.

83. யாரோடு மோதிப் பகைக்க கூடாது என்று அய்யா கூறுகின்றார்? முந்தைய வழிபாட்டு முறைகளை பின்பற்றி வரக்கூடியவர்களிடம் மோதி பகைக்கக்கூடாது என்று கூறுகின்றார்.

84. முந்தைய வழிபாட்டு முறையை பின்பற்றுகின்றவர்களுடன் ஏன் பகைக்க கூடாது என்று கூறுகின்றார்?
அவர்களிடம் சண்டை போட்டால் அவர்கள் அந்த இடத்தில் இருக்க விடமாட்டார்கள் என்ற காரணத்தினால் ஆகும் .

85. அய்யா ஏன் யாரிடமும் சண்டை போட்டு விடக்கூடாது என்று கூறுகின்றார்? இந்த கலியுகம் அழிகின்றது வரையிலும் யாரிடமும் சண்டை போடக்கூடாது என்றுக் கூறுகின்றார். எல்லாவற்றிலும் பொறுமை காத்து தாழ்ந்திருக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

86. அய்யா எப்போது பிறர் செய்யும் செயல்களில் குற்றம் கேட்பேன் என்றுக் கூறுகின்றார்?
ஒருவர் செய்கின்ற செயலானது தவறாக இருக்கும் பட்சத்தில் இறைவன் கேட்டுக்கொள்வார் என்று விட்டுவிட வேண்டும்.

87. நீதி நெறி தவறாது இருப்பதற்கு அய்யா கூறியச் செய்தி யாது?
வலியோர்க்கு ஒரு வழக்கு என்றும் மெலியோர்க்கு ஒரு வழக்கு என்றும் வைத்து பேசக்கூடாது என்றுக் கூறுகின்றார்.

88. இந்த கலியுகத்தில் எது சுகம் என்று எண்ணி விடக்கூடாது என்று கூறினார்?
சொத்து ஆஸ்தி வஸ்து போன்றவை சுகம் எண்ணி விடக்கூடாது என்று கூறினார்.

89. அய்யா எவற்றை வகை என்று எண்ணிவிடக்கூடாது என்றுக் கூறினார்?

உலக பொருட்களின் மீது உள்ள பற்று மற்றும் பெண்களின் மீதுள்ள மோகம் இவற்றை வகை என்று எண்ணக்கூடாது என்று கூறுகின்றார்.

90. இந்த உலகமே நம் பின்னால் மயங்கி நிற்பதற்கு உரிய வழியாக கூறியது யாது?
சொத்து, சுகம் மற்றும் உலக பொருள் மீது ஆசை வையாமல் இருந்தால் இந்த உலகமே மயங்கிய நிற்கும் உன் பின்னால் என்று கூறுகின்றார்.

91. அய்யா யாருடன் சாந்தமுடன் இருக்க வேண்டும் என்று கூறினார்?
சத்துருவோடு சாந்தமுடனே இருக்க வேண்டும் என்றார்.

92. அய்யா யாருடன் எப்போதும் பேசி இருக்க வேண்டும் என்றார்?
பிள்ளைகளோடு எப்போதும் பேசி இருக்க வேண்டும் என்றார்.

93. அய்யா யார் யாருக்கு தர்மங்கள் கொடுக்க வேண்டும் என்றுக் கூறுகின்றார்?
அன்போருக்கு கொடுக்க வேண்டும் ஆகாத பேருக்கு கொடுக்க வேண்டும், வன்போருக்கு கொடுக்க வேண்டும் வழிப்போவோருக்கு கொடுக்க வேண்டும் எழியோர் வலியோர் என்று வேற்றுமை இல்லாமல் எல்லோருக்கும் தர்மத்தை கொடுக்க வேண்டும் என்றுக் கூறினார்.

94. தர்ம சிந்தனையோடு வாழும் ஒருவருக்கு தீங்கு விளைவிப்பவரை அழிப்பது எது?
நல்ல நினைவுடன் வாழுபவர் செய்கின்ற தர்மம் ஆகும்.

95. கலியுகத்தில் பணத்தால் வாழ்க்கை மேன்மை அடையுமா? இல்லை தர்மத்தால் மேன்மை அடையுமா?
தர்மத்தால்

96. சாதி பதினெட்டும் தன்னால் கேடு ஆகும் வரை நாம் செய்யக் கூடாதது என்ன?
நீதி தவறக்கூடாது, பிறருக்கு சாபம் கொடுக்கக் கூடாது.

97. அய்யா வைத்த சட்டத்தை மீறி நடந்தால் என்ன நிகழும்?
மீண்டும் மீண்டும் பிறவி என்பது அமைந்து கொண்டே இருக்கும் துன்பங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

# நாள்-2

**"மகனே வுனக்கு வைத்தவிஞ்சை மனதி லறிந்து கொண்டாயோ**
**அகமே வைத்த சட்டமெல்லாம் அதுபோல் நடந்து அல்லாமல்**
**உகமே யழியு முன்னாக ஒருசொல் லிதிலே குறைவானால்**
**சகமோ ரறியத் தீமூழ்கிச் சதியாய் மறுத்து முழிப்பாயே"**

அய்யா வைகுண்டருக்கு உபதேசம் சொல்வதைப் போன்று நம்மிடம் சொல்லுகின்றார் எப்படி என்றால் மகனே நான் உனக்கு வைத்த இந்த விஞ்சையை மனதில் அறிந்து கொண்டு உன்னுடைய வாழ்க்கையை நடித்துக் கொள்ள வேண்டும். உன் மனம் அறியும் படியாக நான் உரைத்திருக்கின்ற இந்த சட்டத்திலிருந்து அணு அளவு கூட மீறி நடக்கக்கூடாது. நான் உனக்கு அருளி தந்திருக்கின்ற சட்டப்படியே நீ உன்னுடைய வாழ்க்கையே நடத்த வேண்டும். இந்த கலியுகம் அழியும் முன்பாக ஒரு சொல் கூட இதில் குறை வரக்கூடாது . அவ்வாறு இதில் குறைவு ஏற்பட்டது என்றால் இந்த உலகோர் அறியும் படியாக வாழ்வில் பலவிதமான துயரங்களை அனுபவித்து இறந்து மீண்டும் பிறப்பாய். மீண்டும் மீண்டும் பிறவி என்ற பிணியை அனுபவிப்பாய் என்று கூறுகின்றார்.

**"நல்லோர் மகனே சொல்வது கேள் நானோவுரைத்த விஞ்சை யெல்லாம்**
**வல்லோ னான திருமகனே மனதி லறிந்து அறிந்துநட**
**எல்லாம் நமதுள் ளாச்சுதென்று எண்ணி நடப்பொன் னுன்னாலே**
**சொல்லால் தாண்டி நடப்பீரால் தீயே குளித்து வருவாயே"**

அய்யா கூறியிருக்கின்ற உபதேசத்தின் படி வாழ்ந்து வருகின்றபோது எல்லாம் நமக்குள் ஆச்சது என்று மனம் எண்ணி விடக்கூடாது. நமக்கு இறைவன் கலிமாய்கையிலிருந்து விடுபடுவதற்குரிய வழிகளை காட்டி இருக்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக பரம்பொருள் நம்மை வழிநடத்துகின்றார் என்ற எண்ணத்தோடு நாம் வாழ வேண்டும். அதை விட்டுவிட்டு எல்லாம் எனக்குள் ஆச்சு எல்லாம் என்னால் முடியும் என்று மனதில் ஒரு எண்ணம் வந்ததே யானால் தீயை குளித்து வருவாய் என்று கூறுகின்றார். சிலர் இறைவனுடைய அருளை சிறிது பெற்றவுடனே தான் தான் கடவுள் என்ற நிலைக்கு சென்று விடுகிறார்கள். இப்படி ஒரு எண்ணம் மனதில் உருவாகுகின்ற போது பலவித துன்பங்களை அனுபவித்து மீண்டும் மீண்டும் பிறப்பாய் என்றுக் கூறுகின்றார்.

"**கொடுக்கும் வரங்களு னக்கீந்தேன் கொடுத்த வரத்தை பறிப்பதற்கு உடக்கு வரமுந் தந்தேனான் உன்ற னாணைத் திருவாணை அடக்கு முடக்குந் தந்தேனான் ஆதி சிவனா ரவராணை நடக்கும் படியே சட்டமெல்லாம் நாரா யணனே தந்தேனே**"

இந்த கலியை எப்படி வெற்றி கொள்வது என்பதற்குரிய வரங்கள் எல்லாவற்றையும் நான் உனக்கு தந்திருக்கின்றேன். அது மட்டுமல்ல நான் வகுத்து தந்த நெறிப்படி நீ வாழ வேண்டும். அப்படி வாழவில்லை என்றால் நான் தந்திருக்கின்ற அந்த வரத்தை பறிப்பதற்குரிய உடக்கு வரவும் நான் தந்தேனான் என்கிறார். அதாவது இறைவனுடைய அருள் நம்மிடம் இருக்கின்ற போது இறை ஞானம் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கும். ஆனால் நம்முடைய மனதிலே தீய எண்ணங்கள் எழுகின்ற போது அந்த இறையருளானது நம்மை விட்டு மறைந்துவிடும். இதைத்தான் அய்யா இங்கே கூறுகின்றார். அடக்கு, உடக்கு எல்லாம் தந்தேனான். இந்த கலிய அழிப்பதற்குரிய வழிமுறைகள் எல்லாம் நான் தந்திருக்கின்றேன். நடக்கும் படியே சட்டம் எல்லாம் உனக்கு நான்

அருளி இருக்கின்றேன். அதிலிருந்து அணு அளவு கூட மீறி வாழக்கூடாது என்பதை எடுத்துக் கூறுகின்றார்.

**"தந்த வரங்கள் தவறாது தருணஞ் சடையுந் தரைமீது**
**எந்தன் மீது மறவாதே என்னாண் டருளு மிறையோனே**
**அந்தன் மீது மறவாதே ஆயா னெனவே அறிவில்வைத்துச்**
**சிந்தை மகிழ்ந்து முறைநடந்தால் சிவனு முனக்குள்**
**வசமாமே"**

அய்யா நமக்கு அருளி இருக்கின்ற இந்த ஞான உபதேசமானது அந்தந்த நேரங்களில் தருணம் தவறாது நமக்கு பலனை அளிக்கும். அய்யா வகுத்து தந்த நெறிப்படி நாம் வாழ்ந்து வந்தோமேயானால் நமக்கு நல்ல பலனை தரும். ஆனால் அப்படி பலன் தருகின்ற போது இந்த பலனுக்காரிய காரணம் இறைவனுடைய அருள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் அதி புத்திசாலியாக விளங்கினாலும் இறைவன் அருள் இன்றி எதுவும் நடக்காது என்பதை இங்கு உணர்ந்துகின்றார். தன்முனை பின்றி எல்லாம் அவன் செயல் நம்மால் ஆவது ஒன்றும் இல்லை என்ற ஒரு பணிவான உணர்வோடு நாம் வாழ்ந்து வர வேண்டும்.

அப்படி பணிவான உணர்வோடு வாழ்ந்து வந்தால் மட்டும்தான் இறைவனுடைய பரிபூரணமாக அருள் கிடைக்கும் என்பதை இங்கே கூறுகின்றார். இறைவன் நம்மை இயக்குகின்றார் நாம் ஒரு கருவியாக இருக்கிறோம் என்று எவன் ஒருவன் தன் சிந்தையில் மகிழுந்து நடக்கிறானோ அவனுக்குள் இறைவன் வசமாவார். அதை யார் உணர்ந்து கொண்டு தன்னுடைய வாழ்வில் பின்பற்றி வருகின்றார்களோ, இறைவனுக்கு பணிந்து வாழ்கின்றார்களோ, அவர்களுக்கு இறைவனுடைய அருள் பரிபூரணமாக கிடைக்கும் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.

விருத்தம்

**தாயா ரோடு சிவமாது சரசு பதியே பொன்மாது**
**நேயா மாதர் மடமாது நீணில மறிய வந்துனது**
**பூசா பலன்கள் சொல்லிமிகப் புலம்பித் திரிவார் துயர்தீர**
**மாயா திருக்கு மகனேவுன் மனமே மகிழ்ந்து மகிழ்ந்திருவே**

ஜீவாத்மாவாகிய நாம் முக்தியடைய வேண்டும் அந்த பிரம்மத்தோடு ஐக்கியமாக வேண்டும் என்று யார் முறைப்படி முயன்று அய்யா சொன்ன முறைப்படி வாழ்கின்றார்களோ அவர்களுக்கு அருள் செல்வம் பொருள் செல்வம் ஆகிய அனைத்து செல்வங்களும் அதிபதியான ஆதி மகாலட்சுமியும், வீரத்தின் நாயகியாகிய பார்வதி தேவயினுடைய அருளும், வித்தைக்கு அதிபதியான கலைமகளினுடைய அருளும், ஆன்ம விடுதலை பெறுவதற்குரிய அனைத்து சக்திகளையும் கொடுத்தருளி துணை நிற்பார்கள். ஆகவே ஞானசாதனையில் வெற்றி பெற்று அழியாத மரணம் இல்லாத பெருவாழ்வை பெற்றிருப்பாய் என்று இங்கு எடுத்துக் கூறுகின்றார்.

விருத்தம்

**சொல்ல எளிதோ என்மகனே சொல்லா தனேகம் தோன்றுமினி**
**வெல்ல எளிதோ என்மகனே மேலோரா ரா ரா லும்**
**கொல்ல எளிதோ வுனைமகனே கோவேங் கிரியின் கோனாலும்**
**வெல்ல எளிதோ வுனைமகனே மேலாங் கண்ணே மிகவளராய்**

மும்மூர்த்தியும் ஒரு மூர்த்தியாக வந்து கலி அழிப்பதற்காக அனைத்து சக்திகளையும் பெற்றிருக்கின்ற மகனிடம் அய்யா சொல்லுகின்றார். மகனே நான் சொல்லக்கூடிய விஷயங்கள் எளிமையானது என்று எண்ணிவிடாதே! நான் கூறியிருப்பது ஒரு சில உபதேசங்கள் தான்.ஆனால் நான் கூறாமல் இருக்கின்ற

சொல்லாத விஷயங்கள் அநேகம் அந்தந்த தருணங்களில் தோன்றியிருக்கும். அதை நீ அறிந்து கொண்டு நடக்க வேண்டும். அப்படி நடக்கின்ற போது உன்னை வெல்வதற்கு யாராலும் இயலாது .மேலோர்கள் ஆனாலும் சிவன், பிரம்மா,விஷ்ணு என்று சொல்லக்கூடிய மூவராலும் உன்னை வெல்ல முடியாது. அது மட்டுமல்ல உன்னை அழித்து விட வேண்டும் என்று யார் நினைத்தாலும் உன்னை வெல்வதற்கோ வெற்றி கொள்வதற்கோ உன்னை வீழ்த்துவதற்கோ யாராலும் முடியாது. ஆகவே என்றைக்கும் சிறப்பாக வளர்ந்து வருவாய் என்று மகனிடம் (நாம் ஒவ்வொருவருக்கும்) சொல்லுகின்றார்.

விருத்தம்

**இந்தப் படியே நாரணரும் இயம்ப மகவு ஏதுரைக்கும்**
**கந்த னுறுவே லென்றகப்பா கடியா வுனது படிநடக்க**
**எந்தப் படியோ நான்றமியேன் ஏதோ அறியப் போறேனெனச்**
**சிந்தை மகிழ்ந்துத் தகப்பனுட திருத்தாள் பிடித்துச்**
**செப்பலுற்றார்**

தந்தையாக நாராயணமூர்த்தி வைகுண்டருக்கு கூறிய உபதேசத்தை கேட்டவுடன் தந்தையினுடைய திருத்தாள் பணிந்தும் மாதாவை வணங்கியும் கேட்கின்றார் எப்படி என்றால், ஆதிமூல ஆதிநாராயணரே தானே தனக்கு மகனாகவும் தத்துவ வித்தகனாகவும், எல்லாம் வல்ல ஜீவாத்மாகளின் மீது கொண்டுள்ள பரம கருணையால் உண்மை தொண்டனுக்கு வழி காட்டுகின்ற உத்தமனாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டு இந்த ஞானத்தை அருளுகின்றார். ஆகவே வைகுண்ட மாமணியே நம்மை பிறவி பெருங்கடலிலிருந்து கரை சேர்ப்பதற்காக ஒரு தோணியாக கலியிருளிலிருந்து விடுவித்து தர்மக வாழ்வு அளிப்பதற்காக இங்கே வந்திருக்கின்றார்.

அப்படி வந்திருக்கின்ற வைகுண்டரே நாராயணமூர்த்தியிடம் கேட்கின்றார் தந்தையே! எப்படி இந்த பொல்லா கலியில் வாழ்க்கையை நான் நடத்துவது, எப்படி கலியை வெல்லப்

போகிறேன் என்று எனக்கு தெரியவில்லை ஆகவே அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்னை சிறப்பாக வழிநடத்தி செல்ல வேண்டும் என்று அவருடைய பாதத்தை பணிந்து நிற்கின்றார்.

**"தன்னம் பெரிய தாட்டீக வைகுண்டரும்**
**என்னசொல்வீ ரென்றனக்கு என்றகப்பா நீரெனவே**
**வணங்கிப் பதம்பூண்டு மாதாவை யுந்தொழுது**
**இணங்கி யிவர்கேட்க ஏதுசொல்வார் நாரணரும்**
**நாராணா வைகுண்டா நன்மகனே என்னையினி**
**வாரணமே நீவணங்கி மகனே கைசேராதே**
**நீகை குவித்தால் எனக்குமிகத் தாங்கரிது**
**தானீத னான சர்வபரா என்மகனே**
**ஒருவருந் தாங்கரிது உன்கை குவித்தாக்கால்**
**குருதெய்வம் நீயே கோவே குலக்கொழுந்தே**
**இன்ன முனக்கு இயம்புகிற விஞ்சையதும்**
**பொன்னம் மகனே பூராய மாய்க்கேளு"**

விஞ்சை பெற்ற வைகுண்டர் தந்தையாகிய நாராயண மூர்த்தி மற்றும் தாய் லெட்சுமி தேவியின் பாதம் பணிந்து வணங்கி நிற்கின்றார். அப்போது நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் உன்னை விட உயர்ந்த ஒரு பெரிய சக்தி வேறு எதுவும் இல்லை.
நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் மகனே நீ என்னை வணங்கி நிற்க வேண்டாம். காரணம் நானே நீயாகி அந்த பரம பிரம்மநிலையை நீ பெற்றுவிட்டாய். பர பிரம்மத்துக்குள்ளே எல்லா ஐக்கியம். பர பிரம்மத்துக்குள் இருந்து வெளிப்பட்டதுதான் அனைத்து தெய்வீக சக்திகளும். என்னுடைய நிலையும் அதுவே. அந்த பர பிரம்ம நிலையில இருக்கின்ற நீ யாரையும் வணங்க வேண்டாம்.

நீ என்னை வணங்கினால் எனக்கு மிக தாங்குவது முடியாது. நானே இப்போது நீயாக இருக்கின்றாய். அனைத்து தெய்வ சக்திகளும்

உனக்குள் ஒன்றுபட்டு விட்டதால் யாரையும் கை குவித்து வணங்க வேண்டாம். நீ இப்போது குரு என்ற நிலையில் இருக்கிறாய். சர்வபரா என் மகனே நீ கை குவித்து வணங்கினால் யாரும் அதை தாங்கிக் கொள்ள இயலாது. குருவும் நீயே! தெய்வமும் நீயே! கோவே! என் குலக்கொழுந்தே! அன்பே! யாரையும் நீ வணங்கி நிற்க வேண்டாம் என்று கூறுகின்றார்.

“**சாதி பதினெட்டும் தலையாட்டிப் பேய்களையும்**
**வாரி மலையதிலும் வன்னியிலுந் தள்ளிவிடு**
**வரத்தை மிகவேண்டி வைத்துக்கொள் ளென்மகனே**
**சரத்தை மிகவாங்கித் தானனுப்புப் பேய்களையும்**”

அய்யாவின் அவதார காலத்தில் இம்மண்ணை ஆண்டவர்கள் சாதிவெறியால் தீண்டாமை என்னும் பேய் மக்களை துன்ப படுத்தினர். மக்களிடையே ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி அவரவர் செய்கின்ற தொழிலின் அடிப்படையில் சாதிகளை பிரித்து மக்களிடையே ஒற்றுமையை சீர்குலைத்தனர். பிரித்தாழும் இந்த தந்திரத்தால் மக்களை அடிமைப்படுத்தி வாழ்ந்தார்கள். இதனால் மக்கள் ஒற்றுமை இன்றி செய்வது அறியாமல் தவித்து வந்தனர்.சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகி இருந்தது. உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற பாகுபாடு சமுதாயத்திலே நிலவி இருந்தது. இந்த சாதிக் கொடுமைகளைப் போக்குவதற்கு இரண்டு ஆண்டுகள் தவம் செய்ய சொல்லி அதன்படி அந்த சாதி கொடுமையை சமுதாயத்தில் இருந்து வேரோடு அறுக்க வேண்டும் என்று கூறினார். இறைவன் முன்பு அனைவரும் சமமே! ஏற்றதாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்றுப் போதித்தார்.

மேலும் பேய் பிசாசுகளின் தொல்லையும் மந்திரவாதிகளினுடைய தொல்லையும் அதிகமாக மக்களை கொடுமைப்படுத்தி துன்பத்துக்குள் ஆளாகியது .இப்படி மக்களை துயருக்குள் ஆளாக்கிய தீண்டாமை என்னும் பேயும் பிசாசுகளையும் அழித்து மக்களுக்கு ஞானத்தை போதித்து அச்சம் இல்லாத வாழ்வு வாழ அருள புரிய வேண்டும் என்றுக் கூறினார். மேலும் பேய் பிசாசுகள்

அனைத்தையும் எரித்து கடலிலும் மலையிலும் அக்கினியிலும் தள்ளிவிட கூறினார். அவைகளுக்கு கொடுக்கப்பட்ட அந்த வரத்தை எல்லாம் வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்றார். மந்திரவாதிகளிடமும் , பேய் பிசாசுகளிடமும் கொடுக்கப்பட்ட கணக்கை எல்லாம் பறித்து, நீங்கள் இனி எந்தவித தொல்லையும் மக்களுக்கு கொடுக்க கூடாது என்று சத்தியத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சத்தியத்தை மீறினால் அழிவை சந்திப்பீர்கள் என்பதை சொல்லி அனுப்பு என்றுக் கூறினார்.

## விஞ்சை பகுதி-42

"**உட்கோள் கிரகம் உறவுகெட்ட பேர்முதலாய்க்**
**கட்கோள் கருவைக் காணாதே சாபமிடு**"

தன்னலம், கோழைத்தனம், நடிப்பு, ஏமாற்று, வஞ்சகம் போன்றவை கோபத்திற்கும் கோள்பேச்சிற்கும் முக்கிய கூறுகளாக இருக்கின்றன. இறைவனது புகழையோ, மனிதர்களுக்குரிய நல்லனவற்றையோ குறித்துப் பேசாது பிறரைப் பற்றி அவதூறு கூறுவதயே செய்து வருகின்றனர். இப்படிப் பட்ட வஞ்சக எண்ணம் உடையவர்களின் கோபமும் கோள் பேச்சும் அறிவு செல்வம் உள்ளிட்ட அனைத்தையும் அழித்துவிடும்.

கோள் போச்சு பேசுபவரோடு உறவு கொண்டால் அது நம்முடைய வாழ்விற்கு அழிவைத் தேடித்தந்து விடும். ஆகையால் தான் அய்யா கோளோடு இணங்காதே அவர்களோடு உறவு கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்.

கோள் வார்த்தையினால் வரும் கேடுகளை எடுத்துக்கூறிய அய்யா, கோள் ஆகிய கிரகங்களின் அடிப்படையில் தன்னுடைய வாழ்க்கையை நிர்ணயிப்பதுக் கூடாது என்கிறார். "**ஊனக் கோள் கிரக ஊறவுக்கெட்ட பேர்முதலாய்**" கலியனுடைய ஆட்சியில் பிரித்து வைக்கப்பட்ட இந்த கிரகம் முறைகளை பின்பற்றி என்னுடைய பிள்ளைகள் வாழக்கூடாது என்றும், இதனால்

உருவாகும் வாழ்க்கை முறையும் தேவையில்லை என்கிறார். அவனுடைய ஆட்சியில் தான் தன்னை எதிர்க்க யாருமில்லை என்று பலவாறு ஆட்சிமுறைகளை எல்லாம் பிரித்து ஆட்சி புரிந்தான்.

இவ்வாறு மக்களை பிரித்து அவர்களை தனக்கு ஏற்றார்போல் முன்பிருந்த ஆகமங்களுக்கு மாற்றாக தனக்குத்தானே நட்சத்திரங்களையும் கிரகங்களையும் நிலைகளை மாற்றவும் மாதம், கிழமை, வருடம் என கலிநீசன் தனக்கு ஏற்றார் போல் எல்லாவற்றையும் மாற்றினான்.

பஞ்சபூதங்களின் நிலை மாறாமல் இருக்க வேண்டுமென்றால் இறையருள் தேவை என்பதை மறந்து எல்லாவற்றையும் தன் மனம்போன போக்கில் மாற்றி அதை மக்கள் பின்பற்றும் படி கூறினார். அப்படி பின்பற்றாத மக்களை பணத்தைக் கொடுத்து அவருடைய மனதை மாற்ற முயற்சி செய்தான். ஆனால் அந்த நிலைக்கு அய்யாவின் பிள்ளைகள் அகப்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் அய்யா **"உனக் கோள்கிரக உறவு கெட்ட பேர்மதலாய் கள்கோள் கருவை காணாதே சாபமிடு**" என்கிறார் .

இன்றைய வாழ்க்கை சூழலில் மக்கள் ஒரு சிறு கஷ்டங்கள் வந்தாலோ அல்லது ஒரு திருமண பந்தத்தை ஏற்படுத்துகின்ற போதோ ஜாதகம் என்ற கிரக நிலையை ஆராய்ந்தது முடிவு எடுக்கும் முறையை பின்பற்றி வருகின்றனர். அதன் மூலம் தான் தங்களுடைய வாழ்க்கை பயணத்தை தொடர்கின்றனர். எதற்கெடுத்தாலும் பய உணர்வோடு ஜாதகத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அது கூடாது , இறைவனை நம்பி நாம் வாழ்க்கை முறையை இறைவன் காட்டிய வாழ்வியல் முறைகளைப் பின்பற்றினால் எந்தவித துயரத்தையும் எளிதில் வென்றுவிடலாம் என்று அய்யா நமக்கு வழிகாட்டுகிறார் .

அய்யா கூறிய வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றி வாழ்ந்து வருகின்றப் போது நம்முடைய எப்படிப்பட்ட விதியையும் நல்லதாக மாற்றும் வல்லமை அய்யாவுக்கு உண்டு. ஆகவே அய்யாவினுடைய

அன்பு நம்மிடம் பூரணமாக இருக்கின்ற போது நமக்கு வேறு ஜாதக பலன்கள் பார்க்கின்ற தேவை இருக்காது என்கிறார் அய்யா.

எனவே அவர் கூறிய மந்திரமாகிய உகப்படிப்பு, உச்சபடிப்பை நாம் தினந்தோறும் தவறாது படித்து வருவோமேயானால் எப்படிப்பட்ட ஊழ்வினைகளையும் மாற்றி அய்யா நம்மை காத்துக் கொள்வார். எனவே இந்த ஜாதகம் ஆனால் நட்சத்திரம் கிழமை பார்ப்பது நல்ல நேரம் பார்த்துச் செய்கின்ற இந்த செயல்கள் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு அய்யாவே தஞ்சம் அய்யா நிச்சயித்து எதுவோ அதுவே நம்முடைய வாழ்வில் நடந்துக் கொண்டிருக்கின்றது என்று அய்யாவை ஒரே நினைவோடு நம்புகின்ற மக்களுக்கு எந்தவித துன்பமும் இல்லாமல் அய்யா தர்மயுக வாழ்வுக் கொடுப்பார்.

மேலும் பொய் பேசுபவர்கள், மது அருந்துபவர்கள் இவர்களோடு உறவுக் கொள்ளக்கூடாது. காரணம் பொய் பேசுகிறவர்கள், மது அருந்துகிறவர்கள் இவர்களுடன் நட்பு கொண்டால் வீடு பேறு அடைய முடியாது. காரணம் இவர்களின் உள்ளத்தில் குடியிருப்பவன் கலிநீசன். கலிநீச குணமுடயவர்களின் தொடர்பு தேவையில்லை. **கள்கோள் கருவை காணாதே சாபமிடு** என்கிறார்.

## விஞ்சை பகுதி-43

### "செல்வம் பொருந்திச் சிறந்திரு என்மகனே"

அய்யா செல்வம் பொருந்திச் சிறந்திரு என்மகனே என்று கூறியிருக்கிறார். இன்றைய காலத்தில் செல்வம் என்பது வெவ்வேறு விதமாக வழங்கப் பட்டிருக்கின்றது. நாம் எது உண்மையான செல்வம் என்பதை உணர்ந்து புரிந்து கொள்ள வேண்டும். **செல்வம்** பலவகைப்படும். அவை கலையாத கல்வி, கபடமற்ற நட்பு, குறையாத வயது, குன்றாத வளமை, போகாத இளமை, பரவசமான பக்தி, பிணியற்ற உடல், சலியாத மனம், அன்பான துணை, தவறாத சந்தானம், தாழாத கீர்த்தி, மாறாத வார்த்தை, தடையற்ற கொடை, தொலையாத நிதி, கோணாத

செயல், துன்பமில்லா வாழ்வு. போன்றவை ஆகும். இவை அத்தனை செல்வங்களும் ஒரு மனிதனுக்கு கிடைக்க வேண்டுமானால் மனிதனிடம் முதன்மையான செல்வமாகிய, மனநிறைவு அவசியம் தேவை.

மனம் கலங்காமல், சத்தியம் தவறாமல் நல்வழியிலேயே நடந்து எதன் மீதும் ஆசையில்லாமல் இருப்பதே பெரும் செல்வமாகும். யாரிடமும் கோபம் கொள்ளாமல் இருப்பதே, புண்ணிய தீர்த்தத்தில் நீராடலுக்குரிய புண்ணியத்திற்கு சமம்; அன்புடையவனாக இருப்பதே, மந்திரங்களைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கும்போது என்ன பலன் கிடைக்குமோ அந்த பலன் கிடைக்கும்.. மனதில் அமைதியோடும் இருப்பதைப் போன்ற செல்வம், வேறு எதுவும் இல்லை. உண்மையான செல்வம் பணமன்று, குணமேயாகும். ஆகவே நாம் நம்முடைய குணத்தை செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் அதுவே மிகப்பெரிய செல்வமாகும்.

'மனதாலோ, வாக்காலோ, எந்த ஜீவராசிக்கும் துன்பம் இழைக்காமல் இருப்பதேமிக உயர்ந்த அறிவு ஆகும்; அடுத்தவர் பொருளைப் பற்றி நினைக்காமல் இருப்பதே மிகப்பெரிய விரதமாகும். அடுத்தவர் பொருளை எடுத்து வந்து, அதை வைத்து தர்மம் செய்து புண்ணியம் சேர்ப்பதைவிட, அப்பொருளைத் தீண்டாமல் இருப்பதே பெரும் புண்ணியம் ஆகும்.

செல்வனாயிருக்க முதலாவதாக வேண்டியது நிறைந்த உள்ளம்; இரண்டாவதாகவே பொருள். வேண்டாதிருக்கக் கற்று கொள்வதே உடையவனாயிருப்பதாகும். எந்த மனிதனும் பணக்காரனா ஏழையா என்பதைக் கணக்குப் புத்தகத்தைப் பார்த்துச்சொல்ல முடியாது. அவன் எந்த நிலையில் இருக்கிறான் என்பதைப் பொறுத்தது ஆகும். அவனிடம் எவ்வளவு செல்வம் வைத்திருக்கிறான் என்பதை பொறுத்தது இல்லை.

ஒரு மனிதன் எவ்வளவு வைத்திருக்கிறான் என்பதைக் கண்டு நாம் பொறாமைப்படுகிறோம். ஆனால் நம்மிடம் இருப்பது போதும் என்று எண்ணி மனதிருப்தியோடு வாழ்வதுதான் உயர்ந்த செல்வம் ஆகும். மிகக் குறைந்ததைக் கொண்டு திருப்தியடையவனே முதன்மையான செல்வன். ஏனெனில், இயற்கையின் செல்வம் திருப்திதான். ஏழைகளைக்காட்டிலும் செல்வர்களுக்குரிய தலைசிறந்த இனிய உரிமை யாதெனில்; மற்றவர்களை இன்புறச் செய்தல். அந்த உரிமையைத்தான் அவர்கள் மிகக் குறைவாக உபயோகிக்கின்றனர்.

ஆனால் இந்நிலை மாற்றப்பட்டு இல்லாத எளியோர் கொடுத்து அவர் நிலை உயரப் பாடுபடுவதுதான் உண்மையான செல்வத்தின் சிறப்பாகும். அதுவே நம்மை தர்மயுக வாழ்விற்கு அழைத்துச் செல்லும். அத்தகைய சிறப்பு பொருந்திய செல்வத்தைப் பெற்றுச் சிறந்து இருக்க அய்யா அருளியுள்ளார்.

## விஞ்சை பகுதி-44

**கொல்லென்ற பேச்சுக் கூறாதே என்மகனே**
**ஒவ்வொன்றைப் பார்த்து ஊனு ஒருசாபம்**
**செவ்வென்ற பேச்சுச் செப்பியிரு என்மகனே"**

இறைவன் படைப்பிலே பேசும் சிரிக்கும் தன்மை கொண்ட ஒரே இனம் மனித இனம். பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் பேசும் தன்மையோ, சிரிக்கும் தன்மையோ, யோசிக்கும் தன்மையோ கிடையாது. ஆனால் அந்த சிறப்புகளை மனிதனுக்கு இறைவன் கொடுத்து இருக்கின்றார்.

பேச்சு என்பது ஒரு மிகச் சிறந்த கலை. அது நம் எண்ணங்களின் வெளிப்பாடு. பேச்சு சாதாரண மனிதர்களையும் சான்றோர்கள் ஆக்கும் வல்லமை உடையது. இனிமையானப் பேச்சு

அனைவரையும் அன்பு என்னும் பாசவலைக்குள் கட்டிப் போடும் வல்லமை படைத்ததாகும்.

உலகிலேயே மிகபெரிய ஆயுதம் நாக்கு தான். ஒருவர் நாவினால் பேசுகின்றப் பேச்சானது ஒருவரை வாழவைக்கும் ஒருவரை வீழவைக்கும். நாம் பிறரை வாழவைக்கும் விதமாக இனிமையான பேச்சைப் பேச வேண்டும். பேச்சிலே இருவகை உண்டு. இனிமையானச் சொற்களைப் பயன்படுத்தி பேசும் பேச்சு. வன் சொற்கள் என்றுச் சொல்லக்கூடிய கடுமையானச் சொற்களைப் பற்றிப் பேசும் பேச்சு. பிறருடைய அழிவுக்கு காரணமான பேச்சுகளைத் தவிர்க்க வேண்டும். கடுமையான சொற்களை பேசுபவர்களுடைய உறவு, கடுமையான சொற்கள் உருவாவதற்கு காரணமான சூழ்நிலை, கடுமையான சொற்களை பேசுவதற்கு காரணத்தை உருவாக்கி விடுபவர்கள், இப்படிப்பட்ட இந்த சூழ்நிலைகளை சார்ந்தவர்களுடைய உறவு தேவையில்லை என்பதையும் ஆண்மை விழிப்பு பெறுவதற்கு தடையாக உள்ள ஒவ்வொன்றும் அழிந்து போகட்டும் என **ஒவ்வொன்றைப் பார்த்து ஊனு ஒருசாபம்** என்று அய்யா கூறுகிறார்.

மனிதனை மனிதனாக்கிய அருங்கலைகளில் ஒன்று இனிமையானப் பேச்சு. நாம் பேசுகின்ற பேச்சானது மனித உறவுகளை மேம்படுத்தும் வகையில் அமைய வேண்டும். பிறரை காயப்படுத்தாமல் பேசுவது. அரிய கலை. நல்லதை கேட்டவன் நல் வழியில் நடப்பான். பேச்சு எப்போதும் இனிமையாகவும் சுவையாகவும் இருக்க வேண்டும்.இனிமையான பேச்சு எதிராளியை தன்பால் ஈர்க்கும். கனிவான வார்த்தைகளைப் பேசுவோர் அனைத்து செயல்களிலும் வெற்றியைக் காண்பர். நான் பேசுகிறபோது மரியாதையையும் கண்ணியத்தையும் அன்பையும் வெளிப்படுத்தும் விதத்திலே எளிமையான சொற்களை பயன்படுத்த வேண்டும்.

நமது பேச்சில் கடுமையான சொற்களோ, பிறரை மனம் துன்பப் படுத்துகின்ற வகையிலோ சொற்கள் அமைந்து விடக்கூடாது. கோபத்தில் கடுமையான சொற்களைப் பேசிவிட்டால் அந்த பேச்சின் வலி பல ஆண்டுகள் இருக்கும். ஆகவே பேசுவதற்கு முன்பு

நாம் யோசித்து பேச வேண்டும். ஒருமுறை நாம் பேசி விட்டால் அதை மீண்டும் திரும்பபெற முடியாது. அதனால் வரும் வேதனைகளும் பல காலம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். இந்நிலையை மாற்ற வேண்டுமென்றால் நாம் பேசுகின்ற பொழுது கடுமையான சொற்களைத் தவிர்த்து இனிமையாக சற்று யோசித்து பேசவேண்டும்.

இந்த உலகிலேயே சிறந்தது அன்பு ஒன்றுதான். ஆகையால் நாம் பேசும் போது நம்முடைய பேச்சு வெளிப்பாடு அன்பை வெளிப்படுத்தும் விதமாக இருக்கவேண்டும். அன்பினால் உறவுகள் மேம்படும். அன்பினால் இந்த உலகத்தை நாம் வெல்லலாம். இந்நிலை உருவாகி ஒரு குடைகுள் உலகை ஆளும் தர்மயுகம் மலர அன்பு மலர, பிறருக்கு அழிவு தருகின்ற வகையில் பேச்சு அமையாமல் இனியச் சொற்களைப் பேச வேண்டும் என்பதாகும்.

**"உரைத்த விஞ்சையெல்லாம் உனக்குப்போது மோமகனே**
**விரைத்தமுள்ள வைகுண்டா விற்பனவா நீகேளு**
**நீபோ யிருக்கும் இடங்களில் என்மகனே**
**நான்போயிருந்த நல்லமலை நாடுதன்னில்**
**அன்பான பஞ்சவர்கள் அங்கேவுண் டென்மகனே**
**முன்னே பிறந்த உகத்துக் குகங்களெல்லாம்**
**என்னைவிட் டகலாது இருந்தார்கள் பஞ்சவர்கள்**
**உன்னோடுமிருப்பார் உதவியா உன்தனக்கு**
**ஆனதா லிப்போது யானும்நீ யானதினால்**
**மானமுள்ள பஞ்சவரை மகனேமுன் விட்டுக்கொள்ளு"**

நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் மகனே நான் உனக்கு கலியுகத்தில் எப்படி வாழ வேண்டும் எப்படி மக்களை ஆன்ம விழிப்பு பெற செய்ய வேண்டும் என்பதற்காக பல விஞ்சைகளை நான் கூறியிகின்றேன். இந்த விஞ்சைகள் எல்லாம் உனக்கு போதுமோ மகனே என்று கேட்டு விட்டு வைகுண்டரிடம் சொல்லுகின்றார் மகனே நீ போய் இருக்கும் இடங்களிலே அன்பான

பஞ்ச பாண்டவர்கள் உண்டு. அதாவது பகவான் அவதாரம் என்ற நிலையில் இறங்கி வருகின்ற போதெல்லாம் தன்னுடைய பக்தர்களை மகிமை உள்ளவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் இவ்வுலகுக்கு காட்டும் பொருட்டு அவர்களை தன்னுடம் அழைத்து வருவது இயல்பு.

அந்த நிலையில் பகவான் வைகுண்டராக அவதாரம் எடுத்து வருகின்ற போது ஜீவ முக்தர்களான பஞ்ச பாண்டவர்களையும் தம்மோடு அழைத்து வந்து தமக்கு சீடர்களாக தன் முன்னே விட்டுக் கொண்டார். நல்லவர்களை முன்னே விட்டு பகவான் பின்நின்று அருள்வார் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைந்த நிகழ்ச்சி இந்நிகழ்ச்சி. பஞ்சபாண்டவர்கள் உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள். இறைவன் திருவருளை பெற அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் அளவிற்கு அடங்காதவை. தர்ம தேவதையின் மறு பிறப்பாக வந்தவர்கள். ஞானத்தை பெற்றவர்கள். எனவே தான் அவர்களை முன்னே விட்டுக்கொடு என்று கூறினார்.

இறை நிலைக்கு உயர்ந்தவர்களை தான் பகவான் அவர் அருகில் வைத்து கொள்வார் என்பதை உணர்த்துவதகாக அமைந்துள்ளது. நல்லவர்கள் பின்னாலே இறைவன் இருப்பார். பேதபுத்தியும் சுய நலமும் கொண்ட பயங்கரவாதிகள் பின்னால் ஒருபோதும் இறைவன் இருக்க மாட்டார். தீய எண்ணம் உடையவர்கள் முள் முருக்கம் பூவை போல மூன்று நாளைக்கு வாழ்வு உடையவர்களாக வாழ்வார்கள். அதன் பின்னால் அழிவை சந்திப்பார்கள். அவர்களுடைய வாழ்வு எதற்கும் பயன் அற்றதாக போய்விடும் என்று கூறுகின்றார். ஆகவே எப்போது நல்லவர்களையே நம்மோடு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை அன்பான பஞ்சவரை முன்னே விட்டுக் கொள்ளு என்றுக் கூறுகின்றார்.

**"அல்லாமற் கேளு அரிநாரணா என்மகனே**
**நல்லோராய்ப் பெண்கள் நாடியெண்ணக் கூடாது**
**வல்லோராய் நந்தன் வம்மிசத்தில் வந்திருந்தார்**

**அப்பெண்ணார்க் கெல்லாம் அதிகப்பலன் தாறோமென்றேன்**
**இப்பெண்ணார் சிலர்கள் இன்னமங்கே தோன்றிவந்தால்**
**ஆனதால் பெண்ணார்க்கு அழகுகொடு என்மகனே**
**மானமுள்ள பஞ்சவர்கள் மகனேதெய்வச்சான்றோர்கள்**
**நின்ற தவசு நிறைவேறி னால்மகனே**
**ஒண்டொடியார் சிலரை உன்பாரி தானாக்கி**
**நன்மைகொடு என்மகனே நாரணா நாடாள்வாய்**
**உன்னை நினைத்தோர்க்கு உதவிகொடு என்மகனே"**

மேலும் நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் மகனே மேலும் பல பெண்களுக்கு நீ அழகு கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார். இங்கு குறிப்பிடப்படும் பெண்கள் துவாபரா யுகத்தில் நந்தகோபால் வம்சத்தில் கோபியர்களாக இருந்தவர்கள். இவர்கள் எல்லோரும் தாரகா வனத்து ரிஷிகள். சிறந்த விஷ்ணு பக்தர்கள். விஷ்ணுவை அணைந்து நலம் பெற விரும்பி ஆயிரம் ஆண்டுகள் தவம் இருந்தவர்கள். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற பகவான் கண்ணனாக அவதரித்த போது தன்னுடைய மாயா லீலைகளால் அப்பதினாறாயிரம் கோபியர்களின் இல்லங்களில் இருந்து லீலைகளை புரிந்தார். அவர்களும் கண்ணனுக்கு எல்லாவித பணிவிடைகளையும் மனம் உவந்து செய்து மகிந்தனர்.

பர பத்திக்கு இலக்கணமாக திகழ்ந்தனர். அதன் பலனாக அந்த துவார யுகத்திலே பலர் சீவ முக்தர்களானார்கள். அவ்வாறு முக்தியடைந்தவர்கள் போக எஞ்சியவர்கள் கலியுகத்தில் வருவார்கள் அவர்களுக்கு முக்தி நிலையை கொடுக்க வேண்டும். நான் அவர்களிடம் முக்தி நிலையை தருகிறேன் என்று வாக்கு கொடுத்துள்ளேன் . இப்போது யானே நீ யாதலால் அவர்களுக்கு அழகு கொடு என்று கூறுகின்றார்.

அழகு என்பது தேஜஸ், பிரணவ தேகம், ஒளி உடல், ஞானம், பேரானந்தம் என்றெல்லாம் பொருள் படுக்கின்றது. அவர்கள் இங்கு வந்து தவம் இருப்பார்கள். அவர்களின் தவத்தை நிறைவேற்றி அவர்களை உன் பாரி ஆக்கிக் கொள் என்று கூறுகின்றார். இங்கு பெண்கள் என்பது ஜீவாத்மாவை குறிக்கின்றது. பகவான் வைகுண்டர் பரமாத்மா. அவரே பரம புருஷன். பெண்ணாகிய

ஜீவாத்மா பரமாத்மாவை அடையவே தவம் செய்கின்றது. தவம் நிறைவேறினால் சகஸ்தர கமலத்தில் விளங்கும் ஜோதியுடன் கலந்து பேரின்ப நிலையை அடையும்.

அந்நிலை ஜீவ பிரம்ம ஐக்கியம் அல்லது முத்தி எனப்படும். எல்லா ஜீவாத்மாக்களையும் முக்தி என்ற நிலை அருளுவதையே உன் பாரி ஆக்கிக் கொள் என்பதன் உட்பொருள் ஆகும். வைகுண்டரின் அவதார காலத்தில் இவர்கள் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் ஆங்காங்கே பிறந்திருந்தனர். பூர்வ ஜென்ம பலனாலும், இறைவனுடைய அருளாலும், சொத்து, சுகம், அனைத்தையும் உதறித் தள்ளிவிட்டு, 'நாம் வந்தோம் என்ற நாமமது கேட்டவுடன் தாம் வந்து வேடமிட்ட சாதியது நன்றாகும்' என்று அகில வாக்குகிணங்க அவர்கள் பகவானின் அருள் ஒன்றையே நாடி துவையல் தவசு செய்தவர்கள் இவர்களே. ஆகவே அவர்களுக்கு சிறந்த பதவிகளை கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார். இதையே உன்னை நினைத்தவர்களுக்கு நன்மை கொடுக்க வேண்டும் கூறுகின்றார்.

## **விஞ்சை பகுதி-45**

**"கட்டை விடாதே கருத்துள்ள என்மகனே**
**சட்ட மறவாதே சாஸ்திரத்துக் குற்றவனே"**

கட்டை விடாதே கருத்துள்ள என் மகனே என்று அய்யா கூறியிருப்பது நாம் இந்த கலியுகத்தில் எவ்வாறு கட்டுப்பாட்டுடன் வாழ வேண்டும், நாம் வாழ்வதற்குரிய வரம்பு அல்லது வழிமுறைகள் என்ன என்ன?, எப்படி தரும நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும், எப்படிப்பட்ட உறுதிபாட்டோடும், மன உறுதியோடு வாழ வேண்டும் என்பதை இங்கே அய்யா கட்டை விடாதே, வரம்பு தப்பாதே என்று கூறி இருக்கின்றார். அய்யா கூறிய அந்த நெறி முறைகளில் இருந்து தவறி நிற்கக்கூடாது என்று இங்கு உணர்த்தப்படுகின்றது.

இங்கு அய்யா தந்திருக்கின்ற சட்டம் என்பது இதை இதை செய், இதை இதை செய்யக்கூடாது என்பதே இறைவனின் வேதவாக்கு . அது இறைவனின் ஆணை அல்லது கட்டளை ஆகும். நா அந்த பரப்பிரம்மத்தின் ஆணையிலிருந்து நாம் விலகுகின்ற போது

மனிதன் தனக்குத்தானே துன்பத்தை வரவழைத்துக் கொள்கின்றான். அவரவர் உள்ளத்தில் மனசாட்சியாக இயங்கிக்கொண்டிருக்கும் அந்த பரபிரம்மத்தின் ஆணைப்படி நாம் நடக்க வேண்டும். அவ்வாறு நடக்கவில்லை என்று வருகின்ற போது இறை தண்டனைக்கு ஆளாக வேண்டி வரும் என்பதை இங்கே எடுத்துக் கூறுகின்றார்.

## விஞ்சை பகுதி-46

“**பெண்பாவம் பாராதே பேணியிரு என்மகனே**
**கண்பாரு கண்மணியே கன்னி கணவருக்கு**”

பெண் பாவம் என்பது, பெண்ணிற்கு துரோகம் செய்தல், பெண்களை அவமானப் படுத்துதல், நம்பிக்கை துரோகம் செய்தல், மனைவியைத் துன்பப்படுத்துவது, தாயை கவனிக்காமல் விடுவது, பெண்களை ஏமாற்றி திருமணம் செய்வது, காரணம் இல்லாமல் பெண்களை துன்பப்படுத்தி விவாகரத்து செய்வது, மருமகளைக் கொடுமைப்படுத்துவது, சகோதரிகளை இழிவுப்படுத்துவது, பெண்களுக்கு துர்மரணம் ஏற்படும் படி செய்தல், பெண்களை ஏமாற்றுவதும், சகோதரிகளை ஆதரிக்காமல் இருப்பதாலும், மனைவியைக் கைவிடுவதாலும் போன்றப் பல்வேறு காரணங்களால் பெண் சாபம் ஏற்படுகிறது. பெண் சாபம் ஏற்பட்டால் வம்சம் அழியும்.

ஒரு சமுதாயத்தில் பிரபலமான சாதனை படைக்கும் மனிதர்கள் உருவாக வேண்டுமென்றால் அந்த சமுதாயம் பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்த சமூகமாக இருக்க வேண்டும். பெண்களை பெருமைபடுத்துவதின் முலமே சமுகம் முன்னேற்றமடையும். பெண்களை , கடவுளாகவும், பூமியாகவும், நதியுடனும், இயற்கைக்கு நிகராக ஒப்பிட்டு பெருமைபடுத்தி அன்றைய காலத்தில் மக்கள் நலமோடு வாழ்ந்தார்கள். காரணம் இயற்கை நலமோடு இருந்தால் தான் நம் வாழ்வில் அதிக வளத்தை எதிர்பார்க்க முடியும்.

அது போல வீட்டில் இருக்கும் பெண்களைப் பேணிப் பாதுகாக்கும் போது தான் எல்லா சிறப்புகளையும் பெற இயலும். மனித இனத்தின் சரிபாதியான பெண்ணினத்தை பெருமைபடுத்துவதின் மூலமே ஒவ்வொரு மனிதனும் முன்னேற்றம் அடைய முடியும். எங்கு பெண் பேணி பாதுகாக்கப்படுகிறாளோ அங்கே எல்லா சிறப்புகளும் நன்மைகளும் தானாகவே அமையும்.

பெண்களே பெண்களுக்கு எதிராக இருக்கின்றார்கள். இதனால் பல பாவங்கள் ஆண்கள் செய்வதற்கு பெண்கள் காரணமாக இருக்கின்றார்கள். மேலும் ஒரு ஆண்மகன் தன்னுடைய கடமைகளைத் தவறாது செய்ய வேண்டும். தனது கடமையில் இதுவென்று அறிந்து நற்குணங்களை மேற்கொண்டு நல்ல குணங்களை எல்லாம் இயல்பாய் பெற்று ஒரு சிறந்த தலைவனாகவும், எல்லோரிடமும் அன்பு பாராட்டி கண்ணியத்தோடு ஆண் மகனின் கடமைளை, மகனாக, சகோதரனாக, கணவனாக, தந்தையாக, ஒரு சமுதாயத்தின் நல்ல குடி மகனாக செயல் ஆற்ற வேண்டும் என்கிறார் அய்யா.

ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் உள்ள உறவு மிகவும் புனிதமானது .அதை ஆணாதிக்கமோ, பெண்ணுரிமையோ கெடுத்து விடக்கூடாது. ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் உண்மையான அன்பு இருந்தால் தான் இல்லறம் நல்லறமாக மாறும். மேலும் தாயாக,மகளாக, மனைவியாக, மாமியாராக தான் செய்ய வேண்டிய கடமைகளை சரிவர செய்ய வேண்டும்.

பெண்கள் மதிக்கப்படுகின்ற போது பெண்கள் போற்றப்படுகின்ற போது பெண்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகள் குறைக்கப்படுகின்றபோது இல்லம் உயர்வடையும். இல்லம் உயர்வடையும் போது சமுதாயமானது உயர்வடையும், சமுதாயமானது உயர்வடையும் போது தேசம் உயர்வடையும். நாடும், வீடும் உயர்வடைய பெண்களை போற்றிப் பாதுகாப்போம். பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்களை தவிர்ப்போம்.

ஆகவே பெண்மைப் போற்றப்பட வேண்டும் என்பதையே அய்யா வைகுண்டர் "**பெண்பாவம் பாராதே பேணியிரு என்மகனே கண்பாரு கண்மணியே கன்னி கணவருக்கு**" என்று அருளியுள்ளார்.

"**இன்னமொரு சூத்திரம் இயம்புகிறே னென்மகனே**
**துன்ன மறியத் தோற்றுவிப்பேன் சாதிதோறும்**
**அன்புவன்பு பார்க்க ஆரா ரிடத்திலும்போய்**
**உன்புதுமை சொல்லி உடலை மிகஆட்டி**
**சாதிசா திதோறும் சக்கிலி புலச்சிவரை**
**ஆதிச்சா திமுதலாய் ஆராதனை காட்டுவிப்பேன்**
**காட்டுவிக்குஞ் சொரூபம் கண்டிரு என்மகனே**
**ஆட்டுவிப்பேன் நால்வேதம் அதிலும்நான் மாயமிட்டு**"

மேலும் அய்யா வைகுண்டரிடம் சொல்லுகின்றார் மகனே இன்னும் ஒரு விஞ்சை இயம்புகிறேன் கேள் என்று கூறுகின்றார். எப்படி என்றால் வைகுண்ட அவதாரத்தின் மகிமையை இந்த உலகமே அறிந்துக் கொள்ளும்படி செய்வேன் என்பதை எடுத்துரைக்கிறார். துன்னம் அறிய தோற்றுவிப்பேன் சாதிதோறும் என்கிறார். அதாவது கலிநீசர்கள் மக்களை உண்மை நிலை அறிய முடியாத படி சாதி என்ற பெயரிலும் மதம் என்ற பெயரிலும் பிரித்து தவறான பாதையில் மக்களை வழிநடத்துகின்றனர்.

ஆனால் இந்நிலையை மாற்றவும் மக்கள் நன்மை எது தீமை எது என்பதை அறிந்து கொள்ளும் படியாகவும் வைகுண்ட அவதாரத்தினுடைய மகிமையை தெரிந்து கொள்வோம் படியாகவும் ஒவ்வொரு சாதிகள் மற்றும் மதங்கள் தோறும் என்னுடைய கலியுக அவதார சூட்சமத்தைத் தோற்றுவிப்பேன். ஒவ்வொருவரிடம் இருக்கின்ற அன்பு எது? வன்பு எது? யார் உண்மையான அன்போடு இறைவனை பணிந்து கொள்ளுகின்றார்கள், யார் கலிமாய எண்ணத்தோடு பிறருக்கு துன்பம் கொடுத்து நம் தீமையை நாடுகின்றார்கள் என்பதை ஒவ்வொருவருடைய ஜாதிகளும் ஒவ்வொருவருடைய இனத்திலும் உன் புதுமையை சொல்லி வைகுண்ட அவதாரத்தினுடைய மகிமையை சொல்லி ஒவ்வொரு இடத்திலும் சாதி சாதிதோறும் சக்கிலியர் புலச்சி வரை அவர்கள் உடலை ஆட்டி ஆராதனை சொரூபத்தை காட்டுவிப்பேன்.

கலிநீசர்களால் உருவாக்கி வைக்கப்பட்டு இருக்கின்ற உயர்ந்த ஆதிசாதி முதல் கடைச்சாதி வரையிலும் எல்லா சாதிகளும் நான் ஆராதனை காட்டி வைப்பேன். நான் காட்டுக்கின்ற சொரூபத்தை நீ கண்டு இரு என் மகனே என்று கூறுகிறார். மேலும் நால் வேதம் அதிலும் நான் மாயமிட்டு பல ரூபங்களில் ஆட்டுவிப்பேன் கண்டிருநீ என்கிறார். அன்பான மக்களை தேர்ந்தெடுக்கவும் வம்பான மக்கள் அழியும் படியாக செய்து நல்லோர்கள் இறைவனை நாடி பணிந்து வருபடி செய்வதற்கு எல்லா இடங்களிலும் நான் ஆராதனை சொரூபமாக சென்று அவர்களுக்கு உன்னுடைய புதுமையை காட்டி வைப்பேன். எல்லா இடத்திலும் நான் மாயமாக இருந்து சூட்சமத்தை செய்வேன். சாதி மத இன பேதம் இல்லாமல் ஓரறிவு உடைய ஜீவன் முதல் ஆறறிவு உடைய மனிதன் வரை எல்லோரும் அறிந்து கொள்ளும் படியாக பல புதுமைகளை செய்து உன்னை நாடி வர நல்லோரை தெளிந்து எடுத்துக் கொள்வேன் என்றுக் கூறுகின்றார்.

**"துலுக்கன்வீ டானதிலும் சூதாட்டுப் பார்த்திடுவேன்**
**கிலுக்கமொன்று செய்வேன் கீழுமேலும் நடுவும்**
**கதறிஅழுவார் கட்டாக பார்த்திரு**
**பதறித் தெளியும் பார்த்திரு என்மகனே "**

துலுக்கன் வீடானதிலும் சூதாட்டம் பார்த்து விடுவேன் என்று கூறுவது இது ஒரு சாதியையோ ஒரு இனத்தையோ குறிப்பது அல்ல. துலுக்கன் என்று குறிப்பிடப்பட்டிருப்பது சுயநல காரர்களையும் பயங்கரவாத தன்மையுடையவர்களையும் பிறருக்கு தீங்கு செய்யக்கூடியவர்களையும் தான் இங்கே குறிப்பிட்டு இருக்கின்றார். அசுரத் தன்மையும் பயங்கரவாதமும் தெய்வ சக்தியின் முன்னாள் நிற்க முடியாது. இயற்கை சீற்றம் கொண்டால் யாராலும் தாக்கு பிடிக்க முடியாது. இங்கு சூதாட்டு பார்த்திடுவேன் என்று ஐயா கூறியிருப்பது குற்றம் குறைகள் என்னென்ன இருக்கிறது என்று பார்பதைக் கூறுகிறார். அப்படி குற்றம் குறை இருப்பவர்கள் அவர்களுடைய பாவ செயல்களையும் பாவ வினைகளையும் அனுபவித்து பதறிப் தெளியும் படியாக செய்வேன்.

அது காலமே தெரிய வைக்கும் என்பதாகும். நல்ல வழியில் நடந்து ஆண்டவனை வணங்குங்கள். தீயவழியில் நடந்து பாவத்திற்கு

ஆளாகி நீங்களும் அழிந்து உலகத்தையும் அழிக்காதீர்கள். இறைவனால் படைக்கப்பட்ட எல்லாவற்றின் மீதும் அதிகாரம் செலுத்துவதற்கு இறைவனுக்கு மட்டுமே உரிமை இருக்கிறது. அவரை நம்மால் உணர முடியாத வகையில் எல்லாவற்றிற்கும் அப்பாற்ப்பட்ட சக்தியாக இருந்து எல்லோரையும் வழி நடத்தி செல்கின்றார்.

அப்படி இருக்கின்ற போது இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்களையும், இயற்கையையும் அழித்து தம்முடைய சுயலாபத்திற்காகவும், பெயருக்காகவும்,பெருமைக்காகவும், தங்களுடைய வளர்ச்சிக்காகவும்,புகழுக்காகவும் பிறரை அழித்து பிறரை வதைப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. இப்படி பயங்கரவாத செயல்களை செய்கின்றவர்களை திருந்துவதற்கு வாய்ப்பு கொடுத்து பல சூட்சமங்களை செய்வேன். அப்படி நான் செய்கின்றபோது ஈரேழு பதினான்கு லோகங்களும் பதறித் தெரியும் படியாக இருக்கும். இதை யார் யார் உணர்ந்து தெரிந்து கொள்ளுகின்றார்களோ அவர்கள் என்னிடம் வந்து என்னை சரணாகதி அடைவார்கள். ஆகவே இவற்றையெல்லாம் பார்த்துகிறேன் என் மகனே என்றுக் கூறுகின்றார்

"**நீபெரிது நான்பெரிது நிச்சயங்கள் பார்ப்போமென்று**
**வான்பெரி தறியாமல் மாள்வார்வீண் வேதமுள்ளோர்**"

இவ்வாறு நான் பல புதுமைகளை செய்கின்ற போது உண்மையான இறைவனுடைய தன்மையை அவதாரத்தின் சூட்சமத்தை உணர்ந்து கொள்ளாமல் நீசர்கள் மதத்துவேசம் செய்து மக்களை உண்மையை அறிந்துக் கொள்ள விடாதபடி பிரிவினைகளை உருவாக்குவார்கள். இதனால் நீயா?நானா? என்ற போட்டி பொறாமை உருவாகும். மக்களை உண்மையான இறைத்தன்மையை அறிந்துக் கொள்ள முடியாமல் அழிவுப்பாதைக்கு அழைத்துச் செல்வர். இவ்வாறு சுய நலக்காரர்களின் பின்னால் செல்பவர்கள் பரபிரம்மத்தை அறிந்துக் கொள்ளாமல் அழிவுப்பாதையை நோக்கிச் செல்வார்கள்.

"**ஒருவேதம் தொப்பி உலகமெல்லாம் போடுளன்பான்**
**ஒருவேதம் சிலுவை வையமெல்லாம் போடுளன்பான்**
**அத்தறுதி வேதம் அவன்சவுக்கம் போடுளன்பான்**
**குற்ற முரைப்பான் கொடுவேதக் காரனவன்**"

எங்கும் நிறைந்து ஏகமயமாக இருக்கின்ற பரபிரம்மத்தை உணராதவர்கள் மதத்தை அடையாளங்களின் மூலம் மக்களைப் பிரித்து ஆளுகின்றனர். இறைவனுடைய உண்மையான அவதார சூட்சமத்தை மத அடிப்படை வாதத்தையும் மதமாற்றத்தையும் நாடி. அடையாளங்களின் வெளிப்படுத்துகின்றனர். ஒரு வேதம் தொப்பி உலகமெல்லாம் போடு என்பான் என்பது இஸ்லாமிய மத அடிப்படைவாதிகளினுடைய அடையாளங்களை கூறி மக்களை திசை திருப்பகின்ற செயல்களை இங்கே எடுத்துரைக்கின்றார்.

மேலும் ஒரு வேதம் சிலுவை வையமெல்லாம் போடு என்பான் என்பது கிறிஸ்தவ மத அடிப்படைவாதிகளினுடைய அடையாளங்களை சொல்லி மக்களை ஒரு பக்கம் திசை திருப்புகின்ற செயல்களை செய்வதை இங்கே எடுத்துரைக்கின்றார். மேலும் சவுக்கம் போடு என்பான் என்பது நாத்திக கொள்கை உடைய முப்புராதிகள் காலத்து பௌத்த மத அடிப்படைவாதிகளுடைய தன்மையை இங்கே எடுத்துரைக்கின்றார். மேலும் குற்றம் உரைப்பான் கொடுவேத காரணம் என்பது பிற மத வழிபாடுகளை கூறை கூறும் அறிவற்ற செயல்களை செய்கின்றவர்களை இங்கே எடுத்து கூறுகின்றார்.

யான் எனது என்ற அக பற்றுகளை விட்டவனை உலகம் போற்றும் உத்தமன் ஆகிறான். மதவெறி முதல் அத்தனைக்கும் இது பொதுவானதாக இருக்கின்றது. யான் எனது என்ற அக பற்றுகளை விட்டவனே இறைவனை உணர்ந்துக் கொள்ளுகிறான். ஆசையை அனைத்து துன்பங்களுக்கும் காரணமாக இருக்கின்றது. தன் மதத்தின் மீது ஆசை வைப்பதே மத அடிப்படை வாதத்திற்கு காரணமாக இருக்கிறது. அசுர தன்மை உடையவர்களே தன் கூட்டத்தை பெருக்க வேண்டும் தானும் தன் கூட்டமும் மட்டுமே வாழ வேண்டும் என்று நினைப்பார்கள். நீ எந்த மதத்தை சார்ந்தவன் என்பது முக்கியமல்ல.

நீ எப்படி வாழ்கின்றாய் என்பதே முக்கியம். ஆண்டவனின் முன்னால் அனைவரும் சமமே. ஜாதி மத வேதங்களை சொல்லி மனிதன் பிரித்து ஆள்வது மனிதனை நரகத்திற்கு வழிநடத்தி செல்லுகின்றது. ஏனெனில் மத துவேசத்தினால் உன் தெய்வம் என் தெய்வம் நீ பெரிது நான் பெரிது என்று பேசி மனிதன்

இறைவனையே இகழ்கிறான். அய்யா தன்னை அறிந்தால் தலைவனை அறிவாய் என் மகனே என்று கூறியிருக்கின்றார்.

நீ யார் என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். உனக்கு தேவையானது என்ன நீ எந்த வழியில் சென்று இறைவனை அடைய வேண்டும் என்று நீ விரும்புகிறாயோ அந்த வழியை நீயே தேர்ந்தெடுத்துக் கொள். யாருடைய துணையோடு யாருடைய பின்னாலும் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனை உன்னால் அறிந்து கொள்ள முடியும். நீ தேர்ந்தெடுக்கின்ற வழி நீ வாழுகின்ற வாழ்க்கை முறை எல்லாம் உனக்கு இறைவனை காட்டும் என்பதை அய்யா இங்கு எடுத்துக் கூறுகின்றார்.

மதம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டதனுடைய நோக்கமே மனிதனை நெறிப்படுத்துவதற்காக தானேயன்றி மனிதனை அழிப்பதற்காக அல்ல. மனிதனை மனிதனிடமிருந்து பிரிப்பதற்காக மதங்கள் ஏற்படவில்லை. மனிதர்களை சேர்த்து வைப்பது தான் மதங்களின் நோக்கம். எந்த ஒரு மதம் இறைவன் ஒருவனே நாம் அனைவரும் இறைவனுடைய பிள்ளைகளே என்று எடுத்துரைக்கிறதோ அது சிறந்த மதம்.
எந்த சமயத்தை சார்ந்தவர்களிலும் அறிஞர்கள் மதமாற்றத்தை விரும்புவதில்லை. மத அடிப்படை வாதமும் போலித்தனமும் கொண்ட சுயநலமிகளே மதமாற்றத்தை ஊக்குவித்து வன்முறைக்கு வித்திடுகின்றார்கள். இதனால் தாங்களும் அழிந்து மற்றவர்களை அழிக்கின்றார்கள். பக்தியின் கீழ்மட்ட நிலையில் இருப்பவர்கவே மதவெறி பிடித்து அலைகின்றார்கள். அதாவது இறைவனுடைய அவதாரத்தினுடைய மகிமையை இறைவனுடைய சூட்சமத்தை அறியாத அறிவிலிர்களே மதவெறியை பிடித்து அலைகின்றார்கள்.

கிணற்று தவளையைப் போன்று இருப்பவர்கள் தான் தன்னுடைய மதம் உயர்ந்தது என்று சொல்வார்கள். ஏனென்றால் கிணற்றில் இருக்கும் தவளை தான் இருக்கும் கிணற்றைக் காட்டிலும் பெரியது மேன்மையானது வேறு ஒன்றும் இல்லை என நினைக்கிறது. அது போல பிடிவாதமும் மூட பழக்க வழக்கங்களும் இறைவனுடைய உண்மையான சக்தியை சூட்சமத்தை அறியாதவர்கள் தங்கள் மதத்தை தவிர மற்றவை எல்லாம் பொய் என்று கருதுகின்றார்கள்

.மூடநம்பிக்கை மனிதனின் பெரும் பகைவன் தான். ஆனால் மத வெறியும் அதைவிட மிக மோசமானது. ஆகவே மதபேதம் பாராட்டி மதவாதம் புரிவோர் இறையருளைப் பெற முடியாது. மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து அழிவார்கள். ஆகவே இறைவன் உண்மையான சூட்சுமத்தை உணர்ந்து கொள்வது சிறப்பாகும்.

**"ஒருவர்க் கொருவர் உனக்கெனக் கென்றேதான்**
**உறுதி யழிந்து ஒன்றிலுங்கை காணாமல்**
**குறுகி வழிமுட்டி குறைநோவு கொண்டுடைந்து**
**மறுகித் தவித்து மாள்வார் சிலபேர்கள்**
**ஓடுவார் சிலபேர் ஒழிவார் சிலபேர்கள்**
**கேடு வருமே கேள்விகேளாப் பேருக்கெல்லாம்"**

மதம் மாற்றி மக்களை தன் வசப்படுத்துகின்றார்கள். அதன் பிறகு மதமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்ட மக்களால் உண்மையான மன ஒருமைப்பாட்டுடன் இறைவனை வழிபடுவது கிடையாது. அவர்கள் அங்கே மன ஒருமைபாடு இல்லாதவர்களாக இருக்கிறார்கள் . சிறிது காலம் ஒரு மதத்தில் இருக்கிறார்கள். அடுத்து அவர்களுடைய தேவை பூர்த்தியடையவில்லையென்றால் இன்னொரு மதத்திற்குள் செல்கிறார்கள். அவர்களால் அந்த மதத்திற்குள் அங்கே உண்மையான பக்தியோடு பக்தி செலுத்த முடியவில்லை. அவருடைய மனமானது அங்கும் இங்குமாக ஓடுவதினால் மன உறுதி அழிக்கிறது. ஆதனால் இங்கேயும் அங்கேயும் அவர்கள் பரம்பொருளை கண்டுகொள்ள முடிவதில்லை.

சிவனும் நாராயணரும் கர்த்தரும் அல்லாவும் ஒன்றுதான். விநாயகரும் முருகரும் கண்ணனும் இராமனும் அம்பிகையும் ஆகிய அனைத்து சக்திகளும் பரம்பொருளின் கருணையின் வெளிப்பாடுகளே. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள முடியாமல் அங்கும் இங்குமாக ஓடி அலைகின்றார்கள். பரம்பொருள் ஒன்றுதான் ஆனால் பல நாமங்களில் இருக்கிறார் என்பதை உணராத வரை எங்கு சென்று பக்தி செலுத்தினாலும் இறைவனை கண்டுக் கொள்ள முடியாது. இதனை நன்றாக மனதில் பதித்துக் கொண்டால் மனம் சலனம் அடையாது.

மனம் நிலையில்லாமல் ஓடும் வரை மரண பயமும் மாறாது. மரண பயம் உள்ளவரை பிறவியும் தொடரும். ஆனால் மன ஊக்கமே ஆக்கும் தரும். மன உறுதி இல்லை எனில் எங்கு ஓடியும் பலனில்லை. கர்மா விடாது. ஆகவே இப்படி அங்குமிங்கும் ஓடி எங்கும் இறைவனை கண்டு கொள்ள முடியாமல் குறுகி வழி முட்டி தங்களுடைய வாழ்க்கை முடித்துக் கொண்டு மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றார்கள். ஓடுவார் சிலபேர் ஒழிவார்கள் சில பேர்கள். ஆகவே நான் யார் என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அதன் பிற்பாடு தான் எந்த வழியில் இருந்து கொண்டு இறைவனை அடைய வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அடிப்படை உண்மைகளை மக்களுக்கு தெளிவாக உணர்த்துவார் இல்லை. இப்போது மக்களை பிரித்தாழுகின்ற தன்மை அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றது.
கேட்டு வருமே கேள்வி கேளா பேருக்கெல்லாம் என்று அய்யா கூறியிருகின்றார். அதாவது நாம் யார்? நாம் ஏன் பிறந்தோம்? நாம் எங்கிருந்து வந்தோம்? நாம் எங்கே போக வேண்டும்? நாம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம்? இந்த உடம்பு எப்படி வந்தது? தானே வந்ததா? ஒருவன் தந்தது வந்ததா ? தந்தவன் யார்? நமக்கு தலைவன் யார்? நம்முடைய பிறப்பின் நோக்கம் என்ன என்ற வினாக்கள் உள்ளத்தில் எழும்போது நம்முடைய தலைவன் யார்? அவரை எவ்வாறு நாம் உணர்வது என்பதை நமக்கு நாமே கேள்வி கேள்வி கேட்டு தன்னை அறிந்தோமேயானால் நம்முடைய தலைவன் யார் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

அங்கும் இங்கும் இறைவனைத் தேடி அலைகின்ற நிலை உருவாகாது. தன்னை அறியும் தகுதியை பெற்று விட்டால் அதன் பிறகு எந்த கவலையும் இல்லை. நாம் தன்னை அறியாமலும் நமக்குள்ளே கேள்வி கேட்டு உணராமல் இருந்தால் நமக்கு கேடு தானாகவே வந்து சேரும் என்பதை எடுத்துக் கூறுகின்றார். மேலும் தன்னை அறியும் தகுதி பெற்றுவிட்டால் அதன்பின் எந்த கவலையும் இல்லை சந்தோஷமாகுது காண் உன்னை சார்ந்த அன்பருக்கு என்கிறார். அதாவது தன்னை அறிந்து தலைவனை சார்ந்து நிற்கும் பக்தர்களுக்கு என்றுமே ஆனந்தமே. இந்நிலை அடைகிறது வரையிலும் என்னென்ன குறுக்கீடுகள் வந்தாலும் அவற்றை பொருட்படுத்தாமல் பொறுமையுடனும், உறுதியுடனும்

செயல்பட்டால் ஒவ்வொரு படிநிலையிலும் வெற்றி பெற முடியும் என்பதை இங்கே எம்பெருமான் எடுத்துக் கூறி இருக்கின்றார்.

"**அதன்மேல் மகனே யானுனக்குச் சொல்வதுகேள்**
**இதின்மே லுனக்கு ஏகவியா ழம்வரும்**
**சந்தோச மாகுதுகாண் உனைச்சார்ந்த அன்போர்க்கு**
**எந்துயர மெல்லாம் ஏகுதுகா ணென்மகனே**
**அதுவரையும் நீதான் அன்பா யிருமகனே**
**எதுவந் தாகிடினும் எண்ணம்வையா தேமகனே**
**சுறுக்கிட்டு யானும் ஒவ்வொன்றாய்த் தோன்றவைப்பேன்**"

யார் ஒருவர் தன்னை உணர்ந்து தான் யார் என்பதை அறிந்து கேள்வி கேட்டு தனக்கு தேவையானது எது என்பதை உணர்ந்து கொள்ளுகின்றார்களோ அதன் பிறகு உனக்கு ஏக வியாழன் வருகிறது. சந்தோஷமாகுது காண் உனை சார்ந்த அன்பர்களுக்கு என்றுக் கூறுகின்றார். யார் தன்னை உணர்ந்து பரபிரம்மத்தை உணர்ந்து கொள்ளுகின்றார்களோ அப்போது எந்தன் துயரம் எல்லாம் ஏகுது காண் என் மகனே என்று கூறுகின்றார். அதாவது இறைவன் கலிமாசு மக்களிடம் இருக்கிறது வரையிலும் அவர்களை திருத்துவதற்காக பல முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கின்றார் அவதாரங்கள் மேற்கொண்டு இருக்கின்றார்.

ஆனால் மக்கள் உணர்ந்து அந்த தீமைகளில் இருந்து விடுபட்டு விடுகின்றபோது இறைவனுடைய அவதாரம் எடுக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடுகின்றது. மேலும் இந்த கலிமாசுக்குள் அகப்பட்டு இருக்கின்ற மக்கள் கலிமா சிலிருந்து விடுபட்டார்களேயானால் இறைவனுடைய அவதாரத்தினுடைய நோக்கம் விரைவில் நிறைவேறி விடுகின்றது. ஆகவே தன்னுடைய துயரம் மாறுவதாக எம்பெருமான் இங்கே எடுத்துக் கூறுகின்றார். அதுவரை அன்பாய் இருக்க வேண்டும் எது வந்தாலும் எண்ணம் இல்லாமல் இருக்க வேண்டும் என்று வைகுண்ரிடம் கூறுகின்றார். ஒவ்வொன்றாக மக்கள் அறிந்து உணர்ந்து தெரிந்து கொள்ளும்படியாக நான் ஒவ்வொன்றாக தோன்ற வைப்பேன் . அதுவரையிலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று எடுத்துக் கூறுகின்றார்

## விஞ்சை பகுதி-47

**"இறுக்கும் இறைகளெல்லாம் இல்லையென்று சொல்லிடுநீ வேண்டா மிறைகள் வேண்டாமென்று சொல்லிடுநீ"**

மேலும் கூறுகின்றார் அநீதிக்கும் அதிகாரத்துக்கும் கட்டுப்பட்டு பயந்து கொடுக்கும் இறைகள் எல்லாம் கொடுக்க வேண்டாம் என்று சொல்லிவிடு என்றுக் கூறுகின்றார், ஏனென்றால் இறைவன் எங்கும் நிறைந்து ஏகமயமாக இருக்கின்றார். அப்படி எங்கும் நிறைந்து ஏகமயமாக இருக்கின்ற இறைவனை நாம் கண்டு கொள்வதற்கு யாருக்கும் பயந்து நாம் நம் இறைகள் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் ஒவ்வொரு ஜீவ ராசிகளுக்குள்ளும் உயிராய் இருக்கின்றேன் என்று இறைவன் கூறுகின்றார்.

அப்படி நமக்குள் இருக்கின்ற இறைவனை கண்டு கொள்வதற்கு நாம் யாரிடமும் அடிபணிந்து இறைகள் கொடுத்து அங்கே அடிபணிய வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே இறுக்கும் இறைகள் எல்லாம் இல்லை என்று சொல்லிடு என்றுக் கூறுகின்றார். தெய்வத்தின் பெயரை சொல்லி கொடுக்கக்கூடிய அந்த இறைகளை எல்லாம் மாற்றி விட வேண்டும். அதை வேண்டாம் என்று சொல்லிடு என்று வைகுண்ட ரிடம் நாராயணமூர்த்தி கூறுகின்றார்.

**"ஆண்டார் மகனே அதிகத் திருமகனே**
**நல்ல மகனே நான்வைத்த விஞ்சையெல்லாம்**
**செல்ல மகனேவுன் சிந்தையிலே பற்றினதோ**
**போதுமோ விஞ்சை புகலணுமோ என்மகனே**
**சாருமொரு விஞ்சை தான்சொல்வேன் கேள்மகனே**
**முவ்விஞ்சை வைத்தேன் உலகமறி யாதவிஞ்சை**
**இவ்விஞ்சை மாத்திரமே இனம்பிரித்துச் சொல்லாதே"**

நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் சொல்லுகின்றார், மகனே நான் வைத்திருக்கின்ற விஞ்சை எல்லாம் உன் மனதில் வைத்து நடக்க வேண்டும். கலி அழிப்பதற்கு போதுமான விஞ்சை எல்லாம் நான் உனக்கு அருளி இருக்கிறேன். அவை எல்லாம் உன் மனதில் ஏற்றுக் கொண்டாயோ? என்று கேட்டு விட்டு மீண்டும் கூறுகிறார், கலியழிப்பதற்கு இந்த விஞ்சை போதுமோ இல்லை மேலும் நான்

ஏதாவது கூற வேண்டும் என்று எண்ணுகிறாயா? ஆனால் இன்னும் ஒரு விஞ்சை நான் உனக்கு சொல்வேன் கேள் மகனே. இந்த விஞ்ஞானது இந்த உலகில் யாரும் அறிய முடியாத விஞ்சை ஆகும்.

அந்த விஞ்சை மாத்திரமே இனம் பிரித்து வெளியே சொல்லக்கூடாத ஒரு விஞ்சையாகும். அதாவது இறைவனை தன்னுள் கண்டவர்கள் உணர்ந்து கொள்ளுகின்ற அந்த பரிசுத்தமான பரமானந்த நிலையை இங்கு எடுத்துச் செல்லுகின்றார். அந்த பரமானந்த நிலையை உணர்கின்ற போது நாம் எப்படி இறைவனை உணர்ந்து கொள்ளுகின்றோம் என்பதை நாம் யாருக்கும் எடுத்து உணர்த்துகின்ற விதமாக சொல்ல முடியாது. இதையே இந்த உலகம் அறியாத விஞ்சையாக எம்பெருமான் எடுத்துச் சொல்லுகின்றார். இதை இறைவனை உணர்ந்தவர்களால் மட்டுமே கண்டு கொள்ள முடியும். அதை மற்றவர்களால் கண்டு கொள்ள முடியாது என்பதை எடுத்து சொல்லுகின்றார்.

"**பெற்றோர்கள் கண்டுகொள்வார் பேசரிய என்மகனே**
**கற்றோர்கள் கண்டுகொள்வார் கண்ணே திருமகனே**"

மேலும் பெற்றோர்கள் கண்டு கொள்வார் பேசரிய என் மகனே கற்றோர்கள் கண்டு கொள்வார் கண்ணை திருமகனே என்று கூறியிருப்பதிலிருந்து இறைவனுக்கு தெரியும் தன்னிடம் வருவதற்கு தகுதி பெற்றவர்கள் யார் யார் இருக்கின்றார்கள் யார் யார் தன்னுடைய பிள்ளைகள் எப்படி வாழ்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்வார். பெற்றோர்கள் எப்படி தன்னுடைய பிள்ளைகளை பற்றி தெரிந்து கொள்ளுகின்றார்களோ அவர்களுடைய மனநிலை உணர்ந்து கொள்ளுகின்றார்களோ அதுபோல இறைவனை தன்னுடைய பிள்ளைகளில் தன்னிடம் வருவதற்கு தகுதி வாய்ந்த பிள்ளைகளை தேர்ந்தெடுத்துக் கொள்வார் என்பதாகும். யார் எல்லாம் அய்யா அருளிய விஞ்சையை மனதில் ஏற்று அதன் படி வாழ்ந்து வருகின்றார்களோ அவர்கள் கண்டுக் கொள்வார்கள். அதாவது இறைசக்தியை தன்னுள் உணர்ந்து கொள்ளுவார்கள்

விருத்தம்

"**கண்ணே மகனே திருமகனே கமலப் பூமா கரிமகனே**
**எண்ணே யெழுத்தே என்மகனே இறையோர் தொழவே வருமகனே**
**ஒண்ணே மகனே உயர்மகனே உடைய மகனே கண்மணியே**
**தண்ணே மகனே தவமகனே சாகா திருக்குஞ் சலமகனே**"

நாராயண மூர்த்தி விஞ்சை அருளி அதன் பிறகு வைகுண்டரை வாழ்த்துகின்றார் எப்படி என்றால், கண்ணை மகனே திருமகனே அனைத்து செல்வங்களுக்கு அதிபதியாக இருக்கின்றவனே அன்னை சரஸ்வதியின் ஞான செல்வமாக விளங்குகின்ற மகனே எண்ணாகவும் எழுத்தாகவும் இருக்கும் என் மகனே! இறையோர் தொழவே வரும் மகனே , இறையவர்கள் அனைவரும் தொழுகின்ற வகையில் எல்லா இறைசக்திகளையும் தன்னுள் அடக்கி பரபிரம்மமாக இருக்கின்ற மகனே! எங்கும் நிறைந்து ஏகமாக எல்லாம் ஒன்றே என்ற நிலையில் இருக்கும் உயர்மகனே! எல்லா ஜீவராசிகளுக்கும் உடையவனாகிய மகனே! இறப்பு பிறப்பு என்ற நிலையை கடந்து ஆத்மாவாக என்றும் சாகாது இருக்கும் உயிராக இருந்து ஜீவராசிகளை வழிநடத்தி வருகின்ற கண்மணியே உன்னை வாழ்த்துகிறேன் என்று வாழ்த்துகின்றார்.

விருத்தம்

"**மகனே தவமே மரகதமே மாதவம் பெரிய மலரோனே**
**தவமே யுனதுள் வைத்தவிஞ்சை தானே போது மோமகனே**
**எகமேழ் மகிழ வந்தவனே என்றன் மகனே வளர்வையென**
**உகமே ழளந்தோ ருரைத்திடவே உயர்ந்த மறையோர் வாழ்த்தினரே**"

நாராயண மூர்த்தி வைகுண்டரை தவம் ஒன்றே நம் இச்சை கொண்டு இறைவனை அடைவதற்கு ஏற்றவழி. அதுவே உயர்ந்த வழி ஆகும். ஆதி காலம் முதலே முனிகளும் ரிஷிகளும் எல்லாவற்றிலும் உயர்ந்த வழியாக தவம் செய்வதையே எடுத்து அந்த தவத்தின் மூலமே இறைவனை கண்டடைந்தார்கள். தவம் ஒன்றே நல்லோர்க்கும், தீயோர்களுக்கும் நன்மை பயக்க கூடியது ஆகும். இவ்வாறு தவத்தின் பெருமை உயர்ந்ததாக இருக்கின்றது. **"உலக உயிர்கள், மிகவும் உயர்ந்ததும் சிறப்பு மிகுந்ததும் மாசு இல்லாத தவத்தின் துணைகொண்டு நற்கதி அடைகிறார்கள்**.

**ஆனால் அந்த தவமாகவே தவத்தின்** தவத்தினுடைய அரும் பொருளாகவும், தவத்தினால் இறைவனை கண்டுகொள்ளக்கூடிய வகையிலே இருக்கின்ற தவப் பொருளாகவும், தவமிருந்து உன்னை கண்டு கொள்ளுகின்றவர்களுக்கு நான் வைத்திருக்கின்ற விஞ்சை போதுமா மகனே, இந்த உலகமே மகிழும் வண்ணம் வந்ததவனே எந்தன் மகனே நீ என்றும் வளர்வாயென உகமே அளந்தோர் ஆகிய நாராயணமூர்த்தி வாழ்த்து கூறினார், உடனே மறையோர்கள் வாழ்த்தி போற்றி வணங்கினார்கள்.

நடை

**அய்யாநா ராயணரும் ஆதிவை குண்டமென**
**மெய்யா யுரைத்து விளங்கவே வாழ்த்தலுற்றார்**
**மகனே வுன்தேகமதில் வைத்த நிறங்களெல்லாம்**
**உகமழியு முன்னே ஒருவர்கண் காணாதென**
**அகமே வைத்து அகமகிழு என்மகனே**
**வைகுண்ட மென்றுமிக வாழ்த்தக் குருநாதன்**
**மெய்குண்டத் தோர்கள் மேலோர்கள் வாழ்த்தலுற்றார்**

வைகுண்ட அவதாரத்தின் சிறப்பை மறையவர்கள் வாழ்த்தி, அய்யா நாராயணரே ஆதி வைகுண்டமாக வந்திருக்கின்றார் என்ற உண்மையை உலக மக்கள் அறிந்து கொள்ளும் படியாக மறையவர்கள் தங்களுடைய வாழ்த்து பாடலின் மூலம் வெளிப்படுத்தி உலக மக்கள் அறியும்படியாக போற்றி வாழ்த்தினார்கள். வைகுண்ட அவதாரத்தின் சிறப்பு என்னவென்றால், வேளைக்கு வேளை விதக்கோலம் எடுப்பது ஆகும். நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் கூறுகின்றார்,

மகனே உன் தேகமதில் வைத்த நிறங்கள் எல்லாம் யுகம் அழியும் முன்னே ஒருவர் கண் கணாதென என்று கூறுவதிலிருந்து வைகுண்ட அவதாரத்தின் சூட்சமத்தை, வித கோலத்தை அறிந்து கொள்வது என்பது இயலாத காரியமாகும். முந்தைய அவதாரங்களில் அந்த அவதாரம் நிறைவு பெறுவது வரை ஒரே தன்மையோடு காட்சி அருளினார். ஆனால் வைகுண்ட அவதாரத்தினுடைய சூட்சமமானது யார் யார் எப்படி எந்த வடிவில் எண்ணுகின்றார்களோ அவ்வாறே காட்சி அருளுகின்றார். இதையே

மகனே உன் தேகமதில் வைத்த நிறங்கள் எல்லாம் என்றுரைக்கிறார்.

பரபிரம்மமாக இருக்கும் வைகுண்டத்திடம் இருந்து வெளிப்படும் சக்தியானது சிறு குழந்தையாக இருக்கலாம் வயோதிக பருவத்தோடு இருக்கலாம் குமாரப்பருவத்தோடு இருக்கலாம் என்ன நிறைந்த பெண் சக்திகளாக இருக்கலாம் இப்படி நேரத்துக்கு நேரம் வித கோலம் எடுக்குகின்ற தன்மை பரபிரம்மாகிய உன்னுடைய தேகத்திலே இருக்கிறது மகனே! இதை இந்த கலியுகம் அழியும் முன்பாக யார் கண்ணும் காணும் படியாக காட்டக்கூடாது. அகத்திலே வைத்து அகமகிழ வேண்டும். நாராயணமூர்த்தி சொல்ல மேலோர்கள் எல்லோரும் வாழ்த்தினார்கள்.

**மகரவுந்தி விட்டு வைகுண்டந் தான்பிறந்து**
**சிகரமுனி தேவருட சிறப்பதிலே வந்தவுடன்**
**தேவர் திருவானோர் சென்றெடுத்து வைகுண்டரை**
**மூவர்தே வர்மகிழ்ந்து முதலோனைக் கைகுவித்து**
**ஏந்தி யெடுத்து இளந்தொட்டில் மீதில்வைத்துச்**
**சாந்தி கழித்துத் தவலோகச் சட்டையிட்டுச்**
**சீதை மயக்கமெல்லாம் தீர்ந்திடவே சாபமிட்டு**
**வீரரையும் வந்து வீரலட்சு மியெடுத்து**
**மடிமீதில் வைத்து மாதுசர சோதியுடன்**
**குடியான பேரும் கொண்டங் ககமகிழ்ந்து**
**பொன்தொட்டி லிட்டுப் பொற்சீதை தாலாட்ட**
**பைங்கொடி யாள்சரசு பதிமாது தாலாட்டத்**
**தேவரிஷி வானோர் தேவரம்பை மாதரெல்லாம்**
**சீவசெந் தெல்லாம் திருப்பாட்டுப் பின்பாட**
**ஈசர்முதல் சங்கம் எண்ணி மனமகிழச்**
**சார்சர சுபதியாள் தாலாட்ட வேதுணிந்தாள்**

மகர உந்திவிட்டு வைகுண்டம் சிகர முனி சிறப்பதிலே வந்தவுடன் தேவர்கள் வானவர்கள் எல்லோரும் சென்று எடுத்து வைகுண்டரை இளம் தொட்டில் மீதில் வைத்து சாந்தி கழித்து தவலோக சட்டையிட்டு சீதை மயக்கமெல்லாம் தீரவே வாழ்த்தி, லட்சுமி தேவி சரஸ்வதி தேவியோடு மடிமீதில் வைத்து தெய்வ ரம்பை மாதர்கள் எல்லோரும் சேர்ந்து திருப்பாட்டு பாட ஈசர் முதல் சங்கம் எண்ணி

மனம் மகிழ சரஸ்வதி தேவியாவைள் தாலாட்டுவதற்கு தயாரானார்கள் .

**வினா விடை**:

1. அய்யா தந்த வரத்தையும் படி நாம் வாழுகின்ற போது பல நன்மைகள் நமக்கு நடந்து கொண்டிருக்கும் அப்போது எல்லாம் நம்மால்ச்சு தென்று ஆணவப்பட்டால் நடப்பது என்ன?
அய்யா நமக்கு தந்த வரத்தை எல்லாம் பறித்து விடுவார்.

2. அய்யா வகுத்து தந்த நெறிகளை பின்பற்றி வாழும் போது நன்மைகள் எப்போது நடக்கும் என்றுக் கூறுகின்றார்?
தருணம் வருகின்றபோது அவை செயல்படும் என்பதை கூறுகின்றார்.

3. அய்யா வகுதது தந்த சொற்படி மறவாமல் நடக்கும் போது நிகழ்வது என்ன? சிவனும் நமக்குள் வசமாகும். அதாவது இறைவனை நமக்குள் கண்டுகொள்ள முடியும் என்பதாகும்.

4. அய்யா வகுத்து தந்த நெறிகளின் படி நம் வாழ்க்கையின் மேற்கொள்ளுகின்ற போது யார் யார் வந்து நமக்கு நற்பலன்களை சொல்வதாக அய்யா கூறுகின்றார் ?
லட்சுமிதேவி, சரஸ்வதி தேவி, அம்மை உமையவள் மற்றும் சப்த மாதர்கள் ஆகிய அம்மைமார்கள் எல்லோரும் வந்து கூறுவதாக கூறுகின்றார்.

5. இந்த கலியுகத்தில் வாழ்வதற்கு ஐயா வகுத்து தந்த நெறிகளைத் தவிர மேலும் அநேகம் எப்போது தோன்றும் என்று கூறுகின்றார்?
அந்தந்த நேரங்களில் மேலோர்களால் கூடக் கண்டு கொள்ள முடியாத அனேக அனேக வளங்கள் வந்து தோன்றுவதாகக் கூறுகின்றார்.

6. அய்யா வகுத்து தந்த நெறிகளை பின்பற்றுகின்ற போது யார் யாரால் வெல்ல முடியாது என்று கூறுகின்றார்?
கோவேங்கிரி கோனாகிய சிவபெருமானால் கூட வெல்ல முடியாது என்றுக் கூறுகின்றார்.

7. அய்யா வகுத்து தந்த நெறிகளை பின்பற்றி வாழ்வது கலியுகத்தில் எளிதான காரியமா?
இல்லை கடினமான காரியம்.

8. நாராயணர் வைகுண்டரிடம் ஏன் தன்னை கைக்குவித்து வணங்கக்கூடாது என்று கூறினார்?
அனைத்து தெய்வ சக்திகளுக்கும் ஒன்றான பரப்பிரமமாக வைகுண்டர் எல்லோரிலும் இருக்கின்றார் அப்படி இருக்கின்ற போது இன்னும் ஒரு தெய்வம் மேலானது என்று எங்கும் கைகூப்பி நிற்கக்கூடாது என்பதை உணர்த்துகின்றார்.

9. நாராயணர் வைகுண்டரிடம் சாதி பதினெட்டையும், தலையாட்டி பேய்களையும் எங்கு தள்ளிவிடக் கூறினார்?
வாரிமலையதிலும் வன்னியலும் தள்ளிவிடு என்றுக் கூறினார்.

10. வாரி என்பது எதைக் குறிக்கிறது?
கடல்

11. வன்னி என்பது எதைக் குறிக்கிறது?
அக்கினி

12. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் பேய்களை எங்கு தள்ளி அழிக்க கூறினார்?
அக்கினியில்

13. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் பேய்களை அழிப்பதற்கு முன்பாக என்ன செய்ய வேண்டும் என்றுக் கூறினார்?.
பேய்களுக்கு கொடுக்கப்பட்ட வரத்தை வாங்கி விட வேண்டும் என்றுக் கூறினார்.

14. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் எவற்றையெல்லாம் காணாதே சாபம் விட வேண்டும் என்று கூறினார்?
ஊனக் கோள் கிரகம் உறவு கெட்ட பேர்களையும் கள் கோள் கருவை காணாதே சாபம் விட வேண்டும் என்று கூறினார்.

15. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் எநத பேச்சை கூறக்கூடாது என்று கூறினார்?
கொல் என்றப் பேச்சு கூறக்கூடாது என்று கூறினார்.

16. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் பேசுகின்ற பேச்சு எவ்வாறு இருக்க வேண்டும் என்றுக் கூறினார்?

செவ்வென்றப் பேச்சு செப்பியிரு என்மகனே என்றார். அதாவது எப்போதும் இனிமையான பேச்சுகளை மட்டுமே பேச வேண்டும்.

17. அய்யாவை நாடி வருகின்ற மக்களுக்கு உதவி செய்வதற்கு யார் இருப்பதாக கூறுகின்றார்?
அன்பான பஞ்சபாண்டவர்கள் இருப்பதாக கூறுகின்றார்.

18. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் தன்னை விட்டு அகலாது தன்னோடு யார் இருந்ததாக கூறினார்?
பஞ்ச பாண்டவர்கள்

19. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் யாரை முன்னே விட்டுக் கொள்ளு என்றுக் கூறினார்?
பஞ்சபாண்டவர்களை

20. நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் எந்த பெண்ணார்களுக்கு அழகு கொடுக்க வேண்டும் என்றுக் கூறினார்?.
நாராயணர் வைகுண்டரிடம் துவாபரயுகத்தில் தான் கிருஷ்ணாவதாரம் எடுத்திருக்கின்ற அந்த நேரத்தில் நந்தன் வம்சத்தில் கோபியர்களாக பெண்கள் தோன்றி வந்திருந்தார்கள். அவர்களுக்கு அதிக பலம் தருவேன் என்று அப்போது நான் சொல்லியிருந்தேன். அந்த பெண்ணார்களில் சிலர் இப்போது இங்கே மீண்டும் தோன்றி வருவார்கள் அவர்களுக்கு அதிக பலம் கொடுக்க வேண்டும் என்று கூறினார்.

21. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் ஆறு ஆண்டுகள் தவம் நிறைவேறிய பிறகு யார் யாருக்கு நன்மை கொடுக்க வேண்டும் என்றுக் கூறினார்?
ஒண்டொடியார் சிலரை உன் பாரி ஆக்கி நன்மை கொடுக்க வேண்டும் என்றுக் கூறினார்.

22. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் யாருக்கு உதவிக் கொடு என்றுக் கூறினார்.?
உன்னை நினைத்தோர்க்கு உதவி கொடு என்றுக் கூறினார்.

23. நாராயணர் வைகுண்டரிடம் எதை விடக்கூடாது என்று கூறினார்?
கட்டை(பொய் கூறுவதோ, உடல் சுகம் தான் பெரிது என்று எண்ணுவதோ கூடாது) விடாதே கருத்துள்ள என் மகனே என்றுக் கூறினார்.

24. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் எதனை மறக்கக்கூடாது என்று கூறினார்?
சட்டம் மறவாதே சாஸ்திரத்தை குத்தவனே என்று கூறினார்.

25. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் யாரை பேணி பாதுகாக்க வேண்டும் என்று கூறினார்?.
பெண்களை பேணி பாதுகாத்து இருக்க வேண்டும். பெண்பாவம் பாரக்கூடாது என்றும் கணவனாக ஒரு ஆண் இருந்து பெண்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாக செய்ய வேண்டும் என்றுக் கூறினார்.

26. அய்யா நாராயண மூர்த்தி ஆராதனை சொருபத்தை எதற்காக எடுப்பேன் என்றுக் வைகுண்டரிடம் கூறுகின்றார்?
மக்களிடம் இருக்கின்ற அன்பு வன்முறைப் பார்த்து அவர்களை சோதித்து நல்லோர்களை தேர்ந்து எடுப்பதற்காகவும், வைகுண்ட அவதாரத்தின் நோக்கத்தினை எல்லோரிடமும் தெரிவிப்பதற்கும் ஆராதனை சொரூபத்தை காட்டுவேன் என்றுக் கூறுகிறார்.

27. நாராயணர் வைகுண்டரிடம் எங்கு எங்கெல்லாம் தன்னுடைய ஆராதனை சொரூபத்தைக் காட்டுவதாக கூறுகின்றார்?
சாதி சாதிகள் தோறும் சக்கிலியன் புலட்சி வரை ஆதி சாதி முதலாய் ஆராதனைக் காட்டிவிப்பேன் என்றுக் கூறுகின்றார்.

28. ஆராதனை காட்டி இருக்கின்ற சொரூபமானது எங்கெங்கெல்லாம் மாயமிட்டு இருப்பதாக கூறுகின்றார்?
நான்கு வேதமதிலும் ஆராதனை சொரூபத்தைக் காட்டுவதாகக் கூறுகின்றார்.

29. அய்யா நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் எங்கு சென்று சூதாட்டம் பார்த்திடுவேன் என்று கூறுகின்றார்?
துலுக்கன் வீடு ஆனதிலும் சூதாட்டம் பார்த்து விடுவேன் என்று கூறுகின்றார்.

30. நாராயணர் வைகுண்டரிடம் துலுக்கன் வீடு என்று யாரை குறிப்பிட்டு கூறுகின்றார்?
துலுக்கன் வீடு என்பது தீய எண்ணம் கொண்டவர்களின் வீடு என்றுக் குறிப்பிடுகின்றார்.

31. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் எதற்காக வேண்டி இந்த கிலுக்கத்தை செய்வதாகக் கூறுகின்றார்?
எல்லோருள்ளும் இருக்கும் கலி மாய எண்ணத்தை மாற்றி மனம் தெளிந்து உண்மையை அறிந்து கொள்வதற்காக வேண்டி செய்வதாக கூறுகின்றார்.

32. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் வீணாக யார் யார் எல்லாம் மாண்டு போவதாக கூறுகின்றார்?
நீ பெரிது நான் பெரிது நிச்சயங்கள் பார்ப்போம் என்று தான் உயர்ந்தவன் என்று எண்ணி பரம்பொருளே பெரியவர் என்று அறியாமல் இருப்பவர்கள் மாண்டு போவதாக கூறுகின்றார்.

33. மதமாற்றத்தை பற்றிய செய்தியாக அய்யா அகிலத்திரட்டில் எவ்வாறு கூறியிருக்கின்றார்?
ஒரு வேதம் தொப்பி உலகமெல்லாம் போடு என்பான்
மற்றொரு வேதம் சிலுவை வையமெல்லாம் போடு என்பான்.
அத்தறுதி வேதம் அவன் சவுக்கம் போடு என்பான்
குற்றம் உரைப்பான் கொடு வேத காரனவன்.

34. ஒரு வேதத்தை பின்பற்றிக் கொண்டிருக்கின்றவர்களை மதமாற்றி அவர்களை தன்னுடைய மதத்திற்கு அழைத்து செல்பவர்களால் இறைவனை அடைய வழி காட்ட முடியுமா?
முடியாது. காரணம் அவர்கள் எங்கும் மனநிலை ஒருமைப்பாடு அடையாமல் அங்கும் இங்குமாக ஓடி குறுகி வழிமுட்டி எதிலும் இறைவனை கண்டு கொள்ள முடியாமல் மீண்டும் மீண்டும் பிறந்து அழிந்து போவார்கள். ஆன்மா விடுதலை பெறுவதற்குரிய வழிகளை அறியும் உறுதி அவர்களிடம் இருக்காது.

35. குற்றம் உரைப்பான் கொடுவேதகாரன் என்று அய்யா யாரை குறிப்பிடுகின்றார்?
இறைவனுடைய அவதார சூட்சமங்களின் உண்மையை அறிந்து கொள்ளாமல் பிற மதத்தை குறைக்கூறித் தன்னுடைய மதம் தான் உயர்ந்தது என்று கூறிக்கொண்டு அலைபவர்களை கொடுவேதகாரன் என்றுக் கூறுகின்றார்.

36. “கேடுவருமே கேள்வி கேளாத பேருக்கு என்று அய்யா கூறியிருப்பதன் உட்பொருள் என்ன?

ஒருவர் ஒருவரை மதமாற்ற வேண்டும் என்று எண்ணுகின்ற போது ஏன் எதற்கு என்று கேள்வி கேட்காமல் அவர் கூறியதை அப்படியே நம்பிக் கொண்டு அந்த மதத்தை பின்பற்றி செல்லுகின்றவர்கள் அங்கு சென்ற பிற்பாடு எதையும் அறிந்து கொள்ள முடியாமல் உண்மையை புரிந்து கொள்ள முடியாமல் தன்னுடைய தாய் மதத்திற்கு திரும்ப வரவும் முடியாமல் அழிந்து போவார்கள். இதையே அய்யா கேடு வருமே கேள்வி கேளாத பேர்களுக்கு என்றுக் கூறுகின்றார்.

37. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் யாருக்கு ஏகவியாழன்(எல்லா வித சந்தோசங்களும்) வருவதாக கூறுகின்றார்?
வைகுண்டர் காட்டிய வழியில் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு ஆகும்.

38. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் எவையெல்லாம் வேண்டாம் என்று சொல்லிவிடக் கூறினார்?
மக்களைத் துன்புறுத்தும் அதிக படியான வரிகள் விதிப்பதை எல்லாம் வேண்டாம் என்றுச் சொல்லி விடக் கூறினார்.

39. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் தான் அருளிய விஞ்சைகள் எல்லாம் எவ்வாறு வைத்து அகம் மகிழ வேண்டும் என்று கூறினார்? ஏன்?
அகத்தில் வைத்து அகம் மகிழ கூறினார். கலியுகம் அழிகின்ற தருணம் வரை வெளியில் காட்டக்கூடாது என்று கூறினார்.

40. வைகுண்டரை யார் யாரெல்லாம் தாலாட்டினார்கள்?
அம்மை சரஸ்வதி தேவி லட்சுமிதேவி தேவரசி வானவர்கள் தெய்வ ரம்பை மாதவர்கள் ஜீவசந்தம் திருப்பாட்டு பின் பாட ஈசன் முதல் சங்கம் எண்ணி மனமகிழ சரஸ்வதி தேவி தாலாட்டினாள்.

# நாள்-3

## விருத்தம்

**பொன்மணிப் பதியி னுள்ளே புனலரி கிருஷ்ணர் பெற்ற**
**தண்மணிப் பாலன் தன்னைத் தங்கமாந் தொட்டி லிட்டு**
**மின்மணி கொடிசேர் கன்னி விளங்கிய சோதி மாது**
**கண்மணி வைந்த ராசர் காணத்தா லாட்டி னாளே**

தாலாட்டு

தார தரதர தாராரோ தார தரதர தாராரோ
நாராயணர் தானோ தாராரோ நல்ல நாராயண வைகுண்டமோ
காரணர் தானோ வைகுண்டமோ கயிலாச நாதக் கண்மணியோ
செல்வ முதலான சீமானோ சிவசிவ சிவ சிவமுதலோ
அல்ல லகற்றியே அரசாளும் அரியோன் மிகப்பெற்ற அரிதானோ
தெய்வப் பெருமாள்தான் பெற்றகன்றோ சீதை மாதுதான் பெற்றகன்றோ
மெய்ய னரிநாதன் பெற்றகன்றோ விஷ்ணு மகாபரன் பெற்றகன்றோ
ஈசர் மைத்துனர் பெற்றகன்றோ இறவா திருமாது பெற்றகன்றோ
மாயத் திருவுளம் பெற்றகன்றோ மான வைகுண்ட ராசக்கன்றோ
வேதக் குருநாதன் பெற்றகன்றோ வீர லட்சுமி ஈன்றகன்றோ
சீதக் குருதாயா ரீன்றகன்றோ தெய்வ வைகுண்ட ராசக்கன்றோ
கிருஷ்ண மகாநாதன் பெற்றகன்றோ கிருபைக் குருநாதக் கண்மணியோ
விஷ்ணு மகாநாதன் பெற்றகன்றோ வீர லட்சுமி ஈன்றகன்றோ
தார தரதர தாராரோ தார தரதர தாராரோ
நாட்டுக் குடையதோர் நாரணரின் நல்ல பாலனோ வைகுண்டனோ
ஏட்டு முதலானோ தாராரோ ராச வைகுண்ட ராசர்தானோ
மூலச் சிவநாதன் பெற்றகன்றோ உலகை யொருகுடைக் கள்வானோ
நாலு வேதமும் தாண்டிமுறை நடத்தி யொருகுடைக் கள்வானோ
ஒருமை மனத்துடை யுத்தமர்க்கு உற்ற பதவிகள் கொடுப்பவனோ
தருமத் திறவானோ தாராரோ தங்க வைகுண்டத் தாட்டீகனோ
மகரச் சீதையாள் வயிற்றுலுற்ற வளர்ந்த வைகுண்ட மாமணியோ
அகரச் சிவகோபுர மழகுபதி அதிகப் பதிகெண்டு வந்தவரோ
தங்கக் கோபுரம் தளிர்மரமும் சதுர மேடைகள் கண்டவரோ
சங்க மகிழவே வந்தவரோ சகல கலைதமி ழாய்ந்தவரோ

உலகம் பதினாலு மொருகுடைக்குள் ஒரு சொல் மொழிக்காள
வந்தவரோ
இலகு பிரகாச சுவடுகொண்டு இலங்கும் பதியாளப் பிறந்தவரோ
வம்புக் கலியுகக் குலமறுத்து வைந்தப் பதியாள வந்தவரோ
அம்புக் கணையொன்று மில்லாமலே அறுக்க வந்தாரோ
கலிதனையும்
கூடப் படைகள்துணை யில்லாமல் குறும்பை யடக்கவே
வந்தவரோ
சாடத் தலையாரி யொன்றில்லாமல் சதைக்க வந்தாரோ
கலியுகத்தை
வாளு மாயுத மெடுக்காமலே வதைக்க வந்தாரோ
கலியுகத்தைக்
கோளு பேய்களைக் கிரகங்களைக் கொல்ல வரம்பெற்ற
வைகுண்டரோ
சாணாக் குருநாத வைகுண்டரோ சாதி தற்காக்குந்
தலையாரியோ
காணாக் கருவான கருமூலமோ கர்த்தன் கர்த்தாதிக்
கடவுள்தானோ
நீசக் குலங்களைக் கருவறுக்க நெடிய நாரணர் பெற்றகன்றோ
தோசப் புழுச்சாதி குலமறுக்கத் திருமால் நாரணர்
பெற்றகன்றோ
சீமை மைம்பத்தாறு தேசமெல்லாம் சொல்லொன் றுள்ளாள
வந்தவரோ
நாமம் பெரியதோர் வைகுண்டரின் நாமம் பெறவோங்க
வந்தவரோ
தெய்வப் பாலர்கள் சிறந்துபோற்றச் சீமை யரசாள வந்தவரோ
மெய்வ ரம்பதின் முறைநடத்தி மேன்மைச் செங்கோல்
முடிதரித்து
பொறுமைப் பெரியோனோ வைகுண்டனோ பெரிய பூமேடைக்
கொலுவீரனோ
தர்ம வரம்புகள் தவறாமலே தரணி யரசாளும் வைகுண்டரோ
திராசு நிறையிலுந் துல்லியமாய்ச் செங்கோல் செலுத்தவே
வந்தவரோ
மிராசு மூவர்க்கு முதன்மைதானோ மூலச் சிவமணி
குருநாதனோ
சான்றோர் கைகட்டிச் சரணங்கூறத் தரணி யொருகுடைக்
காள்வானோ

ஆண்ட மணிநாதன் நாரணர்க்கு ஆன மதலையாய் வந்தவரோ
வைய மளந்ததோர் நாரணர்க்கு மதலை யெனவந்த வைகுண்டரோ
தர்மப் பதியாளும் வைகுண்டரோ சாணர்க் கனுகூல மானவரோ
அலைந்து மலைந்ததோர் சான்றோர்க்கு அதிக விதிகொண்டுப் பிறந்தவரோ
சாணாக் குடிகுல நாயகமோ தர்மந் தழைக்கவே பிறந்தவரோ
தோணாத் துறைகொண்டு வந்தவரோ துவரா பதியாளப் பிறந்தவரோ
ஏழு யுகபரக் கணக்கையெல்லாம் எடுத்து நடுத்தீர்க்கப் பிறந்தவரோ
ஆளும் வைகுண்டப் பதியாளவே அரிய வைகுண்டம் பிறந்தவரோ
வீர வீராதி வீரன்தானோ வீர சூரனா ரீன்றகண்ணோ
சூர சூராதி சூரன்தானோ சூர சூரனார் பெற்றகண்ணோ
நாத நாரணர் பெற்றகண்ணோ நாக மணிநாதன் பெற்றகண்ணோ
சீதக் குணநாதன் பெற்றகண்ணோ சீதை மணவாளன் பெற்றகண்ணோ
மேக நிறத்தண்ண லீன்றகண்ணோ மேலோர் போற்றும்வை குண்டக்கண்ணோ
ஏகச் சிவநாதன் பெற்றகண்ணோ இறவா திருமூர்த்தி பெற்றகண்ணோ

## வினா விடை:

1. கலியழிப்பதற்கு வைகுண்டமாக அவதாரம் எடுத்தவர் யார்?
   நாராயண மூர்த்தி

2. கலியழிப்பதற்கு காரணராக அவதாரம் எடுத்தவர் யார்?
   அய்யா வைகுண்டர்

3. கயிலாச நாதக் கண்மணி யார்?
   அய்யா வைகுண்டர்

4. செல்வ முதலான சீமானாகவும் சிவசிவ சிவ சிவமுதலாகவும் இருந்தவர் யார்?

அய்யா வைகுண்டர்

5. உலகில் இருக்கின்ற கலிமாயத்தால் வரும் அல்லல்களை அகற்றி ஒரு குடைக்குள் இந்த உலகை அரசாள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

6. அரியோன் என்பவர் யார் ?
நாராயண மூர்த்தி

7. தெய்வப் பெருமாள் யார்?
நாராயண மூர்த்தி

8. சீதை மாது பெற்றகன்று யார்?
அய்யா வைகுண்டர்

9. மெய்ய னரிநாதன் யார்?
நாராயண மூர்த்தி

10. மெய்ய னரிநாதன் பெற்றகன்று யார்?
அய்யா வைகுண்டர்

11. விஷ்ணு மகாபரன் பெற்றகன்று யார்?
அய்யா வைகுண்டர்

12. ஈசர் மைத்துனர் யார்?
நாராயண மூர்த்தி

13. ஈசர் மைத்துனர் பெற்றகன்று யார்?
அய்யா வைகுண்டர்

14. இறவா திருமாது பெற்றகன்று யார்?
அய்யா வைகுண்டர்

15. மாயத் திருவுளம் பெற்றகன்று யார்?
அய்யா வைகுண்டர்

16. வேதக் குருநாதன் பெற்றகன்று யார்?

அய்யா வைகுண்டர்

17. வீர லட்சுமி ஈன்ற கன்று யார்?
அய்யா வைகுண்டர்

18. சீதக் குருதாயா ரீன்ற கன்று யார்?
அய்யா வைகுண்டர்

19. தெய்வ வைகுண்ட ராசக்கன்று யார்?
அய்யா வைகுண்டர்

20. கிருஷ்ண மகாநாதன் பெற்றகன்று யார்?
அய்யா வைகுண்டர்

21. கிருபைக் குருநாதக் கண்மணி யார்?
அய்யா வைகுண்டர்

22. விஷ்ணு மகாநாதன் பெற்றகன்று யார்?
அய்யா வைகுண்டர்

23. வீர லட்சுமி ஈன்ற கன்று யார்?
அய்யா வைகுண்டர்

24. நாட்டுக் குடையதோர் ----------{நாரணரின்} நல்ல பாலனோ ------ {வைகுண்டனோ}
25. ஏட்டு முதலானோ -------(தாராரோ } ராச வைகுண்ட ராசர்தானோ

26. மூலச் சிவநாதன் பெற்றகன்று யார்?
அய்யா வைகுண்டர்

27. உலகை யொருகுடைக் குள் ஆள்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

28. நாலு வேதமும் தாண்டிமுறை நடத்தி உலகை யொருகுடைக் ஆள்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

29. ஒருமை மனத்துடை யுத்தமர்க்கு உற்ற பதவிகள் கொடுப்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

30. தருமத் திறவான் யார்?
அய்யா வைகுண்டர்

31. மகரச் சீதையாள் வயிற்றுலுற்ற வளர்ந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

32. அகரச் சிவகோபுர மழகுபதி அதிகப் பதிகெண்டு வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

33. தங்கக் கோபுரம் தளிர்மரமும் சதுர மேடைகள் கண்டவர் யார்?
அய்யா வைகுண்டர்

34. சங்க மகிழவே வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

35. சகல கலைதமி ழாய்ந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

36. உலகம் பதினாலு மொருகுடைக்குள் ஒரு சொல் மொழிக்காள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

37. இலகு பிரகாச சுவடுகொண்டு இலங்கும் பதியாளப் பிறந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

38. வம்புக் கலியுகக் குலமறுத்து வைந்தப் பதியாள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

39. அம்புக் கணையொன்று மில்லாமலே கலிதனை அறுக்க வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

40. கூடப் படைகள்துணை யில்லாமல் குறும்பை யடக்க வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

41. சாடத் தலையாரி யொன்றில்லாமல் கலியுகத்தை சதைக்க வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

42. வாளு மாயுத மெடுக்காமலே கலியுகத்தை வதைக்க வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

43. கோளு பேய்களைக் கிரகங்களைக் கொல்ல வரம்பெற்றவர் யார்?
அய்யா வைகுண்டர்

44. சாணாக் குருநாதர் யார்?
அய்யா வைகுண்டர்

45. சாணார்கள் என்பவர்கள் யார்?
இறைவனை தன்னுள் கண்டு கொண்டிருக்கும் மக்கள்.

46. சாதி தற்காக்குந் தலையாரி யார்?
அய்யா வைகுண்டர்

47. "**சாதி தற்காக்குந் தலையாரி**" இங்கு குறியிடப்பட்டுள்ள சாதி என்பது கலிநீசனால் உருவாக்கப் பட்ட சாதியை குறிப்பிடுகிறதா இல்லை இறைவன் வகுத்த நெறிப்படி வாழும் மக்களை சாதியென்று குறிப்பிடப்பட்டுள்ளதா?
இறைவன் வகுத்த நெறிப்படி வாழும் மக்களை சாதியென்று குறிப்பிட பட்டுள்ளது.

48. காணாக் கருவான கருமூலம் யார்?
அய்யா வைகுண்டர்

49. கர்த்தன் கர்த்தாதிக் கடவுள் யார்?
அய்யா வைகுண்டர்

50. நீசக் குலங்களைக் கருவறுக்க வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

51. தோசப் புழுச்சாதி குலமறுக்க வந்தவர் யார்?

அய்யா வைகுண்டர்

52. சீமை மைம்பத்தாறு தேசமெல்லாம் சொல்லொன் றுள்ளாள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

53. நாமம் பெரியதோர் வைகுண்டரின் நாமம் பெறவோங்க வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

54. தெய்வப் பாலர்கள் சிறந்துபோற்றச் சீமை யரசாள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

55. மெய்வ ரம்பதின் முறை நடத்தி மேன்மைச் செங்கோல் முடிதரித்து பொறுமைப் பெரியோனாக இந்த உலகை ஆள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

56. உலகை பெரிய பூமேடைக் கொலுவீரனாக இருந்து ஆள்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

57. தர்ம வரம்புகள் தவறாமலே தரணி யரசாள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

58. திராசு நிறையிலுந் துல்லியமாய்ச் செங்கோல் செலுத்தவே வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

59. மும்மூர்த்திக்கும் முதன்மையாகவும் மூலச் சிவமணி குருநாதனாகவும் இருப்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

60. சான்றோர் கைகட்டிச் சரணங்கூறத் தரணி யொருகுடைக் காள்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

61. ஆண்ட மணிநாதன் நாரணர்க்கு ஆன மதலையாய் வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

62. வைய மளந்ததோர் நாரணர்க்கு மதலை யெனவந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

63. தர்மப் பதியாள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

64. சாணர்க் கனுகூல மானவர் யார்?
அய்யா வைகுண்டர்

65. கலியினால் அலைந்து மலைந்ததோர் சான்றோர்க்கு
நற்பலன்களை அருள்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

66. சாணாக் குடிகுல நாயகம் யார்?
அய்யா வைகுண்டர்

67. தர்மந் தழைக்கவே பிறந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

68. தோணாத் துறைகொண்டு வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

69. ஏழு யுகபரக் கணக்கையெல்லாம் எடுத்து நடுத்தீர்க்கப் பிறந்தவர்
யார்?
அய்யா வைகுண்டர்

70. ஆளும் வைகுண்டப் பதியாளவே அரிய வைகுண்டமாக
அவதரித்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

71. நாக மணிநாதன் யார்?
நாராயண மூர்த்தி

72. சீதை மணவாளன் யார்?
நாராயண மூர்த்தி

73. ஏகச் சிவநாதன் யார்?
நாராயண மூர்த்தி

# நாள்-5

வேறு

சந்திர சுந்தர தந்திர மந்திர சாமிசீர் பாலகனோ
தாயக மாயக நாயக மாகிய தாண்டவ சங்கரனோ
சந்திர சந்திர யந்திர குஞ்சித சூரியப்பிர பாலகனோ
சூரனோ வீரனோ மாதனோ நீதனின் சூலகலா திபனோ
தந்திர மந்திர இந்திர சுந்தரின் சந்ததி சந்ததியோ
சகடவெலி சண்டரை அகடவெலி செய்திடும் சுக்கிர விக்கிரனோ
கொந்தரி சந்ததின் தந்திர சுந்தர கோசல நாயகனோ
கொடுகலி யறவொரு கடுமுனை கொண்டருள் குலவெங்கிட
குண்டமோ
சூரனோ வீரனோ தீரனோ நீதனோ சூரியப்பிரகாசவீதனோ
சுத்தனோ கர்த்தனோ நித்தனோ அத்தனோ துலங்கும்
தங்கரனோ
சூரனோ வீரனோ தீரனோ நாதனோ சூரியப்பிரகாச வீதனோ
வீரனோ காரனோ தாரனோ சாரனோ வெங்கிட ரங்கிடனோ
விகடக டகடக டகுட டடமருள் வேதவிக்கிர சுக்கிரனோ
தீரனோ காரனோ சீரனோ வீரனோ செந்திலம்பதிவளர்
சந்திரனோ
திகதக தரிகிட செகமுக மருள்புரித் திக்கிர விக்கிரனோ
நீதனோ கீதனோ வீதனோ மாதனோ நீதவெங் கோகுலனோ
நெகிடுகலி யகடற விகடுகுடல் கருவற நெக்கிர விக்கிரனோ

விருத்தம்

இப்படி ஔவை மாது இயல்புதா லாட்டக் கண்டு
செப்படி முனிமா ரெல்லாம் சிவவைந்தர் பதத்திற சென்று
முப்படி முறைபோல் தேவர் முக்கந்தன் பள்ளி கொள்ள
அப்படித் தேவ ரெல்லாம் அவரிசை கூற லுற்றார்

1. தந்திர மந்திர சாமிசீர் பாலகன் யார்?

அய்யா வைகுண்டர்

2. தந்திர மந்திரங்களை வென்றவர் யார்?
அய்யா வைகுண்டர்

3. இப்போது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கலியுக வாழ்வில் நம்மால் மந்திர தந்திரங்களை வெல்ல முடியுமா?
ஆம். அய்யா வைகுண்டர் வகுத்த நெறிப்படி வாழும் போது மந்திர தந்திரங்களை வெல்ல முடியும்.

4. உலகை ஒரு குடைக்குள் ஆள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

5. சூரியப்பிரகாச பாலகன் யார்?
அய்யா வைகுண்டர்

6. "சூரனோ வீரனோ மாதனோ நீதனின் சூலகலா திபனோ" இதில் கூறப்பட்டுள்ள சூலகலாதிபன் யார்?
அய்யா வைகுண்டர்

7. சகடவெலி சண்டன் யார் ?
கலிமாய எண்ணம் உடையவர்கள்

8. அகடவெலி என்பது என்ன ?
கலிமாய எண்ணங்களை அழிப்பதற்கு மேற்கொள்ளும் வழிகள் ஆகும்.

9. கோசல புரியின் நாயகனாக இருந்து கலியழிக்க வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

10. கொடுமையான கலியற வேண்டும் என்று பேரருள் கொண்ட குலவேங்கிட குண்டம் யார்?
அய்யா வைகுண்டர்

11. கலியழிப்பதற்கு சூரனாகவும் வீரனாகவும் தீரனாகவும் நீதனாகவும் சூரியப்பிரகாச வீதனாகவும் இருந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

12. மக்கள் உள்ளங்களில் இருக்கும் கலியிருள் அகற்ற வந்த சுத்தன் யார்?
அய்யா வைகுண்டர்

13. மக்கள் உள்ளங்களில் இருக்கும் கலியிருள் அகற்ற வந்த கர்த்தன் யார்?
அய்யா வைகுண்டர்

14. மக்கள் உள்ளங்களில் இருக்கும் கலியிருள் மாள்வதற்கு நித்தனாக இருந்து வழிகாட்டுபவர் யார்?
அய்யா வைகுண்டர்

15. நித்தன் என்பவர் யார்?
இறைவன்

16. மக்கள் உள்ளங்களில் இருக்கும் கலியிருள் மாள்வதற்கு அத்தனாக இருந்து வழிகாட்டுபவர் யார்?
அய்யா வைகுண்டர்

17. அத்தன் என்பவர் யார்?
இறைவனாகவும் குருவாகவும் தலைவனாகவும் இருந்து நல்லருள் புரிபவர்.

18. "சுத்தனோ கர்த்தனோ நித்தனோ அத்தனோ துலங்கும் சங்கரனோ" இதில் கூறப்பட்டுள்ள 'துலங்கும் சங்கரன்' என்பது என்ன?
மக்களின் உள்ளத்தில் இருக்கும் கலிமாயையை அழித்து இன்பத்தை அருள்பவன் என்பதாகும்.

19. "சூரனோ வீரனோ தீரனோ நாதனோ சூரியப்பிரகாச வீதனோ" இதில் கூறப்பட்டுள்ள 'சூரியப்பிரகாச வீதனோ' என்பது யாரைக் குறிக்கும்?
அய்யா வைகுண்டரை

20. வீதன் என்பவர் யார்?
சாந்த சொரூபியாக இருக்கும் அமைதியுடையவன்.

21. "சூரனோ வீரனோ தீரனோ நாதனோ சூரியப்பிரகாச வீதனோ"
இவ்வடிகள் உணர்த்துவது என்ன?
அசுரர்களை அழிப்பதற்கு வீரத்தையும், வலிமையையும் பெற்றிருந்த போதிலும் வைகுண்டர் சாந்தசொரூபத்துடனே இருந்து கலியழிப்பதற்கு வழிக்காட்டினார் என்பதாகும்.

22. "சூரனோ வீரனோ தீரனோ நாதனோ சூரியப்பிரகாச வீதனோ"
இவ்வடிகள் நமக்கு உணர்த்துவது நீதி என்ன?
கலி அழிப்பதற்குரிய வழி வீரமோ, வலிமையோ இல்லை அமைதியாக அடக்கத்துடன் வாழ்ந்தாலே போதும் என்பதாகும்.

23. "வீரனோ காரனோ தாரனோ சாரனோ வெங்கிட ரங்கிடனோ"
இதில் கூறப்பட்டுள்ள 'வெங்கிட ரங்கிடனோ' என்பது என்ன?
மக்களின் உள்ளத்தில் எழக்கூடிய கலிமாய வெப்பத்தை அகற்றும் வல்லமைப் பெற்றவர் என்பதாகும்.

24. வேதவிக்கிர என்பவர் யார்?
நன்மை தீமையை உணரவைத்து பிரம்ம ஞானத்தைப் போதிப்பவன்.

25. செந்திலம்பதிவளர் சந்திரன் யார்?
அய்யா வைகுண்டர்

26. "திகதக தரிகிட செகமுக மருள்புரித் திக்கிர விக்கிரனோ" இதில் கூறப்பட்டுள்ள 'திக்கிர விக்கிரனோ' என்பது எதைக் குறிக்கிறது?
கலியழிப்பதற்காக அய்யா வைகுண்டர் மேற்கொள்ளும் சூட்சம திருவிரையாடல்களைக் குறிக்கிறது.

27. நீதன் என்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

28. வீதன் என்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

29. மாதன் என்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

30. நீதவெங் கோகுலன் என்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

31. விக்கிரன் என்பவர் யார்?
பேராற்றல் உடையவர் ஆவர்.

## நாள்-6

பள்ளி உணர்த்தல்

பள்ளியுணராய்-சிவமருகா நீ பள்ளியுணராய் சிவமருகா
பள்ளியு ணராய்நீ தெள்ளிமை யாகவே
பாற்கடல் மீதினில் தாக்குட னுதித்தவா
வெள்ளி யுதித்திடப் பள்ளி யுணர்த்தவும்
வேதநா ராயணர் சீதகோ பாலர்க்குக்
கொள்ளி யெனவந்த வைகுண்டக் கோவனே
கோவேங் கிரிவள ரீசர் மருகோனே
வள்ளி மணவாளா வளர்செந்தூர் வாரியில்
வந்து பிறந்துநல் தெச்சணம் புகுந்தவா
பள்ளியுணராய் சிவன்மருகாநீ
வேக முடனொரு சந்தத்து ளாடியே
மேதினி யோர்க்குப காரங்கள் செய்யவே
ஆகாத்த பேர்களை அக்கினியில் தள்ளவும்
ஆகின்ற பேர்க்குப காரங்கள் செய்யவும்
தாகத்துக் கானதோர் தண்ணீர் கொடுத்துநீர்
சஞ்சல நோய்பிணி யஞ்சற்குத் தீர்க்கவும்
ஏகத்துட னாளும் நாரண வேந்தர்க்கு
எம்பி யெனவரும் தம்பிரா னானவா
பள்ளியுணராய்சிவமருகாநீ
மூர்க்கன் கலியுக ராசனைத் தட்டியே
முடுமுடுக்கஞ் செய்த மூர்க்கரை வெட்டியே
ஆர்க்கமு டன்புவி யைம்பத்தாறு சீமையும்
அடக்கியொரு சொல்லுக் குடைக்குள்ளே யாளவும்
காக்காமகா தர்ம கற்பையுங் காக்கவே
கர்த்தனரி கிருஷ்ணர் புத்திர ராய்வரும்
தாக்கத் திறம்வளர் வைகுண்ட ராசரே
தர்மமதி லுறையும் பொறுமைக் குலதீரா
பள்ளியுணராய்சிவமருகா

தம்பில மானகு றோணிகுண் டோமனைத்
தத்தியாத் தில்லைமல் லாலனைச் சூரனை
வம்பு இரணிய ராவண சூரனை
மகோதர னானது ரியோதனப் பாவியைக்
கொம்பிலுங் கெம்பிலும் அம்பினாற் கொன்றதோர்
கோபால கிருஷ்ண குழந்தைவை குண்டரே
நம்பின அன்பருக் குபகார சாலியே
நாரணா சீமைக் கரிவரி யானவா
பள்ளியுணராய்சிவமருகாநீ

விருத்தம்

பள்ளிதா னுணர்த்தத் தேவர் பரிவுடன் கேட்டு வைந்தர்
தெள்ளிவை குண்ட ராசர் சிந்தையி லன்பு கூர்ந்து
நள்ளிய தேவ ரார்க்கும் நயமுடன் தயவ மீந்து
துள்ளியே தகப்பன் பாதம் தொழுதவர் வணங்கிச் சொல்வார்

**வினா விடை**:

1. வைகுண்டரை இயல்புடன் தாலாட்டியவர் யார்?
   சரசுபதி மாது

2. சரசுபதி மாது வைகுண்டரை தாலாட்டிய உடன் அவருடைய பாதத்தில் முதல் முதலில் பணித்தவர்கள் யார்?
   முனிவர்கள்

3. சரசுபதி மாது வைகுண்டரை தாலாட்டிய உடன் இசை கூறியவர்கள் யார்?
   தேவர்கள்

4. முப்படி முறைபோல் என்பது என்ன?
   முந்தைய யுகங்களில் தீமையை அழிப்பதற்கு அவதாரம் நிகழ்த்தியது போல் என்பதாகும்.

5. பள்ளி உணர்த்தல் என்பது என்ன?
   விழிப்பு நிலை அடைதல்

6. பாற்கடல் மீது அவதரித்தவர் யார்?

அய்யா வைகுண்டர்

7. வேதநா ராயணர்க்குக் கொள்ளி யெனவந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

8. சிவப்பெருமானுக்கு மருகனாக அவதரித்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

9. திருச்செந்தூர் வாரியில் அவதரித்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

10. திருச்செந்தூர் வாரியில் அவதரித்து தெச்சணம் புகுந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

11. உலக மக்களுக்கு நல்லருள் வழங்குவதற்காகவும் ஆகாத பேர்களை அக்கினியில் தள்ளவும் வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

12. அய்யா வைகுண்டர் ஆகாத்த பேர்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறார்?
கலிமாய எண்ணம் உடைய மக்கள்

13. அய்யா வைகுண்டர் ஆகாத்த பேர்கள் எவ்வாறு அழிப்பதாக கூறியிருக்கிறார்?
அக்கினியில் தள்ளி

14. அய்யா வைகுண்டர் மக்களின் சஞ்சல நோய்பிணிகளை எவ்வாறு தீர்த்தார்?
தண்ணீர் மண்ணாலும் தர்மத்தாலும்

15. "ஏகத்துட னாளும் நாரண வேந்தர்க்கு
எம்பி யெனவரும் தம்பிரா னானவா" இதில் குறிப்பிட்டுள்ள எம்பி மற்றும் தம்பிரான் என்பது என்ன?
எம்பி - நாராயணருக்கு பிள்ளையாக பிறந்தவர்
தம்பிரான் - தனக்கு தானே தலைவன் ஆனவர்.

16. அய்யா வைகுண்டர் யார் யாருக்கு கலியுகத்தில் அழிவு நேரிடும் என்றுக் கூறுகிறார்?
மூர்க்கத் தன்மையுடன் ஆட்சி புரியும் ஆட்சியாளர்கள் மற்றும் பிறருக்கு துன்பம் கொடுத்து வரும் மூர்க்க குணம் உடையவர்கள்

17. புவி யைம்பத்தாறு சீமையும் அடக்கியொரு சொல்லுக் குடைக்குள்ளே யாள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

18. மகா தர்மத்தை காக்க வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

19. தர்மமதி லுறையும் பொறுமைக் குணம் பெற்று கலியழிக்க வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

20. நம்பின அன்பருக் குபகார சாலியாக அவதரித்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

## நாள்-7

நடை

தேவர் துயரமெல்லாம் தீர்ப்போங்கா ணென்றுசொல்லி
மேவலர்கள் போற்றும் விசயவை குண்டராசர்
தகப்ப னுடபதத்தில் சரண மிகப்பணிந்து
உகப்பரனார் நோக்கி உரைக்கிறா ரன்போரே
என்னைஎடுத்து விஞ்சையீந்து தந்தவரே
என்னையீடேற்றி யிரச்சிக்கும்பெம்மானே
மன்னே பிதாவே மாதாவே யென்தாயே
எல்லா விவரமதும் எடுத்துரைத்தீ ரென்றனக்கு
நல்லோரே நானினித்தான் நடக்க விடைதாரும்
பண்டுள்ள ஆகமம்போல் பால்வண்ணர் பெற்றிடும்வை
வைகுண்டர் தெச்சணமே கொள்வார்தான் பள்ளியென
ஆதியா கமப்படியே அனுப்பிவையு மம்புவியில்
சோதிமணியே சுவாமி யெனத்தொழுதார்
உடனே மகன்தனையும் உவந்துமுகத் தோடணைத்துக்
கடலின் சிறப்பைக் கண்டாயோ என்னுசொல்லி

மகனே வுனைவிட்டு மறுவூரு வாழ்வேனோ
நகமுஞ் சதையும்போல் நான்வருவே னுன்கூட
எத்தனை கோடி இயல்தர்மஞ் செய்துவுன்னைப்
பெற்றெடுத்தே னுன்கூட பிறகே வருவேனப்பா
நீயொருவ னெனக்கு நிலையென்று காணுமுன்னே
தாயில்லாப் பிள்ளையைப்போல் தட்டழிந்தே னென்மகனே
மகனே வுனைக்கண்டு மனச்சடவெல் லாந்தீர்ந்தேன்
சுகமேபோய் வாவெனவே சொல்லி யனுப்புவேனோ
உன்கூட நானும் ஓடி வருவேனப்பா
என்கூட வுன்தாயும் ஏகி வருவாள்காண்
என்று தாய்தகப்பன் இவர்கள் வழிகொள்ளவே
கண்டு வைகுண்டர் கனமாய் மனமகிழ்ந்து
நீங்கள் வருவதுதான் எனக்குவெகு சந்தோசம்
தாங்கி வருவேன் தமியேனுங்கள் பாதமதை
அப்போது நாரா யணர்மகனே யாவிமிக
இப்போ தென்மகனே இயம்புகிற புத்தியைக்கேள்
சீமை யதுகாணச் செல்லோங்கா னுன்கூட
வாமை மகனே வருவோமுன் கண்காண
மகனே நீநடக்க வைகுண்டம்வை குண்டமென
உகமீ ரேழுங்காண உரைத்துவிடு யாமமது
முன்னடந்து யாமம் மொழிந்துநட என்மகனே
பின்னடந்து நானும் யாமம் பிசகாமல்
நடத்திவைப் பேன்மகனே நல்லமணி மரகதமே
அடத்திவிட்ட யாமமது அனுப்போல் பிசகாமல்
காட்டுவிப்பேன் மகனே கண்ணேநீ முன்னடநீ
தாட்டிமையா யுன்வாக்கால் தானுரைத்த யாமமெல்லாம்
நடத்திவைக்க வாறேன் நன்மகனே வுன்பிறகே
கடல்திரைவாய்ப் பதிகள் கண்டுசென்று தானிருநீ
தண்ணீர் மண்ணீந்து தானிருபோ என்மகனே
கண்ணி லுருக்காணும் கைக்குளொரு கிள்ளைவரும்
பகைவன் மடிவன் பைங்கிள்ளை யங்காகும்
உகவன் வருவன் ஒருவ னறிவான்காண்
பகவான் சுழற்றும் பாருலக மும்பழுக்கும்
அகங்காணும் பாந்தள் அஞ்சாட்சரங் காணும்
மூசிர சீர்சிரசு முகாசிரசு முன்காணும்
பார்சிரசு கண்டு வாறேனென் பாலகனே
தகையாதே முன்னடநீ சந்தமுனி தன்கூட

பகையாதே என்மகனே பஞ்சவரைக் காத்துக்கொள்ளு
அஞ்சுபூக் கொண்டு ஆசாரஞ் செய்தோர்க்கு
வஞ்சக மில்லாத வாழ்வுகொடு என்மகனே
மகனே நீவாற வழியின் பவிசுகண்டு
தவமுடித்து நீயும் தாண்டியிரு என்மகனே
என்றுவை குண்டருடன் இசைந்தமுனி ரண்டுவிட்டு
கொண்டயச்சுக் காத்திருங்கோ குண்டருட பக்கமதில்
சாட்சியாய்ப் பார்த்திருங்கோ தரணி வளப்பமெல்லாம்
காட்சி கொடுத்திடுங்கோ கண்ணரியோன் முன்னிருந்து
கோபங்காட் டாதேயுங்கோ குணமுனிவ ரேகேளும்
சாபங் கொடாதேயுங்கோ சாஸ்திர முனிவர்களே
நாரா யணர்பெலங்கள் நன்றா யறிவீர்களே
சீரான பொறுதி செய்வதுநீர் கண்டிருங்கோ
வைகுண்ட மாமுனிதான் வாழுந் தலத்தருகே
மெய்குண்டமாய் மேற்கு மேன்மூலை யோர்தனுக்கு
வடகீழ் மூலை மாமுனியே ஓர்தனுக்கு
இடமிதுவே சொன்னேன் யார்க்குந்தெரி யாதிருங்கோ
இந்தப் படிகாத்து இருங்கோ தருணம்வரை
சிந்த முனிவர்களே செல்லு மிவர்கூட
என்று முனிகளுக்கு இயம்பச் சிவநாதன்
நன்றுநன் றென்று நன்முனிவர் சம்மதித்தார்
உடனேதான் வைகுண்டர் உள்ள மிகமகிழ்ந்து
கடலை மிகத்தாண்டி கரையிலே செல்லுமுன்னே
தேவாதி தேவரெல்லாம் திருமுறைய மிட்டனரே
ஆவலா தியாக அபயமிட்டார் தேவரெல்லாம்
வைகுண்டருக் கேபயம் முறையமிட்டார் மாதேவர்
கைகண்ட ராசருக்குக் காதிலுற அபயமிட்டார்
நாரணருக் கேயபயம் நாதனுக் கேயபயம்
நாரணருக் கேயபயம் சுவாமி யுமக்கபயம்

## **அகில வாசக விளக்கம்**:

வைகுண்டரை பள்ளி உணர்த்தியவுடன், வைகுண்டர் தந்தையாகிய நாராயண மூர்த்தியின் பாதம் பணிந்து, தேவர்களுடைய துயரம் எல்லாம் தீர்க்க வேண்டும் என்று எனக்கு எல்லா வழிமுறைகளையும் எடுத்து கூறினீர்கள். ஆதி ஆகமத்தின் படி

இப்போது நான் தெட்சணம் செல்வதற்கு விடை தந்து என்னை அனுப்பி வையுங்கள் சோதி மணியே என்றுப் பணிந்து நின்றார்.

உடனே நாராயணர் வைகுண்டரிடம் கடலில் சிறப்பை எல்லாம் கண்டாயோ மகனே என்று கேட்டார். மேலும் உன்னை விட்டு விட்டு நான் மறு ஊரில் வாழ முடியுமா? நகமும் சதையும் போல நான் உன் கூட வருவேன் அப்பா. எத்தனையோ கோடி இயல் தர்மம் செய்து உன்னை நான் பெற்றெடுத்திருக்கின்றேன். ஆகையால் உன்னை விட்டு நான் பிரிந்து இருப்பது என்பது இயலாத காரியம். கலியழிப்பதற்காக நீ ஒருவன் தோன்றுவதற்கு முன்பு நான் தாய் இல்லாத பிள்ளை போல் தட்டழிந்தேன்.

மகனே உன்னை கண்டவுடன் என்னுடைய மனசடவெல்லாம் தீர்ந்துவிட்டது. ஆகவே நீ சுகமாக போய்வா என்று நான் உன்னை அனுப்பி வைக்கிறேன். அது மட்டுமல்ல நீ செல்லுகின்ற போது உன் கூட நானும் உன் தாயாகிய லட்சுமியும் உன்னுடனே வருவோம் அப்பா என்று தாய் தந்தையர்கள் வழி அனுப்பி வைத்தார்கள் அப்போது வைகுண்ட மனம் மகிழ்ந்து நீங்கள் வருவது எனக்கு மிகுந்த சந்தோஷம். நான் உங்களுடைய பாதத்தை பணிந்து வருவேன் என்று அங்கிருந்து விடைபெற்று வருகின்றார்.

அப்போது நாராயண வைகுண்டரிடம், மகனே! நான் உனக்கு இயம்புகின்ற புத்தியை கேட்டுக் கொள் என்று கூறினார். எப்படி என்றால் இந்த உலகில் நன்மை தீமைகளைப் பார்த்து நடுதீர்ப்பு செய்வதற்குரிய வழிமுறைகளை உனக்கு நான் சொல்லியிருக்கிறேன். அதை நீ செயல்படுத்துகின்ற போது உன்னோடு இருந்து நானும் உனக்கு உதவி புரிவேன். நான் சொன்ன முறைப்படி நீ செயல்படுத்துகின்ற போது, அடுத்து என்ன செயல்படுத்த வேண்டும் என்னென்ன நிகழ்த்த வேண்டும் என்பதை உன்னுள் இருந்து நான் வழிகாட்டி தருவேன். ஆகவே நான் சொன்ன முறையில் எள்ளளவு கூட பிசகாமல் வாழ்ந்திருக்க வேண்டும் என்று அனுப்பி வைத்தார்.

மேலும் நான் சொன்ன யாம முறையை சரிவர நடத்துகின்ற போது உன்னை நாடி வருகின்ற மக்களுக்கு தண்ணீர் மண்ணால் நோய் பிணி நொம்பலங்களையும், சஞ்சலங்களையும் தீர்க்க வேண்டும். அவ்வாறு செய்கின்ற போது அதற்கான காரணங்கள் என்ன

என்பதை நீ உணரும் படி காட்டி தருவேன். தன்னை உணர்ந்தவர்களுடைய அகத்திலும் அதை தெரியும் படியாக செய்வேன். அவ்வாறு செய்கின்றபோது அதை மெய் என்று மக்கள் உணர்ந்து கொள்ளுகின்ற போது உன்னை நாடி கொண்டே இருப்பார்கள்.

அவ்வாறு மெய் நிலையாகிய தன்னிலை உணர்ந்தவர்கள் மனதில் அகப் பகையாக இருந்து கொண்டிருக்கின்ற கலிமாயை எண்ணங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்துவிடும். அவ்வாறு அழிந்த பிறகு அவர்கள் தன்னிலை உணர்ந்து தன்னுள் இருக்கும் இறைவனை உணர்ந்து கொள்வார்கள். மேலும் இறைவனுடைய சக்தியை இந்த பிரபஞ்ச தோற்றத்தையும் இந்த பிரபஞ்சம் எப்படி இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பதையும் தன்னுடைய அகக் கண்ணால் கண்டு கொள்வார்கள்.

மேலும் தன்னிலை உணர வேண்டும் என்று நாம் வாழுகின்ற மக்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் நீ செய்து கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல நீ சொன்ன நீதி நெறியோடு வாழுகின்ற பஞ்சவர்கள் வழியில் வந்த சான்றோர் குல மக்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தன்னுடைய பஞ்சேந்திரியங்களால் கலிமாய எண்ணங்கள் வராமல் இருக்கின்றவர்களுக்கு எல்லா சிறப்புகளையும் கொடுக்க வேண்டும் என்று விடை கொடுத்து அனுப்பினார்.

மேலும் தந்தையாகிய நாராயணமூர்த்தி கூறிய முறைப்படி வைகுண்டர் வாழ்ந்து வருகின்றாரா என்பதைப் பார்த்துக் கொள்வதற்காக வேண்டி இரண்டு முனிவர்களை சாட்சியாக அங்கே அனுப்பி வைக்கின்றார். கலை முனி ஞான முனி என்ற இரண்டு முனிவர்களை அனுப்பி வைக்கின்றார். அந்த இரண்டு முனிவர்களிடம் நீங்கள் இரண்டு பேரும் சாட்சியாகப் பார்த்திருங்கள்.

இந்த உலகில் என்ன என்ன எல்லாம் நடத்தப்படுகின்றது என்பதை சாட்சியாக பார்த்து இருக்க வேண்டும். மேலும் யாரிடமும் கோபம் காட்டக்கூடாது குணமுனிவர்களே! யாருக்கும் சாபம் கொடுக்க கூடாது சாஸ்திர முனிவர்களே! நாராயணராகிய என்னுடைய

பலங்களை நீங்கள் நன்றாக அறிந்திருப்பீர்கள். ஆகவே சீரான பொறுமையோடு எல்லாவற்றையும் பார்த்து இருக்க வேண்டும்.

மேலும் வைகுண்டர் வாழுகின்ற அந்த தலத்தின் அருகே மேல் மூலையில் ஒருவரும், வடக் கீழ் முலையில் இன்னொருவருமாக தர்மயுகம் தோன்றுகின்ற தருணம் வரை காத்திருக்க வேண்டும் என்று இரண்டு முனிவர்களிடமும் சொல்லி, நீங்கள் இப்போது வைகுண்டரோடு செல்லுங்கள் என்றார். இரண்டு முனிவர்களும் உடனே சம்மதித்தார்கள். உடனே வைகுண்டர் உள்ளம் மகிழ்ந்து கடலை விட்டு கடற்கரையில் செல்லும் முன்பாக தேவாதி தேவர்களெல்லாம் திருமுறையும் இட்டு ஆவலாதியாக அபயமிட்டார்கள்.

**வினா விடை** :

1. “உகபரனார் நோக்கி உரைக்கிறார் அன்போரே” இங்கு கூறப்பட்ட உகபரனார் என்பவர் யார்?
   நாராயண மூர்த்தி

2. பண்டுள்ள ஆகுமம்போல் பால் வண்ணார் பெற்றெடுத்தவர் யார் ?
   அய்யா வைகுண்டர்

3. “பண்டுள்ள ஆகுமம்போல் பால் வண்ணார் பெற்றெடுத்த” இதில் கூறப்பட்டுள்ள பால்வண்ணர் என்பவர் யார்?
   அய்யா வைகுண்டர்

4. அய்யா வைகுண்டர் எங்கு பள்ளி கொள்வதற்காக கூறினார் ?
   தெட்சணத்தில்

5. வைகுண்டர் நாராயண மூர்த்தியிடம் தெட்சணம் செல்வதற்கு எதன் படி அனுப்பி வைக்க கேட்டுக் கொண்டார்?
   ஆதி ஆகமத்தின் படியே அனுப்பிவையும் புவியில் என்று கேட்டுக் கொண்டார்.

6. நாராயண மூர்த்தி மகனிடம் எதனுடைய சிறப்பை கண்டாயோ என்று கேட்டார்?
   கடலின் சிறப்பை கண்டாயோ என்று கேட்டார்

7. நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் மகனே உன்னை விட்டு எங்கு நான் வாழ்வேனோ என்று கேட்டார்?
மறுவூரு வாழ்வேனோ என்று கேட்டார்

8. வைகுண்டரிடம் நகம் சதையும் போல் நான் கூட வருவேன் என்றுக் கூறியவர் யார்?
நாராயணமூர்த்தி

9. வைகுண்டரிடம் நாராயணமூர்த்தி நகமும் சதையும் போல் வருவதாக கூறிய தன் உட்பொருள் என்ன?
வைகுண்டமாக வந்திருப்பது நாராயண மூர்த்தியே, நாராயணமே வைகுண்டம் ஆகவே நகம் சதையும் போல் என்றார். எப்படி நகத்தையும் சதையும் பிரிக்க முடியாதோ அதுபோல வைகுண்டத்தையும் நாராயணத்தையும் வேறு வேறு என்று பிரிக்க முடியாது.

10. நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் வைகுண்டரை எவ்வாறு பெற்றெடுத்ததாக கூறினார்?
எத்தனையோ கோடி இயல தர்மம் செய்துப் பெற்றெடுத்ததாக கூறினார் .

11. வைகுண்ட அவதாரம் நிகழ்வதற்கு முன்பாக நாராயண மூர்த்தியின் உடைய நிலை என்ன?
தாயில்லா பிள்ளையை போல் தட்டழிந்த நிலையில் இருந்தார்.

12. வைகுண்டரை அவதாரம் நிகழ்ந்த பிறகு நாராயண மூர்த்தியின் உடைய நிலை என்ன?
மனச்சடைவு எல்லாம் தீர்ந்து சுகமாக இருந்தார்.

13. நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் யார் யாரெல்லாம் வைகுண்டரோடு வருவதாக கூறினார்?.
நாராயண மூர்த்தியும் தாய் லட்சுமி தேவியும்.

14. வைகுண்டர் நாராயண மூர்த்திக்கு கூறிய பதில் யாது?
நீங்கள் எல்லோரும் என்னோட வருவது எனக்கு மிக சந்தோஷம் என்று தந்தையினுடைய பாதம் பணிந்தார்.

15. தெட்சணம் நோக்கி வைகுண்டர் வருகின்ற போது நாராயணமூர்த்தி வைகுண்டருக்கு கூறிய உபதேசம் என்ன?

யுகம் ஈரேழும் காண உரைத்து விடு யாமம் என்று கூறினார்.

16. யாமம் என்பது என்ன ?
கலியுகத்தில் மக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள்.

17. முன் நடந்து யாமும் பிசகாமல் நடத்தி வைக்க வருவதாக கூறியவர் யார்? நாராயண மூர்த்தி

18. நடத்திவிட்ட யாமம் அனுப்போல் பிசகாமல் காட்டிவிப்பேன் என்று கூறியவர் யார்?
நாராயண மூர்த்தி

19. “தட்டி மையால் உன் வாக்கால் தானுரைத்த யாமம் எல்லாம் நடத்தி வைக்க வாரேன் யென்மகனே உன் பிறகே” என்று கூறியவர் யார் ?
நாராயண மூர்த்தி

20. “கடல் திரைவாய் பதிகள் கண்டு சென்று தான் இரு நீ” என்று யார் யாரிடம் கூறியது ?
நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் கூறியது.

21. நாராயணமூர்த்தி வைகுண்டரிடம் தெட்சணத்தில் வந்து மக்களுடைய சஞ்சல நோய்பிணி நொம்பலங்களை எவ்வாறு தீர்க்க வேண்டும் என்று கூறினார்?
தண்ணீர் மண்ணீந்து அதாவது தண்ணீராலும் மண்ணாலும்

22. “கண்ணில் உரு காணும் கைக்குள் ஒரு கிள்ளைவரும்” இதனுடைய உட்பொருள் என்ன?
வைகுண்டர் வகுத்து காட்டிய வாழ்வியல் நெறிகளைப் பின்பற்றி வாழுகின்றவர்களுக்கு இறைவனை தன்னுள்ளே கண்டு கொள்ளலாம்.

23. “பகைவன் மடிவான் பைங்கிள்ளை யங்காகும்” என்றுக் கூறியிருப்பதனுடைய உட்பொருள் என்ன?
தன்னுள்ளே இறைவனை கண்டவர்களுக்கு தனக்குள் இருக்கின்ற கலிமாய எண்ணங்கள் அழிந்து போய்விடும். அவ்வாறு அழிந்து போன பிறகு இறைவனை அங்கு கண்டுகொள்ள முடியும் என்றுக் கூறுகின்றார் .

24. “உகவன் வருவான் ஒருவன் அறிவான் கான்” இதில் கூறப்பட்டுள்ள உகவன் என்பது என்ன?
பரப்பிரம்மம்

25. “உகவன் வருவான் ஒருவன் அறிவான் கான்” இதில் கூறப்பட்டுள்ள உட்பொருள் என்ன?
உண்மையான இறை சக்தியை (பரபிரம்மத்தை) தன்னுள்ளே கண்டு கொண்டவர்களுக்கு யார் உண்மையான இறைவன் என்பதை உணர்ந்து கொள்ள முடியும் என்று கூறுகின்றார்.

26. “பகவான் சுழற்றும் பார் உலகம் பழுக்கும்” என்றுக் கூறியதனுடைய உட்பொருள் என்ன?
இறைவனை தன்னுள்ளே கண்டு கொண்ட மக்கள் அதிகரிக்கின்ற அந்த வேளையிலே உலகம் முழுவதும் கலி இருள் மறையும். அப்போது தர்மக வாழ்வை பெறுவதற்கு மக்கள் தகுதி உடையவர்களாக மாறுவார்கள் என்பது ஆகும்.

27. “அகம் காணும் பாந்தள் அஞ்சாச்சரம் காணும்” இதில் கூறப்பட்டுள்ள அகம் காணும் பாந்தள் என்பது என்ன? அஞ்சாச்சரம் என்பது என்ன?
அகங்காணும் பாந்தள் - குண்டலினி சக்தி (உலக பற்றை விடும் போது)
அஞ்சாச்சரம் காணும் – இறை சக்தி

28. “மூர் சிரசு யீர் சிரசு முகா சிரசு முன் காணும் பார் சிரசு கண்டு வாறேன் என்பாலகனே” யார் யாரிடம் கூறியது?
நாராயணமூர்த்தி வைகுண்டரிடம்

29. சந்த முனி என்பவர்கள் யார்?
கலைமுனி ,ஞானமுனி

30. “பகையாதே என் மகனே பஞ்சவரைக் காத்துக்கொள்ளு” இதில் கூறப்பட்டுள்ள பஞ்சவர்கள் யார் ?
சான்றோர்கள்

31. “அஞ்சு பூ கொண்டு ஆச்சாரம் செய்தவற்கு வஞ்சகம் இல்லாத வாழ்வு கொடு என் மகனே” யார் யாரிடம் கூறியது?
நாராயணமூர்த்தி வைகுண்டரிடம்

32. ஐந்து பூ என்பதை யாது?
மெய், கண் வாய், மூக்கு, செவி.

33. “அஞ்சு பூ கொண்டு ஆச்சாரம் செய்தவற்கு வஞ்சகம் இல்லாத வாழ்வு கொடு என் மகனே” இதன் உட்பொருள் என்ன?
மெய், கண் வாய், மூக்கு, செவி.ஆகியவற்றால் பிறருக்கு எந்தவித தீங்கும் செய்யாதவர்களுக்கு நல்வாழ்வு அருள வேண்டும் என்பதாகும்.

34. நாராயண மூர்த்தி கலைமுனி ஞான முனியை வைகுண்ட ரோடு அனுப்பி எதைப் பார்த்திருக்க வேண்டும் என்று கூறினார்?.
வைகுண்டருடைய சீரான பொறுமையை

35. நாராயண மூர்த்தி கலியுகத்தில் தான் செய்ய கூறிய தவத்தை வைகுண்டர் சரியாக நிறைவேற்றுகிறாரா என்பதை பார்த்திருக்க வேண்டும் என்று யாரிடம் கூறினார்.?
கலைமுனி, ஞான முனி

36. நாராயணமூர்த்தி கலைமுனி, ஞான முனியை எங்கு இருப்பதற்கு கட்டளை இட்டார்?
வைகுண்டர் வாழும் தலத்தில் மேற்கு மூலையில் ஒருவரும் வடக்கீழ் மூலையில் ஒருவரும் ஆக இருக்க வேண்டும் என்றுக் கட்டளையிட்டார்.

37. வைகுண்டர் கடலை விட்டு கரையிலே வந்த உடனே நிகழ்ந்தது என்ன? தேவாதி தேவர்களெல்லாம் திருபாட்டு ஓதினார்கள்.

38. தேவர் துயரமெல்லாம் தீர்ப்போங்கா ணென்று என்று வைகுண்டர் யாரிடம் உறுதியளித்தார்?
நாராயாணமூர்த்தியிடம்

39. மேவலர்கள் போற்றும் வகையில் அவதரித்தவர் யார்?
விசயவை குண்டராசர்

40. மேவலர்கள் என்பவர் யார்?
பகைவர்

41. உகப்பரனார் என்பவர் யார்?

நாராயாணமூர்த்தி

42. வைகுண்டருக்கு ஞான உபதேசமாகிய விஞ்சை அருளியவர் யார்?
நாராயாணமூர்த்தி

43. வைகுண்டர் தெச்சணம் நோக்கிச் செல்ல யாரிடம் விடைதாரும் என்று கேட்டார்?
நாராயாணமூர்த்தியிடம்

44. வைகுண்டர் நாராயண மூர்த்தியிடம் எந்த முறை படி தெட்சணம் நோக்கி அனுப்பிவையும் புவியில் சுவாமி யெனத்தொழுதார்?
ஆதியாகமப்படியே

45. வைகுண்டர் நாராயண மூர்த்தியிடம் தெட்சணம் நோக்கி அனுப்பிவையு மம்புவியில் என்று பணிந்த போது நாராயண மூர்த்தி கூறியப் பதில் என்ன?
நகமுஞ் சதையும்போல் நான்வருவே னுன்கூட என்றுக் கூறினார்.

46. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் எவ்வளவு தர்மம் செய்து பெற்றெடுத்ததாக கூறினார்?
எத்தனையோ கோடி இயல்தர்மஞ் செய்துவுன்னைப் பெற்றெடுத்தேன் என்றுக் கூறினார்.

47. "**நீயொருவ னெனக்கு நிலையென்று காணுமுன்னே தாயில்லாப் பிள்ளையைப்போல் தட்டழிந்தே னென்மகனே**" யார் யாரிடம் கூறியது?
நாராயண மூர்த்தி வைகுண்டரிடம்

48. நாராயண மூர்த்தி யாரைக் கண்டு தன்னுடைய மனசடவை தீர்த்ததாகக் கூறினார்?
வைகுண்டரை கண்டு தன்னுடைய மனசடவை தீர்த்ததாகக் கூறினார்.

49. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் தெட்சணம் நோக்கிச் செல்லும் போது யார் யார் உடன் வருவதாக கூறினார்?
நாராயண மூர்த்தியும் தாய் லெட்சுமி தேவியும்
நாராயண மூர்த்தி வைகுண்டரிடம்

50. உகமீ ரேழுங்காண உரைத்துவிடக் கூறிய யாமமது எது?
நாராயணரே தன்னுடைய பத்தாவது அவதாரம் வைகுண்டம் என அவதரித்திருக்கிறார் என்பதாகும்.

51. "**முன்னடந்து யாமம் மொழிந்துநட என்மகனே
பின்னடந்து நானும் யாமம் பிசகாமல்
நடத்திவைப் பேன்மகனே நல்லமணி மரகதமே**"

52. யார் யாரிடம் கூறியது?
நாராயண மூர்த்தி வைகுண்டரிடம்

53. "**அடத்திவிட்ட யாமமது அனுப்போல் பிசகாமல்
காட்டுவிப்பேன் மகனே கண்ணேநீ முன்னடநீ**" யார் யாரிடம் கூறியது?
நாராயண மூர்த்தி வைகுண்டரிடம்

54. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் தெட்சணம் செல்லும் முன்பாக எந்த பதிகளைப் பார்த்துச் செல்லக் கூறினார்?
கடல்திரைவாய்ப் பதிகள்

55. "**கண்ணி லுருக்காணும் கைக்குளொரு கிள்ளைவரும்
பகைவன் மடிவன் பைங்கிள்ளை யங்காகும்**" இதில் கூறப்பட்டுள்ளச் செய்தி யாது?
அய்யா நாராயணர் சொன்ன நெறிப்படி வாழ்பவருக்கு ஒவ்வொன்றாக மனதில் தோண வைப்பேன் என்பதாகும். அதன்படி வாழ்ந்து வரும் போது தீய எண்ணம் கொண்டவர்கள் அழிந்துப் போவார்கள்.

56. "**உகவன் வருவான் ஒருவ னறிவான்காண்
பகவான் சுழற்றும் பாருலக மும்பழுக்கும்**" யார் யாரிடம் கூறியது?
நாராயண மூர்த்தி வைகுண்டரிடம்

57. "**அகங்காணும் பாந்தள் அஞ்சாட்சரங் காணும்
மூசிர சீர்சிரசு முகாசிரசு முன்காணும்
பார்சிரசு கண்டு வாறேனென் பாலகனே**" யார் யாரிடம் கூறியது?
நாராயண மூர்த்தி வைகுண்டரிடம்

58. "அகங்காணும் பாந்தள் அஞ்சாட்சரங் காணும்" என்பது என்ன?
இறைவனை தன்னுள் கண்டவர்களால் இந்த பிரபஞ்ச சக்தியை தன்னுள் உணர்ந்து கொள்ள முடியும்.

59. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் யாரிடம் பகைக்கொள்ளாமல் காத்துக் கொள்ள வேண்டும் என்றுக் கூறினார்?
பஞ்சவரை

60. நாராயண மூர்த்தி வைகுண்டரிடம் யாருக்கு வஞ்சகம் இல்லாத வாழ்வுகொடுக்க வேண்டும் என்றுக் கூறினார்?
அஞ்சுபூக் கொண்டு ஆசாரஞ் செய்தோர்க்கு
வஞ்சக மில்லாத வாழ்வுகொடு என்மகனே என்றுக் கூறினார்.

61. அஞ்சுபூக் கொண்டு ஆசாரஞ் செய்தோர் யார்?
தன்னுடைய ஐம்புலன்களாலும் பிறருக்கு எந்தவிதமான தீமையும் செய்யாமல் யார் வாழ்கிறார்களோ அவர்களே அஞ்சுபூக் கொண்டு ஆசாரஞ் செய்தோர்கள் ஆவார்.

62. வைகுண்டரோடு அனுப்பப்பட்ட இரண்டு முனிகள் யார் யார்?
கலை முனி, ஞான முனி

63. கலை முனி, ஞான முனிக்கு நாராயணர் இட்ட கட்டளை யாது?
கோபங்காட்டக்கூடாது,
சாபங் இடக்கூடாது என்றுக் கட்டளை இட்டார்.

64. நாரா யணர் கலை முனி, ஞான முனியிடம் வைகுண்டர் செய்யும் காரியங்களை எவ்வாறு பார்த்து இருக்கக் கூறினார்?
சீரான பொறுதியுடன் கண்டிருங்கோ என்றுக் கூறினார்.

65. வைகுண்டரை பார்த்து தேவர்கள் எப்போது அபயமிட்டனர்?
திருப்பார் கடலுக்குள் வைத்தா? இல்லை கரையில் வந்தப் பிற்பாடா?
திருப்பார் கடலுக்குள் வைத்து

66. தேவரெல்லாம் ஆவலா தியாக யாரை நோக்கி அபயமிட்டார்கள்?
வைகுண்டரை நோக்கி

## நாள்-8

வேறு

நாராயணாதீரா நல்லநாகந்தனில்த்துயில்வாய்
நாடுங்கலி கேடுவரும் நாதா உமக்கபயம்
சீராய்ப்புவி யாளவரு வாயே உமக்கபயம்
சிவசிவனேசர சரணம்மகா சிவனே உமக்கபயம்
பாராயேழை முகமேபரா பரமே உமக்கபயம்
பாலர்தெய்வச் சான்றோர்படுந் துயரந் தனைமாற்றும்
நாராயண தீராநல்ல நாகந் தனில்துயில்வாய்
நலமோவுனக் கிதுநாள்வரை நாங்கள் படும்பாடு
கடல்மேல்துயில் கண்ணாகனி கண்டே கன்றையெறிந்தாய்க்
களமேபெலி கொளவேகூளி களிக்க லங்கையழித்தாய்க்
குடைபோல் குன்றை யெடுத்தாய்
முப்புர கோட்டை தனையெரித்தாய்க்
கோனினிடை மாதரிணைக் கோனா கவேவளர்ந்தாய்க்
காடேகாலி மேய்த்தாய்ப்புனல் களியன் தனைவதைத்தாய்க்
கஞ்சன்தனை வதைத்தாய்பெலக் காரர்பெலம் வதைத்தாய்
மாடேமேய்த்துத் திரிந்தாய்வலு மாபலியைச் சிறைவைத்தாய்க்
கோசலாபுவி யாண்டாய்வலுக் குகனை மிகக்கண்டாய்க்
குறோணிதனை வதைத்தாய்வலு குண்டோமசா
லியைக்கொன்றாய்க்
கொல்லதில்லை மல்லன்கொடுஞ் சூரன் தனைவதைத்தாய்
ஈடாய்வலு இரணியன்குடல் ஆறாயோடக் கொன்றாய்
இரக்கமற்ற துரியோதனன் அரக்கர் குலமறுத்தாய்
இன்னங்கலி நீசக்குலம் கொல்ல வரம்பெற்றாய்
ஏழைக்குடி சாதிகட்கு மீள விடைகொடுத்தாய்

எழுந்துதெட்ச ணாபுவியில் இரங்கி வரவேணும்
மாளக்கலி தாழநரகம் வீழ வரம்பெற்றாய்
வாய்த்தகுல சான்றோரரவர்க் கேற்ற வரம்பெற்றாய்
வரவேணுந் தெட்சணாபுரி மலைபோ லுயர்ந்துபோகு
தேசக்கலி தீதுவநி யாயம் பொறுக்கரிதே
சிவனேவைந்த ராசேதெச்ச ணாபு வியில்போவோம்
கேட்பாரில்லை யெனவேபேய்கள் கீழும் மேலுஞ்சாடுது
கிருஷ்ணாமகா விஷ்ணுவேவுன் கிருபை யிரங்கவேணும்
தாண்மைக்குலச் சான்றோருன்னைத் தவத்தால் தேடிவருந்துன்
தாயுமவர் தகப்பன்சுவாமி தானே யல்லாலுண்டோ
சர்வபரா சுவாமிசிவ சுவாமி யுமக்கபயம்
சாணார்படுந் துயரங்கண்டு சுவாமி யெழுந்தருள்வாய்
ஆற்றிலலைக்கோரை யைப்போல் அலைவதுந் தெரியாதோ
அரியேசிவகெதியேயென அபயமிடுகுதய்யா
அணைப்பாருன்றன் துணையேயல்லால் அவர்க்கே ஏதுமுண்டோ
பலநாளவர் படும்பாட்டெல்லாம் பார்த்தே யிருந்தாயோ
பயமோ அவரிடம் போகினுஞ் செயமோ சொல்லுமையா
பாலரவ ருமக்கேயல்லா பாரா திருப்பாயோ
ஆருமற்றார் போலேயவர் அலைவ துந்தெரியாதோ
அரனேசிவ மருகாவுனக் கபயம் உனக்கபயம்
அவரால்நாங்கள் படும்பாடெல்லாம் அறியல் லையோசுவாமி
ஆதிமுறை யாகமத்தை அழித்துச் சொல்லுறோமோ
அதுதான்பொய்யோ மெய்யோவென் றாகமந் தனைப்பாரும்
அண்டரண்டந் தொழவேவரும் ஆதி யுமக்கபயம்
அரகராசிவ அரனேசிவ அரசே யுமக்கபயம்
ஆதிசிவ னாதிதவ மோதி யுமக்கபயம்
ஐயுங்கிலி சவ்வுங்கிண அரனே யுமக்கபயம்
அம்மாஆதி அய்யாசிவ மெய்யா உமக்கபயம்
அரசேதெச்ச ணாபுவியில் வரவேணு முமக்கபயம்
அந்தக்கலி திந்தெய்யென் றறவே வரவேணும்
அத்திடக்கலி செத்திடக்கலி அறவே வரவேணும்
அய்யக்கலி தீயாவியே அறவே வரவேணும்
அவகடக்கலி சவகேடாக அழிக்க வரவேணும்
ஐம்பத்தாறு சீமையொரு
குடைக்குள் அரசாள்வாயுமக்கபயம்
அத்தாவுமக் கபயம்சிவ முத்தா வுமக்கபயம்
ஆதிநா ராயணர்க்குப் பால னானகுணதீரா

ஆதியுமக் கபயம்சிவ சோதி யுமக்கபயம்
அரனேசிவ னார்க்குமருக னான குணபாலா
அலைவாய்க் கரைமடமாம்பதி ஆள்வா யுமக்கபயம்
அய்யாவை குண்டாஅலை கண்டா யுமக்கபயம்
தாணுமா லயனாய்ப்பேரு தழைக்க சிவமுளைக்க
தானாயொரு குடைக்குள்தர்மத் தரணி யாளவந்தாய்
சாணாக்குரு வேதக்குரு தானானா யுமக்கபயம்
தாண்டும்பதி கூண்டப்பதி தானானா யுமக்கபயம்
தவமேதெச்ச ணாபூமியில் தானே வருவாயே

**வினா விடை**:

1. நாகந்தனில் துயின்றவர் யார்?
   நாராயணர்

2. கலிக்கு கேடுவரும் பொருட்டு அவதரித்தவர் யார்?
   அய்யா வைகுண்டர்

3. தேவர்கள் யாரிடம் சீராய்ப்புவி யாளவர வேண்டும் என அபயம் இட்டனர்?
   அய்யா வைகுண்டர்

4. தேவர்கள் தெய்வச் சான்றோர்படுந் துயரந் தனைமாற்ற வர வேண்டும் என்று யாரிடம் முறையம் இட்டனர்?
   அய்யா வைகுண்டர்

5. கடல்மேல் துயின்றவர் யார்?
   நாராயணர்

6. கடல்மேல் துயின்றவர் கலியுகத்தில் யாராக அவதாரம் எடுத்திருக்கிறார்?
   அய்யா வைகுண்டர்

7. "களமேபெலி கொளவேகூளி களிக்க லங்கையழித்தாய்" இதில் இலங்கையை அழிப்பதற்கு நாராயணர் எடுத்த அவதாரம் எது?
   இராமவதாரம்

8. நாராயணர் குடைபோல் குன்றை யெடுத்து யாரைக் காப்பாற்றினார்?
யாதவ குலத்தவர்களைக்  காப்பாற்றினார்.

9. நாராயணர் முப்புர கோட்டையை யார் மூலம் எரித்தார்?
சிவப் பெருமான்

10. கோனினிடை மாதர் யார்?
யாதவ குலப் பெண்கள்

11. கோனினிடை மாதரிடம் கோனாக வளர்ந்தவர் யார்?
நாராயணர்( கிருஷ்ணர்)

12. கோன் என்பவர் யார்?
அரசன்

13. காடுகள் தோறும் கன்று காலிகளை மேய்த்தவர் யார்?
கிருஷ்ணர்

14. காலி  என்பது என்ன ?
பசுக்கள்

15. காளியன்  என்ற அசுரனை வதைப்பதற்கு நாராயணர் எடுத்த அவதாரம் எது?
கண்ண அவதாரம் (கிருஷ்ண அவதாரம்)

16. கஞ்சன் என்ற கம்சனை வதம் செய்ய நாராயணர் எடுத்த அவதாரம் எது?
கண்ண அவதாரம் (கிருஷ்ண அவதாரம்)

17. ஆயர்குல மக்களோடு மாடு மேய்த்துத் திரிந்த அவதாரம் எது?
கிருஷ்ண அவதாரம்

18. மாபலியைச் சிறைவைத்த அவதாரம் எது?
வாமண அவதாரம்

19. கோசலாபுரியை ஆண்டவர் யார்?

இராமர்

20. கோசலாபுரி என்பது எந்த பகுதியைக் குறிக்கிறது?
அயோத்தி

21. அய்யா நாராயணர் தன்னுடைய எந்த அவதாரத்தின் போது குகனை சந்தித்தார்?
இராம அவதாரம்

22. இராம அவதாரத்தின் போது குகனை தன் தம்பியாக ஏற்றுக் கொண்டதன் மூலம் அய்யா நமக்கு உணர்த்தும் வாழ்வில் என்ன?
இறைவனின் முன்பு அனைவரும் சமம். இறைவனுக்கு குலம் கோத்திரம் என்ற வேறுப்பாடு கிடையாது. ஒன்றேகுலம் ஒருவனே தேவன்.

23. குறோணிதனை வதைத்தவர் யார்?
நாராயணர் திருமாலாக இருந்து வதைத்தார்.

24. நாராயணர் திருமாலாக இருந்து வதைத்த அசுரர்கள் யார் யார்?
குறோணி,குண்டோமசாலி,தில்லை மல்லாளன், மல்லோசி வாகனன்.

25. இரணியன் குடல் ஆறாயோடக் கொன்றவர் யார்?
நாராயணர் நரசிம்ம அவதாரம்

26. நாராயணர் எவ்வாறு அவதாரம் எடுத்து இரணியனின் குடலை பிளந்துக் கொன்றார்?
நரசிம்ம அவதாரம்

27. துரியோதனன் எத்தகைய குணம் உடைய அரக்கன்?
இரக்கமற்ற அரக்கர்கள்

28. துரியோதனன் குலமழிவதற்கு காரணம் என்ன?
துரோதனாதிகளின் இரக்கமற்ற பேராசை குணம்.

29. கலி நீசக்குலங்களைக் கொல்ல வரம்பெற்று வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

30. சான்றோர் குல மக்களை மேன்மையுடையவர்களாக்க வரம்பெற்றவர் யார்?
அய்யா வைகுண்டர்

31. யாருடைய வருகைக்கு பிறகு தெட்சணாபுரி மலைபோ லுயர்ந்த நிலையை அடைந்தது.?
அய்யா வைகுண்டர்

32. அய்யா வைகுண்டரின் வருகைக்கு முன்னால் பேய்களின் நிலை என்ன?
கேட்பதற்கு யாரும் இல்லை என்று பேய்கள் மக்களுக்கு அதிக துன்பங்களைக் கொடுத்தன.

33. தாண்மைக்குலத்தோர்கள் யார்?
சான்றோர்கள்

34. கலியுலகில் சன்றோர் மக்கள் கடைப்பிடித்த தவம் எது?
இல்லறத்தவம்

35. ஆற்றிலலைக்கோரை யைப்போல் அலைந்தவர்கள் யார்?
சான்றோர்கள்

36. அண்டரண்டந் தொழவேவரும் ஆதி யார்?
அய்யா வைகுண்டர்.

37. ஐம்பத்தாறு சீமையொரு குடைக்குள் அரசாள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்.

38. ஆதிநா ராயணர்க்குப் பால னானகுணதீரர் யார்?
அய்யா வைண்டர்

39. சிவ னார்க்குமருக னான குணபாலான் யார்?
அய்யா வைகுண்டர்.

40. அலைவாய்க் கரைமடமாம்பதி ஆள வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்.

41. முப்பொருளும் ஒரு பொருளாக தாணுமா லயனாய் அவதரித்தவர் யார்?
அய்யா வைகுண்டர்.

42. தர்மத்தால் தரணி யாளவந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்.

43. வேதக்குருவாக தானாய் சமைந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்.

விருத்தம்

தெச்சண மீதே வந்து தெய்வமா யிருந்து கொண்டு
மிச்சமாய் புதுமை காட்டி மேதினி யெவருங் காண
உச்சமே சான்றோர்க் கீந்து உதவியுஞ் செய்வா யென்று
பச்சமாய்த் தேவ ரெல்லாம் வைந்தரின் பதத்தில் வீழ்ந்தார்

விருத்தம்

வீழ்ந்திடக் கண்டு வைந்தர் விடையுள்ள தேவர் தம்மைச்
சோர்ந்திட மொழிகள் சொல்லி தேவரே பதற வேண்டாம்
ஓர்ந்திட எனக்கு முன்னே உள்ளது தானே யென்று
கூர்ந்திட வுரைத்தீ ரெல்லாம் குணமுடன் மகிழ்ந்து சொல்வார்

விருத்தம்

தெய்வ மாதர்கள் தாம்பெற்ற தேவரே சான்றோர்க் கெல்லாம்
மெய்வரம் பதுபோல் ஞாயம் விளம்பிடப் பேறு பெற்றேன்
பொய்வரம் பசாசு எல்லாம் பொன்றுற வரங்கள் பெற்றேன்
அய்வரைக் காத்துத் தர்ம அரசுக்கும் பேறு பெற்றேன் விருத்தம்

ஒருகுடை யதற்குள் ளாள ஒருவிஞ்சை யதிகம் பெற்றேன்
கருவுடை யோர்க்குங் காண கனவரம் பெற்றே னானும்
மறுகிநீர் தவிக்க வேண்டாம் வருவேனான் சான்றோ ரண்டை
குறுகலி யதனைத் தாண்டிக் கொள்வேனென் குலத்தைத் தானே

விருத்தம்

என்னையே கெணியா வண்ணம் ஏழையா யிருந்த சான்றோர்
தன்னையே பழித்தோ ரெல்லாம் சளமது துயரங் கொண்டு
அன்னீத நரகந் தன்னில் அகப்படத் தள்ளித் தள்ளிக்
கொன்றுநான் சான்றோர்க் கெல்லாம் கொடுப்பேன் மேற்பவிசு தானே

விருத்தம்

எல்லாஞ் சான்றோர் கையாலே எள்ளும் நீரும் கலிக்கிறைத்து
பொல்லாக் கலியை நரகமதில் புக்க அடித்துப் பேயோடு
கொல்ல விடைகள் கொடுப்பேனான் கூண்ட சான்றோர் கையதிலே
வல்லோர் புகழுந் தேவர்களே மனமே சடைக்க வேண்டாமே

விருத்தம்

வேண்டா மெனவே தேவருக்கு விடைகள் கொடுத்து வைகுண்டரும்
கூண்டாங் கடலின் கரைதாண்டி குதித்தே கரையி லோடிவந்து
தாண்டாய் முன்னே பெற்றதொரு தாய்க்கோர் சடல வுருக்காட்டி
ஆண்டா ராணை யொருவருக்கும் அகலா தெனவே யாணைகொண்டார்

விருத்தம்

நானோ பிறந்த சமுத்திரத்தின் நடுமேற் கடலி லன்னாபார்
ஏனோ பதியும் மேடைகளும் எண்ணிப் பாரு தேர்நிறமும்
மானோ பொன்னோ மண்டபமோ வறடே யுனக்குச் சாட்சியிது
யானோ காட்டுஞ் சொரூபமெல்லாம் யாதா யிருநீ மறவாதே

விருத்தம்

பதமே பதமே பாற்கடலின் பாலை யகமே கொள்ளுவென
இதமாய் இதமாய்ச் சொல்லிடவே இசையா வண்ணம் வீழ்ந்திடவே

உதயம் உதயம் வெளித்திறந்த உருவை யொருவர்க் குரையாமல்
இதையே யிதையே மறந்துஎன்னை இளப்பம் பேசிநெகிழா
தென்றார்

விருத்தம்

ஆண்டா யிரத்து எட்டுமுன்னே அன்னை யெனவே நீயிருந்தாய்
கூண்டா மெட்டா மாசியிலே குணமாய் நாரா யணர்மகவாய்
சான்றோர் கெதிகள் பெற்றிடவே தர்ம குண்டம் பிறந்துவொரு
கூண்டாங் குடைக்கு ளரசாளக் கொண்டே போறேன் கண்டிருநீ

## **வினா விடை**:

1. தெட்சணத்தில் வந்து தெய்வமாக இருந்தவர் யார்?
   அய்யா வைகுண்டர்

2. தெட்சணத்தில் வந்து புதுமைகள் காட்டியவர் யார்
   அய்யா வைகுண்டர்

3. சான்றோர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று யார் அய்யா வைகுண்டரிடம் வேண்டினார்கள்?
   தேவர்கள்

4. தேவர்களுக்கு அய்யா கூறிய பதில் யாது?
   தேவர்களே பதற வேண்டாம் நான் சான்றோர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்வேன் என்று கூறினார்.

5. வைகுண்டர் தேவர்களிடம் நான் எத்தகைய வரங்களை பெற்று வந்ததாக கூறினார்?
   சான்றோர்களுக்கு நல்வாழ்வு அருள கூடிய எல்லா வரங்களையும் பெற்று வந்திருக்கிறேன் என்று கூறினார்.

6. அய்யா வைகுண்டர் யாருக்காக வைகுண்ட அவதாரம் எடுத்திருப்பதாக தேவர்களிடம் கூறினார்?
   தெய்வமாதர்கள் பெற்ற சான்றோர் மக்களுக்காக

7. பரம்பொருளாகிய அய்யாவோடு ஐக்கியம் ஆக வேண்டும் என்றால் நான் கடைபிடிக்க வேண்டியது எது?
வாழ்வில் எப்போதும் உண்மையை கடைபிடிக்க வேண்டும்.

8. அய்யா வைகுண்டர் யாருக்காக வைகுண்ட அவதாரம் எடுத்திருப்பதாக தேவர்களிடம் கூறினார்?
தெய்வமாதர்கள் பெற்ற சான்றோர் மக்களுக்காக .

9. வைகுண்டர் சான்றோர் மக்களுக்கு எத்தகைய பேறு அருளுவதற்காக வந்திருப்பதாக கூறுகின்றார்?
மெய் வரம்பு தவறாது உண்மை நெறியை வாழ்வில் கடைபிடித்து வாழ்வதற்குரிய வழிகளை வகுத்து கொடுப்பதற்கான வரங்களைப் பெற்று வந்திருப்பதாக கூறுகின்றார்.

10. வைகுண்டர் எவ்வற்றை அழிப்பதற்காக வரங்களை பெற்று வந்திருக்கின்றார்?
பொய், பிசாசு, கோள், குண்டனி, பேராசை எல்லாம் அழிக்கப்படுவதற்காக வரங்களை பெற்று வந்திருக்கின்றார்.

11. உலகை ஒரு குடைக்குளாவதற்காக வரம் பெற்று வந்தவர் யார்?
அய்யா வைகுண்டர்

12. கனவரம் என்பது என்ன?
அதிக வரம்

13. கருவுடையோர் என்பவர் யார்?
தீய எண்ணம் உடையவர்கள்.

14. வைகுண்டருடைய குலம் எது?
நல்லெண்ணம் கொண்டவர்கள் வாழும் குலம்.

15. சான்றோர்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வதாக கூறினார் ?
கலியிலிருந்து விடுவித்து சான்றோர் மக்களைப் பாதுகாத்துக் கொள்வதாக கூறினார்.

16. அய்யா வைகுண்டர் வகுத்து தந்த வாழ்வியல் நெறியை பின்பற்றாதவர்களின் நிலை என்ன?

பல நிலைகளில் துயரம் அடைந்து நரகில் வீழ்வார்கள்.

.

17. நரகத்தில் தள்ளப்படுபவர் யார்?
கலி நீசர்கள்

18. அய்யா வைகுண்டர் யாரை அழித்து சான்றோர்களுக்கு மேல் பவுசு கொடுப்பதாக கூறினார்?
கலி நீசர்களை அழித்து நரகில் தள்ளிய பின் சான்றோர்களுக்கு மேல் பவுசு கொடுப்பதாக கூறினார்.

19. அய்யா வைகுண்டர் யாருடைய கையால் கலி அழிக்கப்படுவதாக கூறினார்?
சான்றோர் மக்களுடைய கையால்

20. அய்யா வைகுண்டர் யாருடைய கையால் கலி அழிக்கப்படுவதாக கூறினார்?
சான்றோர் மக்களுடைய கையால்

21. சான்றோர்கள் எவ்வாறு கலி அழிப்பதாக சொன்னார்?
எள்ளும் நீரும் கலிக்கிறைத்து கலியழிப்பதாக கூறினார்.

22. வைகுண்ட அவதாரம் நிகழ்ந்த பிற்பாடு யாருக்கு சடல உரு காட்டினார்?
சம்பூரண தேவனைப் பெற்ற தாய்க்கு

23. சம்பூரண தேவனைப் பெற்ற தாய்க்கு அய்யா சடலவுரு ஏன் காட்டினார்?
சம்பூரணனை பெற்ற தாய் மகன் முக்தி என்றப் பேறினைப் பெற்றதை அறியாமல் கடற்கரையில் மகன் வருவான் என்று காத்திருந்த காரணத்தினால் சடல உருவை காட்டினார்.

24. சம்பூர்ண தேவனுடைய தாய்க்கு வைகுண்டர் காட்டிய காட்சி எது?
முக்தி பெற்ற ஆன்மாக்கள் இருக்கக்கூடிய அந்த தர்மகத்தினுடைய சிறப்பை காட்டினார்.

25. சம்பூர்ண தேவனுடைய தாயிடம் வைகுண்டர் பெற்ற சத்தியம் எது?

வைகுண்டர் காட்டிய தர்மயுக சிறப்பை யாருக்கும் வெளியே உரைக்கக் கூடாது என்றுக் கூறினார்.

26. வைகுண்டர் சம்பூர்ண தேவனுடைய தாயிடம் எதை மறந்து இளப்பமாக எண்ணக்கூடாது என்று கூறினார்?
சம்பூர்ண தேவனுடைய தாய் மன அமைதி பெறும்படியாக தான் காட்டிய உருவை மறந்து இழப்பமாக பேசக்கூடாது என்றுக் கூறினார்.

27. ஆயிரத்து எட்டாம் ஆம் ஆண்டு நாராயணருடைய பிள்ளையாக வைகுண்டர் அவதாரம் எடுத்ததனுடைய நோக்கம் என்ன?
சான்றோர் மக்கள் நற்கெதிகள் பெற்று தர்ம யுகத்தை அடைய வேண்டும் என்பதற்காகவும், இந்த உலகை ஒரு சொல்லுக்குள் ஆட்சி புரிவதற்காகவும் வைகுண்டர் அவதாரம் எடுத்தார்.

# நாள்-9

நடை

வைகுண்டம் பிறந்து வார்த்தையொன் றோர்குடைக்குள்
பொய்கொண்ட பேரைப் பெலிசெய் தரசாள
கொண்டுநான் போறேன் குலக்கிழடே பாரெனவே
அன்றுவை குண்டர் அவர்நடந்தார் தெச்சணத்தில்
கெங்கைக் குலத்தாயை கிருஷ்ணர் வரவழைத்து
நங்கையே யென்னுடைய நாமமது கேட்டதுண்டால்
பால்போல் பதம்போல் பாவந்தீ ரன்பருக்குச்
சூல்புத்தி வம்பருக்குச் சூதுசெய் மங்கையரே
என்றுவை குண்டர் யாமம் கூறிக்கூறி
இன்றுதெச்ச ணம்போக எழுந்தருளி யேவருக
சகல வுலகோரும் சந்தோசங் கொண்டாடப்
புகல எளிதில்லாத பெரியநா ராயணர்க்கு
வைகுண்டம் பிறந்து வார்த்தையொன் றோர்குடைக்குள்
மெய்கொண்ட முப்பொருளோர் மேனியொன் றாய்த்திரண்டு
எல்லா வரமும் இவர்க்கு மிகக்கொடுத்து
நல்லோர்க்குக் காலம் நலமாகு மென்றுசொல்லி
வானலோ கம்வாழும் வானவருந் தானவரும்
தானே முன்னாகமங்கள் தப்பாதிடை முனிவர்

வகுத்திருந்த ஆகமங்கள் நிறைவேறி வந்துதென்று
முகுந்தன் கைலைமுன்ஆகமங்கள்போல்
மாமுனிவ ரெல்லோரும் மாசந்தோசங் கொண்டாடி
நாமு மெதிரேபோய் நல்லவை குண்டர்பதம்
கண்டுகொள்வோ மென்று கனமுனிவ ரெல்லோரும்
கொண்டு மலர்ப்பூக்கள் கோமான்கால்மீ தேசொரிந்து
கொற்றவரும் மாண்டு குறும்பு மிகப்பெருத்து
உற்ற துலுக்கன் உடன்வந் துடனோடி
மற்றொரு பத்தாண்டில் வருவோமென் றாகமத்தின்
வர்த்தமா னம்போலே வந்தவை குண்டரென
எல்லோரும் போற்றி எதிர்நின்று வாழ்த்திடவே
நல்லோரா யெங்களையும் நாரா யணர்மகனே
உன்கிருபை தந்து உதவிதரு வாய்மேலும்
முன்கிருபை யெல்லாம் உனக்குள்வச மாச்சுதல்லோ
முப்பொருளும் நீதானாய் உறுவெடுத்தா யானதினால்
எப்பொருளைக் கண்டு இயல்புபெறப் போறோங்காண்
வைகுண்ட மாமுனியே மனதிரங்கிக் காக்கவேணும்
மெய்குண்டர் பதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தார்
அப்போது வானோர்க்கு ஆதிவைகுண் டருரைப்பார்
இப்போது வானோரே எனையறிந்த தெந்தவிதம்
என்றுவை குண்டர் இயல்பறியச் சொல்லிடவே
அன்று வானோர்கள் எல்லோரு மேதுசொல்வார்
கயிலயங் கிரியிலுள்ள கணக்குமுத லுள்ளதெல்லாம்
ஒயிலாகப் பிறப்பு உயர்கணக் கானதுவும்
தத்துக் கணக்கும் சஞ்ச முதற்கணக்கும்
பத்துக் கணக்கும் பலன்பெற்றோர் தங்கணக்கும்
மோட்சக் கணக்கும் முன்னுள்ள யுகக்கணக்கும்
வாச்சக் கணக்கும் வைகுண்ட நற்கணக்கும்
நரகக் கணக்கும் நடுத்தீருவைக் கணக்கும்
உரக்ககணக்கும் உற்றவானோர் கணக்கும்
தர்மயுகத்திலுள்ள தவமுனிவர் தன்கணக்கும்
பொற்றை பிரமா பூசாந்திரக் கணக்கும்
எல்லாக் கணக்கும் எடுத்துமிகத் தேவரெல்லாம்
வல்லான கயிலைவிட்டு வருவதுகாண் டேயடியார்
தியங்கி மனங்கலங்கித் தேவரோ டேகேட்டோம்
மயங்கிமிகக் கேட்டிடவே மாதேவ ரேதுரைப்பார்
நாரா யணர்க்கு நல்லவைகுண் டம்பிறந்து

சீரா யுலகமெல்லாம் சிறந்தே வொருகுடைக்குள்
ஆள வருவதினால் அவர்கைக்குள் ளிக்கணக்கு
நீள அரன்சிவனும் நெடிய மருகோனும்
இந்நாள் முதலாய் ஏழ்ப்பிக்க வேணுமென்று
சொன்னார்கா ணெங்களையும் சுருதிக் கணக்கையெல்லாம்
பொன்னுலோ கம்புகுந்து பெட்டகத்தோ டேயெடுத்து
இன்னேயின்நேரமதில் இன்பமுடனேசுமந்து
வாரு மெனஅயச்சார் மகாபரனும் மாலோனும்
சேரும் வைகுண்டம் சிணம்பிறந்தா ரென்றுசொல்லி
ஆனதினா லிப்போ யாங்கள்கொடு போறோமென்றார்
நானதுகள் கேட்டு நன்றா யறிந்தோமென்றார்
அப்போது வைகுண்ட ராசர் மிகவுரைப்பார்
இப்போது வானவரே எல்லோரு மென்கூட
வாருங்கோ வென்று வைகுண்டர் சொல்லலுற்றார்
சீருங் கோபால சிவனே செயலெனவே
வானவர்கள் தேவர்முதல் மறைமுனிகள் சாஸ்திரிகள்
தானவர்க ளுங்கூட சங்கீதம் பாடிவரச்
சந்திர சூரியர்கள் தம்மானக் குடைபிடிக்கச்
சுந்தரஞ்சேர் வைகுண்டம் தோன்றிவந் தாரெனவே
வேத மறையோரும் விசய முனிவர்களும்
நாதாந்த வேதமதை நன்றாய்த் தெளிந்தெடுத்துக்
கோமான் வளரும் கோவேங் கிரிதனிலே
நாமாது வாழும் நல்லதிரு மண்டபத்தில்
தங்க நிறத்தூணில் சதுர்மறையோர் தாங்கூடி
எங்கு மகிழ எழுதினா ரம்மானை

திருவாசகம் – 2

ஏகமொரு பரமானதும் இம்மென்றொரு வாயுவில் சத்தி வளைந்ததும் சத்தியிலே சிவம் தோன்றியும் சிவத்தில் சத்தி தோன்றியும் சத்தியில் நாதம் தோன்றியும் நாதத்தில் விஷ்ணு தோன்றியும் ருத்திரர் மயேசுரர் உலகம் தோன்றியும் உலகில் அண்டபிண்டம் தோன்றியும் பிண்டத்தில் குறோணி அசுரன் தோன்றியும் குறோணி வானலோகம் விழுங்கவும் கோபத்தால் விஷ்ணு சென்று குறோணியைத் துண்டாறாய் வெட்டி உலகில் தள்ளவும், துண்டமென்றில் குண்டோமசாலி பிறக்கவும் சுகசோபன மண்டபமலைய

விளித்ததும் திருமருகரது கேட்கவும் தேவாதிகளை நாங்கிலாக்கி வரையானதைத் தூண்டிலாக்கிக் கடலை ஓடையாக்கிக் காயாம்பு வண்ணர் ஓடமேறியே கறைக்கண்டர் ஓணிதள்ளவே கன்னியிலே தூண்டலுமிட்டு அக்குண்டோம சாலியையும் வதைத்து மறுயுகம் தோன்றியே தில்லைமலாலன் மல்லோசி வாகனென்ற இருபேருடைய அநியாயம் பொறுக்காமலே அவனிருவரையும் சங்காரம் செய்து அடுத்த யுகம் தோன்றியே,

சூரன் சிங்கமுகா சூரன் செய்த அநியாயம் பொறுக்காமலே ஆதித்திருநெடுமால் ஆறுமுகக் கடவுளென நாமமுங் கூறியே அவனையும் சங்காரஞ் செய்து அவ்வுகத்திலே பிறந்த அசுரன் இரணியனையும் வதைத்து அந்த யுகமும் அழித்து அடுத்த யுகம் தோன்றியே, அரக்கன் இராவண சங்காரமுஞ் செய்து சீதாப்பிராட்டியினுடைய சிறையையு மீட்டித் தென்னிலங்கா புரி அரக்கரையும் கொன்று அக்கிளையொழிய அக்குலமும் அறுத்து அடுத்தயுகம் தோன்றியே; பஞ்சவர்க்கு பகாரியாகியே பகைத்தத் துரியோதனனையும் வதைத்துப் பஞ்சவர்க்குக் குருநாடு பட்டமுஞ் சூட்டியே அரசாள வைத்து கலிவருவானெனக் காற்று வீசினதைக் காதிலே கேட்டுக்கானக வழிநடந்து பஞ்சவர்களுடைய பாரப்பெலன்களையும் வாங்கிப் பச்சை மாலை சுமந்திருந்த பயமாயக் கூட்டைப் பர்வதாமலை யுச்சியிலே கிடத்தி,

கங்கையுங் கண்டு கங்கையிலே குளித்த கன்னிமார் பெண்களுடைய கற்பையுஞ் சோதித்துக் கயிலையங்கிரி சென்று ஏழுலோகம் புகுந்து ஏழு வித்துமெடுத்து இருதய கமலத்திலே இருத்தி எரியுங் கட்டையெனக் கிடந்து ஏந்திழைமாரைச் சூழ வளையும் படியாகக் கொந்தலையும் எழுப்பி ஏழுபெண்களுக்கும் ஏழு மதலையுங் கொடுத்துத் தவசுக்குக் கன்னிமாரையும் அனுப்பிப் பத்திர காளியிடத்தில் பாலரையுங் கொடுத்து ஸ்ரீரங்கம் போய் செகமறியும்படி பள்ளி கொண்டிருந்ததும்;

தேவாதிகளுடைய வாக்கினாலே ஈசுரர் தாமே கலியனையும் பிறவி செய்து இருநூற்று முப்பது நூறாயிரம் வருஷமாகக் கட்டங்கொடுமை செய்து அவனி யரசாண்டு கன்னிமக்களாகிய சான்றோர் படுகிற மறுக்கம் பொறுக்காமலே,வியாகரிடை முனிவர் வகுத்த ஆகமத்தின் படியே மகாபர நாராயணர் தாமே வைகுண்டமாய்ப் பிறந்து

ஒரு குடைக்குள் 1008 ஆம் ஆண்டு மாசியிலே அஞ்சி மூவஞ்சி தேதியிலே அவனி மனுவிலே ஆதிச்சாதியிலே மனுநிறமாக வந்திருந்து சாதி பதினெண்ணையும் ஒருதலத்தில் வருத்தியே தர்மமாய்த் தாரணி யாபேர்க்கும் சஞ்சல நோய்பிணி தண்ணீரால் தீர்க்கவும் சந்ததியில்லாத பேர்க்குச் சந்ததி கொடுக்கவும் தனமில்லாத பேர்க்குத் தனங்கொடுக்கவும் சாதை வாதை பேய்களைச் சரிவிலே எரித்துக் கரியச் செய்யவும் தரணியேழு கணக்கையும் கேட்டு மிக சத்தியாய் அன்பு மனிதருக்காகவே தரணியில் நாலுதரம் சளங்கள் படவும் சாஸ்திரவேத நூலுக்குச் சரியொத்தி பேர்களுக்கு உபகாரங்கள் செய்யவும்;

சண்டையாய்க் கலியனைத் தன்னாலே போக்கவும் தர்மமாகத் தரணியோர் குடைக்குள்ளாளவும் தங்கநவரத்தினத் திருமுடி சூடியே சகலமாபதி மேடைகள் பாவிக்கவும் தவசு கிருபை பெறவும், தங்கமணி சக்கராயுதக் கொடி ஒற்றைக்கொடி கட்டவும் சகலரும் புகழவரும் தர்மராசாவாகவும் சங்கவிருதுக் கொடி ஒத்தக் கொடி கட்டவும் அஷ்டதிக்குப் பதினாலு லோகமுமறிய அசையா மணியொன்று கட்டியே அரசு பாவிக்கவும்,ஆதி சர்வேஸ் வரனாகிய அவனியைம்பத்தாறு சீமையும் அடக்கி அரசாளவும் ஆதிசர்வ காலமும் அழியாத் திருவுளமாயிருந்து அரசாள்வாரெனவும்ஆதிராமச் சந்திர சூரிய நாராயணர்க்கு ஆதியாகமத்தின் படியாகவே ஆதிவைகுண்டம் பிறந்தாரெனவே,அண்டர்களும் முனிவர்களும் தேவர்களும் அதிக சகல மாமுனிவர்களும் எல்லோருங் கூடியிருந்தாராய்ந்து தொண்டர்தமக் கென்றுவளர் கொன்றையணி கயிலையில் மண்டலம் புகழ சிவனாருடைய கிருபையினாலே இன்றவர் கைலையங்கிரியில் எழுதினார்.

**வினா விடை** :

1. அய்யா வைகுண்டர் அவதாரம் நிகழ்ந்த ஆண்டு எது?
   1008
2. அய்யா வைகுண்டமாக எதற்காக வந்ததாக கூறினார் ?
   சான்றோர்களுக்கு நற்கதி வழங்குவதற்காக

3. குன்றா குடை என்பதன் பொருள் என்ன?

என்றைக்கும் குறைவில்லாத தர்மபுரி வாழ்வு

4. அய்யா யாரை பலி செய்வதற்காக தெட்சணத்திற்கு செல்வதாக கூறினார்?
   பொய்க்கொண்ட பேரை பலி செய்வதற்காக

5. வைகுண்ட அவதாரம் நிகழ்ந்த பின் தெட்சணம் செல்லும்போது யாருக்கு அய்யா முதல் முதலாக வரம் கொடுத்தார் ?
   பூமாதேவிக்கும் கங்காதேவிக்கும்

6. பூமாதேவிக்கும் கங்காதேவிக்கும் அய்யா என்ன வரம் கொடுத்தார்?
   என்னை மனதில் நினைத்து நம்பிக்கையோடு வாழும் மக்களுக்கு மண் தண்ணீரால் சகல விதமான நோய்களையும் , வினைகளையும் தீர்த்து நல்வாழ்வு கொடுக்கும்படி வரம் கொடுத்தார்.

7. அய்யா யாரை சூது செய்யுமாறு கங்காதேவியிடம் கூறினார் ?
   அழுக்கான புத்தியோடு வருகின்றவர்களுக்கு

8. யாருக்கு மண்ணும் நீரும் நோய் முதல் கர்மஞ்சலங்களை தீர்க்கும் ?
   அய்யாவை உண்மையாக உள்ளன் போடு ஏற்றுக்கொள்ள கொண்ட மக்களுக்கு நோய் முதல் கர்மஞ்சலங்களை மண்ணும் நீரும் தீர்க்கும்.

9. அய்யா தெட்சணம் எழுந்தருளிய போது சந்தோஷம் கொண்டவர்கள் யார் யார்?
   வானவரும் தானவரும் மாமுனிவர்கள் எல்லோரும்

10. வைகுண்ட அவதாரம் நிகழ்ந்தவுடன் தேவர்கள் எல்லோரும் எதற்காக சந்தோஷம் கொண்டார்கள்?
    வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத மேன்மைக் கொண்ட நாராயண பரம்பொருளுக்கு முப்பொருளும் ஒரு பொருளாய் வைகுண்டம் பிறந்து எல்லா வரங்களையும் தன்னகத்தை ஏற்று வருகிறார். அவர் வரும்போது நல்லவர்கள் மென்மையடைவார்கள் என்ற முன்னாகங்கள் கூற்றின் படி வைகுண்ட பிறந்து வருகிறார் என்று தேவர்களும் முனிவர்களும் சந்தோஷம் கொண்டாடினார்கள்.

11. கங்கை குல தாய்க்கு இட்ட கட்டளை யாது?
நம்பிக்கையோடு வந்து நீராடுகின்றவர்களுடைய பாவ வினைகள் நீக்கப்பட வேண்டும் என்றும், சூதான புத்தியோடு வருகின்றவர்களுக்கு அந்த கபடத்தினால் தீமைகள் ஏற்பட வைக்க வேண்டும் என்றும் கூறினார்.

12. தேவர்கள் வைகுண்டரை எவ்வாறு எல்லாம் போற்றி பணிந்தார்கள்?
திருவாசக வாக்கு உபதேசத்தின் படி அவதாரம் எடுத்த வைகுண்ட பெருமானே! முப்பொருளும் ஒரு பொருளாக சமைந்து வந்த மாமனியே! எப்பொருளை கண்டு நாங்கள் இயல்பு பெற போறோம் என்றிருந்தோம். எங்களையும் வைகுண்ட மாமனையே மனம் இரங்கி காக்க வேண்டும் என்று திருவடிகளை மலரிட்டு போற்றிப் பணிந்தார்கள்.

13. அய்யா வைகுண்டர் தேவர்கள் மற்றும் வானவர்களிடம் தன்னை எவ்வாறு அடையாளம் கண்டு கொண்டீர்கள் என்று வினவியதற்கு அவர்கள் கூறிய பதில் யாது?
அய்யாவே கையிலையம் கிரியிலுள்ள உள்ள பிறப்பு இறப்பு கணக்குகளை எல்லாம் தேவர்கள் எடுத்துக்கொண்டு வந்தார்கள் . அதை பார்த்து இதை எங்கு எடுத்து போகிறீர்கள் என்று கேட்டோம். வைகுண்டர் அவதரித்துவிட்ட காரணத்தினால் அவர்கைக்குள் இருந்த கணக்குகளை ஒப்படைக்க கொண்டு செல்லுகின்றோம் என்று சொன்னார்கள். அதன் மூலம் வைகுண்ட அவதாரம் நிகழ்ந்தது அறிந்து கொண்டோம் என்று கூறினார்கள்.

14. தேவர்கள் எடுத்து வந்த கணக்குகள் எவை எவை ?
அல்லது
கயிலையில் பாதுகாக்கப்பட்ட கணக்குகள் எவை எவை?
ஓயிலாக பிறப்பு கணக்கு, உயர் கணக்கு, பத்து கணக்கு, சஞ்சல முதல் கணக்கு, பலம் பெற்றோர் தன் கணக்கு, மோட்ச கணக்கு, முன்னுள்ள யுக கணக்கு, வாச்ச கணக்கு, வைகுண்ட நல்கணக்கு, நரக கணக்கு, நடு தீர்வை கணக்கும், தர்ம கணக்கம், சகல கணக்கும் பொறுமை பிரம்மா பூசாந்திர கணக்கு முதலியன.

15. ஏழு யுக கணக்குகளையும் யாருடைய கையில் ஒப்படைக்கப்பட்டது? வைகுண்டருடைய கையில்

16. யார் யாரெல்லாம் வைகுண்டருடைய கைகள் இந்த கணக்குகளை ஒப்படைக்க கூறினார்கள்?
சிவனும், மாலோனும் சேர்ந்து ஒப்படைக்க கூறினார்கள்.

17. வைகுண்ட அவதாரம் நிகழ்ந்த செய்தியை தங்க நிற தூணில் எங்கு பொறிக்கப்பட்டது?
கயிலையில்

18. ஏழு லோக கணக்குகளையும் பாதுகாக்கப்பட்ட இடம் எது?
பொன்னுலோகம்

19. பொன்னுலோகம் சென்று இந்த கணக்குகளை எடுத்து வந்தவர்கள் யார்?

தேவர்கள்

20. சந்திர சூரியர்கள் பிடித்த குடை எது?
தன்மான குடை

21. திருவாசகத்தை கையில் தங்க நிற தொழில் பதிக்கின்ற போது நாராயண மூர்த்தியோடு இருந்தவர்கள் யார் யார்?
வானவர்கள், தேவர்கள், மறையவர்கள், முனிவர்கள், சந்திர சூரியர்கள், வேதவியாசர், சாஸ்திரிகள்

22. அய்யா வைகுண்ட அவதாரம் எடுத்த பின்பு எதை குறித்து யாருக்கு திருவாசகம் எழுதினார்?
முந்தைய அவதாரங்களில் சாரம்சத்தை தொடர்ந்து கொண்டிருந்தவர்கள் அறியும் படியாக எழுதினார்.

23. அய்யா திருவாசகத்தில் யாருக்கு சளங்கள் பட்டதாக கூறினார்?
அன்பு மனிதர்களுக்காக

24. அய்யா அன்பு மனிதர்களுக்காக எத்தனை சளங்கள் பட்டதாக குறிப்பிட்டுள்ளார் ?
நாலுதரம்

25. அய்யா யாருக்கு உபகாரியாக வந்ததாக குறிப்பிட்டுள்ளார்?
சாஸ்திர வேத நூலாகிய அகிலத்திரட்டு அம்மானை நூலில் கூறப்பட்ட நெறி தவறாது நடப்பவர்களுக்கு உபகாரியாக இருப்பதாக கூறினார்.

26. அய்யா யார் யார் தன்னந்தன்னால் அழிவதாக கூறுகிறார்?
கலியன் அவன் செயலால் அழிவதாக கூறுகின்றார்.

27. அய்யா வின் திருமுடி எதனால் ஆனது?
நவரத்தினங்களால் ஆனது

28. பிரபஞ்ச படைப்பில் முதன் முதலில் தோன்றியது எது?
காற்று

29. பிரபஞ்ச முதல் முதலில் தோன்றும் போது எவ்வாறு இருந்தது?
ஏகம் ஒரு பயமாக ( வெட்ட வெளியாக)

30. பிரபஞ்ச படைப்பில் வாயுவிலிருந்து தோன்றியது எது?
சத்து

31. பிரபஞ்ச படைப்பில் சத்திலிருந்து தோன்றியது எது?
சிவம்

32. பிரபஞ்ச படைப்பில் சிவத்தில் இருந்து தோன்றியது எது?
சக்தி

33. பிரபஞ்ச படைப்பில் நாதம் என்கிற ஓசை எதில் இருந்து தோன்றியது எது?
சத்தில் இருந்து

34. நாதம் என்கிற ஓசையில் இருந்து தோன்றியது யார்?
விஷ்ணு

35. பிரபஞ்ச உற்பத்தியில் விஷ்ணு தோன்றிய பின் தோன்றியவர்கள் யார் யார்?
ருத்திரர், மயேசுரர்

36. பிரபஞ்ச உற்பத்தியில் ருத்திரர், மயேசுரர் தோன்றிய பின் தோன்றியது எது?
உலகம்

37. உலகம் தோன்றிய பின் தோன்றியது எது?
அண்டமும், பிண்டமும்.

38. குறோணி என்ற அசுரன் எங்கு தோன்றினான் அண்டத்திலா? பிண்டத்திலா?
பிண்டத்தில்

39. துவாபர யுகத்தை நிறைவு செய்து விட்டு நாராயண மூர்த்தி தன்னுடைய அவதார சடலத்தை எங்கும் விட்டு சென்றார்?
பர்வதாமலை உச்சியில்

39. கலியின் கொடுமை எத்தனை ஆண்டுகள் இருப்பதாக ஆகமம் கூறுகிறது?
இருநூற்று முப்பத்து நூறாயிரம் வருசம்.

40. அட்டதிக்கு 14 லோகமும் அசையா மணி ஒன்று கட்டி அரசு ஆள்பவர் யார்?
அய்யா வைகுண்டர்

41. அய்யா வைகுண்ட அவதாரத்தினுடைய நோக்கம் என்ன?

உலகில் இருக்கும் உண்மையான மக்களின் துயர் மாற்றி தனமில்லாத பேருக்கு தனம் கொடுக்கவும், சந்ததி இல்லாத பேருக்கு சந்ததி கொடுக்கவும், நோய்களை தண்ணீர் மண்ணால் தீர்த்து வைக்கவும், சாதவாத பேய்களை எல்லாம் சரிவிலே எரித்து அன்பு சக்தி மக்களை தேர்ந்தெடுத்து தர்ம யுக வாழ்வு அருளுவதும் வைகுண்ட அவதாரத்தில் நோக்கமாகும்.

***********************

## அகிலத்திரட்டு அம்மானை அருள் நூல்

## பட்டயப்படிப்பு

# நான்காம் பருவம்

## **பாகம்**-III

# அகிலம் கல்விச்சாலை

**அகிலத்திரட்டு பாடம் படிக்க, அகிலத்திரட்டு வாசிப்பு பயிற்சி மேற்கொள்ள , பதி, தாங்கல்களில் அறப்பாடச்சாலை நடத்த, அகிலத்திரட்டு பாராயணப் பயிற்சி வழங்கப்படுகிறது.**

- **வகுப்புகள் ஆன்லைன் மூலமாகவும்,**
- **நேரடியாகவும் வழங்கப்படுகிறது.**

## தொடர்புக் கொள்ள வேண்டிய முகவரி:

14/14-1, **மணலிவிளை**, **மண்டைக்காடு அஞ்சல்**,

**கன்னியாகுமரி மாவட்டம்**-629252.

**வாட்ஸ் அப் எண்**:9489655691

**வாட்ஸ் அப் குழுவின் பெயர்**: **அகிலம் அறிவோம்**

**தொடர்பு கொள்ள வேண்டிய அலைப்பேசி**: 9486880072,9489655691